751

A TEXT BOOK

OF

TAMIL GRAMMAR

751
2.2

FOR

Lower Secondary Schools

BY

MOSUR VENKATASWAMI IYER

7 JUN 1921

தமிழ் இலக்கணம்

லோயர் ஸெகண்டரி பாடசாலைகளுக்காக

மோஸூர் வேங்கடசாமி ஐயர்

எழுதியது.

MACMILLAN & Co. LIMITED
MBAY, CALCUTTA AND LONDON.
1921

[விலை, ௧௨ அணா.

TS
P31 (9)
.M21
171027.

தமிழ் இலக்கணம்

லோயர் ஸெகண்டரி பாடசாலைகளுக்காக

751/2·24

மோஹஸிர் வேங்கடசாமி ஐயர்

எழுதியது.

மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிடெட்

சென்னை, பம்பாய், கல்கத்தா, லண்டன்

1921

Rights Reserved

Price. 12 As.] [விலை, ௧௨ அணா.

இரண்டாம் இலக்கணம்.

எழுத்து.

1. எழுத்தாவது:—தனித்தாகிலும், பல சேர்ந்தாகிலும், சொற்களாய் வரக்கூடிய ஒலியும், அவ்வகையான ஒலியினுடைய படமுமாம்.

2. தமிழ் நெடுங்கணக்கில், 247 ஒலிகளும், அவைகளை நமது கண்களுக்குக் காட்ட 247 படங்களும் இருக்கின்றது.

(அவைகளை இரண்டாம் பக்கத்தில் பார்.)

3. எழுத்துக்களை, அவைகளின் சக்தியைப் பார்த்து,

(1) உயிர்-எழுத்துக்கள்,

(2) மெய்-எழுத்துக்கள்,

(3) உயிர்-மெய் எழுத்துக்கள்,

(4) ஆய்த-வெழுத்து என்று பிரித்திருக்கிறார்கள்.

இவைகளுள்,

I. "அ" முதல் "ஔ" வரையிலும் இருக்கிற பன்னிரண்டும் உயிரெழுத்துக்கள்.

II. "க்" முதல் "ன்" வரையிலும் இருக்கிற பதினெட்டும் மெய்யெழுத்துக்கள்.

III. "க" முதல் "னௌ" வரையிலும் இருக்கிற இருநூற்றுப் பதினாறும் உயிர்—மெய்யெழுத்துக்கள்.

IV. ஒன்றோடுஞ் சேராமல் தனியே நிற்கிற "ஃ" ஆய்தம்.

☞ 12, 18, 216, 1 ஆகிய இவைகளைக்கூட்ட 247 ஆவதைக் காண்க.

தமிழ்ப் பாஷையின் இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களும்

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ.
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ.
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ.
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ.
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ.
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ.
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ.
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ.
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ.
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ.
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ.
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ.
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ.
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ.
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ.
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ.
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ.
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ.

இவைகளோடு. ஜ், ஷ், ஸ், ஹ், க்ஷ் என்னும் ஸம்ஸ்கிருத மெய்களும் அவைகளின் உயிர்-மெய்களும் வந்து வழங்குகின்றன.

4. உயிர்—எழுத்துக்களை உச்சரிக்கையில், அவைகளுடைய ஒலியின் குறுக்கத்தையும், நீட்சியையும் கவனித்தால்

(1) குற்றெழுத்துக்கள்,

(2) நெட்டெழுத்துக்கள் என்று இரண்டு பிரிவுகள் உண்டாகின்றன.

[குற்றெழுத்துக்கள்—**5**.]	[நெட்டெழுத்துக்கள்—**7**.]
அ	ஆ
இ	ஈ
உ	ஊ
எ	ஏ
—	ஐ
ஒ	ஓ
—	ஔ

7 - JUN 1921

5. உயிர்—எழுத்துக்களை, குற்றெழுத்துக்களுக்கும் நெட்டெழுத்துக்களுக்கும் உருவத்திலும் ஒலியிலும் உள்ள பொருத்தத்தைப் பார்த்து இனம் இனமாய்ப் பிரித்தால்,

1	2	3
அ—ஆ	இ—ஈ	உ—ஊ

4		5	
எ—ஏ	ஐ	ஒ—ஓ	ஔ

என்று பிரித்து ஒவ்வொரு வீட்டிலும் இருக்கின்ற ஒன்றிற்கு மற்றொன்றை இனம் என்று சொல்லல்வேண்டும்

6. மெய்-எழுத்துக்களையும், ஒலியைப் பார்த்து,
(1) வல்—எழுத்துக்கள்,
(2) மெல்—எழுத்துக்கள்,
(3) இடை—எழுத்துக்கள் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள்.

வல்-எழுத்துக்கள் ஆறு.	மெல்-எழுத்துக்கள் ஆறு.	இடை-எழுத்துக்கள் ஆறு.
க	ங	ய
ச	ஞ	ர
ட	ண	ல
த	ந	வ
ப	ம	ழ
ற	ன	ள

7. மெய்-எழுத்துக்களை, அவைகளில் ஒன்றிற்கும் மற்றொன்றிற்கும் உள்ள சம்பந்தத்தைப் பார்த்து, இனம் இனமாய்ப் பிரித்தால்,

1	2	3	4
க-ங	ச-ஞ	ட-ண	த-ந

5		6
ப-ம	ய, ர, ல, வ, ழ, ள	ற-ன

என்று பிரித்து, ஆறு சிறு வீடுகளிலும் உள்ள ஒன்றிற்கு மற்றொன்றை இனம் என்று சொல்லல்வேண்டும்.

8. உயிர்-மெய்யெழுத்துக்களையும், அவைகளின் ஒலியைப்பார்த்து,
(1) உயிர்-மெய்க் குற்றெழுத்துக்கள்,
(2) உயிர்-மெய் நெட்டெழுத்துக்கள் என்று பிரித்திருக்கிறார்கள். (ஐந்தாம் பக்கத்தில் பார்.)

உயிர்க் குற்றெழுத்துக்கள்—5 ஆகையால்,
உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள் (18 × 5) 90

அ	இ	உ	எ	ஒ
க	கி	கு	கெ	கொ.
ங	ஙி	ஙு	ஙெ	ஙொ.
ச	சி	சு	செ	சொ.
ஞ	ஞி	ஞு	ஞெ	ஞொ.
ட	டி	டு	டெ	டொ.
ண	ணி	ணு	ணெ	ணொ.
த	தி	து	தெ	தொ.
ந	நி	நு	நெ	நொ.
ப	பி	பு	பெ	பொ.
ம	மி	மு	மெ	மொ.
ய	யி	யு	யெ	யொ.
ர	ரி	ரு	ரெ	ரொ.
ல	லி	லு	லெ	லொ.
வ	வி	வு	வெ	வொ.
ழ	ழி	ழு	ழெ	ழொ.
ள	ளி	ளு	ளெ	ளொ.
ற	றி	று	றெ	றொ.
ன	னி	னு	னெ	னொ.

உயிர் நெட்டெழுத்துக்கள்—7 ஆகையால்,
உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் (18 × 7) 126.

ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ.
கா	கீ	கூ	கே	கை	கோ	கௌ.
ஙா	ஙீ	ஙூ	ஙே	ஙை	ஙோ	ஙௌ.
சா	சீ	சூ	சே	சை	சோ	சௌ.
ஞா	ஞீ	ஞூ	ஞே	ஞை	ஞோ	ஞௌ.
டா	டீ	டூ	டே	டை	டோ	டௌ.
ணா	ணீ	ணூ	ணே	ணை	ணோ	ணௌ.
தா	தீ	தூ	தே	தை	தோ	தௌ.
நா	நீ	நூ	நே	நை	நோ	நௌ.
பா	பீ	பூ	பே	பை	போ	பௌ.
மா	மீ	மூ	மே	மை	மோ	மௌ.
யா	யீ	யூ	யே	யை	யோ	யௌ.
ரா	ரீ	ரூ	ரே	ரை	ரோ	ரௌ.
லா	லீ	லூ	லே	லை	லோ	லௌ.
வா	வீ	வூ	வே	வை	வோ	வௌ.
ழா	ழீ	ழூ	ழே	ழை	ழோ	ழௌ.
ளா	ளீ	ளூ	ளே	ளை	ளோ	ளௌ.
றா	றீ	றூ	றே	றை	றோ	றௌ.
னா	னீ	னூ	னே	னை	னோ	னௌ.

9. எழுத்துக்கள் ஒலியிலும், உருவத்திலும் வேறுபடுகிறதுபோல, உபயோகத்திலும் வேறுபடுகின்றன. சில எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வருகிறதில்லை; சில எழுத்துக்கள் மொழிக்கு ஈற்றில் வருகிறதில்லை; வேறு சில எழுத்துக்கள் தங்களுக்கு உள்ள ஒலியில் குறைந்து போகும்.

எந்த உயிரெழுத்தோடு கூடியும் மொழிக்கு முதலில் வராத மெய்யெழுத்துக்கள்—**8.**

வல்-எழுத்துக்களில் 2	மெல்-எழுத்துக்களில் 2	இடை-எழுத்துக்களில் 4
ட்	ண்	ர்
		ல்
		ழ்
ற்	ன்	ள்

பல அல்லது சில உயிரெழுத்துகளுடன் கூடி மொழிக்கு முதலில் வரும் மெய்யெழுத்துக்கள்—**10**.

வல்-எழுத்துக்களில் 4	மெல்-எழுத்துக்களில் 4	இடை-எழுத்துக்களில் 2
க்	ங்	ய்
ச்	ஞ்	
த்	ந்	
ப்	ம்	வ்

உதாரணம்.

க்	—கண்	காது	கிளி	கீற்று
	குளம்	கூட்டம்	கெடுதி	கேள்வி
	கை	கொடி	கோல்	கௌவல்
ச்	—சட்டை	சாறு	சிறகு	சீப்பு
	சுவர்	சூடு	செல்வம்	சேறு
	சை!	சொல்	சோறு	———
த்	—தம்பி	தாய்	திருடன்	தீர்ப்பு
	துணி	தூக்கம்	தெளிவு	தேன்
	தையல்	தொண்டை	தோட்டம்	தௌவை
ப்	—பல்	பால்	பிள்ளை	பீர்க்கு
	புலி	பூடு	பெண்	பேச்சு
	பையன்	பொழுது	போக்கு	———
ங்	—ஙனம்	———	———	———
	———	———	———	———
	———	———	———	———
ஞ்	—ஞமலி	ஞாயிறு	———	———
	———	———	ஞெகிழி	———
	———	ஞொள்கு	———	———
ந்	—நன்மை	நான்கு	நிலம்	நீங்கள்
	நுட்பம்	நூல்	நெல்	நேர்மை
	நைதல்	நொய்	நோன்பு	———
ம்	—மகன்	மான்	மின்னல்	மீதி
	முதுகு	மூட்டை	மென்மை	மேற்கு
	மை	மொக்குள்	மோப்பம்	மௌவல்
ய்	———	யானை	———	———
	———	———	———	———
	———	———	———	———
வ்	—வண்டு	வாள்	விரல்	வீடு
	———	———	வெள்ளம்	வேர்
	வைக்கோல்	———	———	வௌவால்

☞ உயிர் மெய்யெழுத்துக்களில், வு-வூ, வோ-வோ, யி-யீ, யே-யே என்பவைகளைச் சொற்களுக்கு முதலெழுத்தாய் வைத்தெழுதுவது தப்பு.

10. உயிர்-எழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும்.

உதாரணம்.

அ–	அன்பு.	உ–	உப்பு.	ஐ –	ஐந்து.
ஆ–	ஆறு.	ஊ–	ஊமை.	ஒ –	ஒன்று.
இ–	இலை.	எ –	எருது.	ஓ –	ஓட்டம்.
ஈ –	ஈவு.	ஏ –	ஏணி.	ஔ–	ஔவை.

11. பதினெட்டு மெய்யெழுத்துக்களில், ஏழு எழுத்துக்கள் மொழிக்கு ஈற்றில் வருகிறதேயில்லை; ஞ்,ந்,வ் ஆகிய மூன்று எழுத்துக்களும் இரண்டொரு சொற்களில் வரும்; மற்ற எட்டு எழுத்துக்களும் மிகுதியாய் வரும்.

மொழிக்கு ஈற்றில் வாராத மெய்யெழுத்துக்கள்:—7.

க்	ங்
ச்	
ட்	
த்	
ப்	
ற்	

மொழிக்கு ஈற்றில் வரும் மெய்யெழுத்துக்கள் :—11.

ஞ்	ய்
ண்	ர்
ந்	ல்
ம்	வ்
ன்	ழ்
	ள்

உதாரணம்.

[redacted]	உரிஞ்	கண்	வெரிந்	பணம்	பொன்;
நாய்	தேர்	கால்	தெவ்	கீழ்	வாள்.

12. உ, இ என்னும் இரண்டு உயிரெழுத்துக்களும் சேர்க்கையால், தமக்கு இயற்கையான ஒலியில் குறையும்.

ஒலியில் குறைந்த "உ" குற்றியல்—உகரம் என்றும், ஒலியில் குறைந்த "இ" குற்றியல்—இகரம் என்றும் சொல்லப்படும்.

குற்றியல்—உகரம் இன்னது என்பது:—

இரண்டு குற்றெழுத்துகளால் ஆகியிராத சொற்களினுடைய ஈற்றெழுத்தாய் நிற்கின்ற

கு, சு, டு, து, பு, று

என்னும் ஆறு உயிர்—மெய் எழுத்துகளிலும் உள்ள "உகரம்"; குற்றியல்—உகரம் ஆகும்.

உதாரணம்:—கடுகு, பஞ்சு, வண்டு, எருது, உப்பு, புற்று, நாடு, ஆறு, அஃது, மார்பு.

☞ கு, சு, டு, து, பு, று என்னும் உயிர்—மெய் எழுத்துக்கள், வகு, பசு, மடு, அது, தபு, மறு முதலான சொற்களினுடைய ஈற்றில் இருக்கிறதுபோல, ஒற்றைக் குற்றெழுத்தை அடுத்துவரும் பொழுது, அவைகளின் உகரம் ஒலியில் குறைந்துபோகிறதில்லை; அதாவது, குற்றியலுகரம் ஆகிறதில்லை.

குற்றியல்—உகரம், தனக்குமுன் யகரம் வந்தால் இகரமாகத் திரியும்; அந்த இகரம் குற்றியல்—இகரம் என்னப்படும்.

உதாரணம்:—எருது+யாருக்கு=எருதி—யாருக்கு?

☞ குற்றியலுகரம் ஆகாத உகரம், முற்றியல்—உகரம் என்னப்படும்.

உதாரணம்:—பசு, அது, மடு, கதவு, உரு, கணு, புழு.

கீழே காட்டியிருக்கிறபடி பலகையை வகுத்துக்கொண்டு முதல் அப்பியாசத்திலிருந்து உதாரணங்கள் எடுத்தெழுது.

எண்.	கு தன் ஒலியில் குறைந்து வருகிறதற்கு உதாரணங்கள்.	சு தன் ஒலியில் குறைந்து வருகிறதற்கு உதாரணங்கள்.	டு தன் ஒலியில் குறைந்து வருகிறதற்கு உதாரணங்கள்.	து தன் ஒலியில் குறைந்து வருகிறதற்கு உதாரணங்கள்.	பு தன் ஒலியில் குறைந்து வருகிறதற்கு உதாரணங்கள்.	று தன் ஒலியில் குறைந்து வருகிறதற்கு உதாரணங்கள்.
1						
2						
3						
4						
5						
6						
7						
8						
9						
10						
11						
12						
13						
14						
15						

7 JUN 1921 MADRAS

அப்பியாசம்—1.

கீழ்வருஞ் சொற்களில் முற்றியலுகரத்தினல் முடிந்திருக்கின்ற சொற்களை எடுத்துச்சொல்லு:—

பாகு	சிறகு	மூக்கு	சங்கு
எஃகு	நல்கு	மாசு	அரசு
வீடு	பசு	கஃசு	ஆப்பு
அஃது	உதடு	பாட்டு	வண்டு
முத்து	போழ்து	காது	எருது
அம்பு	பந்து	மரபு	உப்பு
கிணறு	மடு	பரப்பு	பெறு
கணக்கு	மார்பு	குரு	கதவு
தனு	பானு	குன்று	ஆறு
குளம்பு	பற்று	வாத்து	உடுப்பு
விளக்கு	கரும்பு	மேடு	இது
இருட்டு	கன்று	கொதுகு	சுக்கு
பருப்பு	மணங்கு	ஏற்பாடு	நொய்து
வயிறு	பிண்ணாக்கு	மது	நாற்று
மடு	கடுகு	அரும்பு	திரு
முதுகு	மறு	எழுத்து	மிளகு
நான்கு	விறகு	ஊற்று	அடுப்பு
கிழக்கு	சோறு	எலும்பு	முன்பு
தவிடு	அன்பு	பேறு	உடம்பு
பற்று	பயறு	வடு	புழு
கணு	கற்பு	பிறப்பு	முகடு
பலாசு	காடு	மாற்று	கழுத்து
தீட்டு	தீங்கு	வரலாறு	அளபு
கூடு	கரு	குறடு	அசோகு
உறவு	கூத்து	சீப்பு	குரங்கு
மூச்சு	மேற்கு	புற்று	செம்பு
துன்பு	அறுப்பு	வல்லூறு	அறு
நாலு	நடு	புகு	பொருட்டு

13. கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்களில் உள்ள உகரம் வெவ்வேறு காரணங்களால் குற்றியலுகரமும், குற்றியலிகரமும் ஆகிறதுபோல, சில எழுத்துக்கள் தாம் உணர்த்தும் பொருளால் வெவ்வேறு பெயர் பெறும்.

எப்படியெனில்,

"அ" என்னும் எழுத்து 'அந்த' என்னும் பொருளையும், "இ" என்னும் எழுத்து 'இந்த' என்னும் பொருளையும் உணர்த்தும்போது, சுட்டெழுத்து என்னப்படும்.

உதாரணம்.

அ—அவ்வூர், அக்குதிரை, அச்சிறுவன், அத்தீ, அப்பாம்பு, அங்ஙனம், அஞ்ஞமலி, அந்நாய், அம்மாடு, அவ்யானை, அவ்வீடு, அவன், அது.

இ—இவ்வுடுப்பு, இக்கடை, இச்சொல், இத்தவளை, இப்பெண், இங்ஙனம், இஞ்ஞாயிறு, இந்நாடு, இம்மரம், இவ்யானை, இவ்வேர், இவன், இது.

14. இப்படியே எ, ஏ, யா என்னும் எழுத்துக்கள் "எந்த" என்னும் அர்த்தத்தில் வரும்போது, வினா எழுத்துக்கள் என்னப்படும்.

உதாரணம்.

எ—எவ்வரசன்? எக்காடு? எச்சிறுவன்? எத்துணி? எப்பாட்டு? எங்ஙனம்? எஞ்ஞமலி? எந்நாய்? எம்மான்? எவ்யானை? எவ்வீடு? எவன்? எது?

ஏ—ஏது? ஏவன்? யா—யாங்ஙனம்? யாவன்? யாவள்? யாவர்? யாது? யாவை? யா?

ஆ, ஓ, ஏ என்னும் எழுத்துக்கள் கேள்வி கேட்பதற்குச் சொற்களின் ஈற்றில் வந்தால் வினா எழுத்துக்கள் என்னப்படும்.

உதாரணம்.

ஆ-உன் தம்பி வந்தானா? பிறந்தது ஆணா? பெண்ணா?
ஓ—இது உன் பலகையோ? ஏ—நல்லவன் நீயே?

சொல்.

பெயர்-ச் சொல்.

15. சொல்லாவது:—அர்த்தத்தைத் தரும் தனி யெழுத்தும், இரண்டு முதலாகச் சேர்ந்த பல எழுத்துக் களுமாம்.

உதாரணம்.

1. ஈ	பூ	வா	போ	நீ
2. பொன்	இரு	கண்	நாடு	ஆறு
3. பாடம்	அரிசி	எருது	பாட்டு	கதவு
4. மருந்து	இருட்டு	கப்பல்	கடவுள்	உடம்பு
5. வழக்கம்	பட்டணம்	புத்தகம்	தமயந்தி	ஒட்டகம்

6. வர்த்தகன் மந்திரிமார் முதலானவை போல் வரும்.

16. இப்படியே ஓரெழுத்தாலும், பலவெழுத்தாலும் ஆக்கப்பட்ட சொற்கள்.

(1) பெயர்-ச் சொல்,
(2) வினை-ச் சொல்,
(3) இடை-ச் சொல்,
(4) உரி-ச் சொல் என்று

நான்கு இராசிகளாய்ப் பிரிக்கப்படும்.

இவைகளுள்,

I. எதினுடைய பெயரையாவது சொல்லுஞ் சொல், பெயர்ச்சொல்.

உதாரணம்.

நாய்	மழை	காற்று	விளக்கு	சோறு
தூக்கம்	வெண்மை	அவன்	கப்பல்	கண்.

☞ "நாய்" என்கிற பிராணி பெயர்ச்சொல் அன்று; அந்தப் பிராணியினுடைய பெயர்தான் பெயர்ச்சொல்.

II. எந்தப் பொருளைக் குறித்தாகிலும் எதாவது சொல்லுஞ் சொல், வினைச்சொல்.

உதாரணம்.

நாய்......ஓடுகிறது	சோறு......கொதிக்கிறது
மழை......பெய்கிறது	தூக்கம்......வருகிறது
காற்று......வீசுகிறது	கண்..........பார்க்கிறது
விளக்கு...எரிகிறது	கப்பல்.......வருகிறது

☞ ஓடுகிறது, பெய்கிறது முதலான சொற்கள் நாய், மழை முதலான பொருள்களைக் குறித்துச் சொல்லுகின்ற வினைச் சொற்கள்.

III. பெயர்ச் சொல்லிலும், வினைச் சொல்லிலும், அல்லது அவைகளுக்கு இடையிலாகிலும், வாக்கியங்களோடாகிலும் ஒட்டிக்கொண்டு வருஞ்சொல், இடைச்சொல்.

உதாரணம்.

1. நீயும் நானும் இராமனும் பாடினோம். இந்த வாக்கியத்திலிருக்கிற "உம்" மூன்றும் இடைச்சொற்கள்.
2. ஐயையோ! என் மகனைக் காணோமே! இந்த வாக்கியத்திலிருக்கிற "ஐயையோ" "ஏ" இடைச்சொற்கள்.
3. நீ பாடினாய்; ஆனால், நான் கேட்கவில்லை. இந்த வாக்கியத்திலிருக்கிற "ஆனால்" இடைச்சொல்.
4. அப்பசு எவ்வீட்டில் நுழைந்தது? இந்த வாக்கியத்திலிருக்கிற "அ" "எ" இடைச்சொற்கள்.
5. இதோ! இக்குதிரையைப் பார். இந்த வாக்கியத்திலிருக்கிற "இதோ" "இ" இடைச்சொற்கள்.

IV. பொருள்களுக்கு உரிய குணத்தை, அல்லது அவைகளுடைய செயல்களுக்கு உரிய குணத்தைச் சொல்லுஞ் சொல், உரிச்சொல்.

உதாரணம்.

கழி செல்வம். நனி விளைவு. சால உழைத்தான்.

☞ இவைகளில், கழி, நனி-பெயர்-உரிச்சொற்கள்; சால—வினை-உரிச்சொல். [கழி = அதிகம், நனி = மிகுந்த, சால = அதிகமாய்]

பெயர்ச்சொல்லின் வகைகளும், உதாரணங்களும்:—

பிராணிகளின் பெயரையாவது, பொருள்களின் பெயரையாவது சொல்லுஞ் சொல், பொருட்பெயர்ச்சொல்.	உதாரணம். நாய், பெட்டி.
இடங்களின் பெயரைச் சொல்லுஞ்சொல், இடப்பெயர்ச்சொல்	உதாரணம். மதுரை, பல்லாரி.
காலங்களின் பெயரைச் சொல்லுஞ்சொல், காலப் பெயர்ச்சொல்.	உதாரணம். மாசம், வாரம்.
பெரிய பொருள்களின் உறுப்புக்களாகிய சிறியபொருள்களின் பெயரைச் சொல்லுஞ் சொல், சினைப் பெயர்ச்சொல்.	உதாரணம். கண், கால், விரல்.
பொருள்களினுடையகுணத்தின் பெயரைச் சொல்லுஞ் சொல், பண்புப் பெயர்ச்சொல்.	உதாரணம். வெண்மை, அழகு.
தொழில்களின் பெயரைச்சொல்லுஞ் சொல், தொழிற் பெயர்ச்சொல்.	உதாரணம். உண்ணல், உறங்கல்.
எவ்வகையான அளவின் பெயரைக் குறிக்குஞ் சொல்லும், அளவுப் பெயர்ச்சொல்.	உதாரணம். ஆறு, வீசை, முழம், படி.
முன்னால் நிற்கிற, அல்லதுமுன்பு சொல்லினபொருள்களைச் சுட்டிக்காட்டுஞ் சொல், சுட்டுப் பெயர்ச்சொல்.	உதாரணம். இவர், அது.

தன்னிலேயே வினைப் பொருள் உள்ள பெயர், வினைப் பெயர்ச்சொல்.

உதாரணம்.

எவன்? யாது?

பேசுகிறவன், தன்னைமாத்திரமாவது, தன்னையும், தன்னைச்சேர்ந்தவர்களையுமாவது குறிக்க உபயோகிக்கும் பெயர், தன்மைப் பெயர்ச்சொல்.

உதாரணம்.

நான், நாங்கள்.

பேசுகிறவன், தான் சொல்லுகிறதைக் கேட்டுக்கொண்டு தன்முன் நிற்கின்றவனையாவது, அவனையும் அவனோடு சேர்ந்தவர்களையுமாவது குறிக்கிறதற்கு உபயோகிக்கும் பெயர், முன்னிலைப் பெயர்ச்சொல்.

உதாரணம்.

நீ, நீர், நீங்கள்.

ஆணின் பெயர், பெண்ணின் பெயர், உயிருள்ளதின் பெயர், உயிரில்லாததின் பெயர் ஆகிய இவைகளுக்கெல்லாம் பொதுவாய் வழங்கக்கூடிய பெயர், பொதுப் பெயர்ச்சொல்.

உதாரணம்.

தான், தாம்.

ஜாதியை ஒட்டிவந்த பெயர், ஜாதிப் பெயர்ச்சொல்.

உதாரணம்.

இடையன், மறவர்.

வினைச்சொல்லின் தன்மையையும், பெயர்ச்சொல்லின் தன்மையையும் பெற்றுவந்த பெயர், வினையாலணைந்த பெயர்ச்சொல்.

உதாரணம்.

வந்தவன், வராதவன்.

உறவைக் காட்ட வந்த பெயர், கிளைப் பெயர்ச்சொல்.

உதாரணம்.

மைத்துனன், மாமி.

அப்பியாசம்—2.

கீழ் வரும் பெயர்ச்சொற்களில் ஒவ்வொன்றையும் எடுத்து இன்னவகைப் பெயர்ச்சொல் என்று சொல்லு:—

1. அவர் போன ஊருக்கு இவர் போகவில்லை.
2. எவர் இவனுக்கு இவைகளைத் தந்தருளினார்?
3. பத்து முழத் துணி இவனுக்குப் போதுமா?
4. சந்திரனுடைய கிரணம் வெண்மை உள்ளது.
5. நீராவி மிகவும் நுட்பமான பொருள்.
6. மார்கழி முழுவதும் மதுரையில் இருந்தேன்.
7. போன வருஷம் நீ சேலத்தில் இருந்தாய்.
8. கழுதை வண்ணானுக்கு மூட்டை சுமக்கும்.
9. அவனுடைய ஏணி முறிந்துபோயிற்று.
10. அவன் வீட்டில் இல்லை; வயலில் இருப்பான்.
11. செம்படவர் இங்கே மீன்பிடிக்க வந்தார்கள்.
12. அவன் தன் புத்தகங்களைக் கொண்டுவந்தான்.
13. உங்களிடத்தில் இது ஒன்றுதான் கெட்டது.
14. நாம் இவைகளை அறியாமற் போனோமே!
15. நான் இதை யாருக்குச் சொல்வேன்?
16. இதை எடுத்து உடைத்தவன் எவன்!
17. பிறப்பும் இறப்பும் எந்த நாட்டிலும் உள்ளவை.
18. இந்த வருஷம் என் தோட்டத்தில் காய்ப்பு இல்லை.
19. கலப்பு இல்லாத நல்ல எண்ணெய் கொண்டுவா.
20. உன் பெருமையும் சிறுமையும் உனக்குத் தெரியும்.
21. இதை உனக்கு என் தம்பி சொல்லினானா?
22. நீங்கள் இந்த எருதை வண்டியில் பூட்டாதேயுங்கள்.
23. அவர்கள் குதிரைகளின்மேல் வந்தார்கள்.
24. இந்த ஊரில் நல்ல பாடசாலைகள் இல்லை.
25. இவன் நல்ல தச்சன் அல்ல; நான் இவனை அறிவேன்.
26. இதை அறிவித்தவன் எவன்? நீர் சொல்லும்.

திணை.

17. இந்த உலகத்திலுள்ள பிராணிகளில்,

1. மனிதன், மாடு முதலான சில பிராணிகள் நடந்து போகின்றன;
2. காக்கை, கழுகு முதலான சில பிராணிகள் பறந்து போகின்றன;
3. பாம்பு, பல்லி முதலான சில பிராணிகள் நகர்ந்து போகின்றன;
4. மீன், முதலை முதலான சில பிராணிகள் நீந்திப் போகின்றன.

இப்படிப் பிராணிகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போகும் விதம் வெவ்வேறாய் இருக்கிறதுபோலவே அவைகளின் உருவம், ஆகாரம், குணம், செய்கை, அறிவு முதலானவைகளும் வெவ்வேறாய் இருக்கின்றன.

இவைகளில்

இது மானம், இது அவமானம்; இது புண்ணியம், இது பாவம் என்று பகுத்து அறியும் அறிவுள்ள பிராணிகளை எல்லாம் உயர்ந்த அறிவுள்ள பிராணிகள்,	இது மானம், இது அவமானம்; இது புண்ணியம், இது பாவம்; என்று பகுத்து அறியும் அறிவில்லாத பிராணிகளை எல்லாம் உயர்ந்த அறிவில்லாத பிராணிகள்,

என்று இரண்டு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள்.

இலக்கண நூல்

உயர்ந்த அறிவுள்ள பிராணியின் பெயரை உயர்திணைப் பெயர்,	உயர்ந்த அறிவில்லாத பிராணியின் பெயரை அஃறிணைப் பெயர்,

என்று சொல்லுகின்றது.

18. உயர்திணைப் பிராணிகள் ஏதாவது சொல்லினுல், "பேசுகிருன்" என்னும், ஒரே சொல்லை வழங்குகிருேம்.

மனிதன் ...... பேசுகிருன்	இராக்ஷஸன்... பேசுகிருன்
தேவதூதன்... பேசுகிருன்	அசுரன் ... பேசுகிருன்.

அஃறிணைப் பிராணிகள் தங்கள் வாயினுல் ஏதாவது சொல்லினுல், வெவ்வேறு சொற்களை வழங்குகிருேம்.

நாய் ...... குலைக்கிறது	கோழி ... கூவுகிறது
குதிரை ... கனைக்கிறது	காக்கை ... கரைகிறது
கழுதை ... கத்துகிறது	கிளி ...... கொஞ்சுகிறது
பசு ...... கதறுகிறது	மயில்...... அகவுகிறது
சிங்கம் ... கர்ஜிக்கிறது	குயில்...... கூவுகிறது
ஆடு ...... கத்துகிறது	புரு ...... குறுகுறுக்கிறது
புலி ...... உறுமுகிறது	வானம்பாடி. பாடுகிறது
யானை ... பிளிறுகிறது	ஆந்தை ... கீச்சிடுகிறது
நரி ...... ஊளையிடுகிறது	பாம்பு...... சீறுகிறது.

19. பிராணிகளில் மிகுந்த இளமையில் இருக்கிறவைகளுக்கு (1) பிள்ளை, (2) குட்டி, (3) கன்று, (4) குஞ்சு முதலான சொற்களை வழங்குகிருேம்.

1. **பிள்ளை:**—அணிற் பிள்ளை, கிளிப் பிள்ளை, குயிற் பிள்ளை, கீரிப் பிள்ளை என்கிருேம்.

2. **குட்டி:**—நாய்க் குட்டி, ஆட்டுக் குட்டி, பூனைக் குட்டி, நரிக் குட்டி, புலிக் குட்டி, சிங்கக் குட்டி, பன்றிக் குட்டி, மான் குட்டி, பாம்புக் குட்டி என்கிருேம்.

3. **கன்று:**—பசுங் கன்று, எருமைக் கன்று, யானைக் கன்று, மான் கன்று என்கிருேம்.

4. **குஞ்சு:**—எலிக் குஞ்சு, மீன் குஞ்சு, கிளிக் குஞ்சு, காக்கைக் குஞ்சு, மயிற் குஞ்சு, பறவைக் குஞ்சு, என்கிருேம்.

☞ **பிள்ளை, கன்று என்னும் சொற்களை, தென்னம் பிள்ளை மாம் கன்று, அரசம் கன்று, ஆலம் கன்று, வேப்பம் கன்று, வேலம் கன்று, வாழைக் கன்று என, மரச்சாதிகளில் சிலவற்றின் இளையவைகளுக்கும் வழங்குகின்ருேம்.**

அப்பியாசம்—3.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களில் (1) உயர்திணைப் பெயர்களையும், (2) அஃறிணைப் பெயர்களையும் வெவ்வேருய் எடுத்துச் சொல்லு:—

1. இராஜன் யானைமேல் வருகிருன்.
2. அந்த நாய் இந்தத் திருடனைப் பிடித்தது.
3. கந்தன் பசுவுக்குப் புல் போடுகிருன்.
4. வேலைக்காரன்எஜமானனுக்குவண்டி கொண்டுவந்தான்.
5. ஜானகி தன் கிளிக்கு உணவு ஊட்டுகிருள்.
6. சூரியன் உதித்தவுடனே அவர்கள் வருவார்கள்.
7. நியாயாதிபதி குற்றவாளிகளைத் தண்டித்தார்.
8. துஷ்டமிருகங்கள் காட்டில் திரியும்.
9. பாம்புகள் தவளைகளைத் தேடுகின்றன.
10. எருதின் நோவைக் காக்கை அறிகிறதில்லை.
11. அவளுக்குக் கண் பார்த்ததைக் கை செய்யும்.
12. மகனே! வெள்ளம் வருமுன் அணை கோலு.
13. இளமைதான் படிப்புக்கு ஏற்ற பருவம்.
14. மூடன் சிநேகம் தீமையை விளைக்கும்.
15. சீதை இராமனேடு காட்டுக்குப் போனுள்.
16. அரிச்சந்திரனை விசுவாமித்திரன் மிகவும் வருத்தினுன்.
17. பார்வோன் யோசேப்பை ஆதரித்தான்.
18. கும்பகர்ணன் இராவணனுடைய சகோதரன்.
19. இவர் பட்சபாதம் இல்லாதவர்.
20. அவன் காளிதாஸனைப்போன்ற புத்திசாலி.
21. மாரீசன் ஒரு பொன்மான் ஆகி அங்கே வந்தான்.
22. அகஸ்தியர் தமிழிற்குத் தாய் என்றறி.
23. அரசனைப் பார்க்கிலும் அறிஞனே சிறந்தவன்.
24. பசுவின்பால் இந்த ஊரில் கிடையாது.
25. படித்த துஷ்டனிலும் படியாத நல்லவனே மேல்.
26. இவ்வழியில் ஜனங்கள்போகிருர்கள்.

கீழே காட்டியிருக்கிறபடி பலகையை வகுத்துக்கொண்டு **4**-ஆவது அப்பியாசத்திலிருந்து உயர்திணைப் பெயர்களையும், அஃறிணைப் பெயர்களையும் எடுத்தெழுதுங்கள்.

உயர்திணைப் பெயர்கள்.	அஃறிணைப் பெயர்கள்.
1	1
2	2
3	3
4	4
5	5
6	6
7	7
8	8
9	9
10	10
11	11
12	12
13	13
14	14
15	15
16	16
17	17
18	18
19	19
20	20
21	21
22	22
23	23
24	24
25	25

இடம்.

20. ஒரு பள்ளிக்கூடத்தில், (1) உபாத்தியாயர், (2) தமக்கு முன் இருந்த கந்தசாமி என்னும் மாணுக்கனை, (3) அசௌக்கியமாய் வீட்டிலிருந்த, தி. கோபாலசாமி என்னும் வேறொரு மாணுக்கனைக் குறித்து விசாரிக்கிறார் என்று வைத்துக்கொள்வோம்.

உபாத்தியாயர்:—(கந்தசாமியை நோக்கி) கந்தசாமி! தி. கோபாலசாமி நோயாய் இருக்கிறான் என்று **நான்** கேள்விப்பட்டேன். **நீ** அவனைப் பார்த்தாயா? அவன் எப்படி இருக்கிறான்?

கந்தசாமி:—(உபாத்தியாயரை நோக்கி) ஐயா! **நான்**, கோபாலசாமியை இன்று காலையில் பார்த்தேன்; அவன் மிகவும் அசௌக்கியமாய் இருக்கிறான்.

உபாத்தியாயர்:—**நீ** அவனை நாளைக்குப் பார்ப்பாயா?

கந்தசாமி:—ஐயா! அவன் நோய் நீங்கிப் பள்ளிக்கூடம் வருகிறவரையில், **நான்** தினந்தோறும் அவனைப் பார்க்கப் போவேன்.

உபாத்தியாயர்:—நல்லது; **நான்**, இன்று சாயங்காலம் ஒரு கடிதங் கொடுக்கிறேன், **நீ** அதைக் கொண்டுபோய் அவனுக்குக் கொடுக்கிறாயா?

கந்தசாமி:—**நீர்** தயவுசெய்து கொடும், **நான்** கொண்டுபோய், தி. **கோபாலசாமி**க்குக் கொடுக்கிறேன்.

உபாத்தியாயர்:—**நான்** ஒருமணிக்கும் இரண்டு மணிக்கும் இடையில் எழுதிக்கொடுக்கிறேன்; **நீ** வாங்கி வைத்துக்கொள், சாயங்காலம் கொண்டுபோய், தி. கோபாலசாமிக்குக்கொடு.

மேலே காட்டிய சம்பாஷணையில், உபாத்தியாயரும், கந்தசாமியும் ஒருவரோடொருவர், தி. கோபாலசாமியைக் குறித்துப் பேசினார்கள்.

இவர்களில், உபாத்தியாயர் பேசிக்கொண்டிருந்தபோது கந்தசாமி கேட்டுக்கொண்டிருந்தான்; கந்தசாமி பேசிக்கொண்டிருந்தபோது, உபாத்தியாயர் கேட்டுக்கொண்டிருந்தார். இப்படி, உபாத்தியாயர், கந்தசாமி ஆகிய இரண்டுபேரும், மாற்றிமாற்றி, தி. கோபாலசாமியைக்குறித்துப்பேசினார்கள்.

இவர்களை,

i பேசிக்கொண்டிருக்கிறவன்,

ii கேட்டுக்கொண்டிருக்கிறவன்.

iii இவர்களால் பேசப்படும் வேறொருவன்.

என்று பிரித்து எடுப்போமானால், மூன்று பிரிவுகள் உண்டாகின்றன.

இலக்கணநூல், இப்பிரிவுகளை, (1) தன்மை-இடம், (2) முன்னிலை-இடம், (3) படர்க்கை-இடம் என்று சொல்கின்றது.

ஆனபடியால்,

1.	2.	3.
பேசிக்கொண்டிருக்கிறவன், தன்மை இடம்,	கேட்டுக்கொண்டிருக்கிறவன், முன்னிலை இடம்,	பேசப்படும் வேறொருவன், படர்க்கை இடம்,

என்று நாம் அறிந்துகொள்ளல் வேண்டும்.

21. தன்மை இடத்துப் பெயர்கள்:—

நான், நாம், நாங்கள், யான், யாம், யாங்கள்.

22. முன்னிலை இடத்துப் பெயர்கள்:—

நீ, நீர், நீங்கள் *முதலானவைகள்.*

23. அவன், அவள், அவர், அவர்கள், அது, அஃது, அவை, அவைகள், இவன், இவள், இவர், இவர்கள், இது, இஃது, இவை, இவைகள் என்னுஞ் சுட்டுப்பெயர்களும்,

எவன், எவள், எவர், எவர்கள், எது, எஃது, எவை, எவைகள், யாவன், யாவள், யாவர், யாவர்கள், யாது, யா, யாவை என்னும் வினாப்பெயர்களும்,

பலகை,	*மேஜை,*	*கதவு,*	*கத்தி,*	*புஸ்தகம்,*
மலையாளம்,	*வங்காளம்,*	*சேலம்,*	*காசி,*	*மதுரை,*
ஜாமம்,	*நாள்,*	*மாசம்,*	*வருஷம்,*	*வாரம்,*
காது,	*கால்,*	*கண்,*	*இலை,*	*தலை,*
அழகு,	*வட்டம்,*	*புதுமை,*	*சிறுமை,*	*கருமை,*
ஓடாமை,	*வாழ்வு,*	*கொல்லுதல்,*	*ஆடல்,*	*உண்ணல்,*
மணங்கு,	*எழு,*	*படி,*	*கஜம்,*	*முழம்,*
பாப்பான்,	*குறவன்,*	*இடையன்,*	*வண்ணான்,*	
மாமன்,	*தங்கை,*	*மைத்துனன்,*	*மாமி,*	*அண்ணி.*

முதலான பலவகைப் பெயர்களும் படர்க்கை இடத்துப் பெயர்கள்.

☞ அண்ணா! ஐயா! மகனே! தம்பி! ஆண்டவனே! மந்திரி! அம்மா! மயில்களே! பிள்ளாய்! கண்மணி! என்று அழைக்கப்பட்டிருக்கும்போழுது, படர்க்கைப் பெயர்களும், முன்னிலை இடத்தை அடைகின்றன.

பால்.

24. **உ**யர்திணைப்பிராணிகள், அஃறிணைப்பிராணிகள் என்று பிரிக்கப்பட்ட எல்லாவகைப் பிராணிகளிலும்,

i	ஆண்	ii	பெண்

என்னும் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன.

ஏனென்றால்,

1.	இரண்டு கண்ணும் குருடான	புருஷனைக் **குருடன்** என்றும் ஸ்திரீயைக் **குருடி** என்றும்;
2.	இடைச் சாதியிற் பிறந்த	புருஷனை **இடையன்** என்றும், ஸ்திரீயை **இடைச்சி** என்றும்;
3.	வண்ணாரச்சாதியிற் பிறந்த	புருஷனை **வண்ணான்** என்றும், ஸ்திரீயை **வண்ணாத்தி** என்றும்;
4.	குறச்சாதியிற் பிறந்த	புருஷனைக் **குறவன்** என்றும், ஸ்திரீயைக் **குறத்தி** என்றும்;
5.	நல்ல குணங்களை உடைய	புருஷனைக் **குணவான்** என்றும், ஸ்திரீயைக் **குணவதி** என்றும்;
6.	நம்மைப் பெற்று வளர்த்த	புருஷனைக் **தந்தை** என்றும், ஸ்திரீயைத் **தாய்** என்றும்;
7.	மாட்டினுடைய இனத்தில்	ஆணை **எருது** என்றும், பெண்ணைப் **பசு** என்றும்;
8.	எருமையினுடைய இனத்தில்	ஆணை **எருமைக்கடா** என்றும், பெண்ணை **எருமை** என்றும்;
9.	பட்சிகளினுடைய இனத்தில்	ஆணைச் **சேவல்** என்றும், பெண்ணைப் **பேட்டை** என்றும்

பிரித்து, ஆணுக்கு ஒரு சொல்லையும், பெண்ணுக்கு வேறொரு சொல்லையும் வழங்கிவருகின்றோம்.

இப்படி, ஆண், பெண் என்று பிரித்த பிரிவுகளை இலக்கண நூல்,

i **ஆண்பால்** ii **பெண்பால்**

என்று சொல்லுகின்றது.

ஆனபடியால்,

ஆணின் பெயரை, (1) "ஆண்பாற் பெயர்," பெண்ணின் பெயரை, (2) "பெண்பாற் பெயர்," (3) ஆண்பாலாகவும், பெண்பாலாகவும் இருக்கக்கூடிய பெயரை "இருபாற்பெயர்," ஆண், பெண் என்னும் பிரிவுகள் இல்லாத அஃறிணைப் பொருளின் பெயரை, (4) "பாலிலா அஃறிணைப் பெயர்" என்று சொல்லவேண்டும்.

25. ஆண்பாற்பெயரைப் பெண்பாற் பெயர் ஆக்கும் வகைகள் பல இருக்கின்றன.

1. ஆண்பாலில் "அன்" என்று முடிகின்ற சில உயர் திணைப் பெயர்கள், பெண்பாலில் "இ" என்று முடியும்.

உதாரணம்.

ஆண்பால்.	பெண்பால்	ஆண்பால்.	பெண்பால்.
அரசன்	அரசி	தலைவன்	தலைவி
அழகன்	அழகி	திருடன்	திருடி
இராக்ஷஸன்	இராக்ஷஸி	தோழன்	தோழி
உத்தமன்	உத்தமி	நாயகன்	நாயகி
எஜமானன்	எஜமானி	பாட்டன்	பாட்டி
ஒருத்தன்	ஒருத்தி	பாதகன்	பாதகி
குமாரன்	குமாரி	புத்திரன்	புத்திரி
குருடன்	குருடி	புதல்வன்	புதல்வி
கூனன்	கூனி	மனுஷன்	மனுஷி
சகோதரன்	சகோதரி	மாமன்	மாமி
சுந்தரன்	சுந்தரி	மாணுக்கன்	மாணுக்கி
செவிடன்	செவிடி	மூடன்	மூடி
சேவகன்	சேவகி	மைத்துனன்	மைத்துனி

2. ஜாதியை ஒட்டிவந்த பெயர்களில் ஆண்பாலில் "அன்" என்று முடிக்கின்றவை, பெண்பாலில் "ச்சி" என்று முடியும்.

உதாரணம்.

ஆண்பால்.	பெண்பால்.	ஆண்பால்.	பெண்பால்.
இடையன்	இடைச்சி	தெலுங்கன்	தெலுங்கச்சி
கணக்கன்	கணக்கச்சி	பறையன்	பறைச்சி
கன்னடியன்	கன்னடியச்சி	புலையன்	புலைச்சி
சக்கிலியன்	சக்கிலிச்சி	வலையன்	வலைச்சி
சாலியன்	சாலிச்சி	வள்ளுவன்	வள்ளுவச்சி
சேணியன்	சேணியச்சி	வடுகன்	வடுகச்சி
தமிழன்	தமிழச்சி	வாணியன்	வாணிச்சி
துலுக்கன்	துலுக்கச்சி	வேடன்	வேடச்சி

3. ஜாதியை ஒட்டிவந்த பெயர்களில் ஆண்பாலில் "ஆன்" என்று முடிகின்றவை, பெண்பாலில் "ஆத்தி" என்று முடியும்.

உதாரணம்.

ஆண்பால்.	பெண்பால்.	ஆண்பால்.	பெண்பால்.
கன்னான்	கன்னாத்தி	பாப்பான்	பாப்பாத்தி
தட்டான்	தட்டாத்தி	வண்ணான்	வண்ணாத்தி

4. ஜாதியை ஒட்டி வந்த பெயர்களில், ஆண்பாலில் "அன்" என்று முடிகிறவைகளில் சில, "ச்சி" பெறுவதை விட்டு, "த்தி" பெற்றுப் பெண்பால் ஆகும்

உதாரணம்.

ஆண்பால்.	பெண்பால்.	ஆண்பால்.	பெண்பால்.
குசவன்	குசத்தி	தச்சன்	தச்சத்தி
குறவன்	குறத்தி	பிடாரன்	பிடாரத்தி
செம்படவன்	செம்படத்தி	மறவன்	மறத்தி

5. உடையவன் என்னும் அர்த்தமுள்ள "வான்" பெற்று முடிந்திருக்கிற ஆண்பாற் பெயர்கள், பெண்பாலில், உடையவள் என்னும் அர்த்தமுள்ள "வதி" பெற்று வரும்.

உதாரணம்.

ஆண்பால்.	பெண்பால்.	ஆண்பால்.	பெண்பால்.
கண்யவான்	கண்யவதி	பாக்யவான்	பாக்யவதி
குணவான்	குணவதி	தனவான்	தனவதி
சீலவான்	சீலவதி	பலவான்	பலவதி
ஞானவான்	ஞானவதி	புண்யவான்	புண்யவதி

6. சில பெயர்கள் ஆண்பாலுக்கு ஒரு சொல்லும், பெண்பாலுக்கு வேறொரு சொல்லும் பெற்றுவரும்.

உதாரணம்.

ஆண்பால்.	பெண்பால்.	ஆண்பால்.	பெண்பால்.
அண்ணன்	அக்காள்	தந்தை	தாய்
அப்பன்	அம்மை	தம்பி	தங்கை
எருது	பசு	பிதா	மாதா
கணவன்	மனைவி	புருஷன்	ஸ்திரீ

7. சில மிருகங்களின் ஆண் "கடா" என்னும் சொல்லினாலும், சில பட்சிகளின் ஆண் "சேவல்" என்னுஞ் சொல்லினாலும், பெண் "பேடு," "பெட்டை" என்னுஞ் சொற்களினாலும் குறிக்கப்படும்.

உதாரணம்.

ஆண்பால்.	பெண்பால்.	ஆண்பால்.	பெண்பால்.
ஆட்டுக்கடா	ஆடு	அன்னச்சேவல்	அன்னப்பேடு
எருமைக்கடா	எருமை	சேவல்	பெட்டை

8. ஆண்பாலின் "காரன்" என்று முடிகிற பெயர்கள், பெண்பாலில் "காரி" என்று முடியும்.

உதாரணம்.

ஆண்பால்.	பெண்பால்.	ஆண்பால்.	பெண்பால்.
கூலிக்காரன்	கூலிக்காரி	வீட்டுக்காரன்	வீட்டுக்காரி
பணக்காரன்	பணக்காரி	வேலைக்காரன்	வேலைக்காரி

9. "சாலி" என்பது உடையவன், உடையவள் என்னும் அர்த்தத்துடன் இரண்டு பாலிலும் வரும்.

உதாரணம்.

ஆண்பால்.			பெண்பால்.	
அதிருஷ்டசாலி	(அவன்)	...	அதிருஷ்டசாலி	(அவள்)
குணசாலி	(அவன்)	...	குணசாலி	(அவள்)
தைர்யசாலி	(அவன்)	...	தைர்யசாலி	(அவள்)
பலசாலி	(அவன்)	...	பலசாலி	(அவள்)
புத்திசாலி	(அவன்)	...	புத்திசாலி	(அவள்)

10. "இ", "ஆளி" பெற்று முடிகிற பெயர்களில் சில, உடையவன், உடையவள் என்னும் அர்த்தத்துடன் இரண்டு பாலிலும் வரும்.

உதாரணம்.

ஆண்பால்.			பெண்பால்.	
பாவி	(அவன்)	...	பாவி	(அவள்)
உரோகி	(அவன்)	...	உரோகி	(அவள்)
ஞானி	(அவன்)	...	ஞானி	(அவள்)
நோயாளி	(அவன்)	...	நோயாளி	(அவள்)
குற்றவாளி	(அவன்)	...	குற்றவாளி	(அவள்)
பிணியாளி	(அவன்)	...	பிணியாளி	(அவள்)

11. இவன், அவன், நல்லவன் என்னும் ஆண்பாற் பெயர்ச்சொற்களைப்போல், "அன்" பெற்று முடிந்திருக்கிற பெயர்கள், பெண் பாலில் "அள்" பெற்று வரும்.

உதாரணம்.

ஆண்பால்.	பெண்பால்.	ஆண்பால்.	பெண்பால்.
இவன்	இவள்	நல்லவன்	நல்லவள்
அவன்	அவள்	கெட்டவன்	கெட்டவள்
எவன்	எவள்	பெரியவன்	பெரியவள்
யாவன்	யாவள்	உள்ளவன்	உள்ளவள்
மற்றவன்	மற்றவள்	செய்தவன்	செய்தவள்

12. ஆண்பாலில் "ஆன்" பெற்று நிற்கிற பெயர்கள், பெண்பாலில் "ஆள்" பெற்று வரும்.

உதாரணம்.

ஆண்பால்.	பெண்பால்.	ஆண்பால்.	பெண்பால்.
ஊரான்	ஊராள்	பேரான்	பேராள்
குலத்தான்	குலத்தாள்	வேலூரான்	வேலூராள்
நாட்டான்	நாட்டாள்	வமிசத்தான்	வமிசத்தாள்

13. உலகநடையில், ஆண்பாலைக் குறிக்க, "ஆண்" என்னுஞ் சொல்லையும், பெண்பாலைக் குறிக்க, "பெண்" என்னுஞ் சொல்லையும் இருதிணைப் பெயர்களுக்கு முன்னும் கூட்டுவதுண்டு.

உதாரணம்.

ஆண்பால்.	பெண்பால்.	ஆண்பால்.	பெண்பால்.
ஆண் ஆள்	பெண் ஆள்	ஆண் பூனை	பெண் பூனை
ஆண் பிள்ளை	பெண் பிள்ளை	ஆண் பூதம்	பெண் பூதம்
ஆண் புலி	பெண் புலி	ஆண் கிளி	பெண் கிளி
ஆண் சிங்கம்	பெண் சிங்கம்	ஆண் குருவி	பெண் குருவி
ஆண் எலி	பெண் ணெலி	ஆண் மயில்	பெண் மயில்
ஆண் குரங்கு	பெண் குரங்கு	ஆண் குயில்	பெண் குயில்
ஆண் முயல்	பெண் முயல்	ஆண் கொக்கு	பெண்கொக்கு
ஆண் வண்டு	பெண் வண்டு	ஆண் காக்கை	பெண்காக்கை

☞ அவர், இவர், எவர், ஒருவர், சிறியவர், பெரியவர், நல்லவர், அவர்கள், இவர்கள், எவர்கள், சிறியவர்கள், பெரியவர்கள், நல்லவர்கள் என்பவைகளைப்போல் உயர்திணை இருபாற்பெயராய் வரும் பெயர்ச்சொற்கள் பல இருக்கின்றன.

கீழே காட்டியிருக்கிறபடி பலகையை வகுத்துக்கொண்டு **4**-ஆவது அப்பியாசத்திலிருந்து உதாரணங்கள் எடுத்து எழுதுங்கள்.

எண்	உயர்திணை ஆண்பாற் பெயர்கள்.	உயர்திணைப் பெண்பாற் பெயர்கள்.	அஃறிணைப் ஆண்பாற் பெயர்கள்.	அஃறிணைப் பெண்பாற் பெயர்கள்.
1				
5				
10				
15				
20				

அப்பியாசம்—4.

ஆண்பாற் பெயர்களைப் பெண்பாற் பெயர்களாகவும், பெண்பாற் பெயர்களை ஆண்பாற் பெயர்களாகவும் மாற்று:-

1. வண்ணான் வேட்டிகளைக் கொண்டுவந்தான்.
2. இந்தப் பசு உதைக்கிறது; கிட்டப் போகாதே.
3. அம்பட்டன் உன் வீட்டுக்கு வந்தானா?
4. கருமான் ஒரு கத்தி கொண்டுவந்தான்.
5. சாணார் திருநெல்வேலியில் அதிகமாயிருக்கிறார்கள்.
6. மதுரையிலிருந்து ஒரு வேலைக்காரி இங்கு வந்தாள்.
7. நேற்று ஒரு வாணியன் திருப்பதிக்குப் போனான்.
8. செம்படவன் ஒரு பெரிய மீன் கொண்டுவந்தான்.
9. குறத்தி தெருவில் கூடை விற்கிறாள்.
10. அந்தப் பெட்டைக்கோழியைப் பார்.
11. இந்தக் கன்னடியன் நல்ல தயிர் விற்கிறான்.
12. குயவன் வீட்டில் பானைகள் இல்லையாம்.
13. பக்கத்துவீட்டுப் பாப்பான் பட்டணம் போனான்.
14. நீலகிரியிலிருந்து ஒரு வேடன் வந்தான்.
15. ஒரு துலுக்கன் அந்த வண்டியில் போகிறான்.
16. இக்கிராமத்தில் நூறு இடையர்கள் இருக்கிறார்கள்.
17. இந்தச் சாலியன் ஏழு புடவை நெய்தான்.
18. இந்தக் கணக்கன் இவ்வூரான் அல்லன்.
19. இந்த வாணிச்சி விற்கிற எண்ணெய் நாறுகிறது.
20. நான் தட்டான் வீட்டுக்குப் போகிறேன்.
21. ஐயா! என் தாயாரைக் கேட்டுக்கொண்டு வருகிறேன்.
22. இந்த எருமைக்கடா என் தோட்டத்தை அழித்தது.
23. சுந்தரீ! அந்தச் சேவலை எவனுக்கு விற்றாய்?
24. தமிழன் ஒருவன் அதோ வருகிறான்.
25. அரசி தன் மகளைப் பார்க்க வந்தாள்.
26. குருடி ஒருத்தி அந்த வழியில் நிற்கிறாள்.

அப்பியாசம்—5.

ஆண்பாற் பெயர்களைப் பெண்பாற் பெயர்களாகவும், பெண்பாற் பெயர்களை ஆண்பாற் பெயர்களாகவும் மாற்று:-

1. இவன் உன் அண்ணன் மகன்; அவன் யாவன்?
2. அரசனும் அவனுடைய தம்பியும் இங்கு வந்தார்கள்.
3. ஒரு கிழவனும் அவன் புத்திரனும் கடைக்குவந்தார்கள்.
4. வண்ணானை அழைத்துவரத் தோட்டக்காரன்போனான்.
5. பசுவிற்குப் புல் கொண்டுவர எவள் போனாள்!
6. என் தோழி எங்கே என்று இராஜகுமாரி அலைந்தாள்.
7. இந்தக் குயவன் அரசன் வேலைக்காரர்களில் ஒருவன்.
8. இவன் தாயார் என் மாமியாரோடு படித்தவர்.
9. இந்தச் சேவகனுக்கு உன் தலைவன் என்ன கொடுத்தான்?
10. அம்மா! உன் மகன் வருமளவும் நீ இங்கேயே இரு.
11. அந்தச் செம்படவன் மருமகன் கூனன் அல்லவா?
12. இவள் சகோதரிகளில் மூத்தவள் மதுரையில் இல்லை.
13. என் பாட்டனாரிடத்தில் மூன்றுவேடர் படிக்கிறார்கள்.
14. உன் எஜமானனுடைய வேலைக்காரன் எவன்?
15. தச்சனும் தட்டானும் ஜாதியைப்பற்றி வாதாடினார்கள்.
16. வாணியன் 'ஐயா! எண்ணெய் வேண்டுமா?' என்றான்.
17. குறவன் ஒருவன் இத்தட்டான்வீட்டில் நுழைந்தான்.
18. என் பேரனும் அவன் மாமனும் வந்தார்கள்.
19. ஒரு தமிழனும் தெலுங்கனும் தோழரானார்கள்.
20. உத்தமன் ஒருத்தன் என் மைத்துனனுக்குத் தோழன்.
21. அழகனாகிய கணவனைவிட அறிவுள்ளவனே மேல்.
22. இவன் தன் மாணாக்கனைக் கெட்டிக்காரன் ஆக்கினான்.
23. அந்த அரசி ஒரு ஆண்புலியைக் கண்டாள்.
24. இவள் ஆட்டுக்கடாச் சண்டை பார்த்திருந்தாள்.
25. என் இனத்தான் எனக்கு ஒரு பசு அனுப்பினான்.
26. புத்தியில்லாதவனுக்கு உள்ளவன் புத்தி சொல்லட்டும்.

எண்

26 நாம் பேசும்போதும், எழுதும்பொழுதும், படிக்கும்பொழுதும் வருகிற பெயர்ச்சொற்கள்,

ஒரு நாய் குலைக்கிறது...... நால்நாய்–கள்குலைக்கின்றன;
கண் பார்க்கிறது........... கண்–கள் பார்க்கின்றன;
படம் வாங்கினேன்........ படங்–கள் வாங்கினேன்;
இந்தப் பூவைக் கட்டு..... இந்தப் பூக்களைக் கட்டு;
கல் இருக்கிறது........... கற்–கள் இருக்கின்றன;
ஒரு ஆள் வந்தான்......... எட்டு ஆட்–கள் வந்தார்கள்;
உயிரெழுத்து எது?......... உயிரெழுத்து–க்கள் எவை;
பசு மேய்கிறது............ பசு–க்கள் மேய்கின்றன;
அது என்ன செய்யும்?...... அவை என்ன செய்யும்?
உன் தம்பி எங்கே?....... உன் தம்பி–மார் எங்கே?

என்று ஒரே ஒரு பொருளைக் குறிக்கிற பொழுதும், ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களைக் குறிக்கிற பொழுதும் ரூபத்தில் வேறுபட்டு வருகிறதைக் காண்கிறோம்.

இந்த வேறுபாடுகள் (1) ஒன்றாய் இருப்பதையும் (2) பலவாய் இருப்பதையும், குறிக்கின்றன.

இலக்கண நூல்,

ஒன்றாய் இருப்பதை, (1) **ஒருமை_எண்** என்றும், பலவாய் இருப்பதை, (2) **பன்மை_எண்** என்றும் சொல்லுகின்றது.

ஆகையால்,

ஒரே ஒரு பொருளைக் குறிக்கிற பெயரை **ஒருமைப் பெயர்,**	ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிக்கிற பெயரைப் **பன்மைப் பெயர்,**

என்று நாம் சொல்லல் வேண்டும்.

27. ஒருமைப் பெயர்களைப் பன்மைப் பெயர்கள் ஆக்கும் வகைகள் பல இருக்கின்றன :—

I. ஒருமைப் பெயருக்கு, "கள்" என்பதைக் கூட்டல்:—

உதாரணம்.

ஒருமை.	பன்மை.	ஒருமை.	பன்மை.
ஊர்	— ஊர்கள்	பேர்	— பேர்கள்
தேர்	— தேர்கள்	வேர்	— வேர்கள்
காய்	— காய்கள்	பாய்	— பாய்கள்
நாய்	— நாய்கள்	பேய்	— பேய்கள்
நோய்	— நோய்கள்	வாய்	— வாய்கள்
கால்	— கால்கள்	நூல்	— நூல்கள்
சால்	— சால்கள்	வால்	— வால்கள்
அணி	— அணிகள்	பணி	— பணிகள்
துணி	— துணிகள்	மணி	— மணிகள்
ஆணி	— ஆணிகள்	காணி	— காணிகள்
ஏணி	— ஏணிகள்	கோணி	— கோணிகள்
ஆறு	— ஆறுகள்	சேறு	— சேறுகள்
கூறு	— கூறுகள்	தூறு	— தூறுகள்
ஆடு	— ஆடுகள்	நாடு	— நாடுகள்
ஏடு	— ஏடுகள்	பேடு	— பேடுகள்
காடு	— காடுகள்	மாடு	— மாடுகள்
கூடு	— கூடுகள்	வீடு	— வீடுகள்
குரங்கு	— குரங்குகள்	வண்டு	— வண்டுகள்
செண்டு	— செண்டுகள்	விலங்கு	— விலங்குகள்
பந்து	— பந்துகள்	அம்பு	— அம்புகள்
கயிறு	— கயிறுகள்	கிணறு	— கிணறுகள்

II. ஒருமைப் பெயருக்கு, "க்-கள்" என்பதைக் கூட்டல்:-

1. ஒற்றை நெட்டெழுத்தாய் நிற்கின்ற பெயர்களுக்கு, "க்-கள்" கூட்டல் வேண்டும்.

உதாரணம்.

ஒருமை.	பன்மை.	ஒருமை.	பன்மை.
ஆ	— ஆ-க்கள்	நா	— நா-க்கள்
ஈ	— ஈ-க்கள்	பா	— பா-க்கள்
கோ	— கோ-க்கள்	பூ	— பூ-க்கள்
தீ	— தீ-க்கள்	மா	— மா-க்கள்

☞ கை, பை, மை என்னுஞ் சொற்கள், கைகள், பைகள், மைகள் என்று "கள்" பெற்றவரும்.

2. ஒரு குற்றெழுத்தும், அதையடுத்து ஆ சேர்ந்து வந்த ஒரு நெட்டெழுத்துமாய் நிற்கின்ற பெயர்களுக்கு "க்-கள்" கூட்டல் வேண்டும்.

உதாரணம்.

ஒருமை.	பன்மை.	ஒருமை.	பன்மை.
அணா	— அணா-க்கள்	புறா	— புறா-க்கள்
இரா	— இரா-க்கள்	மிடா	— மிடா-க்கள்
கணா	— கணா-க்கள்	பலா	— பலா-க்கள்
கடா	— கடா-க்கள்	வினா	— வினா-க்கள்
சுறா	— சுறா-க்கள்	விலா	— விலா-க்கள்

3. குற்றியலுகாம்பெற்று முடிந்திருக்கிறதுபோலிருக்கிற ஸம்ஸ்கிருத மொழிகளுக்கு, "க்-கள்" கூட்டல் வேண்டும்.

உதாரணம்.

ஒருமை.	பன்மை.	ஒருமை.	பன்மை.
இந்து	— இந்து-க்கள்	ஜெந்து	— ஜெந்து-க்கள்
பந்து	— பந்து-க்கள்	வஸ்து	— வஸ்து-க்கள்

4. முற்றியலுகரம் பெற்று முடிந்திருக்கிற சொற்களுக்கு, "க்-கள்" கூட்டல் வேண்டும்.

உதாரணம்.

ஒருமை.	பன்மை.	ஒருமை.	பன்மை.
மடு	மடு-க்கள்	கொசு	கொசு-க்கள்
வடு	வடு-க்கள்	மநு	மநு-க்கள்
தெரு	தெரு-க்கள்	தனு	தனு-க்கள்
குரு	குரு-க்கள்	அணு	அணு-க்கள்
பசு	பசு-க்கள்	கணு	கணு-க்கள்

5. வல்லின மெய்யை ஈற்றெழுத்திற்கு அயலெழுத்தாய் உடைய குற்றியலுகர வீற்றுப் பெயர்களுக்கு, "க்-கள்" கூட்டல் வேண்டும்.

உதாரணம்.

ஒருமை.	பன்மை.	ஒருமை.	பன்மை.
வழக்கு	வழக்கு-க்கள்	பாக்கு	பாக்கு-க்கள்
விளக்கு	விளக்கு-க்கள்	மூக்கு	மூக்கு-க்கள்
எச்சு	எச்சு-க்கள்	பேச்சு	பேச்சு-க்கள்
சீட்டு	சீட்டு-க்கள்	கட்டு	கட்டு-க்கள்
பூட்டு	பூட்டு-க்கள்	பட்டு	பட்டு-க்கள்
கொத்து	கொத்து-க்கள்	முத்து	முத்து-க்கள்
எழுத்து	எழுத்து-க்கள்	கூத்து	கூத்து-க்கள்
கழுத்து	கழுத்து-க்கள்	வாத்து	வாத்து-க்கள்
உடுப்பு	உடுப்பு-க்கள்	மடிப்பு	மடிப்பு-க்கள்
உறுப்பு	உறுப்பு-க்கள்	வெடிப்பு	வெடிப்பு-க்கள்
ஊற்று	ஊற்று-க்கள்	கீற்று	கீற்று-க்கள்
காற்று	காற்று-க்கள்	நாற்று	நாற்று-க்கள்

☞ விளக்கு-கள், பேச்சு-கள், எழுத்து-கள், உறுப்பு-கள், ஊற்று-கள், என்று "கள்" கூட்டிப் பன்மையாக்கலுங் காணலாம்

III. ஒருமைப் பெயரின் ஈற்றெழுத்தை மாற்றி, "கள்" கூட்டல்:—

1. ஒருமைப் பெயரின் ஈற்றில் "ம்" இருந்தால், அதை "ங்" என்று மாற்றி, "கள்" கூட்டல் வேண்டும்.

உதாரணம்.

ஒருமை.	பன்மை.	ஒருமை.	பன்மை.
கலம்	— கலங்-கள்	மரம்	— மரங்-கள்
குளம்	— குளங்-கள்	மாதம்	— மாதங்-கள்
படம்	— படங்-கள்	வருஷம்	— வருஷங்-கள்
பக்கம்	— பக்கங்-கள்	வாரம்	— வாரங்-கள்
பாடம்	— பாடங்-கள்	விதம்	— விதங்-கள்

2. ஒருமைப் பெயர், ஒற்றைக் குற்றெழுத்தோடு "ல்" பெற்று முடிந்திருந்தால், ஈற்றெழுத்தை "ற்" என்று மாற்றி, "கள்" கூட்டல் வேண்டும்.

உதாரணம்.

ஒருமை.	பன்மை.	ஒருமை.	பன்மை.
கல்	— கற்-கள்	பல்	— பற்-கள்
சொல்	— சொற்-கள்	புல்	— புற்-கள்
நெல்	— நெற்-கள்	வில்	— விற்-கள்

☞ கால், சால், நூல், வால் முதலான சொற்கள் கால்கள், சால்கள், நூல்கள், வால்கள், என்று ல் மாறாமல், "கள்" பெறும்.

3. ஒருமைப் பெயரின் ஈற்றில் "ள்" இருந்தால், அதை "ட்" என்று மாற்றி, "கள்" கூட்டல் வேண்டும்.

உதாரணம்.

ஒருமை.	பன்மை.	ஒருமை.	பன்மை.
ஆள்	— ஆட்-கள்	வாள்	— வாட்-கள்
தாள்	— தாட்-கள்	புள்	— புட்-கள்
நாள்	— நாட்-கள்	முள்	— முட்-கள்

IV. "கள்" கூட்டாமல் வேறு வகையாற் பன்மைஆக்கல்:—

1. சில உயர்திணை ஒருமைப் பெயர்களைப் பன்மை ஆக்குகிறதற்கு, "மார்" அல்லது "மார்-கள்" கூட்டலாம்.

உதாரணம்.

ஒருமை	பன்மை.	பன்மை.
அண்ணன்	அண்ணன்-மார்	அண்ணன்-மார்-கள்
குரு	குருமார்	குருமார்கள்
செட்டி	செட்டிமார்	செட்டிமார்கள்
தங்கை	தங்கைமார்	தங்கைமார்கள்
தமையன்	தமையன்மார்	தமையன்மார்கள்
தம்பி	தம்பிமார்	தம்பிமார்கள்
துரை	துரைமார்	துரைமார்கள்
தோழி	தோழிமார்	தோழிமார்கள்
பாங்கி	பாங்கிமார்	பாங்கிமார்கள்
மந்திரி	மந்திரிமார்	மந்திரிமார்கள்
முதலி	முதலிமார்	முதலிமார்கள்

☞ மாந்தர். மக்கள், ஜனங்கள், பலர், சிலர், பல, சில, எல்லார், எல்லாம், அனைவர் முதலானவை போன்ற சில பெயர்கள், எப்பொழுதும் பன்மையிலேயே வரும்.

2. "அன்" பெற்று முடிந்திருக்கிற உயர்திணை ஆண்பால் ஒருமைப் பெயர்களும் "அள்" பெற்று முடிந்திருக்கிற உயர்திணைப் பெண்பால் ஒருமைப் பெயர்களும், பன்மையில் "அர்-கள்" பெற்றுவரும்.

உதாரணம்.

ஆண்பால் ஒருமை.		பெண்பால் ஒருமை.		இருபாற் பன்மை.
அவன்	—	அவள்	—	அவர்கள்
இவன்	—	இவள்	—	இவர்கள்
எவன்	—	எவள்	—	எவர்கள்
மற்றவன்	—	மற்றவள்	—	மற்றவர்கள்
நல்லவன்	—	நல்லவள்	—	நல்லவர்கள்
கெட்டவன்	—	கெட்டவள்	—	கெட்டவர்கள்

3. "ஆன்" பெற்று முடிந்திருக்கிற உயர்திணை ஆண்பால் ஒருமைப் பெயர்களும், "ஆள்" பெற்று முடிந்திருக்கிற உயர்திணைப் பெண்பால் ஒருமைப் பெயர்களும், பன்மையில், "ஆர்" பெற்றுவரும்.

உதாரணம்.

ஆண்பால் ஒருமை.		பெண்பால் ஒருமை.		இருபாற் பன்மை.
ஊரான்	—	ஊராள்	—	ஊரார்
வீட்டான்	—	வீட்டாள்	—	வீட்டார்
குலத்தான்	—	குலத்தாள்	—	குலத்தார்
வமிசத்தான்	—	வமிசத்தாள்	—	வமிசத்தார்

4. "நான்" முதலான தன்மையிடத்துப் பெயர்களும், "நீ" முதலான முன்னிலையிடத்துப் பெயர்களும், "தான்" முதலான பொதுப்பெயர்களும், ஒருமைக்கும் பன்மைக்கும் வெவ்வேறு சொற்களைப் பெற்றுவருகின்றன.

உதாரணம்.

தன்மை ஒருமை.	தன்மைப் பன்மை.
நான், யான்	நாம், நாங்கள், யாம், யாங்கள்.
முன்னிலை ஒருமை.	முன்னிலைப் பன்மை.
நீ	நீர், நீங்கள்.
ஒருமை.	பன்மை.
தான்	தாம், தாங்கள்.

5. ஒருமையைக் காட்டும் "து" பெற்று நின்ற அஃறிணை ஒருமைப் பெயர்கள் அதை நீக்கி "வை" பெற்று அஃறிணைப் பன்மைப் பெயர்கள் ஆகும்.

உதாரணம்.

ஒருமை.		பன்மை.	ஒருமை.		பன்மை.
அ—து	—	அ—வை	நல்ல—து	—	நல்ல—வை
இ—து	—	இ—வை	கண்ட—து	—	கண்ட—வை
எ—து	—	எ—வை	அல்லாத-து	—	அல்லாத—வை
பெரிய—து	—	பெரிய—வை	இல்லாத-து	—	இல்லாத—வை

☞ காது, வாது, பந்து, சந்து, வாத்து, முத்து முதலான சொற்களில் உள்ள "து" அது, இது, எது முதலானவைகளில் வந்திருக்கிறதுபோல் எண்ணைக் காட்ட வரவில்லை.

☞ "வை" பெற்று அஃறிணைப் பன்மையாய் நின்ற பெயர்கள், அ—வை—கள், இ—வை—கள், நல்ல—வை—கள், இல்லாத—வை—கள் என்று வையோடு கள்ளும் பெறும்.

V. எண்ணைக் காட்டும் உறுப்புக்கள் வேறுபடுவது:—

1. "ஆர்" பன்மையைக் காட்டாமல் மரியாதையைக் காட்ட உயர்திணை இருபாற் பெயர்களுக்கும் கூட்டப்படும்.

உதாரணம்.

ஒருமை.	மரியாதை ஒருமை.	ஒருமை.	மரியாதை ஒருமை.
அண்ணன்	அண்ணனார்	தாய்	தாயார்
அண்ணி	அண்ணியார்	செட்டி	செட்டியார்
இரெட்டி	இரெட்டியார்	நந்தன்	நந்தனார்
இராணி	இராணியார்	பாட்டி	பாட்டியார்
ஔவை	ஔவையார்	மாமன்	மாமனார்
கோன்	கோனார்	முதலி	முதலியார்

2. சில பெயர்களின் ஈற்றில் நிற்கின்ற "ஆன்" என்பதை "ஓன்" என்றும், "ஆர்" என்பதை "ஓர்" என்றும் மாற்றி வழங்குவதும் உண்டு.

உதாரணம்.

[ஆன்	— ஓன்]	[ஆர்	— ஓர்]
நல்லான்	நல்லோன்	நல்லார்	நல்லோர்
தீயான்	தீயோன்	பெரியார்	பெரியோர்
பெரியான்	பெரியோன்	சிறியார்	சிறியோர்
சிறியான்	சிறியோன்	உடையார்	உடையோர்
உடையான்	உடையோன்	எல்லார்	எல்லோர்

அப்பியாசம்—6

தடித்த எழுத்தில் இருக்கிற பெயர்களைப் பன்மைப் பெயர்களாக மாற்றிப் படி:—

1. குதிரைக்குக் கொம்பு இல்லை.
2. இப்பெண்ணினிடத்தில் உள்ள ஊசியைப் பார்.
3. அந்த வேலைக்காரியின் பெயர் என்ன?
4. நல்ல பிள்ளையினிடத்தில் குணம் இருக்கும்.
5. பிறன் பொருளை அவனைக் கேளாமல் தொடலாகாது.
6. இந்த இரகசியத்தை உன் பிள்ளைக்குச் சொல்லு.
7. அந்தக் கப்பலுக்கு எத்தனை மிடா வேண்டும்?
8. இந்தப் பூ இவனுக்கு வேண்டும்.
9. இராமா! இந்தப் புரு எவனுடைய புரு?
10. இந்தப் பசு என் பசு; அந்த எருது யாருடையது?
11. இவன் என்னுடைய பந்து; இவன் நல்லவன்.
12. இந்தத் தோப்பில் மாமரம் இல்லை?
13. அந்த ஆறு வடியவில்லை; ஓடம் விடுகிறார்கள்.
14. கொக்கு அந்த மரத்தின் கிளையில் இல்லை.
15. இந்த முத்தினுடைய விலை என்ன? அவனைக் கேள்.
16. இன்று வந்த அரசி எங்கே? நீ பார்க்கவில்லையா?
17. நான் கல்லிலும் முள்ளிலும் நடந்தேன்.
18. இந்தக் காப்பு உன் கைக்குச் சரிப்படவில்லை.
19. இந்தக் கடையில் பருப்பு இல்லை.
20. அந்தக் கிளிக்கு இந்தக் கூடு வாங்கு.
21. எது உங்கள் தம்பியின் வீடு?
22. இவன் உங்கள் சத்துருவா? தோழனா?
23. இது என் நாய் அல்ல: தம்பியின் நாய்.
24. நீயும் நானும் பாட வில்லை.
25. இந்த ஜெந்து எந்தக் காட்டில் அதிகம்?
26. அது, இதுபோல் நல்லது என்கிறீர்களா?

அப்பியாசம்—7.

கீழே காட்டியபடி பலகையை வகுத்துக்கொண்டு. **8**-ஆவது அப்பியாசத்தைச் செய்க.

	உயர்திணை ஒருமைப் பெயர்கள்.	உயர்திணைப் பன்மைப் பெயர்கள்.	அஃறிணை ஒருமைப் பெயர்கள்.	அஃறிணைப் பன்மைப் பெயர்கள்
1				
5				
10				
15				
20				

உயர்திணைப் பெயர்களின் உட்பிரிவுகள்:—

1. உயர்திணை ஆண்பால் ஒருமை.

அரசன், புத்திரன், தம்பி, செட்டி.

2. உயர்திணை ஆண்பாற் பன்மை.

அரசர், புத்திரர், தம்பிகள், செட்டிமார்.

3. உயர்திணைப் பெண்பால் ஒருமை.

அரசி, புத்திரி, தங்கை, செட்டிச்சி.

4. உயர்திணைப் பெணபாற் பன்மை.

அரசிகள், புத்திரிகள், தங்கைகள், செட்டிச்சிகள்.

5. உயர்திணை இருபால் ஒருமை.

இவர், எவர், அவர், ஒருவர்.

6. உயர்திணை இருபாற் பன்மை.

மக்கள், மனிதர், சிலர், அவர்கள்.

அஃறிணைப் பெயர்களின் உட்பிரிவுகள்:—

1. அஃறிணை ஆண்பால் ஒருமை.

எருது, சேவல்.

2. அஃறிணை ஆண்பாற் பன்மை.

எருதுகள், சேவல்கள்.

3. அஃறிணைப் பெணபால் ஒருமை.

பசு, பெட்டை.

4. அஃறிணைப் பெண்பாற் பன்மை.

பசுக்கள், பெட்டைகள்.

5. அஃறிணை இருபால் ஒருமை

மாடு, யானை, கோழி.

6. அஃறிணை இருபாற் பன்மை.

மாடுகள், யானைகள், கோழிகள்.

7. பாலிலா அஃறிணை ஒருமை.

மரம், ஊசி, காய். குடை.

8. பாலிலா அஃறிணைப் பன்மை.

மரங்கள், ஊசிகள், காய்கள், குடைகள்.

வேற்றுமை.

28. 1. **இராமன்** நேற்று இந்த ஊருக்கு வந்தான்.
2. இராமனை நான் இன்று காலையில் கண்டேன்.
3. இராமனால் ஒரு நல்ல கதை சொல்லப்பட்டது.
4. இராமனோடு பலர் பேசிக்கொண்டிருந்தார்கள்.
5. இராமனுடன் நான் என் வீட்டுக்கு வந்தேன்.
6. இராமனுக்கு நான் ஒரு பெரு விருந்து செய்தேன்.
7. இராமனுக்காகப் பல பழங்கள் வைத்திருந்தேன்.
8. இராமனிலும் மேலான சிநேகிதன் எனக்கு இல்லை.
9. இராமனைக்காட்டிலும் அடக்கம் உள்ளவர் இல்லை.
10. இராமனிடத்திலிருந்துவந்தகடிதத்தைப்பாருங்கள்.
11. இராமனுடைய குணத்தை எவரும் புகழ்கின்றனர்.
12. இராமனது நூல்களில் சில இங்கே இருக்கின்றன.
13. இராமனிடத்தில் அவன் தந்தை அன்பாய்இருக்கிறார்.
14. இராமன்மேல் எல்லாருமே பட்சமாயிருப்பார்கள்.
15. இராமா! என்றுஎவரும்அன்போடுகூப்பிடுவார்கள்.

மேலே காட்டின வாக்கியங்களில், "இராமன்" என்னும் பெயர்ச்சொல், வினைச்சொற்களோடும் பெயர்ச்சொற்களோடும், வெவ்வேறு சம்பந்தம் பெற்று நிற்கின்றது அல்லவா?

இப்படியே, ஒரு பெயர்ச்சொல், தான் இருக்கின்ற வாக்கியத்தில் உள்ள வேறு சொற்களோடு பெறும் சம்பந்தத்தின் வேறுபாடு, வேற்றுமை என்னப்படும்.

தமிழ்ப்பாஷையில் உள்ள வேற்றுமைகள், எட்டு.

அவை,

1. முதல் வேற்றுமை,
2. இரண்டாம் வேற்றுமை,
3. மூன்றாம் வேற்றுமை,
4. நான்காம் வேற்றுமை,
5. ஐந்தாம் வேற்றுமை,
6. ஆறாம் வேற்றுமை,
7. ஏழாம் வேற்றுமை,
8. எட்டாம் வேற்றுமை.

வேற்றுமைகளைக் காட்டுங்குறி வேற்றுமை-உருபு என்னப்படும்.

29. எட்டு வேற்றுமைகளின் உருபுகளும்.

முதல் வேற்றுமை
அல்லது
எழுவாய் வேற்றுமையின் உருபுகள்:—
இந்த வேற்றுமையைக் காட்ட உருபு கூட்டவேண்டியதில்லை. ஆனவன், ஆனவள், ஆனவர். ஆனது, ஆனவை, என்பவன், என்பவள், என்பவர், என்பது, என்பவை என்னுஞ் சொற்களில் ஏற்ற ஒன்றை நமக்கு இஷ்டமானல் கூட்டலாம்.

இரண்டாம் வேற்றுமையைக் காட்டும் உருபு.	மூன்ரும் வேற்றுமையைக் காட்டும் உருபுகள்	நான்காம் வேற்றுமையைக் காட்டும்உருபுகள்
ஐ	ஆல் ஓடு உடன்	கு கு+ஆக பொருட்டு நிமித்தம்

ஐந்தாம் வேற்றுமையைக் காட்டும்உருபுகள்.	ஆருரும் வேற்றுமையைக் காட்டும உருபுகள்.	ஏழாம் வேற்றுமையைக் காட்டும் உருபுகள்.
இல், இலும் இலிருந்து இடத்திலிருந்து ஐ-க் காட்டிலும் ஐ-ப் பார்க்கிலும் ஐ-விட	அது உடைய	இல் இடத்தில் மேல் மீது

எட்டாம் வேற்றுமை
அல்லது
விளி வேற்றுமையைக் காட்டும் உருபுகள்:—
ஏ, பல விதமான விகாரங்கள். (=வேறுபாடுகள்.)

30. வேற்றுமை உருபுகளை உபயோகிக்கும் வகை.

1. முதல் வேற்றுமை:—

கோபாலன் பாடம் படிக்கிருன்.
சீதை ஜனகராஜன் மகள்.
அந்தப் படம் இவனுல் எழுதப்பட்டது.
ஆனது——புலியானது பூனையின் இனத்தில் சேர்ந்தது.
என்பது——பொன் என்பது உலோகங்களில் ஒன்று.

2. இரண்டாம் வேற்றுமை:—

ஐ——நான் கோபாலனைக் கண்டேன்.
நீ ஒரு கெட்ட குதிரையை வாங்கினுய்.

3. மூன்ரும் வேற்றுமை:—

ஆல்——இந்தக் கத்தியால் அந்தக் கயிற்றை அறு.
இவனுல் இந்தப் பெட்டி செய்யப்பட்டது.
ஒடு——அவன் அதிக பசியோடு இருந்தான்.
நான் என் தாயாரோடு சாப்பிட்டேன்.
உடன்——என்னுடன் நீங்கள் வாருங்கள்.

4. நான்காம் வேற்றுமை:—

கு——அவனுக்கு இந்தப் பலகையைச் கொடு.
கு+ஆக——இராமனுக்காகக் காத்திருக்கிரும்.
பொருட்டு——என் பொருட்டு நீர் வருத்தப்பட்டீர்.
நிமித்தம்——கல்வியின் நிமித்தம் இந்த ஊருக்கு வந்தேன்.

5. ஐந்தாம் வேற்றுமை:—

இல்——தாயில் மேலான அன்புடையவர் கடவுள்.
இலும்——இவைகளிலும்பெரியபழம்இங்கேகிடையாது
இலிருந்து——மதுரையிலிருந்து நேற்று வந்தேன்.
இடத்திலிருந்து——இராஜனிடத்திலிருந்து ஒருகட்டளை வந்தது.
ஐ-க் காட்டிலும்——இவனைக்காட்டிலும் ஜானகி நல்லவள்
ஐ-ப் பார்க்கிலும்——இதைப் பார்க்கிலும் அது சிறியது.
ஐ-விட——கண்ணைவிட அருமையான உறுப்பு எது?

6. ஆரும் வேற்றுமை.—

அது——நமது குற்றங்களை அவர்மன்னித்தார்.
உடைய——இவனுடைய தம்பி எங்கே போனுன்?

7. ஏழாம்வேற்றுமை:—

இல்————இந்த ஊரில் ஆறு இல்லை.

இடத்தில்——இவனிடத்தில் தப்பு இல்லை.

மேல்-————இவன்மேல் எனக்குக் கோபம் இல்லை.

மீது————அந்தச் சுவரின்மீது ஒரு புறு இருக்கிறது.

8. விளிவேற்றுமை:—

ஏ- ————மகனே! என் சொல்லைக் கேள்.

விகாரம்——தம்பீ! இந்தப் படத்தைப் பார்.

பிள்ளாய்! இது என்ன பிராணி சொல்லு.

அக்கா! நீ ஏன் விசனப்படுகிறுய்?

அண்ணு! இங்கே வாரும்.

குயில்காள்! பாடுங்கள். மயில்காள்! ஆடுங்கள்.

☞ முதல் வேற்றுமை எப்பொழுதும் ஒரு வினைச்சொல்லின் எழுவாயாகி வரும்; இரண்டாம் வேற்றுமை ஒரு வினைச்சொல்லுக்குச் செயப்படுபொருளாகி வரும்.

31. விளிவேற்றுமையில் வராத பெயர்கள்:—

அவன், அவள், அவர், அவர்கள், அது, அவை, அவைகள், இவன், இவள், இவர், இவர்கள், இது, இவை, இவைகள் முதலான சுட்டுப் பெயர்களும்,

எவன், எவள், எவர், எவர்கள், எது, எவை, எவைகள், யாவன், யாவள், யாவர், யாவர்கள், யாது, யாவை, ஆர், ஏது முதலான வினுப் பெயர்களும்,

நான், நாம், நாங்கள், யான், யாம், யாங்கள் என்னுந் தன்மைப் பெயர்களும்,

நீ, நீர், நீங்கள் முதலான முன்னிலைப் பெயர்களும்,

தான், தாம், தாங்கள் முதலான போதுப் பெயர்களும்,

பிறன், பிறள், பிறர், பிற, மற்றவன், மற்றவள், மற்றவர், மற்றது, பலர், சிலர், பல, சில, எல்லார், எல்லாம், அனைவர் முதலான வேறு சில பெயர்ச்சொற்களும் விளி வேற்றுமையில் வருவதேயில்லை.

☞ அவர்களில், நல்லவன் இவனே; நீயே எனக்குத் தாய்; போன்றவைகளில் "ஏ" விளி வேற்றுமையின் உருப்பு அன்று.

அப்பியாசம்—8.

கீழ்வரும் வாக்கியங்களில் வேற்றுமை-உருபைப்பெற்று நிற்கிற பெயர்ச்சொற்களை எடுத்து இன்ன வேற்றுமையில் இருக்கின்றன என்று சொல்லு:—

1. நாராயணன் கடைக்குப் போனான்.
2. பொன்னம்மாள், இந்த ஊரில் வளர்ந்தாள்.
3. கப்பல் கடலைக் கடக்கிறதற்கு ஏற்ற கருவி.
4. எங்களிடத்தில் உளி இல்லையே செட்டியாரே!
5. தீக்குருவியானது பட்சிகளில் எல்லாம் பெரியது.
6. வேலன் மதுரையிலிருந்து வந்தான்.
7. ஆதாம், முதலில் ஒரு தோட்டத்தில் வாழ்ந்தான்.
8. கார்த்திகை மாதத்திலும் மழை பெய்யவில்லையே!
9. ஒரு நாழிகைக்கு ஒரு முறை இதைக் குடி.
10. ஆந்தைகள் இரவில் களிப்புடன் திரியும்.
11. வசந்தமே இருதுக்களில் சிறந்தது.
12. கண் காண்கிறதைக் கை செய்யும்.
13. இந்த அரும்புகளைக் கடைக்கு அனுப்பு.
14. நிகளமான கயிற்றை எடுத்துக்கொண்டுவா.
15. ஜானகி! உன்னை எவள் திட்டினாள்?
16. கடலை நீந்திக் கடக்க யாரால் ஆகும்?
17. நான் இதை யாருக்குச் சொல்லுவேன்.
18. எங்களுடைய வீட்டுக்கு நீர் வரலாகாதா?
19. என்னால் தேவனுக்கு என்ன பலன்?
20. கண்ணால் காணாததைச் சிலர் நம்பமாட்டார்கள்.
21. செடியில் வளையாதது மரமாய் வளையாது.
22. கடவுள் உங்களுக்கு நல்ல கல்வியை அருளுக.
23. மேற்குச் சீமையில் பாக்கு உண்டாகின்றதா?
24. இவனுக்குப் பலகை இல்லை, உன்னுடையதைக் கொடு.
25. இந்த ஊருக்குக் கிழக்கு எது? எனக்குச் சொல்லு.
26. இந்த உலக்கை நன்றாயில்லை; வேறொன்றைக் கொடு.

கீழே காட்டியிருக்கிறபடி பலகையை வகுத்துக்
கொண்டு **8**-ஆவது அப்பியாசத்தை எழுது.

எண்.	வேற்றுமை யுருபைப் பெற்றிருக்கிற பெயர்கள்.	வேற்றுமை யுருபுகள்.	எந்த வேற்றுமையின் உருபு:—
1	கடைக்கு..........	கு..........	4-ம்வேற்றுமையுருபு.
	ஊரில்..............	இல்.......	

அப்பியாசம்—9

பலகையை எட்டுப் பிரிவுகளாக வகுத்துக்கொண்டு, எட்டு வேற்றுமைகளுக்கும் உதாரணங்கள் எடுத்து எழுது:—

1. நீங்கள் இவனை வேலனோடு அப்பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதிலும் உங்களுடைய வீட்டில் வைத்துக் கொள்வது நல்லது ஐயா!

2. துரியோதனன் பாண்டவர்களைச் சூதாட்டத்தினால் காட்டிற்கு ஓட்டியதைப்பார்க்கிலும், துரௌபதியினுடைய விஷயத்தில் செய்த அநியாயங்கள் கொடியவை அண்ணா!

3. நீர் ஜானகியைக் கையினால் அறைந்ததற்காகத் துரைசானியிடத்திலிருந்து வந்த கடிதம் உம்முடைய மேஜையில் இருக்கின்றது ஐயா!

4. அவர் நம்மை அன்போடு காப்பாற்றி வந்ததற்கு இதிலும் அதிக அன்பை அவரது மக்களிடத்தில் நாம் வைக்கவேண்டாமா? அக்கா!

5. பிள்ளைகளை ஜாக்கிரதையோடு வளர்த்தவர்களுக்கு அப்பிள்ளைகளிடத்திலிருந்து தங்களுடைய மூப்பில் உதவி கிடைக்கும் என்கிற நிச்சயமிருக்குமே அம்மா!

6. அவ்வரசன் அந்நாட்டை நீதியோடு ஆண்டதற்கு, அவனைக்காட்டிலும் நல்லவர்களுடைய கூட்டத்தில் அவன் பழகிவந்ததுதான் காரணம் தம்பி!

7. அவர் அந்நூலை நமக்காக அன்புடன் எழுதினதை விட, அதினுடைய விலையில் செய்த உதவி சிறந்தது அண்ணா!

8. நம்மை நீதியோடு ஆளுகிற சக்கிரவர்த்தியாருக்குப் பட்டாபிஷேகஞ் செய்த காலத்தில், இந்தப் பூமியில் உள்ள பல தேசங்களிலிருந்தும் வந்த இராஜர்களால் லந்தன் மாநகரம் நிறைந்திருந்தது.

32. வேற்றுமை-உருபுகளைப் பெயர்ச்சொற்களுக்குக் கூட்டல்:—

வேற்றுமை யுருபுகளைப் பெயர்ச்சொற்களுக்குக் கூட்டும்பொழுது,

மகன்	+	ஐ	=	மகனை	என்று ஒரு வேறுபாடும் இல்லாமல் வருகிறது.
கண்	+	ஐ	=	கண்ணை	என்று ண் இரட்டிக்கிறது.
மணி	+	ஐ	=	மணியை	என்று ய் வருகிறது.
பூ	+	ஐ	=	பூவை	என்று வ் வருகிறது.
கன்று	+	ஐ	=	கன்றை	என்று உ ஒழிந்துபோகிறது.
வீடு	+	ஐ	=	வீட்டை	என்று ட் இரட்டித்து, உ ஒழிகிறது.
ஆறு	+	ஐ	=	ஆற்றை	என்று ற் இரட்டித்து, உ ஒழிகிறது.
கதவு	+	ஐ	=	கதவை	என்று முற்றியலுகரம் ஒழிகிறது.
ஜெந்து	+	ஐ	=	ஜெந்துவை	என்று உ கெடாமல், "வ்" வருகிறது.
மரம்	+	ஐ	=	மரத்தை	என்று ம் கெட்டு, அத்து வருகிறது.
அவை	+	ஐ	=	அவற்றை	என்று ஐ கெட்டு அற்று வருகிறது.
நீ	+	ஐ	=	உன்னை	என்று சொல் மிகவும் மாறிப் போகிறது.
எல்லார்	+	ஐ	=	எல்லாரையும்	என்று வேற்றுமை யுருபோடு உம் வருகிறது.

ஆகையால், பெயர்ச்சொற்களிற்கு வேற்றுமை உருபுகளைக் கூட்டும் மாதிரிகள் பல இருக்கின்றன; அவைகளைத் தனித்தனியே காட்டுவோம்.

மாதிரி—1. மகன்.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	இதைப் போலவே,
1	முதல் வேற்றுமை...	மகன்	அரசன்
2	இரண்டாம் வே-மை.	மகனை	இடையன்
3	மூன்றும் வேற்றுமை..	மகனுல்	கப்பல்
4	நான்காம் வேற்றுமை.	மகனுக்கு	குயவன்
5	ஐந்தாம் வேற்றுமை.	மகனிடத்திலிருந்து	தகப்பன்
6	ஆறும் வேற்றுமை....	மகனுடைய	தேவன்
7	ஏழாம் வேற்றுமை...	மகனிடத்தில்	பண்டிதன்
8	விளி வேற்றுமை.....	மகனே !	பாட்டன்
			முதலானவை.

அப்பியாசம்—10.

கீற்றில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. எல்லாம் கடவுள்—படைக்கப்பட்டன.
2. கடவுள்—க் கண்டவர் எங்குமே இல்லை.
3. அந்த மான், இந்த வேடன்—ப் பயந்து ஓடுகிறது.
4. ஒரு செம்படவன்—இப்படிச் செய்யப்பட்டது.
5. இந்தப் பால்—அதிக நீர்—க் கலந்திருக்கிறுய்.
6. அந்த ஊர்—இந்த ஊர்—எப்போது வந்தாய்?
7. இது அந்த அரசன்—காதுகள்—விழுந்தது.
8. உன் பாட்டனுர்—நாங்கள் படித்தோம்.
9. மகன்—! நீ துஷ்டப்பிள்ளைகள்—ச் சேராதே.
10. இந்தக் குயவன்—பானைகள் வாங்குவோம்.
11. அவன், தேர்—குதித்து ஊர்—நோக்கி ஓடினுன்.
12. அந்தக் கப்பல்—இத்தனைபேர்—இடம் இருக்குமா ?
13. நாங்கள் அரசன்—மகன்—உபாத்தியாயர் ஆனேம்.
14. நீர்—எண்ணெய்—ஊற்றினுல் எண்ணெய் மிதக்கும்.
15. நூல்—ப்போற் சீலை, தாய்—ப்போல் மகள்.

மாதிரி—2 கண்.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	இதைப் போலவே,
1	முதல் வேற்றுமை ...	கண்	எண் பல்
2	இரண்டாம் வே-மை	கண்ணை	எள் புல்
3	மூன்றும் வேற்றுமை.	கண்ணால்	கல் பெண்
4	நான்காம்வேற்றுமை	கண்ணுக்கு	கொள் பொன்
5	ஐந்தாம் வேற்றுமை.	கண்ணினின்று	செல் மண்
6	ஆறும் வேற்றுமை ...	கண்ணினுடைய	சொல் முள்
7	ஏழாம் வேற்றுமை...	கண்ணில்	நெய் மெய்
8	விளி வேற்றுமை...	கண்ணே!	நெல் வில்
			முதலானவை.

அப்பியாசம்—11.

கீற்றில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. பெரிய எண்—சிறிய எண்—க் கழிக்கவேண்டும்.
2. இவைகள்—மண்—செய்து வெயில்—உலர்த்தினோம்.
3. அந்தப் பெண்—த் தமிழ்—பயிற்சி அதிகம் இல்லை.
4. கல்—வகைகள்—மாணிக்கக் கல்லும் ஒன்று.
5. செல்—ப் பல்—நீர் சுரப்பதற்குக் காரணம் என்ன?
6. இப்போது நெல்—விலை ஏறிக் கிடக்கிறது.
7. ஐயா! புல்—எவன்—அனுப்பப் போகின்றீர்?
8. சிவன்—வில்—ஸ்ரீராமர் வளைத்தார்.
9. இந்த உள்—நான்கு ஜன்னல்கள் வைத்தான்.
10. எள்—சிறியது ஆல்—விதை என்று அறி.
11. புண்—கோல்—இட்டதுபோல் பேசாதே.
12. மனிதர்—க் கண்—மேலானது அவர்கள்—கல்வி.
13. பூனையின் கண்—ப் பகல்—உற்றுப் பாருங்கள்.
14. பொன்—செய்த நாணயம் இந்த ஊர்—இல்லை.
15. பாராமல், நெல்—கொள—க் கொட்டினேனே!

மாதிரி—3. மணி.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	இதைப்போலவே,	
1.	முதல் வேற்றுமை ...	மணி	ஆணி	கை
2.	இரண்டாம் வே-மை.	மணியை	ஆணை	சேனை
3.	மூன்றும் வேற்றுமை..	மணியால்	ஆமை	தீ
4.	நான்காம் வேற்றுமை.	மணிக்கு	ஊசி	நீதி
5.	ஐந்தாம் வேற்றுமை...	மணியிலிருந்து	எலி	பலகை
6.	ஆறும் வேற்றுமை....	மணியினுடைய	ஏணி	பூனை
7.	ஏழாம் வேற்றுமை....	மணியில்	கதை	பை
8	விளி வேற்றுமை.....	மணியே!	முதலானவை.	

அப்பியாசம்—12.

கீற்றில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. இந்தக் கிளி—சிறகுகள்—அழகைப் பாருங்கள்.
2. இந்த வீதி—அவர்—ஐந்து வீடுகள் இருக்கின்றன.
3. அவள்—ஒருமணி—ஒரு முறை இம் மருந்தைக் கொடு
4. தீ—மொய்க்கிற ஈ—க் கண்டவர் எங்கும் இல்லை.
5. இராமன்—! இவன் பலகை நீ எடுக்காதே.
6. எலி—த் தேடித் திரிகிற இந்தப் பூனை—ப் பாருங்கள்.
7. ஜனங்கள்—கை—இப்பொழுது விசிறி—க் காணலாம்.
8. இவைகள்—ச் சிவப்பு மை—அச்சிட வேண்டும்.
9. இந்தக் கடை—சர்க்கரை—விலை—விசாரிப்போம்.
10. அக்காள்—! இம் மூட்டை—அவிழ்த்துக் கீரை—எடு
11. இவன்—கத்தி—பிடி—எவன் உடைத்தான்?
12. அவன் நரி—ப்போல் அதிக வஞ்சனை—உடையவன்.
13. அரசி-மனம், தீ-இட்ட வெண்ணெய்—ப்போன்றது.
14. ஐயன்—! நீர் பூனை—ஆனை—ஒப்பிடுகிறீர்.
15. உன் கை—இருக்கிற பை—என்ன இருக்கிறது?

மாதிரி—4. பூ.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	இதைப் போலவே,	
1	முதல் வேற்றுமை ...	பூ	அணு	பலா
2	இரண்டாம் வே-வை	பூவை	கடா	பிதா
3	மூன்றாம் வேற்றுமை.	பூவினால்	கணு	புரு
4	நான்காம்வேற்றுமை.	பூவுக்கு	திரு	மாதா
5	ஐந்தாம் வேற்றுமை.	பூவிலிருந்து	நிலா	மிடா
6	ஆறாம் வேற்றுமை...	பூவினுடைய	நோ	வினு
7	ஏழாம் வேற்றுமை...	பூவில்		
8	விளி வேற்றுமை ...	பூவே!	முதலானவை.	

அப்பியாசம்—13.

கீழ்க் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. பிள்ளைகள்—! வினு—த் தக்க விடை—க் கொடுங்கள்.
2. இந்தக் கணு—பொருள்—அவர்—க் கேட்போம்.
3. இந்தப் பலா-ப்பார்! எத்தனை காய்கள்-த்தாங்குகிறது!
4. பூ—உள்ள தேன்-வண்டுகள் வருந்திச்—சேர்க்கின்றன.
5. இந்நிலா—கடல்—கரை—உலாவப் போவோம்.
6. அவள், தலை—நோ—இப்படிக் கதறுகின்றாள் ஐயன்—!
7. ஒரு அணு—ப் பன்னிரண்டு பைசகள் என்றறியாயா?
8. இந்த மிடா—இருக்கிற தயிர்—அந்த மிடா—ஊற்று.
9. மாதா—சொல்—க் கேட்பது மக்கள்—கடமை.
10. இது அவன்—அவன்—பிதா—கொடுக்கப்பட்டது.
11. ஒருவன்—த் திரு—சிறந்தது நிறைந்த கல்வி என்றறி.
12. இந்த நாடா—பாதி—அவன்—தம்பி—அனுப்புங்கள்.
13. இப்பலா—கனி—உம், அம்மா—கனி—உம் பறி.
14. இந்த ஜில்லா—அல்லா—பண்டிகை எப்போது?
15. புரு—ப் பூனை—ச் சத்துரு என்னலாம்.

மாதிரி—5. கன்று.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	இதைப்போலவே,
1	முதல் வேற்றுமை ...	கன்று	அம்பு நெருப்பு
2	இரண்டாம் வே-மை.	கன்றை	உடுப்பு பற்று
3	மூன்றாம் வேற்றுமை.	கன்றினால்	உப்பு பிறப்பு
4	நான்காம் வேற்றுமை.	கன்றுக்கு	எருது புற்று
5	ஐந்தாம் வேற்றுமை.	கன்றிலிருந்து	எழுத்து மருந்து
6	ஆறாம் வேற்றுமை ...	கன்றினுடைய	கரும்பு முதுகு
7	ஏழாம் வேற்றுமை ...	கன்றில்	குளம்பு மூக்கு
8	விளி வேற்றுமை ...	கன்றே!	முதலானவை.

அப்பியாசம்—14.

கீற்றில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. இந்த மருந்து—அவள்—தம்பி—க் கொடு.
2. போனவருஷத்தில் கருப்பு—அநேகர்—மரணம் வந்தது.
3. மகள்—! நெருப்பு—அருகு—குழந்தை—விடாதே.
4. விளக்கு—க் காற்று—கொண்டு போகாதே.
5. கரும்பு—தின்ன இவன்யார் கூலி—த் தருவார்?
6. இந்த முத்து—என்ன விலை—வாங்கலாம்?
7. அடுப்பு—விறகு—ப் போட்டுச் சீக்ரஞ் சமையல்—ப் பண்.
8. அவன்—உடம்பு—எலும்பு—த் தவிர வேறொன்றுமில்லை
9. இந்த மாலை—அவள்—கழுத்து—போடு
10. அக்குன்று—வருகின்ற அருவி—ப் பார்க்கப் போவோம்.
11. மகன்—! இந்த இருட்டு—நீ அவ்வழி—போவாயா?
12. பிறன்—கண்—இருக்கிற துரும்பு—இவன் எடுப்பான்.
13. இந்தப் புற்று—ஒரு பாம்பு—ப் பிடித்தோம்.
14. நண்டு—வளை—பாம்பு என் நுழைகிறது?
15. மான்—குளம்பு—க் குதிரை—குளம்பு—ஒப்பிடாதே.

மாதிரி—6. வீடு.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	இதைப்போலவே,	
1	முதல் வேற்றுமை....	வீடு	ஏடு	தோடு
2	இரண்டாம் வே-மை.	வீட்டை	ஓடு	நாடு
3	மூன்றும் வேற்றுமை.	வீட்டால்	காடு	பாடு
4	நான்காம்வேற்றுமை.	வீட்டுக்கு	கூடு	பேடு
5	ஐந்தாம் வேற்றுமை..	வீட்டிலிருந்து	சேடு	
6	ஆறும் வேற்றுமை....	வீட்டினுடைய	கோடு	மாடு
7	ஏழாம் வேற்றுமை...	வீட்டில்	சூடு	மூடு
8	விளி வேற்றுமை.....	வீடே!	சோடு	மேடு
			முதலானவை.	

அப்பியாசம்—15.

கீற்றில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. பழைய வீடு—புதிய வீடு—ப் போகிறோம்.
2. மாடு—இருக்கிறது—ப்போல் குதிரை—க்கொம்பில்லை.
3. காடு—வாழ்கிற புலி, நாடு—வாழ்கிற பூனை—இனம்.
4. அவர் பட்ட பாடு—ச் சொல்ல யார்—ஆகும்?
5. பெண்கள்—! இந்தக் கூடு—அழகு—ப் பாருங்கள்.
6. ஒருநாள் என் சோடு—ஒரு தேள்—க் கண்டேன்.
7. தோடு—க் கழற்றிப் பெரிய பெட்டி—வைத்தேன்.
8. கெட்ட அரசன்—நாடு—ப் புலியுள்ள காடு—ஒப்பிடு.
9. இந்த அன்னப்பேடு—யார்—விற்கப் போகிறாய்?
10. மூடு—ப் பயந்து வீடு—ச் சுட்டெரிக்கலாமா? ஐயன்—!
11. ஆடு—ப் போல ஸாதுவானது பிராணிகள்—இல்லை.
12. தண்ணீர்—இங்கு—அந்த மேடு—ஏற்ற முடியுமா?
13. தோழன்—க் காட்டு—விட்டு வீடு—ப் போகிறோமே!
14. கந்தன்—! இந்த மேடு—வெட்டி அந்தக் குழி—மூடு.
15. மனிதர்—வீடு—உம் காடு—உம் சோதனையுண்டு.

மாதிரி—7. தவிடு.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	இதைப்போலவே,
1	முதல் வேற்றுமை....	தவிடு	உதடு
2	இரண்டாம் வே-மை.	தவிட்டை	ஏற்பாடு
3	மூன்றும் வேற்றுமை.	தவிட்டால்	கசடு
4	நான்காம்வேற்றுமை.	தவிட்டுக்கு	குறடு
5	ஐந்தாம் வேற்றுமை..	தவிட்டிலிருந்து	சாப்பாடு
6	ஆறும் வேற்றுமை....	தவிட்டினுடைய	துறடு
7	ஏழாம் வேற்றுமை...	தவிட்டில்	முகடு
8	விளி வேற்றுமை......	தவிடே!	முதலானவை.

அப்பியாசம்—16.

கீற்றில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. இது புதிய ஏற்பாடு—இல்லே; பழைய ஏற்பாடு—பார்.
2. அவர்—வீடு—சாப்பாடு—நேற்றுப் போனேம்.
3. இந்த ஏற்பாடு—எல்லாரும் சம்மதிப்பார்கள்.
4. இந்தச் சந்தனக் குறடு—யார்—கடை—வாங்கினுய்?
5. அவன் பசி—தவிடு—த் தின்னவும் ஆசைப்பட்டான்.
6. நம்முடைய பல்—உதடு—உடுப்பு என்னலாம்.
7. இந்தத் துறடு—அந்தக் கனி—ப் பறிப்போம்.
8. இந்தத் தவிடு—அந்தக் கோணி—கொட்டிக் கட்டு.
9. அவர் என்னுடைய கசடு—க் கதைகள்—ஒழித்தார்.
10. வீடு—முகடு—ஒரு தேள் கீழே வீழ்ந்தது.
11. நீங்கள் செய்த ஏற்பாடு—இது இவர்கள்—உண்டானது.
12. நாங்கள் பெருக்குவாய்பாடு—அவன்—கற்றேம்.
13. இந்த ஏற்பாடு—சாப்பாடு—க் கஷ்டம் வந்தது.
14. உதடு—இருக்கிற கனி—வாய்—உள்—தள்ளு.
15. அவ்வீடு—உம், வாசல்—உம் அலேந்தேன்.

மாதிரி—8. ஆறு.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	இதைப்போலவே,
1	முதல் வேற்றுமை ...	ஆறு	ஈறு
2	இரண்டாம் வே-மை	ஆற்றை	ஏறு
3	மூன்றும் வேற்றுமை.	ஆற்றால்	சாறு
4	நான்காம் வேற்றுமை.	ஆற்றுக்கு	சேறு
5	ஐந்தாம் வேற்றுமை.	ஆற்றிலிருந்து	சோறு
6	ஆறும் வேற்றுமை ...	ஆற்றினுடைய	நீறு
7	ஏழாம் வேற்றுமை ...	ஆற்றில்	பேறு
8	விளி வேற்றுமை......	ஆறே!	முதலானவை.

அப்பியாசம்—17.

கீற்றில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. அவன் ஆறு—ப் போய் மாடு—க் கழுவினான்.
2. இந்தச் சேறு—உன் கால்—ஜோடு—நீ நடப்பாயா?
3. சொற்கள்—ஈறு—வராத மெய்கள்—ச் சொல்லு.
4. நூறு—ஒருவனுகிலும் யோக்கியன் இரானு?
5. இந்நாட்கள்—சோறு—ப் படிக்கிறவர் பலர்.
6. கரும்பு—சாறு—சர்க்கரை—உண்டாக்கலாம்.
7. அவன், அவா—திருநீறு—கொண்டுவந்தான்.
8. அவன்—க் கிடைத்த பேறு—எவரும் புகழ்வர்.
9. இந்தச் சோறு—கல்—க் கலந்தாயா என்ன?
10. ஆறு—கரை உள்ள மரங்கள்—செழிப்பு—ப் பார்.
11. நாம் சோறு—உண்டு உடல்—ப் போஷிக்கிறோம்.
12. சொல்—ஈறு—நோக்கி வேற்றுமை—உருபு—க் கூட்டு.
13. கரும்பு—இறங்குஞ் சாறு—இந்தச் சால்—பிடி.
14. உண்ணச் சோறு—உடுக்கத் துணி—க் கேட்கிறாள்.
15. நீ பெற்ற பேறு—ஒப்புமில்லை; உயர்வுமில்லை.

மாதிரி—9. கிணறு.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	இதைப்போலவே,
1	முதல் வேற்றுமை...	கிணறு	கயிறு
2	இரண்டாம் வே-மை	கிணற்றை	களிறு
3	மூன்ரும் வேற்றுமை	கிணற்ருல்	ஞாயிறு
4	நான்காம் வேற்றுமை	கிணற்றுக்கு	தவறு
5	ஐந்தாம் வேற்றுமை.	கிணற்றிலிருந்து	பயறு
6	ஆரும் வேற்றுமை...	கிணற்றினுடைய	வயிறு
7	ஏழாம் வேற்றுமை...	கிணற்றில்	மிடறு
8	விளி வேற்றுமை—...	கிணறே!	முதலானவை.

அப்பியாசம்—18.

கீற்றில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. கிணறு—இறங்கித் தண்ணீர்—க் கலக்காதேயுங்கள்.
2. ஒளவை, வயிறு—! உன்ஞேடு வாழ்தலரிது என்ருள்.
3. இந்தக் கயிறு—எடை—இவர்—ச் சொல்லுங்கள்.
4. பயறு—வறுத்து விதைத்தால் அது முளைக்குமா?
5. களிறு—அரசரும், பிடி—அரசிகளும் வந்தார்கள்.
6. கை—உள்ள சிறுகுடை—ஞாயிறு—மறைக்கலாம்.
7. இக்கதை—வரலாறு—ச் சுருக்கமாய் எழுதுங்கள்.
8. நான், வயிறு—கொடுமை—இவ்வூர்—வந்துசேர்ந்தேன்.
9. அவன், வயிறு—உண்டான கட்டி—வருந்துகிறுன்.
10. ஞாயிறு—உரியநாள்—ஞாயிற்றுக்கிழமை என்கிருேம்.
11. இந்தக் கயிறு—அக்கிணறு தண்ணீர்—த் தூக்கலாமா?
12. இந்தக் கிணறு—உபயோகமில்லை; இதின் நீர் உப்பு.
13. ஓநாய்—மிடறு—எலும்பு—எது எடுத்தது?'
14. ஆறு—வந்த வெள்ளம் இக்கிணறு—அழித்தது.
15. நம்முடைய தவறு—நாமும் அறிவோம்.

மாதிரி – 10. கதவு.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	இதைப் போலவே,
1	முதல் வேற்றுமை...	கதவு	அழிவு
2	இரண்டாம் வே-மை.	கதவை	அறிவு
3	மூன்றும் வேற்றுமை.	கதவினால்	கனவு
4	நான்காம் வேற்றுமை.	கதவுக்கு	செலவு
5	ஐந்தாம் வேற்றுமை..	கதவிலிருந்து	தாழ்வு
6	ஆறும் வேற்றுமை.....	கதவினுடைய	நிலவு
7	ஏழாம் வேற்றுமை...	கதவில்	நினைவு
8	விளி வேற்றுமை.....	கதவே!	முதலானவை.

அப்பியாசம்—19.

கீற்றில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. வரவு—மிஞ்சின செலவு—துன்பம் தப்பாமல் வரும்.
2. வாழ்வு-சந்தோஷமும், தாழ்வு-துக்கமும் உண்டாம்.
3. மகள்—! இந்த நினைவு—நன்மை-அடைய முடியாது.
4. அறிவு—ப் போல் சிறந்த பொருள்—க் காணேம்.
5. இரவு—துணையில்லாமல் இந்த வழி—நடக்காதே.
6. உன் வாழ்வு—உம், உன் தாழ்வு—உம் காரணம் யாது?
7. இந்தக் கதவு—ஒரு கீல்—வைத்துத் தைக்கவேண்டும்.
8. மிதமிஞ்சின செலவு—பலன் துக்கம் என்றறியுங்கள்.
9. நாம், நமது அறிவு-நல்லவழி-செலுத்தல் வேண்டும்.
10. நீ கண்ட கனவு—பொருள்—ச் சொல்கிறேன்; கேள்.
11. இப்பெருமழை, பயிர்—அழிவு—உண்டாக்கினது.
12. நாய்—வால்—உள்ள வளைவு—நீக்க யார்—முடியும்?
13. கனவு—உம், நினைவு—உம் பேதம் என்ன?
14. என் மகன்—! அறிவு—அழகு அடக்கமென்றறி.
15. வாழ்வு—தாழ்வு—க் கலந்தே காண்கிறோம்.

மாதிரி—11. ஜெந்து.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	இதைப்போலவே,
			இந்து
1	முதல் வேற்றுமை...	ஜெந்து	சம்பு
2	இரண்டாம்வே-மை.	ஜெந்துவை	தம்பு
3	மூன்றும் வேற்றுமை.	ஜெந்துவினுல்	பந்து
4	நான்காம் வேற்றுமை	ஜெந்துவிற்கு	பாண்டு
5	ஐந்தாம் வேற்றுமை.	ஜெந்துவிலிருந்து	பிரபு
6	ஆறும் வேற்றுமை...	ஜெந்துவினுடைய	வஸ்து
7	ஏழாம் வேற்றுமை...	ஜெந்துவில்	சத்துரு
8	விளி வேற்றுமை......	ஜெந்துவே!	முதலானவை.

அப்பியாசம்—20.

கீற்றில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. இந்த ஜெந்து—எந்தக் காடு—காணலாம்? அண்ணன்—!
2. பிள்ளைகள்—! எந்த ஜெந்து—உம் பக்ஷமாயிருங்கள்.
3. நீ இந்து—அழுகிற குழந்தை—ப்போ விருக்கிருய்?
4. இந்து—உம் மகமதியன்—உம் சிநேகம் உண்டானது.
5. அவன்—பந்து—த் திட்டினுல் அவன்—க் கோபம் வரும்.
6. இந்த அரிய வஸ்து—ப் பத்திரமாய் வைத்துக்கொள்.
7. பாண்டு—பிள்ளைகள் விராடன்—நாடு—இருந்தனர்.
8. தம்பு—சொல்—க் கேட்டு வேதவதி வருந்தினுள்.
9. பாண்டு—சகோதரன் பிள்ளைகள் நூறு பேர்கள்.
10. இந்த வஸ்து—அருமை—நீ அறியாயா? மகன்—!
11. சம்பு—இராவணன்—பல வரங்கள் அருளப்பட்டன.
12. இந்து—ஒற்றுமை—க் காண்பது மிகவும் அருமை.
13. எந்தப் பிரபு—இச்சத்திரம் உண்டானதோ?
14. பணம், பந்து—ச் சத்துரு, சத்துரு—ப் பந்து ஆக்கும்.
15. யது—சந்ததி—பிறந்தவர்கள்—யாதவர் என்கிறோம்.

மாதிரி—12. மரம்.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	இதைப்போலவே,
1	முதல் வேற்றுமை....	மரம்	இனம் பணம்
2	இரண்டாம் வே-மை.	மரத்தை	உரோகம் பலம்
3	மூன்ரும் வேற்றுமை.	மரத்தால்	ஒழுக்கம் பாபம்
4	நான்காம் வேற்றுமை	மரத்திற்கு	குளம் மணம்
5	ஐந்தாம் வேற்றுமை..	மரத்திலிருந்து	குலம் மனம்
6	ஆரும் வேற்றுமை...	மரத்தினுடைய	கோபம்வழக்கம்
7	ஏழாம் வேற்றுமை...	மரத்தில்	சிங்கம் வானம்
8	விளி வேற்றுமை.....	மரமே!	முதலானவை.

அப்பியாசம்—21.

கீற்றில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப்படி:—

1. சிங்கம்—மிருகங்கள்—இராஜன் என்கிரேம்.
2. இந்தக் குளம்—இருக்கிற நீர்—பாசி—க் காணும்.
3. மனிதர்—சத்துருக்கள்—கோபம்-கொடியவன் எவன்?
4. அவர்கள், தங்கள்—பாபம்—வியசனப்பட்டார்கள்.
5. பணம்—மேலானதாகக் குணம்—எண்ணல் வேண்டும்.
6. ஒருவன்—குலம்—ப் பாராமல் ஒழுக்கம்—ப் பாரும்.
7. இந்தக் கெட்ட வழக்கம்—நீ உரோகம்—அடைகிருய்.
8. பட்டணம்—உம், கிராமம்—உம் எவ்வளவோ பேதம்.
9. புத்தகம்—படித்ததை மனம்—பதிக்கவேண்டும்.
10. பாபம்-ப் பாலாக, புண்ணியம்-விஷயமாக நினைத்தோம்
11. அம்முனி, வனம்—போய்த் தவம்—த்தொடங்கினுன்.
12. சிங்கம்—பலம்—யானையும் நடுங்கும்.
13. இந்தப் புத்தகம்—ஆரும் பாடம்—ப் படிக்கவில்லை.
14. கிணறு—கரை—மரம்—வைப்பது கெட்டது.
15. மனம்—உள்ள எண்ணம்—முகம்—அறியலாம்.

மாதிரி—13. அது.

எண்.	வேற்றுமைகள்—:	ரூபங்கள்:—	இதைப்போலவே,
1	முதல் வேற்றுமை....	அது	இது
2	இரண்டாம் வே-மை.	அதை	எது
3	மூன்றும் வேற்றுமை.	அதனால்	பெரியது*
4	நான்காம் வேற்றுமை	அதற்கு	நல்லது
5	ஐந்தாம் வேற்றுமை..	அதிலிருந்து	கெட்டது
6	ஆறும் வேற்றுமை....	அதினுடைய	இல்லாதது
7	ஏழாம் வேற்றுமை...	அதில்	பொல்லாதது
8	விளி வேற்றுமை......	(——)	முதலானவை.

அப்பியாசம்—22.

கீற்றில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. இது—அது—க் கழிக்க வேண்டும்.
2. நீ எது—இப்படிச் சொல்கிறாய்?
3. அது—பெரியது—இது—வைக்கலாமா?
4. இது—தோல்—என்னென்ன செய்யப்படும்?
5. எது—விரும்புகிறாயோ அது—க் கேளாதே.
6. எது—உம் தீராத உரோகங்கள் அவர்—தீர்க்கப்பட்டன.
7. இது—ஒரு பாதி—அவன்—அனுப்பு.
8. முன் இருந்தது—இது—உயரம் அதிகம் அல்லவா?
9. இல்லாதது—நாடி உள்ளது—விட்டுவிடாதே.
10. நாம் படித்தது—படியாதது அதிகம்.
11. இது—நீ செய்யவேண்டியது—ச் சொல்கிறேன்.
12. இது—பெரியது—நீ விலைகொடுத்து வாங்குவாயா?
13. நீ எது—க் கேட்டாயோ அது—க் கொடுத்தேன்.
14. எது—இவன் இது—ப் பகைக்கிறான்?
15. எது—உம் அசையாத இது—ப் பொடியாக்கினாய்.

* விளிவேற்றுமை இல்லாதவைகள் அல்லாத பெயர்களுக்கு விளிவேற்றுமை ரூபஞ் சொல்லல்வேண்டும்.

மாதிரி—14. அவை.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	இதைப் போலவே,
1	முதல் வேற்றுமை....	அவை	இவை
2	இரண்டாம் வே-மை.	அவற்றை	எவை
3	மூன்றும் வேற்றுமை.	அவற்ருல்	பழயவை *
4	நான்காம் வேற்றுமை.	அவற்றிற்கு	புதியவை
5	ஐந்தாம் வேற்றுமை..	அவற்றிலிருந்து	வந்தவை
6	ஆரும் வேற்றுமை...	அவற்றினுடைய	நல்லவை
7	ஏழாம் வேற்றுமை...	அவற்றில்	சிறியவை
8	விளி வேற்றுமை.....	(———)	முதலானவை.

அப்பியாசம்—23.

கீற்றில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. இவைப்—ப் பெரிய மூட்டை—வைத்துக் கட்டு.
2. இவை—நீ அதிக விலே கொடுத்தாய்.
3. பழயவை—இங்கே கொண்டுவா
4. அவன் எவை—உனக்கு அனுப்பினன்?
5. இவை—எவை—த் தேவன் படைக்கவில்லே?
6. நேற்று வந்தவை—இவர்—க் காட்டு.
7. நீ கற்றவை—அவர்—ப் பாடிக்காட்டு.
8. இவை—உடல்—எலும்பு—க் காணய்.
9. இவ்விடம்—இல்லாதவை—நீ கேட்கிருய்.
10. தீயவை-ச் செய்தவர்-உம், நல்லவை-ச் செய்யுங்கள்.
11. மாடுகள்—பொல்லாதவை—வழி—ஓரம்—கட்டாதே.
12. தேனீ முதலானவை—என்ன அறிகிறீர்கள்?
13. கற்றவை—மறவாதவன்—புத்தி சிறந்தது.
14. போனவை—எண்ணுவது—ஆவதென்ன?
15. யானே-சிறியவை-உம், பெரியவை—உம் பேதமுண்டு.

* விளிவேற்றுமை இல்லாதவைகள் அல்லாத பெயர்களுக்கு விளிவேற்றுமை ரூபஞ் சொல்லல்வேண்டும்.

மாதிரி—15. பல.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	இதைப் போலவே,
1	முதல் வேற்றுமை....	பல	இளையன*
2	இரண்டாம்வே—மை.	பலவற்றை	சில
3	மூன்ரும் வேற்றுமை.	பலவற்ருல்	சிறியன
4	நான்காம் வேற்றுமை	பலவற்றிற்கு	நல்லன
5	ஐந்தாம் வேற்றுமை..	பலவற்றிலிருந்து	பழயன
6	ஆரும் வேற்றுமை....	பலவற்றினுடைய	புதியன
7	ஏழாம் வேற்றுமை...	பலவற்றில்	முதலியன
8	விளி வேற்றுமை.....	(———)	முதலானவை.

அப்பியாசம்—24.

கீற்றில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. இது—ப் போன்ற பல—அவன்—க் கொடுத்தோம்.
2. இவை—பழயன—எடுத்து வேருய் வையுங்கள்.
3. இருக்கிற புத்தகங்கள்—புதியன—ப் பார்த்து எடு.
4. என் பசுக்கள்—சில—க் கொம்பில்லை.
5. இப்பழங்கள்—சில—த் தின்போம், சில—விற்போம்.
6. மீன்கள்—சிறியன—ப் பெரியன தின்று வாழ்கின்றன.
7. பழையன—விட்டு, புதியன—க் கொள்ளலாகாதோ?
8. யானைகள்—பெரியன்—உயரம் எத்தனையடி?
9. நீ நல்லன—க் காட்டிக் கெட்டென—க் கொடுத்தாய்.
10. இங்கு இருந்தன—வந்தன—ச் சண்டை யுண்டானது.
11. கெட்ட—ச் செய்து நல்ல—ப் பெறலாகுமா?
12. உள்ளன—விட்டுவிட்டு இல்லாதன—நாடுகிருேம்.
13. புதிய சில—நாடிப் பழைய பல—இழந்தீர்.
14. அவர்—நீ கற்றன—மறந்துவிட்டாயோ?
15. உருவு—சிறிய—அறிவு—பெரிய—க் காணலாம்.

* விளிவேற்றுமை இல்லாதவைகள் அல்லாத பெயர்களுக்கு விளிவேற்றுமை ரூபஞ் சொல்லல்வேண்டும்.

மாதிரி—16. எல்லார்.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	ரூபங்கள்:—
1	முதல் வேற்றுமை....	எல்லாரும்	அனைவரும்
2	இரண்டாம் வே-மை.	எல்லாரையும்	அனைவரையும்
3	மூன்றாம் வேற்றுமை.	எல்லாராலும்	அனைவராலும்
4	நான்காம் வேற்றுமை	எல்லாருக்கும்	அனைவருக்கும்
5	ஐந்தாம் வேற்றுமை..	எல்லாரிலும்	அனைவரிலும்
6	ஆறாம் வேற்றுமை...	எல்லாருடைய*	அனைவருடைய*
7	ஏழாம் வேற்றுமை...	எல்லாரிடத்திலும்	அனைவரிடத்திலும்
8	விளி வேற்றுமை......	(——)	(——)

* ☞ எல்லார், அனைவர், எல்லாம், அனைத்து முதலான பெயர்கள் வேற்றுமையுருபுகளோடு பெறும் **உம்**, எல்லாருடைய பாவங்களையும், **எல்லாவற்றினுடைய** கால்களும், அனைவருடைய வீடுகளும் என்பவைபோல் ஆறாம் வேற்றுமையில் மாத்திரம், அதுகொண்டு முடிகிற பெயருக்குக் கூட்டப்படும்.

மாதிரி—17. எல்லாம், அனைத்து.

எண்.	வேற்றுமைகள்:—	ரூபங்கள்:—	ரூபங்கள்:—
1	முதல் வேற்றுமை ...	எல்லாமும்	அனைத்தும்
2	இரண்டாம் வே-மை.	எல்லாவற்றையும்	அனைத்தையும்
3	மூன்றாம் வேற்றுமை.	எல்லாவற்றாலும்	அனைத்தினாலும்
4	நான்காம் வேற்றுமை	எல்லாவற்றிற்கும்	அனைத்திற்கும்
5	ஐந்தாம் வேற்றுமை .	எல்லாவற்றிலும்	அனைத்திலும்
6	ஆறாம் வேற்றுமை...	எல்லாவற்றினுடைய	அனைத்தினுடை
7	ஏழாம் வேற்றுமை...	எல்லாவற்றிலும்	அனைத்திலும் [ய
8	விளி வேற்றுமை ...	(——)	(——)

மாதிரி—18. நான், நாங்கள், நாம்; யான், யாங்கள், யாம் ஆகிய தன்மைப் பெயர்கள்.

எண்.	வேற்றுமைகள்:—	நான்.	நாங்கள்.	நாம்.
1	முதல் வேற்றுமை ...	நான்	நாங்கள்	நாம்
2	இரண்டாம் வே-மை.	என்னை	எங்களை	நம்மை
3	மூன்றும் வேற்றுமை	என்னால்	எங்களால்	நம்மால்
4	நான்காம் வேற்றுமை	எனக்கு	எங்களுக்கு	நமக்கு
5	ஐந்தாம் வேற்றுமை..	என்னிடத்திலிருந்து	எங்களிடத்திலிருந்து	நம்மிடத்திலிருந்து
6	ஆறும் வேற்றுமை...	என்னுடைய	எங்களுடைய	நம்முடைய
7	ஏழாம் வேற்றுமை...	என்னிடத்தில்	எங்களிடத்தில்	நம்மிடத்தில்
8	விளி வேற்றுமை ...	(———)	(———)	(———)
		[யான்]	[யாங்கள்]	[யாம்]
1	முதல் வேற்றுமை ...	யான்	யாங்கள்	யாம்
2	இரண்டாம் வே—மை	என்னை	எங்களை	எம்மை
3	மூன்றும் வேற்றுமை.	என்னால்	எங்களால்	எம்மால்
4	நான்காம் வேற்றுமை	எனக்கு	எங்களுக்கு	எமக்கு
5	ஐந்தாம் வேற்றுமை..	என்னினும்	எங்களைவிட	எம்மைவிட
6	ஆறும் வேற்றுமை ...	என்னுடைய	எங்களுடைய	எம்முடைய
7	ஏழாம் வேற்றுமை...	என்னிடத்தில்	எங்களிடத்தில்	எம்மிடத்தில்
8	விளி வேற்றுமை ...	(———)	(———)	(———)

மாதிரிகள்—**19, 20**. நீ, நீர், நீங்கள்; தான், தாம், தாங்கள்.

எண்.	வேற்றுமைகள்:—	நீ	நீர்.	நீங்கள்.
1	முதல் வேற்றுமை.....	நீ	நீர்	நீங்கள்
2	இரண்டாம் வே-மை.	உன்னை	உம்மை	உங்களை
3	மூன்றாம் வேற்றுமை.	உன்னால்	உம்மால்	உங்களால்
4	நான்காம் வேற்றுமை	உனக்கு	உமக்கு	உங்களுக்கு
5	ஐந்தாம் வேற்றுமை..	உன்னிடத்திலிருந்து	உம்மிடத்திலிருந்து	உங்களிடத்திலிருந்து
6	ஆறாம் வேற்றுமை....	உன்னுடைய	உம்முடைய	உங்களுடைய
7	ஏழாம் வேற்றுமை....	உன்னிடத்தில்	உம்மிடத்தில்	உங்களிடத்தில்
8	விளி வேற்றுமை.......	(——)	(——)	(——)
		[தான்.]	[தாம்]	[தாங்கள்]
1	முதல் வேற்றுமை....	தான்	தாம்	தாங்கள்
2	இரண்டாம் வே-மை.	தன்னை	தம்மை	தங்களை
3	மூன்றாம் வேற்றுமை.	தன்னால்	தம்மால்	தங்களால்
4	நான்காம் வேற்றுமை	தனக்கு	தமக்கு	தங்களுக்கு
5	ஐந்தாம் வேற்றுமை..	தன்னிடத்திலிருந்து	தம்மிடத்திலிருந்து	தங்களிடத்திலிருந்து
6	ஆறாம் வேற்றுமை....	தன்னுடைய	தம்முடைய	தங்களுடைய
7	ஏழாம் வேற்றுமை...	தன்னிடத்தில்	தம்மிடத்தில்	தங்களிடத்தில்
8	விளி வேற்றுமை......	(——)	(——)	(——)

அப்பியாசம்—25.

கீழ்வரும் வாக்கியங்களில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. காக்கை தான்—குஞ்சு—ப் பொன் குஞ்சாக எண்ணும்.
2. அவர் தாம்—மக்கள்—த் தாமே கல்வி கற்பித்தார்.
3. தான்—நேரிட்ட நஷ்டம்—அவன் வியசனப்படுகிறான்.
4. பூமி—பிறந்தவர் எல்லார்—மரணம் உண்டு.
5. இராமன் தான்—நாடு—விட்டுக் காடு—ப் போனான்.
6. மறதி என்பது எல்லார்—உள்ள குற்றம்.
7. இவ்வூரார் அனைவர்—ஜீவனம்—உண்டு.
8. ஞானிகள் தாங்கள்—குற்றம்—அறிவார்கள்.
9. தான்—எழுதப்பட்ட புத்தகம்—நான்—அனுப்பினான்.
10. மலைகள் எல்லாம்—பெரிய மலை—பெயர் என்ன?
11. பறவைகள் எல்லாம்—சிறகுகள் உண்டு.
12. பறவைகள் எல்லாம்—பறக்க முடியாது.
13. ஜீவன்—உடைய பிராணிகள் அனைத்து—தாய் தேவன்.
14. தான்—இருந்த எல்லாம்— அவன் விற்றுத் தின்றான்.
15. எல்லார்—இருதயங்கள்—கடவுள் நன்றாய் அறிவார்.
16. இவ்வூர்—உள்ளவர் அனைவர்—இவன் நண்பன்.
17. அனைவர்—கடிதங்கள் வந்தன, பணம் வரவில்லை.
18. நாம்—பாவங்கள் அனைத்து—பகவான் மன்னிப்பார்.
19. எல்லார்—இச்செய்திகள் எல்லாம்—சொல்லு.
20. தேவன்—! பாவிகள் எல்லார்—பெரும்பாவி நான்.
21. பாம்புகள் எல்லாம்—படம் இல்லை.
22. நீ இச்சபையார் அனைவர்—அன்பு புரி.
23. மனிதர்—ஆஸ்திகள் எல்லாம்—சிறந்த ஆஸ்தி கல்வி.
24. நீங்கள் எல்லார்—அன்பாய்ப் பேசுங்கள்.
25. எல்லார்—நல்லவன்-க் காண்பது அருமை.
26. இவ்வூர்—உள்ள அனைவர்—இது—அறிவியுங்கள்.
27. அந்நாட்டார் எல்லார்—குணம்—அறிவோம்.

அப்பியாசம்—26.

கீழ்க்கண்ட வாக்கியங்களில் ஏற்ற வேற்றுமை உருபை அமைத்துப் படி:—

1. நீ என்—வீடு நாளை—வருவாயா?
2. நீர் நாங்கள்—ஒரு பாட்டு—ச் சொல்லிக்கொடும்.
3. இராமன் நாங்கள்—பல்லாரி—வரவில்லை.
4. நாம்—இது—சிறிதும் பிரயோஜனமில்லை.
5. யான்—பொன்னும் வெள்ளியும் இல்லை.
6. இது நான்—இராமசாமி—அனுப்பப்பட்டது.
7. யான்—ஆன உபகாரம்—அவன்—ச் செய்தேன்.
8. நாம்—குற்றம்—ப் பாராது பிறர்—குற்றம்—ப் பார்த்தோம்.
9. யாங்கள்—வருஷம்—ரூ. ஐந்நூறு வரவில்லையே.
10. மகன்—! யாங்கள்—ஆன உறவினர் நீ—யார்?
11. யான்—அவன்—அன்பு என்பதே இல்லை.
12. நாம்—க் கல்வி கற்பித்தவர்—நாம் கனப்படுத்துவோம்.
13. நீர்—சொல்லப்பட்ட பாட்டு, யாங்கள்—விளங்கியது.
14. நாம்—உயிர்—ப் போலப் பிற—உயிர்—எண்ணுவோம்.
15. நீ நீ—கடமைகள்—த் தவறாமல் செய்.
16. நான் நீ—ப் பார்க்க விரும்பி மதுரை—வந்தேன்.
17. நீங்கள்—நான் சொல்லவேண்டியது என்ன?
18. நீர் நீர்—மாடுகள்—எத்திசை—ஓட்டினீர்?
19. நான் யான்—பசு—ப் புல்—போடுகிறேன்.
20. நீங்கள்—ஆன உதவி—ப் பிறர்—ச் செய்யுங்கள்.
21. நீ—த் தெரிந்தது—ஒளியாமல் சொல்லு.
22. பகவான்—! நீர்—யான்—பக்தி—உண்டாக்கும்.
23. நீங்கள்—நான் கொடுக்கவேண்டியது எவ்வளவு?
24. நாம்—க் கண்டு திருடர் ஓடிப்போனார்கள்.
25. நீ—சொல்—க் கேட்டு யான்—மன முருகினது.
26. ஐயன்—! நீங்கள்—இவை—பிரயோஜனமென்ன?
27. யான்—நண்பன்—ப் பார்க்க இங்கே வந்தோம்.

அப்பியாசம்—27.

நீக்கக்கூடிய வேற்றுமை யுருபை ஏற்றபடி நீக்கிப் படி :—

1. பசுவினுடைய மந்தையைப் பார்க்கப் போவோம்.
2. இவ்வூரில் வந்து எட்டுநாட்களைக் கழித்தோம்.
3. பெண்ணினுடைய குணத்தைப் பெற்றவர் அறியார்.
4. உனது தம்பியினுடைய வீடு எங்கே?
5. அவன் உன்னுடைய சொல்லைக் கேட்பானா?
6. மணியினுடைய ஓசையைக் கேட்டு, ஓடிவந்தோம்.
7. மாட்டினுடைய கொம்பைப் பார்.
8. கிணற்றினுடைய ஓரத்தில் போகாதே.
9. அந்த மரத்தினுடைய அடியில் வந்தேன்.
10. மானினுடைய கொம்பை வாங்க இங்கு வா.
11. இவனுடைய கையில் புலியினுடைய தோலை அனுப்பு.
12. தேங்காயினுடைய ஓட்டைக் குவித்தீர்.
13. பணத்தை உடையவனுடைய வீட்டைப் பார்.
14. கோவிலில் உள்ள கிணற்றில் உள்ள நீர் கெட்டது.
15. இது குதிரையினுடைய வாலில் உள்ள மயிர்.
16. ஆட்டினுடைய ரோமத்தால் கம்பளியை நெய்யலாம்.
17. புலி, பூனையினுடைய இனத்தில் சேர்ந்த பிராணி.
18. பனையினுடைய ஓலையால் என்னென்ன செய்யலாம்?
19. இந்தச் சோளத்தினுடைய கதிரைப் பாரும்.
20. இக்கடையில் மாம்பழத்தை வாங்கினோம்.
21. இரும்பினால் செய்த பெட்டியில் அதை வை.
22. ஆற்றினுடைய கரையில் இருந்த மரம் விழுந்தது.
23. அரசனுடைய மகனுடைய தோழன் இவன்.
24. பட்டினுடைய விலையை விசாரித்தெழுது.
25. பனிக்கட்டியால் கட்டின வீட்டைப் பார்.
26. பொன்னாற் செய்த காப்பை வாங்கினோம்.
27. புலி, காட்டில் வாழும் மிருகம் அல்லவா?

7-JUN 1921

அப்பியாசம்—28

அமைக்கவேண்டிய வேற்றுமை யுருபை அமைத்துப் படி:-

1. பொற் கிண்ணத்துக் கருப்பஞ்சாறு குடித்தோம்.
2. புலிகள் ஆட்டுமந்தை தேடும்.
3. அக்கோழி இந்த வீட்டுச் சுவர்மேல் ஏறினது.
4. கோதுமைமா வாங்க இவ்வூர் வந்தோம்.
5. ஆட்டுப்பாலினும் பசும்பால் இனியது.
6. யானைத்தந்தம் பார்த்திருக்கிறாயா?
7. கடற்கரைபோய் விளையாடுவோம்.
8. இது செக்கு மாடு; அது வண்டி மாடு.
9. அந்தக் கூச்சல் கேட்டுப் பயம் அடைந்தோம்.
10. கடப்பைக் கற்கள் நான் பார்த்திருக்கிறேன்.
11. இவன் அரண்மனை வேலைக்காரனா?
12. விஷப்பாம்புகள் இந்நாட்டில் அதிகம்.
13. நீ சிலந்திநூல் பார்த்திருக்கிறாயா?
14. கண்ணாடிச் சாமான் கூடை எங்கே வைத்தாய்?
15. மகனே! இவ் வண்டித்தொடர் பார்.
16. இது பருத்திநூற் புடைவையா? பட்டுப் புடைவையா?
17. மாடு பருத்திப் பிண்ணாக்குத் தின்னுதா?
18. இவர் எழுத்தழகு பாருங்கள்.
19. எலிவளைகள் பார்த்திருக்கிறாயா?
20. ஆட்டுத்தோல் புத்தகங்கட்ட உதவும்.
21. குதிரைச்சேணம் விற்கிற கடைத்தெருவெது?
22. வாழைப்பழக்குலை வாங்கினாயா?
23. நாய்க்குட்டி இது; பூனைக்குட்டி அது.
24. என்னூர்ப் பானைகள் இவை.
25. வண்டிமாடுகளுக்குக் கோதுமைத் தவிடு வை.
26. நான் உன் மொழிகேட்டு இது செய்தேன்.
27. இந்நாட்டு அரசன் மக்கள் வண்டிகள் எவை?

33. பெயர்ச்சொற்களில் அறியவேண்டியவை:—

I. திணை………………
- உயர்திணை.
- அஃறிணை.

II. இடம்……………
- தன்மை.
- முன்னிலை.
- படர்க்கை.

III. பால்……………
- ஆண்பால்.
- பெண்பால்.
- பாலின்மை.

IV. எண்……………
- ஒருமை.
- பன்மை.

V. பெயர்களின்வகை
- பொருட்பெயர்.
- இடப்பெயர்.
- காலப்பெயர்.
- சினைப்பெயர்.
- முதலான பல வகைப் பெயர்கள்.

VI. வேற்றுமை…..
- முதல் வேற்றுமை.
- இரண்டாம் வேற்றுமை.
- மூன்றாம் வேற்றுமை.
- நான்காம் வேற்றுமை.
- ஐந்தாம் வேற்றுமை.
- ஆறாம் வேற்றுமை.
- ஏழாம் வேற்றுமை.
- விளி வேற்றுமை.

வினைச்சொல்.

34. எந்தப்பொருளைக் குறித்தாகிலும், ஏதாவது சொல்லும், சொல், வினைச்சொல்லாம்.

உதாரணம்.

நாய்......ஓடுகிறது	தூக்கம் ...வருகிறது
மழை......பெய்கிறது	கண்........பார்க்கிறது
காற்று.....வீசுகிறது	கப்பல்......வருகிறது
விளக்கு....எரிகிறது	தீக்குருவி..பறக்காது
சோறு.....கொதிக்கிறது	அரிசி......முளைக்காது

☞ ஓடுகிறது, பெய்கிறது முதலான சொற்கள் நாய், மழை முதலான பொருள்களைக் குறித்துச் சொல்லுகின்ற வினைச் சொற்கள்.

அப்பியாசம்—29.

கீழ்வரும்வாக்கியங்களின்வினைச்சொற்களைஎடுத்துச்சொல்:-

1. நாங்கள் பால் விற்கிறோம்.
2. என் வண்டி வருகிறது.
3. குளிர்ந்த காற்று வீசுகின்றது.
4. வண்டி கடலில் ஓடாது.
5. இளமையிற் கற்றது எளிதில் மறவாது.
6. அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
7. நெருப்பை ஈ மொய்க்காது.
8. கழுதை அசுத்தமான தண்ணீரைக் குடியாது.
9. சக்கரம் விரைவாய் உருள்கிறது.
10. உன் துணி மண்ணில் புரள்கிறது.
11. பிள்ளைகள் தங்கள் வீட்டுக்குப் போனார்கள்.
12. நாங்கள் ஒரு புலியைக் கொன்றோம்.
13. இக்குதிரையை எவன் விற்றான்?
14. நீங்கள் படியுங்கள், நீங்கள் எழுதுங்கள்.
15. இவ்வீடு என்னால் கட்டப்பட்டது.
16. இவனால் ஒரு பாம்பும் கொல்லப்படவில்லை.

அப்பியாசம்—30.

கீழுள்ள வாக்கியங்களின் வினைச்சொற்களைஎடுத்துச்சொல்:-

1. நேற்றிரவு எங்கள் ஊரில் மழை பெய்தது.
2. நேற்றிரவு இந்த ஊரில் மழை பெய்யவில்லை.
3. இந்த விளக்குப் பிரகாசமாய் எரிகிறது.
4. இந்த விளக்கு ஏன் பிரகாசமாய் எரியவில்லை;
5. கந்தன் நாளைக்கு இங்கே வருவான்.
6. கோபாலன் நாளைக்கு இங்கே வரான்.
7. நான் மூன்றும் பாடம் படித்தேன்.
8. நான் நான்காம் பாடம் படிக்கவில்லை.
9. அவர் என்னை மதுரையில் பார்ப்பார்.
10. அவர் என்னை மதுரையில் பாரார்.
11. இந்தக் கதை என்னால் படிக்கப்பட்டது.
12. என்னால் இந்தக் கதை படிக்கப்படவில்லை.
13. அவனைத் திருடர் காயப்படுத்தினார்கள்.
14. அவனைத் திருடர்கள் காயப்படுத்தவில்லை.
15. நான், விரோதமான பட்சி யொன்றைக் கண்டேன்.
16. நான் அந்தப்பட்சியை என்தோழருக்குக்காட்டினேன்.
17. என் குதிரை கிழக்கே திரும்பினது.
18. நான் என் குதிரையை வடக்கே திருப்பினேன்.
19. எட்டுமணிக்குமுன் இங்கே வரலாம்.
20. எட்டுமணிக்குப்பின் இங்கே வரலாகாது.
21. இந்த ஊரில் படித்தவர்கள் சிலர் இருக்கின்றனர்.
22. அந்த ஊரில் படியாதவர்கள் பலர் இருக்கவில்லை.
23. நீ படித்த பாடங்களைச் சொல்லு.
24. நீ படியாத பாடங்களைச் சொல்லாதே.
25. நீ ஜாக்கிரதையோடு படித்துப் பரீக்ஷையில் தேறினாய்.
26. நீ ஜாக்கிரதையோடு படியாமல் பரீக்ஷையில் தவறினாய்.
27. பாடம் படித்த பிள்ளைகள் உட்காரலாம்.
28. பாடம் படியாத பிள்ளைகள் உட்காரலாகாது.

(1)உடன்பாட்டு வினைச்சொல், (2)எதிர்மறை வினைச்சொல்.

35. மாம்பழம் விரும்பின சாமிநாதன், பழக்கடைகளில் ஒன்றிற் சென்று, பல தட்டுகளில் வைத்திருந்த வெவ்வேறு நிறமும், மணமும், சுவையும், பருமனும் உள்ள பழங்களைப் பார்த்து, ஒருதட்டிலிருந்த பழத்தைக் கடைக்காரனுக்குக் காட்டி "இந்தப் பழம் ரூபாய்க்கு எத்தனை கொடுப்பீர்?" என்று கேட்டான்.

அதற்குக் கடைக்காரன், "இந்தப் பழம், கற்கண்டு போல் இருக்கும்; இதில் கொட்டையே கிடையாது; ரூபாய்க்குப் பதினறு **கொடுப்பேன்**" என்றான்.

சாமிநாதன், "ஐயா! ரூபாய்க்கு இருபது கொடுப்பீரா?" என்று கேட்டான்.

அதற்குக் கடைக்காரன், "நீர் கேட்கிறபழம் ரூபாய்க்குப் பதினறுதான் **கொடுப்பேன்**; அதற்குமேல் ஒன்று கூடக் **கொடேன்**" என்றான்.

கடைக்காரன், ரூபாய்க்கும் பதினறு பழங்கொடுக்கத்தான் உடன்படுகிறதைக் "**கொடுப்பேன்**" என்னும் வினைச் சொல்லினாலும், ரூபாய்க்கு இருபது பழங்கொடுக்கத்தான் உடன் படாமல் எதிர்மறுக்கிறதைக் "**கொடேன்**" என்னும் வினைச்சொல்லினாலும் தெரிவித்தான்.

மேலே காட்டியபடி,

செய்ய உடன்படுகிறதைக் காட்டும் வினைச்சொல்லை, **உடன் பாட்டு** வினைச்சொல் என்றும்,	செய்ய உடன்படாமல் எதிர் மறுக்கிறதைக் காட்டும் வினைச்சொல்லை, **எதிர்மறை** வினைச்சொல் என்றும்,

இலக்கணநூல் சொல்லுகின்றது.

உடன்பாட்டுவினைச்சொற்களுக்கும், எதிர்மறைவினைச்சொற்களுக்கும் உதாரணங்களை **80**-ஆவது பக்கத்திற் காண்க.

வினைச்சொற்களின் இரு பெரும் பிரிவுகள்.

	உடன்பாட்டு வினைச்சொல்.	எதிர்மறை வினைச்சொல்.
1	நேற்று இங்கே மழை பெய்தது.	நேற்று இங்கே மழை பெய்யவில்லை
2	ஜானகி இங்கு நாளைக்கு வருவாள்.	ஜானகி இங்கு நாளைக்கு வராள்
3	கந்தசாமி! இப்பொழுது போ.	கந்தசாமி! இப்பொழுது போகாதே
4	பெண்களே! இதைப் பாடுங்கள்.	பெண்களே! இதைப் பாடாதேயுங்கள்.
5	நம்முடைய அரசர் வாழ்க	அவருடைய பகைவர் வாழற்க.
6	நீ அதைக் காண்பாயாக.	நீ அதைக் காணுயாக.
7	நேற்று வந்த பெண்கள் யார் யார்!	நேற்று வராத பெண்கள் யார் யார்?
8	புத்தி உள்ள பெண் படிப்பாள்.	புத்தி இல்லாத பெண் படியாள்
9	மழை பெய்து கருப்பு நீங்கினது	மழை பெய்யாமல் கருப்பு நீங்கவில்லை.
10	நீ கேட்டால் அவர் கொடுப்பார்.	நீ கேளாவிட்டால் அவர் கொடார்.
11	கையில் பணம் இருந்தால், வருவான்	கையில் பணம் இராவிட்டால், வரான்
12	மழை பெய்ததினுல் கருப்பு வாவில்லை.	மழை பெய்யாததினுல் கருப்பு வந்தது.
13	அவர் வந்தமையால் நாம் களிக்கின்றோம்	அவர் வராமையால் நாம் கலங்குகிறோம்.
14	இளமையில் படித்தவன் புத்திசாலி	இளமையில் படியாதவன் மூடன்.

☞ வகுப்பின் மாணுக்கர்களை (1) உடன்பாட்டு வினைச்சொல் மாணுக்கர், (2) எதிர்மறை வினைச்சொல் மாணுக்கர் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரித்து **30-ஆவது** அப்பியாசத்தைப் படிக்கச்செய்க.

36. செயப்படுபொருள் குன்று வினைச்சொற்களும், செயப்படுபொருள் குன்றிய வினைச்சொற்களும்,

1. வேலன் முருகனை அடித்தான். 2. கோபாலன் தூங்குகிறான். 3. கோவிந்தன் மாம்பழம் தின்கிறான். 4. ஜானகி ஓடுகிறாள். 5. காற்று விளக்கை அவித்தது. 6. ஆற்றில் வெள்ளம் வருகிறது. 7. பூனை, பாலைக் குடித்தது. 8. அந்த வண்டி இங்கு நிற்கும். 9. புலி புல்லைத் தின்னாது. 10. இந்தக் குழந்தை அழாது என்னும் வாக்கியங்களில், **அடித்தான், தின்கிறன், அவித்தது, குடித்தது, தின்னாது** முதலான வினைச்சொற்கள் (1) செய்பவனையும், (2) அவனுடைய செய்கையின் பலனை அடைகிற வேறொரு பொருளையும்கொண்டு முடிகின்றன. **தூங்குகிறன், ஓடுகிறள், வருகிறது, நிற்கும், அழாது** முதலானவை செய்பவனையே கொண்டு முடிகின்றன.

ஆகையினால், உடன்பாட்டு வினைச்சொற்களிலும், எதிர்மறை வினைச்சொற்களிலும்,

I.	1. செய்பவனையும், 2. *அவனுடைய செய்கையின் பலனை அடைகிற வேறொரு பொருளையும் கொண்டு முடிகிற வினைச்சொல்,
II.	செய்பவனைமாத்திரங் கொண்டு முடிகிற வினைச்சொல்

என்று இரண்டுபிரிவுகள்உண்டாகின்றன. இந்தஇருவகைவினைச்சொற்களில்,

செயப்படுபொருளைப் பெறுஞ் சக்தியுள்ள வினைச் சொல்லைச் **செயப்படுபொருள் குன்று வினைச்சொல்,**	செயப்படுபொருளைப் பெறுஞ் சக்தியில்லாத வினைச் சொல்லைச் **செயப்படுபொருள் குன்றிய வினைச்சொல்,**

என்று, இலக்கணநூல் சொல்கின்றது.

குறிப்பு:—செய்பவனுக்கும், அவனுடைய செய்கையைக் குறிக்கும் வினைச்சொல்லுக்கும் இடையில், **யாரை** அல்லது எதை என்னும் சொல்லை வைத்து, கேள்வி கேட்டால், உருபைப் பெற்றாவது பெறுமலாவது **இரண்டாம் வேற்றுமையில்** நிற்கிற ஒரு பெயரைப் பெறும் வினைச்சொல், **செயப்படுபொருள் குன்று வினைச்சொல்** என்று அறியலாம்.

இப்படிப்பட்ட கேள்வி கேட்டால், ஒரு விடையும் பெறாத வினைச்சொல், **செயப்படுபொருள் குன்றிய வினைச்சொல்** என்று அறியலாம்.

33, 34, 35—ஆம் அப்பியாசங்களில் உள்ள (1) செயப்படுபொருள் குன்று வினைச்சொற்களையும் (2) செயப்படுபொருள் குன்றிய வினைச்சொற்களையும் எடுத்து எழுதுக.

* இது, "செயப்படுபொருள்" என்னப்படும்.

☞ 1. பாற்பானை உருண்டது; பூனை பாற்பானையை உருட்டினது. 2. மேஜை அசைகிறது; உன் கால் மேஜையை அசைக்கிறது. 3. சந்தேகம் உண்டானது; உன்சொல் சந்தேகத்தை உண்டாக்கினது என்னும் வாக்கியங்களை உற்றுப்பார்த்தால், செயப்படுபொருள் குன்றிய வினைச்சொற்களைச் செயப்படுபொருள் குன்றா வினைச்சொற்களாக மாற்றி உபயோகிக்கலாம் என்பது விளக்குகின்றது.

37. செய்வினைகளும், செயப்பாட்டு வினைகளும்.

1. பூனை பாற்பானையை உருட்டினது. 2. நீ மாம்பழம் தின்றாய். 3. இதை இராமன் கொடுத்தான். 4. என் சொல்லை இராமன் கேளான் என்னும் வாக்கியங்களை வேறுவிதமாகவும் எழுதலாம்.

எப்படியெனில்,

1. பாற்பானை பூனையால் உருட்டப்பட்டது. 2 மாம்பழம் உன்னால் தின்னப்பட்டது. 3. இது இராமனால் கொடுக்கப்பட்டது. 4. என் சொல் இராமனால் கேட்கப்படாது என்று மாற்றி எழுதலாம்.

இவைகளில், "பூனை பாற்பானையை உருட்டினது" முதலான முதல் மாதிரி வாக்கியங்களின் வினைமுற்று, "செய்வினை" என்றும், "பாற்பானை பூனையினால் உருட்டப்பட்டது" முதலான இரண்டாவது மாதிரி வாக்கியங்களின் வினைமுற்று, "செயப்பாட்டுவினை" என்றும் சொல்லப்படும்.

செய்வினை கொண்ட வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை கொண்ட வாக்கியமாக மாற்றல்:—

(1) முதல் வேற்றுமையில் நிற்கிற எழுவாய்க்கு, மூன்றும் வேற்றுமையின் "ஆல்" கூட்டி, (2) இரண்டாம் வேற்றுமையில் நிற்கிற செயப்படுபொருளை, எழுவாய் வேற்றுமையில் நிற்கச்செய்து, (3) செய்வினையின் பகுதிக்கு "அப்படு," "கப்படு" என்பவைகளில், ஏற்ற ஒன்றைக் கூட்டி, வேண்டியகாலம் முதலானவைகளைக்காட்டும்படியான ரூபம்உண்டாக்கல்.

(உ-ம்) செய்வினை—நீ இவ்வீட்டைக் கட்டினாய்.
செயப்பாட்டுவினை—இவ்வீடு உன்னால் கட்டப்பட்டது.
செய்வினை—அவன் அதைக் கொடான்.
செயப்பாட்டுவினை—அது அவனால் கொடுக்கப்படாது.

☞ 5, 9, 11, 12-ஆங் கணங்கள் "கப்படு" பெறும்; மற்றவை "அப்படு" பெறும்.

☞ கஷ்டப்பட்டேன் முதலானவை செயப்பாட்டு வினைகள் அல்ல.

குறிப்புகள்:—மேலே காட்டியபடி பல வகைகளாகின்ற வினைச்சொற்கள், வெகுவாய் மூன்றுவித ரூபங்களில் வரும்.

அவைகளில்,

I. முதலாவது:—

செய்பவனுடைய திணை, இடம், பால், எண்களோடு ஒத்திருக்கும் *விகுதியைப் பெற்று, முடிவுள்ள காரியத்தைக் குறிக்கும் ரூபம்.

(உ-ம்.) இராமன் வந்தான். கோபாலன் போனான். மீன் நிலத்தில் வாழாது. இது என்னால் செய்யப்பட்டது. தீக்குருவி பறக்காது.

☞ இவைகளைப்போல் முடிவுள்ள காரியத்தைக் காட்டும் வினைச்சொல், "வினைமுற்று" எனப்படும்.

II. இரண்டாவது:—

திணை, இடம், பால், எண் என்பவைகளைக் குறிக்கும் விகுதியைப் பெறாமல், அவைகளுக்கெல்லாம் பொதுவாய் நின்று எப்பொழுதும் பெயர்ச்சொல்லையே கொண்டு முடியும் ரூபம்.

(உ-ம்.) நீ வாங்கின புஸ்தகம் எது? நான் நேற்றுப் பார்த்தபடம் இது. எங்கள் அரசனால் கொல்லப்பட்ட புலி எது? இது நன்றாய் ஓடாத குதிரை. நீ கேட்கிற புஸ்தகம் எது? நீ மறதியில்லாத பையன்.

☞ இவைகளைப்போல் வரும் ரூபம், 'பெயர்-எச்சம்' என்னப்படும்.

III. மூன்றாவது:—

திணை, இடம், பால், எண் என்பவைகளைக் குறிக்கும் விகுதியைப் பெறாமல், அவைகளுக்கெல்லாம் பொதுவாய் நின்று எப்பொழுதும் ஒரு வினைச்சொல்லையாவது, அதிலிருந்து பிறந்த சொல்லையாவது கொண்டு முடியும் ரூபம்.

(உ-ம்.) நீ இங்கே வந்து உட்காரு. நீ இதை எடுத்துப் படி. உன் அண்ணன் என் வீட்டுக்கு வந்து, என் தம்பியைக் கூப்பிட்டு, அவனிடத்தில் ஒரு புஸ்தகம் வாங்கிக்கொண்டு, பள்ளிக்கூடம் போனான். கோபாலன் தன் தகப்பன் சொல்லைக் கேளாமல், கெட்ட பிள்ளைகளைச் சேர்ந்து, அவர்களோடு திரிந்து, கெட்டவனானான். மீன், கற்பிக்கப்படாமலே நீந்தும். இரக்கம் இல்லாமல் போசாதே.

☞ இவைகளைப்போல்வரும் ரூபம், "வினை-எச்சம்" என்னப்படும்.

*பிரிக்கக்கூடிய சொற்களின் ஈற்றில் உள்ள உறுப்பு, விகுதி.

அப்பியாசம்—31.

(1) வினைமுற்று (2) வினையெச்சம், (3) பெயரெச்சம் இவைகளை எடுத்துச் சொல்லு:—

1. பெரியோர் தாம் சொல்லின சொல்லை மாற்றார்.
2. உப்பில்லாத கறி சுவை பெறாது.
3. செடியில் வளையாதது மரமாய் வளையாது.
4. முயலை ஆமை வெல்லாது என்று நினைப்பீர்கள்.
5. துஷ்டர்கள் பிரதியுபகாரம் செய்யார்கள்.
6. மாடு வருகிறது, குழந்தாய்! வழியில் நில்லாதே.
7. நீ கண்ணால் பாராத எதையும் நம்பாதே.
8. செட்டியாரே! இந்தக் கடைக்கு வந்து பாரும்.
9. பிள்ளைகளே! இதை இளமையிலேயே படியுங்கள்.
10. சிநேகிதர்களே! தேவனைத் துதிப்போம் வாருங்கள்.
11. ஜனங்களே! சோசியன் சொல்லை நம்பாதேயுங்கள்.
12. தம்பி! வரவுக்கு மிஞ்சின செலவு செய்யாதே.
13. வெள்ளம் வருமுன் அணைகோலி வையுங்கள்.
14. கந்தன் தன் மாமன் வீட்டுக்குப் போனான்.
15. ஆ! ஆ! அதோ ஒரு மயில் ஆடுகின்றது.
16. சுப்பராயன் நன்றாய்ப் படிக்கிறான்.
17. கமலாம்பாள் சட்டம் எழுதுகிறாள்.
18. என் மகன் கெட்ட பிள்ளைகளைச் சேரான்.
19. என் அண்ணன் கிணற்றில் இறங்கான், அவனுக்குப் பயம்.
20. துஷ்டருடைய சிநேகம் கெடுதியை விளைக்கும்.
21. பணத்திலும் சிறந்ததாகிய கல்வியைத் தேடுங்கள்.
22. சீதை, தன் தந்தையின் பாதங்களில் வணங்கினாள்.
23. தச்சன் பெட்டி செய்கிறான்.
24. பூனை எலிகளைக் கொல்கிறது.
25. நேற்று எனக்கு ஜ்வரம் வரவில்லை.
26. இந்தக் குதிரை நன்றாய் ஓடாத குதிரை.
27. இந்தக் கிணற்றில் இருக்கிற நீர் குடிக்க உதவாது.

வினைமுற்றுக்களின் வகைகள்.

முன்பு

நடந்த காரியத்தைச் சொல்லும் வினைமுற்று. (உ-ம்). நீ தூங்கினாய்.	நடவாத காரியத்தைச் சொல்லும் வினைமுற்று. (உ-ம்). நீ தூங்கவில்லை.

இப்பொழுது

நடக்கிற காரியத்தைச் சொல்லும் வினைமுற்று. (உ-ம்). நீ தூங்குகிறாய்.	நடவாத காரியத்தைச் சொல்லும வினைமுற்று. (உ-ம்). நீ தூங்கவில்லை.

இனிமேல்

நடக்குங் காரியத்தைச் சொல்லும் வினைமுற்று. (உ-ம்). நீ தூங்குவாய்.	நடவாத காரியத்தைச் சொல்லும் வினைமுற்று. (உ-ம்.) நீ தூங்காய்.

கட்டளையிடும்பொழுது

செய்யக் கட்டளையிடுகிற வினைமுற்று. (உ-ம்). நீ தூங்கு.	செய்யாமலிருக்கக் கட்டளையிடுகிற வினைமுற்று. (உ-ம்). நீ தூங்காதே.

வேண்டிக்கொள்ளும்பொழுது

செய்ய வேண்டிக் கொள்கிற வினைமுற்று. (உ-ம்). நீ தூங்குவாயாக.	செய்யாமலிருக்க வேண்டிக் கொள்கிற வினைமுற்று. (உ-ம்). நீ தூங்காயாக.

அப்பியாசம்—32.

(1) செயப்படுபொருள் குன்ரு வினைச்சொற்களுக்கும்,
(2) செயப்படுபொருள் குன்றிய வினைச்சொற்களுக்கும்
உதாரணங்கள் எடுத்துச் சொல்லு:—

1. அரசன் சில வேட்டைக்காரரோடு காட்டிற்குவந்தான்.
2. அவ்வரசன் இக்காட்டில் ஒரு புலியைக் கொன்ருன்.
3. நாங்கள் இவ்வூரிலிருந்து ஏழுமணிக்குப்புரப்பட்டோம்.
4. அந்தத்திருடனைமதுரைக்கடைத்தெருவில்பிடித்தோம்.
5. இச்சிறுவன் ஏன் இப்படி அழுகின்ருன்?
6. இவனுக்கு இந்தப் படங்களை நீங்கள் காட்டுங்கள்.
7. காட்டில் புலி முதலான பிராணிகள் வாழும்.
8. வீட்டில் பசு முதலான பிராணிகளை வளர்க்கிருேம்.
9. இப்பட்டணம் நாளுக்குநாள் பெரியதாகிறது.
10. உன் மகன் ஏன் என் வீட்டிற்கு வரவில்லை?
11. இந்த வாக்கியங்களை மறுபடியும் படியுங்கள்.
12. என் கால் நோகிறது; மெல்ல நடக்கிறேன்.
13. இங்கே வா; இங்கே குளிர்ந்த காற்று வீசுகின்றது.
14. நீங்கள் இந்த வண்டியில் எறுங்கள்.
15. நம்முடையமூட்டைகளை அந்தவண்டியிற் போட்டேன்.
16. இந்தக் குதிரை கிழம்; வேகமாய் ஓடாது.
17. நேற்று இராத்திரி முழுவதும் கடுங்காற்று வீசினது.
18. நீங்கள் எங்களோடு உண்மையைப் பேசவில்லை.
19. இன்று காலையில் இங்கே மழை பெய்தது.
20. போனவாரத்தில் இரண்டு வேட்டிகள் நெய்தோம்.
21. பாலாற்றில் இப்பொழுது வெள்ளம் வருகிறது.
22. இந்த வண்டி 8-மணிக்கு நம்மூருக்குப் போகாது.
23. இந்தக் கொடி எவ்வளவு அழகாய்ப் படர்கின்றது!
24. ஏன் நடுவழியில் நிற்கிறீர்கள்? வழியின் விலகுங்கள்.
25. பொரித்த நெல் ஒருநாளும் முளையாது.
26. ஆனை பூனையாகாது; பூனையும் ஆனையாகாது.
27. புலி ஒருகாலத்திலும் புல்லைத் தின்னுது.
28. வறுத்த பயறு முளைக்காது.

அப்பியாசம்—33

வினைமுற்றுக்களை எடுத்து, இன்னவகை வினைமுற்று என்று சொல்:—

1. இந்த வளையில் ஒரு தவளை நுழைந்தது.
2. இவ்வளையில் ஒரு பாம்பை நேற்றுக் கண்டேன்.
3. இந்த நோயாளி எப்படிப் பிழைப்பான்?
4. இக்கடலில் மூன்று கப்பல்கள் முழுகிப்போயின.
5. காற்றுமழை இம்மரங்களைத் தள்ளிவிட்டது.
6. குப்பையை வீட்டினருகே கொட்டாதேயுங்கள்.
7. காற்றில்லாத இவ்வறையில் எப்படி நீ தூங்குகிறாய்?
8. நோயாளிகளுக்கு நல்ல நித்திரை யிராது.
9. நான் என் குதிரையை நேற்று விற்றேன்.
10. இவன் அம்மரத்திலிருந்து விழுந்தான்.
11. இவ்வூரில் மாமரங்கள் நன்றாய் வளர்கின்றன.
12. நான் என் அண்ணன்மக்களை அன்போடு வளர்த்தேன்.
13. நீங்கள் ஏன் இப்படித் திரிகிறீர்கள்?
14. அவர்கள் இவர்களைச் சிரிக்கிறார்கள்.
15. நீங்கள் இந்த வீட்டை எப்பொழுது வாங்குவீர்கள்?
16. அவர் ஏழுமணிக்குமேல் எழுந்திருப்பார்.
17. உன்னுடைய புத்தகத்தை எவன் கிழித்தான்?
18. இந்தச் சக்கரம் விரைவாய்ச் சுற்றுகின்றது.
19. நாங்கள் இச்செடிகளுக்கு எரு வைத்தோம்.
20. நாங்கள் நேற்றிரவு ஒருமணிக்குப் படுத்தோம்.
21. அதன்பின் அவர்கள் ஒரு காட்டில் புகுந்தார்கள்.
22. நீங்கள் இப்பெட்டியை எப்படித் திறந்தீர்கள்?
23. அம்மரத்திலிருந்து அவன் இறங்குகிறான்.
24. இப்புத்தகத்தில் ஏழுபாடம் படித்தோம்.
25. இந்தப் பக்கத்தில் எத்தனை வரிகள் எழுதினீர்?
26. இந்நோயினால் நூறுபேர் இறந்தார்கள்.
27. அவர் எங்களை நேற்றுப் பார்க்கவில்லை.
28. இதைக் கேட்டவன் போய்விட்டான்.

காலம்.

38. மேலே காட்டியுள்ளபடி (1) **முன்பு**, (2) **இப்பொழுது**, (3) **இனிமேல்** என்னுங் காலங்களைக் காட்டி வருகின்ற மூன்று வகையான வினைச்சொற்களில்,



என்று, இலக்கணநூல் சொல்லுகின்றது.

(உ-ம்.) நீ வந்தாய், நீ வருகிறாய், நீ வருவாய்.

☞ **89, 90**-ஆம் பக்கங்களின் வினைச்சொற்களின் காலஞ் சொல்.

காலங்களைக் காட்டுங் குறிகள்:—

இறந்த காலத்தின் குறிகள்.	நிகழ் காலத்தின் குறிகள்.	எதிர் காலத்தின் குறிகள்.
த் இன் ற் ட் விகாரம்	கிறு அல்லது கின்று	வ் ப்

செய்:—நீ இதற்குமுன் என்னவேலை செய்தாய்?
(1) நீ இப்பொழுது என்னவேலை செய்கிறாய்?
நீ இனிமேல் என்னவேலை செய்வாய்?

ஆடு:—நான் நேற்று இராமனோடு ஆடினேன்.
(2) நான் இப்பொழுது வேலனோடு ஆடுகிறேன்.
நான் நாளைக்குக் கோபாலனோடு ஆடுவேன்.

அறி:—நீ இதை யாரால் அறிந்தாய்?
(3) நீ நீலகிரி வர்த்தமானத்தை எப்படி அறிகிறாய்?
நீ இப்பத்திரிகையால் அநேகம் அறிவாய்

கொல்:—இராகவன் நேற்று ஒரு பாம்பைக் கொன்றான்.
(4) இராகவன் இதோ ஒரு பாம்பைக் கொல்கிறான்.
இராகவன் நாளைக்கும் ஒருபாம்பைக் கொல்வான்.

கல்:—நான் போனவருஷம் கன்னடம் கற்றேன்.
(5) நான் இப்பொழுது மலையாளம் கற்கின்றேன்.
நான் வருகிற வருஷம் இந்துஸ்தானி கற்பேன்.

தின்:—நான் இன்று காலையில் வாழைப்பழந் தின்றேன்.
(6) நான் இப்பொழுது கிச்சிலிப்பழந் தின்கிறேன்.
நான் இன்று சாயங்காலம் மாம்பழந் தின்பேன்.

உண்:—நான் நேற்றிரவு சேலத்தில் உண்டேன்.
(7) நான் இப்பொழுது சென்னையில் உண்கிறேன்.
நான் நாளைப் பகல் மதுரையில் உண்பேன்.

ஆள்:—முன்பு நம்மை வி. மகாராணியார் ஆண்டார்.
(8) இப்பொழுது நம்மை ஐந்தாம் ஜார்ஜ் ஆள்கிறார்.
இவருக்குப் பின், இவர் மூத்த குமாரர் ஆள்வார்.

கேள்:—நீ நேற்று ஏழு கேள்விகள் கேட்டாய்.
(9) நீ இப்பொழுது இந்தக் கேள்வி கேட்கிறாய்.
நீ நாளைக்கு எத்தனை கேள்விகள் கேட்பாய்?

விடு:— நீ நேற்று என் பயிரில் ஆட்டை விட்டாய்.
(10) நீ இப்பொழுது என்பயிரில் மாட்டை விடுகிறாய்.
நீ நாளைக்கு என் பயிரில் எருமையை விடுவாய்.

படி:—நான் இன்று காலையில் பூகோளம் படித்தேன்.
(11) நான் இப்பொழுது இலக்கணம் படிக்கிறேன்.
நான் இன்று சாயங்காலம் மூதுரை படிப்பேன்.

இரு:—நாம் இன்று காலையில் சேலத்தில் இருந்தோம்.
(12) நாம் இப்பொழுது வேலூரில் இருக்கின்றோம்.
நாம் இன்று சாயங்காலம் நம்மூரில் இருப்போம்.

☞ (1) செய், ஆடு, அறி, கொல், கல், தின், உண், ஆள், கேள், விடு, படி, இரு முதலானவைகல், **பகுதிகள்** என்னப்படும்.

(2) வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் முதலான சொற்களின் ஈற்றில் நிற்கிற உறுப்புக்கள், **விகுதிகள்** என்னப்படும்.

குறிப்பு: ஜானகீ! பையன் ஏன் (**அழு-த்-ஆன்**) அழுதான்? என்கிறதைக் கண்டு, அவன், தொட்டிலிருந்து (**விழு-த்-ஆன்**) விழுதான் என்னாமல், விழு-ந்-தான் என்கிறோம்; நேற்று நீ யார்வீட்டில் (**உண்-ட்-ஆய்**), உண்டாய்? என்கிறதைக் கொண்டு, நீ எத்தனை மணிவரைக்கும் ஜெபம் (**பண்-ட்-ஆய்**)பண்டாய்? என்று சொல்லாமல், பண்ணினாய் என்கிறோம்; நமது அரசி நீதியோடு(**ஆல்-ட்-ஆள்**) ஆண்டாள்என்று வருகிறதேயென்று, அவள் என்னை ஒரு புத்தகம் (**கேள் ட்-ஆள்**) கேண்டாள் என்னாமல், கேட்டாள் என்கிறோம்; அவன் உனக்கு என்ன (**கொடு-த்-த்-ஆன்**) கொடுத்தான்? என்றதைப் பார்த்து, அவன் நேற்று ஒரு புலியைச்(**சுடு-த்-த்-ஆன்**) சுடுத்தான் என்னாமல், சுட்டான் என்கிறோம்; பூனைகள் எலிகளைச் (**கோல்-உம்**)கொல்லும் என்கிறோமேயென்று, அங்கே தயிர் பால் நயமாய் (**வில்-உம்**) வில்லும் என்னாமல், விற்கும் என்கிறோம்.

ஆகையால், இன்ன பகுதி, இன்ன காலக்குறியைப் பெறும் என்றும், இன்னபடி மாறும் என்றும் அறிந்து, காலக்குறி, விகுதி முதலானவைகளைக் கையாளவேண்டும். அவைகளை **92, 93**-ஆம் பக்கங்களில் காட்டுவோம்.

39. வினைப்பகுதிகள், அவை முக்காலங்களைக் காட்டப்பெறுங் குறிகளைப் பார்த்தும், அக்குறிகளைப் பெறுகையில் அடையும் வேறுபாடுகளைப் பார்த்தும், கணங்களாகப் பிரித்தால்,

1 செய் போன்ற பகுதிகளின் கணம்,	**7** உண் போன்ற பகுதிகளின் கணம்,
2 ஆடு போன்ற பகுதிகளின் கணம்,	**8** ஆள் போன்ற பகுதிகளின் கணம்,
3 அறி போன்ற பகுதிகளின் கணம்,	**9** கேள் போன்ற பகுதிகளின் கணம்,
4 கோல் போன்ற பகுதிகளின் கணம்,	**10** விடு போன்ற பகுதிகளின் கணம்,
5 கல் போன்ற பகுதிகளின் கணம்,	**11** படி போன்ற பகுதிகளின் கணம்,
6 தின் போன்ற பகுதிகளின் கணம்,	**12** இரு போன்ற பகுதிகளின் கணம்,

என்று, பன்னிரண்டு கணங்கள் (=கூட்டங்கள்.) ஆக்கலாம்.

40. இன்ன கணத்துப் பகுதி இன்ன குறிகளால் காலங்களைக் காட்டும் என்பது:—

கணங்கள்.	மாதிரிப் பகுதிகள்.	இறந்த காலத்தைக் காட்டப் பெறுவது.	நிகழ் காலத்தைக் காட்டப் பெறுவது.	எதிர் காலத்தைக் காட்டப் பெறுவது.
1	செய்	த்	கிறு	வ்
2	ஆடு	இன்	கிறு	வ்
3	அறி	ந்த்*	கிறு	வ்
4	கொல்	ற்	கிறு	வ்
5	கல்	ற்	கிறு	ப்
6	தின்	ற்	கிறு	ப்
7	உண்	ட்	கிறு	ப்
8	ஆள்	ட்	கிறு	வ்
9	கேள்	ட்	கிறு	ப்
10	விடு	பகுதியினுள்ளே விகாரம்	கிறு	வ்
11	படி	த்த்*	க்கிறு*	ப்ப்*
12	இரு	ந்த்*	க்கிறு*	ப்ப்*

* விசேஷக் குறிப்பு:—ந் த், த் த், க் கிறு, ப் ப் என்றவைகளில் த். கிறு, ப் காலக்குறிகள், ந், த், க், ப், தவறாமல் வருகின்றவை. வேண்டுமானால் "கிறு" என்பதை நீக்கிக் "கின்று" என்பதை எல்லாப் பகுதிகளுக்குமே, கூட்டலாம்.

செய், ஆடு, அறி, கொல், கல், தின், உண், ஆள், கேள், விடு, படி, இரு என்று முறையே மனப்பாடங் கொள்க.

41. வினைமுற்று விகுதிகள்:—

தன்மை ஒருமை என்பதைக் காட்ட **ஏன்** வரும்.	தன்மைப் பன்மை என்பதைக் காட்ட **ஓம்** வரும்.
முன்னிலை ஒருமை என்பதைக் காட்ட **ஆய்** வரும்.	முன்னிலைப் பன்மை என்பதைக் காட்ட **ஈர்—கள்** வரும்.
உயர்திணை ஆண்பால் ஒருமை என்பதைக் காட்ட **ஆன்** வரும்.	உயர்திணை ஆண்பாற் பன்மை என்பதைக் காட்ட **ஆர்—கள்** வரும்.
உயர்திணைப் பெண்பால் ஒருமை என்பதைக் காட்ட **ஆள்** வரும்.	உயர்திணைப் பெண்பாற் பன்மை என்பதைக் காட்ட **ஆர்—கள்** வரும்.
உயர்திணை இருபால் ஒருமை என்பதைக் காட்ட **ஆர்** வரும்.	உயர்திணை இருபாற் பன்மை என்பதைக் காட்ட **ஆர்—கள்** வரும்.
அஃறிணை ஆண்பால் ஒருமை என்பதையும், அஃறிணைப் பெண்பால் ஒருமை என்பதையும், அஃறிணை இருபால் ஒருமை என்பதையும், பாலிலா அஃறிணை ஒருமை என்பதையுங் காட்ட **அது, று, உம்*** வரும்.	அஃறிணை ஆண்பாற் பன்மை என்பதையும், அஃறிணைப் பெண்பாற் பன்மை என்பதையும், அஃறிணை இருபாற் பன்மை என்பதையும், பாலிலா அஃறிணைப் பன்மை என்பதையுங் காட்ட **அ, அன, உம்*** வரும்.

* ☞ "உம்" காலக்குறியை வேண்டாமல், தானாகவே எதிர்காலத்தைக் காட்டும்.

அப்பியாசம்—34.

கீழே காட்டியபடி பலகையை வகுத்துக்கொண்டு **35**-ஆவது, **33**-ஆவது அப்பியாசங்களை எழுது:—

எண்.	வினை முற்றுக்கள்.	இன்ன கால வினைமுற்று	காலக்குறி.
1	உழுதோம்	இறந்தகால வி-முற்று	த்

அப்பியாசம்—35.

(1) கீற்றில், ஏற்ற பெயர்களை அமைத்துப் படி.
(2) வினைமுற்றுக்களின் விகுதிகளைச் சொல்லு:—

1.——உழுதோம்.
2.——தொழுகிறான்.
3.——நெய்வார்கள்.
4.——ஆடினேன்.
5.——பாடுகின்றீர்கள்.
6.——வாடினது.
7.——வாங்கினாய்.
8.——தூங்குகின்றான்.
9.——அறிந்தோம்.
10.——எரிந்தது.
11.——வருகிறது.
12.——தருவோம்.
13.——கடைகிறாள்.
14.——கொன்றீர்.
15.——கற்றேன்.
16.——தோற்றார்கள்.
17.——நூற்கிறாய்.
18.——ஈன்றது.
19.——உண்டாய்
20.——காண்போம்.
21.——பூண்கின்றீர்கள்.
22.——விற்கின்றான்.
23.——ஆண்டான்,
24.——உருண்டன.
25.——விட்டோம்.
26.——பெற்றான்.
27.——சுட்டீர்கள்.
28.——படித்தேன்.
29.——கொடுப்பீர்.
30.——குடிப்பார்கள்.
31.——பிறந்தாய்.
32.——மறந்தேன்.
33.——திறப்பாள்.
34.——பறக்கும்.
35.——நிற்கிறது.
36.——கேட்கும்.

முதற் கணப் பகுதியிலிருந்து உடன்பாட்டு முக்கால வினைமுற்றுக்கள்.

இத்தனை.	செய்கிறவர்கள்.	த் இறந்த காலத்தைக் காட்டும்.	கின்று நிகழ் காலத்தைக் காட்டும்.	வ் எதிர் காலத்தைக் காட்டும்.	இப்படியே,
1	நான்	செய்தேன்	செய்கின்றேன்	செய்வேன்	எய்
2	நாங்கள்	செய்தோம்	செய்கின்றோம்	செய்வோம்	கொய்
3	நீ	செய்தாய்	செய்கின்றாய்	செய்வாய்	நெய்
4	நீங்கள்	செய்தீர்-கள்	செய்கின்றீர்-கள்	செய்வீர்-கள்	பெய்
5	அவன்	செய்தான்	செய்கின்றான்	செய்வான்	அழு
6	அவள்	செய்தாள்	செய்கின்றாள்	செய்வாள்	உழு
7	அவர்-கள்	செய்தார்-கள்	செய்கின்றார்-கள்	செய்வார்-கள்	தொழு
					வை (திட்டு)
8	அது	செய்தது	செய்கின்றது	செய்யும் ☞	பொரு
9	அவைகள்	செய்தன	செய்கின்றன	செய்யும் ☞	முதலானவை.

அப்பியாசம்—36.

குறைவாயிருக்கிற சொற்களை வினைமுற்றாக்கிப் படி:—

1. நீ இதுவரையிலும் அங்கே என்ன செய்—?
2. நாங்கள் நேற்றுப் பத்து முழம் நெய்—.
3. நேற்று இராமுழுவதும் மழை பெய்—
4. உன் மகள் என் தோட்டத்தில் பூக் கொய்—
5. நாகன் இந்த மானை அம்பினால் எய்—.
6. அவர்கள் என் இப்பொழுது அழு—?
7. நீங்கள் இதற்குமுன் யாரைத் தொழு—.
8. இதை நேற்று என் தம்பி உழு—.
9. நீ அவளை வைதால் அவள் உன்னை வை—.
10. நேற்று இந்த எருதுகள் எவ்வளவு உழு—?
11. அவன், தன் தாயாரைத் தெய்வமாய்த் தொழு—.
12. அவள் பால் கொட்டிப் போனதற்காக அழு—.
13. நான் நேற்று இரோஜாப்பூக் கொய்—.
14. நீ அந்த மானை எந்த அம்பினால் எய்—.
15. இவர்கள் இதை இன்னும் ஏழு நாளில் நெய்—.
16. மதுரையில் நேற்றுக் காற்றுமழை பெய்—.
17. எவர்களும் பணம் உள்ளவர்க்குக் கனம் செய்—.
18. இந்த யந்திரம் ஒரு தினத்தில் ஆயிரம் புடவை நெய்—
19. ஐயா! நாங்கள் இங்கே சோளக்கதிர் கொய்—.
20. என் கண்மணீ! நீ ஏன் இப்படி அழு—?
21. நாளைக்கு நூறுபேர் இங்கே பராபரனைத் தொழு—.
22. நீ உண்மையை அறியாமல் என்னை வீணாய் வை—.
23. நீ இக்குளத்தில் எத்தனை தாமரைப்பூக் கொய்—?
24. மனிதரைவிட நேர்த்தியாய்ச் சிலந்தி நெய்—.
25. பகைவர்கள் இங்கு இன்னும் ஆறுமாதம் பொரு—.
26. பாண்டவர் எவர்களோடு பொரு—?
27. நீர் எனக்குப் பல நன்மை செய்—.
28. என் வயலை நீ என்று உழு—?
29. இச்சிறுவர் எதற்கும் அழு—.
30. நீ எந்த வயலை நாளைக்கு உழு—?

42. உடன்பாட்டு முக்காலப் பெயர்—எச்சங்கள் ஆக்கும் வகை.

கணங்கள்.	மாதிரிப் பகுதிகள்	இறந்தகாலப் பெயர்-எச்சம்	நிகழ் காலப் பெயர்-எச்சம்.	எதிர் காலப் பெயர்-எச்சம்.
1	செய்	பகுதி + அந்தந்தக் கணத்திற்கு உரிய இறந்த காலக் குறி + அ.	பகுதி + அந்தந்தக் கணத்திற்கு உரிய நிகழ் காலக் குறி + அ.	பகுதி+உம்.
2	ஆடு			பகுதி+உம்.
3	அறி			பகுதி+உம்.
4	கொல்			பகுதி+உம்.
5	கல்			☞
6	தின்			பகுதி+உம்.
7	உண்			பகுதி+உம்.
8	ஆள்			பகுதி+உம்.
9	கேள்			☞
10	விடு			பகுதி+உம்.
11	படி			☞
12	இரு			☞

☞ கல், கேள், படி, இரு என்பவைகளின் கணங்கள், "உம்" பெறும்பொழுது, (கு), பெற்றுத் தக்கபடி மாறும்.

முதற் கணத்து உடன்பாட்டு முக்காலப் பெயரெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த காலப் பெயரெச்சம். பகுதி + த் + அ	நிகழ் காலப் பெயரெச்சம். பகுதி + கிறு + அ	எதிர் காலப் பெயரெச்சம். பகுதி + உம்.
1	செய்	செய்த	செய்கிற	செய்யும்
2	எய்	எய்த	எய்கிற	எய்யும்
3	கொய்	கொய்த	கொய்கிற	கொய்யும்
4	நெய்	நெய்த	நெய்கிற	நெய்யும்
5	பெய்	பெய்த	பெய்கிற	பெய்யும்
6	அழு	அழுத	அழுகிற	அழும்
7	உழு	உழுத	உழுகிற	உழும்
8	தொழு	தொழுத	தொழுகிற	தொழும்
9	வை	வைத	வைகிற	வையும்
10	பொரு	பொருத	பொருகிற	பொரும்

அப்பியாசம்—37.

குறைவாய் நிற்கிற சொற்களைப் பெயரெச்சமாக்கிப் படி:—

1. நீ செய்—உபகாரத்தை நான் மறவேன்.
2. உன்னை வை—பையனை எனக்குக் காட்டு.
3. நீ நேற்று நெய்—துணி எது? இன்று நெய்—துணி எது?
4. காலத்தில் மழைபெய்—நாட்டில் பஞ்சம் வராது.
5. அங்கே அழு—பையன் யார்? அவன் ஏன் அழுகிறான்?
6. இங்கிருந்த பூவைக் கொய்—சிறுவன் எங்கே?
7. மழை பெய்—போது தெருவில் நிற்காதே.
8. இந்த வயலை நேற்று உழு—ஆட்கள் எங்கே?
9. மகனே! நீ தொழு—கடவுளை எனக்குச் சொல்லு.
10. நீ எய்—அம்பு அம்மானைக் கொன்றது.

43. உடன்பாட்டு முக்கால வினை-எச்சங்கள் ஆக்கும் வகை.

கணங்கள்.	மாதிரிப் பகுதிகள்.	இறந்த கால வினை-எச்சம்.	நிகழ் கால வினை-எச்சம்.	எதிர் கால வினை-எச்சம்.
1	செய்	பகுதி+த்+உ	பகுதி+அ	பகுதி+து+ஆல்
2	ஆடு	பகுதி+இ.	பகுதி+அ	பகுதி+இன்+ஆல்
3	அறி	பகுதி-இறந்தகாலக்குறி+உ	பகுதி+அ	பகுதி+து+ஆல்.
4	கொல்		பகுதி+அ	
5	கல்		பகுதி+கு+அ.	
6	தின்		பகுதி+அ	
7	உண்		பகுதி+அ	
8	ஆள்		பகுதி+அ	
9	கேள்		பகுதி+கு+அ.	விகாரப்பட்ட பகுதி+ஆல்.
10	விடு		பகுதி+அ	
11	படி		பகுதி+க்+கு+அ.	பகுதி+து+ஆல்
12	இரு			பகுதி+து+ஆல்

☞ 1. கல், கேள், படி, இரு என்னுங் கணங்களின் பகுதிகளோடு, "து" சேருகையில் ஏற்றபடி மாற்றல் வேண்டும்.

2. பகுதிகளோடு. "து" சேர்ந்தால் இறந்தகால வினையெச்சத்தின் ரூபம் வரும். அப்படி மாற்றினபின்பு "ஆல்" கூட்டல் வேண்டும்.

முதற்கணத்து உடன்பாட்டு முக்கால வினையெச்சம்

எண்.	பகுதிகள்.	இறந்த கால வினையெச்சம் பகுதி + ந் + உ	நிகழ் கால வினையெச்சம். பகுதி + அ.	எதிர் கால வினையெச்சம். பகுதி + து + ஆல்
1	செய்	செய்து	செய்ய	செய்தால்
2	எய்	எய்து	எய்ய	எய்தால்
3	கொய்	கொய்து	கொய்ய	கொய்தால்
4	நெய்	நெய்து	நெய்ய	நெய்தால்
5	பெய்	பெய்து	பெய்ய	பெய்தால்
6	அழு	அழுது	அழ	அழுதால்
7	உழு	உழுது	உழ	உழுதால்
8	தொழு	தொழுது	தொழ	தொழுதால்
9	வை	வைது	வைய	வைதால்
10	பொரு	பொருது	பொர	பொருதால்

அப்பியாசம்—38.

குறைவாய் நிற்கிற சொற்களை வினையெச்சமாக்கிப் படி:—

1. நீர். ஆயுதமில்லாமல் இங்கே என்னசெய்—வந்தீர்?
2. அவன் தன் வேலையைச் செய்—கூலி கேட்கிறான்.
3. நீ இப்படி நெய்—இது என்று முடியும்?
4. நல்ல மழை பெய்—ஏரி குளங்கள் நிறைந்தன
5. எய்கிறவன் தவறாய் எய்—அம்பு என்ன செய்யும்?
6. இந்தப் பூக்களைக் கொய்—அந்தக் கூடையிற் போடு.
7. சீமைக் கலப்பையால் உழு—நல்ல விளைவு உண்டாமா?
8. நாம் ஒருவரை வை—அவரும் நம்மை வைவார்.
9. கௌரவர் பாண்டவரோடு பொரு—மாண்டார்கள்.
10. இப்படிப்பட்ட வேலைசெய்—எஜமானன் கோபிப்பான்.

இரண்டாங் கணப் பகுதியிலிருந்து உடன்பாட்டு முக்கால வினைமுற்றுக்கள்.

இலக்கம்.	செய்கிறவர்கள்.	இன் இறந்த காலத்தைக் காட்டும்.	கின்று நிகழ் காலத்தைக் காட்டும்.	வ் எதிர் காலத்தைக் காட்டும்.
1	நான்	ஆடினேன்	ஆடுகின்றேன்	ஆடுவேன்
2	நாங்கள்	ஆடினோம்	ஆடுகின்றோம்	ஆடுவோம்
3	நீ	ஆடினாய்	ஆடுகின்றாய்	ஆடுவாய்
4	நீங்கள்	ஆடினீர்-கள்	ஆடுகின்றீர்-கள்	ஆடுவீர்கள்
5	அவன்	ஆடினான்	ஆடுகின்றான்	ஆடுவான்
6	அவள்	ஆடினாள்	ஆடுகின்றாள்	ஆடுவாள்
7	அவர்கள்	ஆடினார்-கள்	ஆடுகின்றார்-கள்	ஆடுவார்-கள்
8	அது	ஆடினது (ஆடிற்று)	ஆடுகின்றது	ஆடும்
9	அவைகள்	ஆடின	ஆடுகின்றன	ஆடும்

இப்படியே,

ஓடு	எண்
பாடு	பண்
கூடு	தள்
தேடு	துள்
வாடு	இள்
ஆறு	அள்
கூறு	அருள்
சீறு	சொல்
பீறு	எவு
மீறு	கூவு
ஊறு	தாவு
தேறு	வினவு
ஏங்கு	உலாவு
ஓங்கு	தழுவு
வாங்கு	கழுவு
நீங்கு	கட்டு
தாங்கு	ஒட்டு
தூங்கு	குட்டு
வணங்கு	முட்டு
இணங்கு	தட்டு

முதலானவை.

அப்பியாசம்—39.

குறைவாய் நிற்கிற சொற்களை வினைமுற்றாக்கிப் படி:—

1. நேற்றுக் காலையில் நீங்கள் எங்கே ஓடு—?
2. அவள் நேற்று எதைப் பாடு—?
3. உன் மகனை இந்தப் பூனை பீறு—.
4. நாங்கள் எப்பொழுதும் உண்மையைக் கூறு—.
5. அவன் சரீரம் முழுமையும் வீங்கு—.
6. முன்பு இவர்கள் எங்களைத் தாங்கு—.
7. இங்கே என்னவோ நாறு—.
8. நீ இதை யாரிடத்தில் வாங்கு—?
9. நீ இனிமேல் எப்பொழுது தூங்கு—?
10. நீங்கள் எனக்கு நேற்று என்ன சொல்—?
11. நான் உனக்கு என்ன கெடுதி பண்—?
12. நான் அப்பொழுது பல பல எண்—?
13. தேவன் நமக்கு இவைகளை அருள்—.
14. அதைக் கேட்டு அவன் களிப்பாய்த் துள்—.
15. இவன் என்னைக் கீழே தள்—.
16. அவன் என் தலைமேல் குட்டு—.
17. இவன் துஷ்டர்களைக் கூடு—.
18. நீங்கள் அங்கே என்ன தேடு—?
19. இப் பூஞ்செடி ஏன் வாடு—?
20. நாம் தேவனுடைய கட்டளைகளை மீறு—.
21. மூடன் கல்வியில் எப்படித் தேறு—?
22. நாங்கள் ஒரு புதுப் புத்தகத்தைத் தொடங்கு—.
23. அவன் பெரியோரிடத்தில் பழகு—.
24. அது எங்களுக்கு நன்றாய் விளங்கு—.
25. நீ அவனுக்கு என்ன சொல்—?
26. அவர் தமது சேனையை இப்படிச் செய்ய ஏவு—.
27. ஏணியில்லாமல், அம்மரத்தில் நீ எப்படி ஏறு—?
28. நீ என்னை என்ன வினவு—?

இரண்டாங் கணத்து உடன்பாட்டு முக்காலப் பெயரெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த காலப் பெயரெச்சம். பகுதி இன் + அ.	நிகழ் காலப் பெயரெச்சம். பகுதி + கிறு + அ	எதிர் காலப் பெயரெச்சம். பகுதி + உம்
1	ஆடு	ஆடின	ஆடுகிற	ஆடும்
2	ஓடு	ஓடின	ஓடுகிற	ஓடும்
3	வாங்கு	வாங்கின	வாங்குகிற	வாங்கும்
4	ஏறு	ஏறின	ஏறுகிற	ஏறும்
5	பழகு	பழகின	பழகுகிற	பழகும்
6	பண்	பண்ணின	பண்ணுகிற	பண்ணும்
7	அருள்	அருளின	அருள்கிற	அருளும்
6	எழுது	எழுதின	எழுதுகிற	எழுதும்
9	பேசு	பேசின	பேசுகிற	பேசும்
10	விலகு	விலகின	விலகுகிற	விலகும்

அப்பியாசம்—40.

குறைவாய் நிற்கிற சொற்களைப் பெயரெச்சமாக்கிப் படி:—

1. நீங்கள் பந்தாடு—இடத்தில் அவர் வரவில்லையா?
2. நீங்கள் தேடு—மனிதன் நான் தான்.
3. இச்செடிகள் வாடு—காரணத்தைச் சொல்லு.
4. பாலோடு கூடு—நீர்பால்போலவே இருக்கும்.
5. "ஆறு—கஞ்சி பழங்கஞ்சி" என்பதொரு பழமொழி.
6. என்னைப் பிறு—பூனை அதோ போகிறது.
7. அவள் பாடு—பாட்டு எங்களுக்குத் தெரியாது.
8. நீ சொல்—சங்கதியை நான் மறப்பேனு?
9. நாம் எண்—படி எல்லாமுமே முடிவதில்லை
10. இதை நமக்குப் பண்—பையன் எவன்?

இரண்டாங் கணத்து உடன்பாட்டு முக்கால வினையெச்சம்.

எண்	பகுதிகள்.	இறந்த கால வினையெச்சம். பகுதி + இ.	நிகழ் கால வினையெச்சம். பகுதி + அ.	எதிர் கால வினையெச்சம் பகுதி + இ + ஆல்.
1	ஆடு	ஆடி	ஆட	ஆடினால்
2	ஓடு	ஓடி	ஓட	ஓடினால்
3	வாங்கு	வாங்கி	வாங்க	வாங்கினால்
4	ஏறு	ஏறி	ஏற	ஏறினால்
5	பழகு	பழகி	பழக	பழகினால்
6	பண்	பண்ணி	பண்ண	பண்ணினால்
7	அருள்	அருளி	அருள	அருளினால்
8	எழுது	எழுதி	எழுத	எழுதினால்
9	பேசு	பேசி	பேச	பேசினால்
10	விலகு	விலகி	விலக	விலகினால்

அப்பியாசம்—41.

குறைவாய் நிற்கிற சொற்களை வினையெச்சமாக்கிப் படி:—

1. நீ நன்றாய்ப் பாடு—நல்ல வெகுமதி பெறுவாய்.
2. இப்படி ஓடு—கால் நோவாதா?
3. அதை வாங்கு—என் வீட்டுக்கு அனுப்பு.
4. தம்பி! வேலை செய்யாமல் தூங்கு—கெட்டுப்போவாய்.
5. தாறுமாறாய்ப் பேசு—கேட்கிறவர்கள் கோபிப்பார்கள்.
6. நான், உனக்கு இன்று கடிதம் எழுது—நீ நாளைக்கு வா
7. அவன் வீட்டுக்கு ஓடு—அவனோடு படி.
8. நீ கெட்டவர்களுடன் பழகு—கெட்டவனாவாய்.
9. கிணற்றில் இறங்கு—த் தண்ணீரைக் கலக்காதே.
10. மாமரத்தில் ஏறு—இருபது பழங்கள் பறி.

மூன்றாங் கணப் பகுதியிலிருந்து உடன்பாட்டு முக்கால வினைமுற்றுக்கள்.

இத்தனை.	செய்கிறவர்கள்.	ந்த் இறந்த காலத்தைக் காட்டும்.	கின்று நிகழ் காலத்தைக் காட்டும்.	வ் எதிர் காலத்தைக் காட்டும்.	இப்படியே,
1	நான்	அறிந்தேன்	அறிகின்றேன்	அறிவேன்	அரி தேய் எரி மாய் பரி காய் திரி சாய் எறி ஓய் முறி உலர் அறை மலர் நிறை அலர் மறை புகழ் இரை இகழ் உடை மகிழ் கடை டிவி வாழ் மெலி தாழ் அணி ஆழ் பணி வீழ் துணி தவழ் நுழை முதலானவை.
2	நாங்கள்	அறிந்தோம்	அறிகின்றோம்	அறிவோம்	
3	நீ	அறிந்தாய்	அறிகின்றாய்	அறிவாய்	
4	நீங்கள்	அறிந்தீர்கள்	அறிகின்றீர்-கள்	அறிவீர்-கள்	
5	அவன்	அறிந்தான்	அறிகின்றான்	அறிவான்	
6	அவள்	அறிந்தாள்	அறிகின்றாள்	அறிவாள்	
7	அவர்-கள்	அறிந்தார்-கள்	அறிகின்றார்-கள்	அறிவார்-கள்	
8	அது	அறிந்தது	அறிகின்றது	அறியும்	
9	அவை-கள்	அறிந்தன	அறிகின்றன	அறியும்	

அப்பியாசம்—42.

குறைவாய் நிற்கிற சொற்களை வினைமுற்றாக்கிப் படி:—

1. அவன் அதை நேற்று எப்படி அறி—?
2. சில சிறுவர் தவளைகளின்மேல் கற்களை எறி—
3. நான் நேற்று மூன்று சுமை புல் அரி—
4. இந்த விளக்கு இப்போது பிரகாசமாய் எரி—
5. கெட்ட பிள்ளைகள் படியாமல் திரி—
6. அவன் இவனை ஏழு அறை அறை—
7. போன வாரத்து மழையினால் ஏரி குளங்கள் நிறை—
8. ஈரச்சுவர் சிறு மழைக்குங் கரை—.
9. நாங்கள் ஊரண்டையிற் போகையிற் சூரியன் மறை—
10. என் மகள் இப்பொழுது தயிர் கடை—.
11. பெருங் காற்றினால் மரங்களின் கிளைகள் முறி—.
12. அம்மா! வெந்நீர் நன்றாய்க் காய்—; குளிக்க வா.
13. இப்பொழுது எந்த வயலுக்குத் தண்ணீர் பாய்—?
14. என் தோட்டத்து மரம் அவன் வீட்டின்மேல் விழு—
15. இந்த ஏரியில் உள்ள நீர் இன்னும் ஒரு மாதம் பாய்—
16. பாரதச் சண்டை கர்ணனோடு முடி—.
17. யோவான் ஏரோதியஸ்ஸைக் கடி—.
18. மழையில்லாமற் கொடிசெடிகள் உலர்—.
19. சூரியன் உதிக்கையில் தாமரை மொட்டுக்கள் மலர்—.
20. தாமரை மலர்கள் சூரியன் மறையவே குவி—.
21. நீங்கள் ஏன் இந்த இருட்டில் அலை—?
22. அவனால் நாம் இவைகளை உணர்—.
23. என் காலமெல்லாம் இப்படியே கழி—.
24. இது பழைய துணியாகையால் இப்படிக் கிழி—.
25. என் விளக்கு இக்தக் காற்றினால் அவி—.
26. நான் அவர்களை மதுரையில் பிரி—.
27. தண்ணீர் இல்லாமல் இச்செடிகள் உலர்—.
28. இராமன்பின் வனம்போகச் சீதை துணி—.

மூன்றாங் கணத்து உடன்பாட்டு முக்காலப் பெயரெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த காலப் பெயரெச்சம். பகுதி + ந்த் + அ.	நிகழ் காலப் பெயரெச்சம். பகுதி + கிறு + அ.	எதிர் காலப் பெயரெச்சம். பகுதி + உம்.
1	அறி	அறிந்த	அறிகிற	அறியும்
2	கடை	கடைந்த	கடைகிற	கடையும்
3	வாழ்	வாழ்ந்த	வாழ்கிற	வாழும்
4	பாய்	பாய்ந்த	பாய்கிற	பாயும்
5	மலர்	மலர்ந்த	மலர்கிற	மலரும்
6	நுழை	நுழைந்த	நுழைகிற	நுழையும்
7	குவி	குவிந்த	குவிகிற	குவியும்
8	அவிழ்	அவிழ்ந்த	அவிழ்கிற	அவிழும்
9	மெலி	மெலிந்த	மெலிகிற	மெலியும்
10	பணி	பணிந்த	பணிகிற	பணியும்

அப்பியாசம்—43.

குறைவாய் நிற்கிற சொற்களைப் பெயரெச்சமாக்கிப் படி:—

1. இதை அறி—மனிதர் அங்கே இல்லை.
2. இடி—கிணற்றின் ஓரத்தில் போகாதே.
3. படியாமல் திரி—பையன் கெட்டுப்போவான்.
4. நீ கடை—தயிரில் அதிக வெண்ணெய் இல்லை.
5. கீழே விழு—குழந்தையை ஏன் எடாமல் இருக்கிறாய்.
6. இந்தக் காட்டில் ஒளி—கள்ளனைப் பிடித்தோம்.
7. நீர் நிறை—குளத்தில் தாமரை நன்றாய் வளரும்.
8. நீ என்னைப் பிரி—போது என்ன சொல்லினாய்?
9. பெற்றோர்க்குக் கீழ்ப்படி—பையன் நல்ல பையன்.
10. நாம் கல்வியினால் அடை—நன்மை ஒன்றன்று.

மூன்றுங் கணத்து உடன்பாட்டு முக்கால வினையெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த கால வினையெச்சம். பகுதி+ந்த்+உ	நிகழ் கால வினையெச்சம். பகுதி+அ.	எதிர் கால வினையெச்சம். பகுதி+து+ஆல்
1	அறி	அறிந்து	அறிய	அறிந்தால்
2	கடை	கடைந்து	கடைய	கடைந்தால்
3	வாழ்	வாழ்ந்து	வாழ	வாழ்ந்தால்
4	பாய்	பாய்ந்து	பாய	பாய்ந்தால்
5	மலர்	மலர்ந்து	மலர	மலர்ந்தால்
6	நுழை	நுழைந்து	நுழைய	நுழைந்தால்
7	குவி	குவிந்து	குவிய	குவிந்தால்
8	அவிழ்	அவிழ்ந்து	அவிழ	அவிழ்ந்தால்
9	மெலி	மெலிந்து	மெலிய	மெலிந்தால்
10	பணி	பணிந்து	பணிய	பணிந்தால்

அப்பியாசம்—44.

குறைவாய் நிற்கிற சொற்களை வினையெச்சமாக்கிப் படி:—

1. இதை நமது பிதா அறி—நம்மைக் கோபிப்பார்.
2. உன்னைப் பிரி—எனக்கு மனம் வரவில்லையே!
3. மகனே! படியாமல் திரி—படிப்பு எப்படி வரும்!
4. நீங்கள் அங்கே இரை—அவர் கோபிப்பார்.
5. சீக்கிரம் தயிரைக் கடை—வெண்ணெயை எடு.
6. அவன் முன்பு வாழ்—இப்பொழுது தாழ்ந்தான்.
7. இவன் பனை மரத்திலிருந்து விழு—முடவனானான்.
8. அவன் இந்த நோயினால் மெலி—உருமாறினான்.
9. குழந்தை தவழ்—நெருப்பின் அருகிற் போனது.
10. அவன் மனம் துணி—இப்படிச் செய்தான்.

நான்காம் கணப் பகுதியிலிருந்து உடன்பாட்டு முக்கால வினைமுற்றுக்கள்

இலக்கம்.	செய்கிறவர்கள்.	ற் இறந்த காலத்தைக் காட்டும்.	கின்று நிகழ் காலத்தைக் காட்டும்	வ் எதிர் காலத்தைக் காட்டும்.	இப்படியே,
1	நான்	கொன்றேன்	கொல்கின்றேன்	கொல்வேன்	செல் மெல் மெல் துயில் உழல் சுழல் பயில் புகல் அகல் முயல் கவல் நவில் ஆல் சால் போல் முதலானவை.
2	நாங்கள்	கொன்றோம்	கொல்கின்றோம்	கொல்வோம்	
	———	———	———	———	
3	நீ	கொன்றாய்	கொல்கின்றாய்	கொல்வாய்	
4	நீங்கள்	கொன்றீர்-கள்	கொல்கின்றீர்-கள்	கொல்வீர்-கள்	
	———	———	———	———	
5	அவன்	கொன்றான்	கொல்கின்றான்	கொல்வான்	
6	அவள்	கொன்றாள்	கொல்கின்றாள்	கொல்வாள்	
7	அவர்-கள்	கொன்றார்-கள்	கொல்கின்றார்-கள்	கொல்வார்-கள்	
	———	———	———	———	
8	அது	கொன்றது	கொல்கின்றது	கொல்லும்	
9	அவைகள்	கொன்றன	கொல்கின்றன	கொல்லும்	

அப்பியாசம்—45,

குறைவாய் நிற்கிற சொற்களை வினைமுற்றாக்கிப் படி,—

1. நாம் நம்முடைய சத்துருக்கள் பலரையும் வெல்—;
2. பூனைகள் எலிகளைக் கொல்—.
3. நேற்று நீர் நெடுநேரம் துயில்—.
4. இந்தச் சக்கரங்கள் எப்படிச் சுழல்—!
5. இதை முடிக்க நான் பலமுறை முயல்—.
6. தசரதன் இராமனை நினைந்து நினைந்து கவல்—.
7. இராமனோடு இலக்ஷுமணனும் வனஞ் செல்—.
8. நம்முடைய அரசன் ஒரு புலியைக் கொல்—.
9. நீ இதை யாரிடத்தில் பயில்—?
10. என் கோழி உன் கோழியை வெல்—ஆ?
11. நாங்கள் உங்களுக்கு உண்மையைப் புகல்—.
12. இது காற்றினால் இப்படிச் சுழல்—.
13. அவர்கள் இதை நேற்று எனக்குப் புகல்—:
14. பெரும்பசியினால் கண்டதை அயில்—.
15. அறிவுள்ளவர் நல்ல காரியங்களில் முயல்—.
16. யானையினுடைய வாய் எப்படி நால்—!
17. இவன் கல்வியறிவினால் சால்—.
18. நீ நேற்று எவ்வூருக்குச் செல்—!
19. அவள் அந்தக் கிளியை ஆராயாமல் சொல்—.
20. நீ எனக்கு உண்மையைப் புகல்—.
21. எருமைகள் சேற்றில் உழல்—.
22. நாம் அவனுக்குப் பல நன்மைகளை நவில்—.
23. என்னுடைய கல்விக்கு அவர் முயல்—.
24. அவன் எந்த அறையில் துயில்—?
25. முனிவர் காய்கனிகளை அயில்—.
26. அவைகள் காற்றினாற் சுழல்—.
27. அவன், அறிவில்லாமல் ஒரு சிசுவைப்போல்—.
28. நீங்கள் அவனிடம் என்ன சொல்—?

நான்காங் கணத்து உடன்பாட்டு முக்காலப் பெயரெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த காலப் பெயரெச்சம். பகுதி + இற் அ	நிகழ் காலப் பெயரெச்சம். பகுதி + கிறு + அ.	எதிர் காலப் பெயரெச்சம். பகுதி + உம்.
1	கோல்	கோன்ற	கோல்கிற	கோல்லும்
2	வெல்	வென்ற	வெல்கிற	வெல்லும்
3	அகல்	அகன்ற	அகல்கிற	அகலும்
4	புகல்	புகன்ற	புகல்கிற	புகலும்
5	துயில்	துயின்ற	துயில்கிற	துயிலும்
6	பயில்	பயின்ற	பயில்கிற	பயிலும்
7	முயல்	முயன்ற	முயல்கிற	முயலும்
8	சுழல்	சுழன்ற	சுழல்கிற	சுழலும்
9	கழல்	கழன்ற	கழல்கிற	கழலும்
10	உழல்	உழன்ற	உழல்கிற	உழலும்

அப்பியாசம்—46.

குறைவாய் நிற்கிற சொற்களைப் பெயரெச்சமாக்கிப் படி:—

1. நாம் கொல்—புலி இவன் கொன்றதினும், பெரியது.
2. கோபத்தை வெல்—புருஷன் மகா சூரன்.
3. இந்த அகல்—பூமியில் உனக்கு ஜீவனம் இல்லையா?
4. பொய் புகல்—மனிதனை ஒருவரும் நம்பார்.
5. வேலை செய்யாமல் துயில்—மனிதன் சோம்பேறி.
6. இளமையிலேயே கல்வியிற் பயில்—சிறுவர் தேறுவர்.
7. விடாமல் முயல்—மனிதன் ஜெயம் அடைவான்
8. கோபத்தை வெல்—வகையை இது சொல்லுகிறது.
9. நீ செல்—ஊருக்கு இவன் செல்லவில்லை.
10. நீ அங்கே செல்—போது என்னைக் கூப்பிடு.

நான்காங் கணத்து உடன்பாட்டு முக்கால வினையெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த கால வினையெச்சம். பகுதி + ற் + உ	நிகழ் கால வினையெச்சம். பகுதி + அ	எதிர் கால வினையெச்சம். பகுதி + து + ஆல்.
1	கொல்	கொன்று	கொல்ல	கொன்றால்
2	வெல்	வென்று	வெல்ல	வென்றால்
3	அகல்	அகன்று	அகல	அகன்றால்
4	புகல்	புகன்று	புகல	புகன்றால்
5	துயில்	துயின்று	துயில	துயின்றால்
6	பயில்	பயின்று	பயில	பயின்றால்
7	முயல்	முயன்று	முயல	முயன்றால்
8	சுழல்	சுழன்று	சுழல	சுழன்றால்
9	கழல்	கழன்று	கழல	கழன்றால்
10	உழல்	உழன்று	உழல	உழன்றால்

அப்பியாசம்—47.

குறைவாய் நிற்கிற சொற்களை வினையெச்சமாக்கிப் படி:—

1. சிங்கம் எந்த விலங்கையும் கொல்—தின்னும்.
2. நீ உன் பகைவனை வெல்—நாடு அடைவாய்.
3. நாம் முயல்—தெய்வமும் உதவும்.
4. குழந்தையைத் துயில்—ச் செய்யப்போ.
5. பெரியோரிடம் பயில்—நல்லவனானான்.
6. உமக்கு இதைப் புகல்—இங்கு வந்தோம்.
7. என் கைவிரல் உரல்போல்—வீங்கினது.
8. பனியில் படுத்துத் துயில்—காய்ச்சல் கொண்டேன்.
9. நீ நல்ல சொல் புகல்—நல்ல சொல் கேட்பாய்.
10. நீ உண்மையை நவில்—நன்மையை அடைந்தாய்.

ஐந்தாங் கணப் பகுதியிலிருந்து உடன்பாட்டு முக்கால வினைமுற்றுக்கள்.

இலக்கம்.	செய்கிறவர்கள்.	ற் இறந்த காலத்தைக் காட்டும்.	கின்று நிகழ் காலத்தைக் காட்டும்.	ப் எதிர் காலத்தைக் காட்டும்.	இப்படியே.
1	நான்	கற்றேன்	கற்கின்றேன்	கற்பேன்	ஏல்
2	நாங்கள்	கற்றோம்	கற்கின்றோம்	கற்போம்	வில்
3	நீ	கற்றாய்	கற்கின்றாய்	கற்பாய்	தோல்
4	நீங்கள்	கற்றீர்-கள்	கற்கின்றீர்-கள்	கற்பீர்-கள்	நூல்
5	அவன்	கற்றான்	கற்கின்றான்	கற்பான்	நோல்
6	அவள்	கற்றாள்	கற்கின்றாள்	கற்பாள்	முதலானவை.
7	அவர்-கள்	கற்றார்-கள்	கற்கின்றார்-கள்	கற்பார்-கள்	
8	அது	கற்றது	கற்கின்றது	கற்கும்	
9	அவை-கள்	கற்றன	கற்கின்றன	கற்கும்	

ஐந்தாங் கணத்து உடன்பாட்டு முக்காலப் பெயரெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த காலப் பெயரெச்சம். பகுதி + ற் + அ	நிகழ் காலப் பெயரெச்சம். பகுதி + கிறு + அ.	எதிர் காலப் பெயரெச்சம். பகுதி + கு + உம்.
1	கல்	கற்ற	கற்கிற	கற்கும்
2	வில்	விற்ற	விற்கிற	விற்கும்
3	எல்	எற்ற	எற்கிற	எற்கும்
4	தோல்	தோற்ற	தோற்கிற	தோற்கும்
5	நூல்	நூற்ற	நூற்கிற	நூற்கும்
6	நோல்	நோற்ற	நோற்கிற	நோற்கும்

கல், கேள், படி, இரு என்னும் பகுதிகளின் கணங்களுக்கு, எதிர்காலப் பெயரெச்சத்தின் விகுதியாகிய 'உம்' கூட்டும்போது, 'கு' கூட்டிக் கூட்டல்வேண்டும்.

ஐந்தாங் கணத்து உடன்பாட்டு முக்கால வினையெச்சம்.

எண்	பகுதிகள்.	இறந்த கால வினையெச்சம். பகுதி + ற் + உ.	நிகழ் கால வினையெச்சம். பகுதி + கு + அ.	எதிர் கால வினையெச்சம். பகுதி + து + ஆல்.
1	கல்	கற்று	கற்க	கற்றால்
2	வில்	விற்று	விற்க	விற்றால்
3	எல்	எற்று	எற்க	எற்றால்
4	தோல்	தோற்று	தோற்க	தோற்றால்
5	நூல்	நூற்று	நூற்க	நூற்றால்
6	நோல்	நோற்று	நோற்க	நோற்றால்

அப்பியாசம்—48.

குறைவாய் நிற்கிற சொற்களை வினைமுற்றாக்கிப் படி;—

1. நீ இதை எவரிடத்திற் கல்—?
2. கந்தசாமி தன் வீட்டை எவ்வளவுக்கு வில்—?
3. என் குதிரைக்கு உன் குதிரை தோல்—.
4. நான் இப்பொழுது இலக்கணம் கல்—.
5. நீ உன் வீட்டை எவ்வளவுக்கு வில்—?
6. நீ என்னுடன் வாதாடினால் தோல்—.
7. நாங்கள் உங்களுக்கு ஏல்—ஆ?
8. நான் என்ன நோன்பு நோல்—!
9. சிலந்தி மனிதரிலும் அழகாய் நூல்—.
10. இவள் அந்த நோன்பை நோல்—.
11. அம்மா! தெருவில் என்னவோ வில்—.
12. நாங்கள் இப்போது இதைக் கல்—.
13. நீ கல்—கல்வியை என்னிடங் காட்டு.
14. ஒரு ரூபாய்க்கு நாலுபடி அரிசி வில்—போது பஞ்சம்.
15. தோல்—கோழி யோடி ஒளிந்தது.
16. நீ நூல்—நூல் எத்தனை பலம்?
17. நான் நோல்—நோன்புகளின் பயனிதுவோ?
18. இலக்கணம் கல்—சிறுவர் இதை அறிவர்.
19. நான் சங்கீதம் கல்—இவ்வூர் அடைந்தேன்.
20. இளமையில் கல்—எளிதிற் கற்கலாம்.
21. என் குதிரையை வில்—இங்கே வந்தேன்.
22. நீ போரில் தோல்—உன் ராஜ்யம் போகும்.
23. வேண்டுமென்று நூல்—நன்றாய் நூற்பாய்.
24. இந்த நோன்பு நோல்—எவ்வளவு பணம் வேண்டும்?
25. பாண்டவர் தோல்—க் காட்டுக்குப் போனார்கள்.
26. கல்வியைக் கல்—செல்வத்தை அடையலாம்.
27. இது உன் மனதிற்கு ஏல்—தடையின்றிச் செய்யலாம்.
28. இவைகளையெல்லாம் ஏல்—ச் செய்தோம்.

ஆறாங் கணப் பகுதியிலிருந்து உடன்பாட்டு முக்கால வினைமுற்றுக்கள்.

இலக்கம்.	செய்கிற வர்கள்.	ற் இறந்த காலத்தைக் காட்டும்.	கிறு நிகழ் காலத்தைக் காட்டும்.	ப் எதிர் காலத்தைக் காட்டும்.	இப்படியே,
1	நான்	தின்றேன்	தின்கிறேன்	தின்பேன்	
2	நாங்கள்	தின்றோம்	தின்கிறோம்	தின்போம்	என்
	———	———	———	———	ஈன்
3	நீ	தின்றாய்	தின்கிறாய்	தின்பாய்	☞ எதிர் காலத்தில் தின்னுவேன்
4	நீங்கள்	தின்றீர்-கள்	தின்கிறீர்-கள்	தின்பீர்கள்	தின்னுவோம்
	———	———	———	———	என்று
5	அவன்	தின்றான்	தின்கிறான்	தின்பான்	உ-வ் கூட்டலும்
6	அவள்	தின்றாள்	தின்கிறாள்	தின்பாள்	உண்டு.
7	அவர்-கள்	தின்றார்-கள்	தின்கிறார்-கள்	தின்பார்கள்	
	———	———	———	———	
8	அது	தின்றது	தின்கிறது	தின்னும்	
9	அவைகள்	தின்றது	தின்கின்றன	தின்னும்	

ஆறுங் கணத்து உடன்பாட்டு முக்காலப் பெயரேச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த காலப் பெயரெச்சம். பகுதி + ற் + அ.	நிகழ் காலப் பெயரெச்சம். பகுதி + கிறு + அ.	எதிர் காலப் பெயரெச்சம். பகுதி + உம்.
1	தின்	தின்ற	தின்கிற	தின்னும்
2	ஈசன்	ஈன்ற	ஈன்கிற	ஈனும்
3	என்	என்கிற	என்கிற	என்னும்

ஆறுங் கணத்து உடன்பாட்டு முக்கால வினையெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த கால வினையெச்சம். பகுதி + ற் + உ	நிகழ் கால வினையெச்சம். பகுதி + அ	எதிர் கால வினையெச்சம். படிதி + து + ஆல்.
1	தின்	தின்று	தின்ன	தின்றால்
2	ஈன்	ஈன்று	ஈன	ஈன்றால்
3	என்	என்று	என்ன	என்றால்

அப்பியாசம்—49.

குறைவாய் நிற்கிற சொற்களை நிறைவாக்கிப் படி:—

1. இக்கன்றை ஈன்—பசு அதோ வருகிறது.
2. லந்தன் என்—பட்டணத்திற்கு அவர் போனார்.
3. இதைத் தின்—உன் நோய் தீரும்.
4. கோபத்தை வெல்லும் வகை எது என்—நீ?
5. கௌசல்வியை இராமனை ஈன்—.
6. நீ இப்போது என்ன தின்—?

ஏழாங் கணப் பகுதியிலிருந்து உடன்பாட்டு முக்கால வினைமுற்றுக்கள்.

இத்தனை.	செய்கிற வர்கள்.	ட் இறந்த காலத்தை காட்டும்.	கிறு நிகழ் காலத்தைக் காட்டும்.	ப் எதிர் காலத்தைக் காட்டும்.	இப்படியே,
1	நான்	உண்டேன்	உண்கிறேன்	உண்பேன்	காண் பூண் மாண் முதலானவை. குறிப்பு:— உண்ணுவேன் காணுவேன் பூணுவேன் என்பதும் உண்டு. காண்-ட்பெறும் பொழுது கண் என்றாகும்.
2	நாங்கள்	உண்டோம்	உண்கிறோம்	உண்போம்	
3	நீ	உண்டாய்	உண்கிறாய்	உண்பாய்	
4	நீங்கள்	உண்டீர்-கள்	உண்கிறீர்-கள்	உண்பீர்-கள்	
5	அவன்	உண்டான்	உண்கிறான்	உண்பான்	
6	அவள்	உண்டாள்	உண்கிறாள்	உண்பாள்	
7	அவர்கள்	உண்டார்கள்	உண்கிறீர்-கள்	உண்பார்-கள்	
8	அது	உண்டது	உண்கிறது	உண்ணும்	
9	அவைகள்	உண்டன	உண்கின்றன	உண்ணும்	

ஏழாங் கணத்து உடன்பாட்டு முக்காலப் பெயரெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த காலப் பெயரெச்சம்.	நிகழ் காலப் பெயரெச்சம்.	எதிர் காலப் பெயரெச்சம்.
		பகுதி + ட் + அ.	பகுதி + கிறு + அ.	பகுதி + உம்.
1	உண்	உண்ட	உண்கிற	உண்ணும்
2	காண்	கண்ட	காண்கிற	காணும்
3	பூண்	பூண்ட	பூண்கிற	பூணும்
4	மாண்	மாண்ட	மாண்கிற	மாணும்

ஏழாங் கணத்து உடன்பாட்டு முக்கால வினையெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த கால வினையெச்சம்.	நிகழ் கால வினையெச்சம்.	எதிர் கால வினையெச்சம்.
		பகுதி + ட் + உ.	பகுதி + அ.	பகுதி + து + ஆல்.
1	உண்	உண்டு	உண்ண	உண்டால்
2	காண்	கண்டு	காண	கண்டால்
3	பூண்	பூண்டு	பூண	பூண்டால்
4	மாண்	மாண்டு	மாண	மாண்டால்

அப்பியாசம்—50.

குறைவாய் நிற்கிற சொற்களை நிறைவாக்கிப் படி:—

1. நாங் காண்—கனவை இவருக்குச் சொல்லுவோம்.
2. கல்வியால் மாண்—மனிதரே சிறந்தவர்.
3. நீ பூண்—கோலத்துக்கேற்ற சீலங்கொள்.
4. நாங்கள் அந்நதியைக் காண்—சாலக் களித்தோம்.

எட்டாங் கணப் பகுதியிலிருந்து உடன்பாட்டு முக்கால வினைமுற்றுக்கள்.

இலக்கம்.	செய்கிற வர்கள்.	ட் இறந்த காலத்தைக் காட்டும்,	கின்று நிகழ் காலத்தைக் காட்டும்.	வ் எதிர் காலத்தைக் காட்டும்.	இப்படியே,
1	நான்	ஆண்டேன்	ஆள்கின்றேன்	ஆள்வேன்	கொள் மாள் இருள் உருள் புரள் வெருள் சுருள் கீள் மீள் மூள் நீள் திரள் வறள் விள் தவள் முதலானவை.
2	நாங்கள்	ஆண்டோம்	ஆள்கின்றோம்	ஆள்வோம்	
	———	———	———	———	
3	நீ	ஆண்டாய்	ஆள்கின்றாய்	ஆள்வாய்	
4	நீங்கள்	ஆண்டீர்-கள்	ஆள்கின்றீர்-கள்	ஆள்வீர்-கள்	
	———	———	———	———	
5	அவன்	ஆண்டான்	ஆள்கின்றான்	ஆள்வான்	
6	அவள்	ஆண்டாள்	ஆள்கின்றாள்	ஆள்வாள்	
7	அவர்-கள்	ஆண்டார்-கள்	ஆள்கின்றார்-கள்	ஆள்வார்-கள்	
	———	———	———	———	
8	அது	ஆண்டது	ஆள்கின்றது	ஆளும்	
9	அவை-கள்	ஆண்டன	ஆள்கின்றன	ஆளும்	

அப்பியாசம்—51.

குறைவாய் நிற்கிற சொற்களை வினைமுற்றாக்கிப் படி:—

1. இவர்கள் வெகுகாலம் நீதியோடு ஆள்—.
2. அந்தச் சண்டையில் பலவீரர் மாள்—.
3. இந்தச் சக்கரம் எப்படி உருள்—பார்?
4. உன் துணி தரையில் புரள்—.
5. அதைக் கண்டு என் குதிரை வெருள்—.
6. நீ இதை எந்தக் கடையிற் கொள்—?
7. மழையில்லாமல் குளங்கள் வறள்—.
8. ஜனங்கள் பெருங் கூட்டமாய்த் திரள்—.
9. நாங்கள் ஊரிற் சேருமுன் ஆகாயம் இருள்—.
10. அது இப்பொழுது எப்படி நீள்—பார்.
11. இவர் இன்னும் இருபது வருஷம் ஆள்—.
12. இங்கே இப்பழங்கள் தரையில் உருள்—.
13. இதைக் கண்டால் என் குதிரை வெருள்—.
14. இழுத்தால் இது இன்னும் கொஞ்சம் நீள்—.
15. அதனால் அவனுடைய கோபம் மூள்—.
16. இந்த உபாயத்தினால் அவர்கள் மீள்—.
17. நீ என் இப்பழத்தை இரண்டாக விள்—?
18. நீ இப்படிப் பேசினதினால் எனக்குக் கோபம் மூள்—.
19. அவள் தரையில் விழுந்து புரள்—.
20. அது அந்த மலையின் உச்சியிலிருந்து உருள்—.
21. அவர் போர்களத்திலிருந்து மீள்—.
22. அவர்களுக்கு இப்போது நாக்கு நீள்—.
23. இவற்றை நீ யார் கடையிற் கொள்—?
24. மூடருக்குக் கோபம் அடிக்கடி மூள்—.
25. நீ இதை எவன் கடையில் கொள்—?
26. இப்படி என் இவன் நிலத்திற் புரள்—?
27. நீ உன் மனக்குரங்கை அடக்கி ஆள்—.
28. அவள் பசியினால் கொடிபோல் துவள்—.

எட்டாங் கணத்து உடன்பாட்டு முக்காலப் பெயரெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த காலப் பெயரெச்சம். பகுதி + ட் + அ.	நிகழ் காலப் பெயரெச்சம். பகுதி + கிறு + அ	எதிர் காலப் பெயரெச்சம். பகுதி + உம்
1	ஆள்	ஆண்ட	ஆள்கிற	ஆளும்
2	கொள்	கொண்ட	கொள்கிற	கொள்ளும்
3	விள்	விண்ட	விள்கிற	விள்ளும்
4	மாள்	மாண்ட	மாள்கிற	மாளும்
5	புரள்	புரண்ட	புரள்கிற	புரளும்
6	இருள்	இருண்ட	இருள்கிற	இருளும்
7	உருள்	உருண்ட	உருள்கிற	உருளும்
8	திரள்	திரண்ட	திரள்கிற	திரளும்
9	நீள்	நீண்ட	நீள்கிற	நீளும்
10	கீள்	கீண்ட	கீள்கிற	கீளும்
11	துவள்	துவண்ட	துவள்கிற	துவளும்

அப்பியாசம்—52.

குறைவாய் நிற்கிற சொற்களைப் பெயரெச்சமாக்கிப் படி:—

1. இப்போரில் மாள்—வீரர்களின் தொகை என்ன?
2. கொள்—பொருள்களை நல்ல பொருள்களாய்க் கொள்.
3. வெருள்—இதை இன்னும் வெருட்டாதே.
4. சுருள்—இந்தப் பாயைப் பிரி.
5. பாம்பின் வாயிலிருந்து மீள்—தவளை உண்டோ?
6. அதிகமாய் மூள்—கோபத்தினால் இப்படிப் பேசினான்.
7. நீள்—கயிற்றால் இதைக் கட்டு.
8. வறள்—தரையில் புல்லும் முளையாது.
9. நீ கொள்—குதிரையின் விலை என்ன?
10. தரையில் புரள்—குழந்தையை யெடாயா? பங்கஜம்!

எட்டாங் கணத்து உடன்பாட்டு முக்கால வினையெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த கால வினையெச்சம். பகுதி + ட் + உ.	நிகழ் கால வினையெச்சம். பகுதி + அ.	எதிர் கால வினையெச்சம். பகுதி + து + ஆல்.
1	ஆள்	ஆண்டு	ஆள	ஆண்டால்
2	கொள்	கொண்டு	கொள்ள	கொண்டால்
3	இருள்	இருண்டு	இருள	இருண்டால்
4	உருள்	உருண்டு	உருள	உருண்டால்
5	சுருள்	சுருண்டு	சுருள	சுருண்டால்
6	மீள்	மீண்டு	மீள	மீண்டால்
7	மூள்	மூண்டு	மூள	மூண்டால்
8	நீள்	நீண்டு	நீள	நீண்டால்
9	கீள்	கீண்டு	கீள	கீண்டால்
10	திரள்	திரண்டு	திரள	திரண்டால்

அப்பியாசம்—53.

குறைவாய் நிற்கிற சொற்களை வினையெச்சமாக்கிப் படி:—

1. நீ இங்கிருந்து உருள்—இறந்துபோவாய்.
2. அது இதைக் கண்டு வெருள்—ஓடிப்போனது.
3. அத்திப்பழத்தை விள்—அதில் புழுக் காண்பாய்.
4. இந்தத் திசையில் மேகம் திரள்—மழை பெய்யும்.
5. அது கல்லில் புரள்—காயம் பட்டுக்கொண்டது.
6. அவள் கொடிபோல் துவள்—நிலத்தில் விழுந்தாள்.
7. இது இன்னும் நீள்—கெட்டுப்போகும்.
8. அப்பழத்தை விள்—ஒரு பாதி கொடு.
9. ஜனங்கள் வெருள்—ஓடினார்கள்.
10. இப்புத்தகத்தை எடுத்துக்கொள்—படி.

ஒன்பதாங் கணப் பகுதியிலிருந்து உடன்பாட்டு முக்கால வினைமுற்றுக்கள்.

இத்தனை.	செய்கிற வர்கள்.	ட் இறந்த காலத்தைக் காட்டும்.	கிறு நிகழ் காலத்தைக் காட்டும்.	ப் எதிர் காலத்தைக் காட்டும்.	இப்படியே,
1	நான்	கேட்டேன்	கேட்கிறேன்	கேட்பேன்	நள்
2	நாங்கள்	கேட்டோம்	கேட்கின்றோம்	கேட்போம்	வேள்
	———	———	———	———	பிள்
3	நீ	கேட்டாய்	கேட்கிறாய்	கேட்பாய்	மீள்
4	நீங்கள்	கேட்டீர்-கள்	கேட்கிறீர்-கள்	கேட்பீர்-கள்	முதலானவை.
	———	———	———	———	
5	அவன்	கேட்டான்	கேட்கிறான்	கேட்பான்	
6	அவள்	கேட்டாள்	கேட்கிறாள்	கேட்பாள்	
7	அவர்-கள்	கேட்டார்-கள்	கேட்கிறார்-கள்	கேட்பார்-கள்	
	———	———	———	———	
8	அது	கேட்டது	கேட்கிறது	கேட்கும்	
9	அவை-கள்	கேட்டன	கேட்கின்றன	கேட்கும்	

ஒன்பதாங் கணத்து உடன்பாட்டு முக்காலப் பெயரெச்சம்.

எண்.	மாதிரிப் பகுதிகள்.	இறந்த காலப் பெயரெச்சம். பகுதி + ட் + அ.	நிகழ் காலப் பெயரெச்சம். பகுதி + கிறு + அ.	எதிர் காலப் பெயரெச்சம். பகுதி + கு + உம்.
1	கேள்	கேட்ட	கேட்கிற	கேட்கும்
2	நள்	நட்ட	நட்கிற	நட்கும்
3	வேள்	வேட்ட	வேட்கிற	வேட்கும்
4	மீள்	மீட்ட	மீட்கிற	மீட்கும்

ஒன்பதாங் கணத்து உடன்பாட்டு முக்கால வினையெச்சம்.

எண்.	மாதிரிப் பகுதிகள்.	இறந்த கால வினையெச்சம். பகுதி + ட் + உ.	நிகழ் கால வினையெச்சம். பகுதி + க + அ.	எதிர் கால வினையெச்சம். பகுதி + து + ஆல்
1	கேள்	கேட்டு	கேட்க	கேட்டால்
2	நள்	நட்டு	நட்க	நட்டால்
3	வேள்	வேட்டு	வேட்க	வேட்டால்
4	மீள்	மீட்டு	மீட்க	மீட்டால்

அப்பியாசம்—54.

குறைவாய் நிற்கிற சொற்களை நிறைவாக்கிப் படி:—

1. நீ கேள்—சங்கதி உண்மைதான்.
2. நீ நாளைக்கு மீள்—நகைகள் எவை.
3. நீ தீயவர்களுடன் நள்—க் கெட்டாய்.

பத்தாங் கணப் பகுதியிலிருந்து உடன்பாட்டு முக்கால வினைமுற்றுக்கள்.

இக்கனை.	செய்கிறவர்கள்.	பகுதியின் விகாரம் இறந்த காலத்தைக் காட்டும்.	கிறு நிகழ் காலத்தைக் காட்டும்.	வ் எதிர் காலத்தைக் காட்டும்.	இப்படியே,
1	நான்	விட்டேன்	விடுகிறேன்	விடுவேன்	அடு இடு சுடு நடு படு கெடு தொடு அறு உறு பெறு தகு தொகு புகு மிகு சாப்பிடு கூப்பிடு அகப்படு எற்படு போடு முதலானவை.
2	நாங்கள்	விட்டோம்	விடுகிறோம்	விடுவோம்	
3	நீ	விட்டாய்	விடுகிறாய்	விடுவாய்	
4	நீங்கள்	விட்டீர்-கள்	விடுகிறீர்-கள்	விடுவீர்கள்	
5	அவன்	விட்டான்	விடுகிறான்	விடுவான்	
6	அவள்	விட்டாள்	விடுகிறாள்	விடுவாள்	
7	அவர்-கள்	விட்டார்-கள்	விடுகிறார்-கள்	விடுவார்-கள்	
8	அது	விட்டது	விடுகிறது	விடும்	
9	அவை-கள்	விட்டன	விடுகின்றன	விடும்	

அப்பியாசம்—55.

குறைவாய் நிற்கிற சொற்களை வினைமுற்றாக்கிப் படி :—

1. நான் அந்த ஆசையை அடியோடும் விடு—.
2. நீ துஷ்டரைச் சேர்ந்து கெடு—.
3. விளக்கு என் விரலைச் சுடு—.
4. இதனால் நீ என்ன லாபம் பெறு—?
5. அதன்பின் நாங்கள் ஒரு காட்டில் புகு—.
6. இச்செடிகளை இங்கே எவன் நடு—?
7. என் கைவிரல் என் கண்ணில் படு—.
8. நீ ஏன் அவன் புத்தகத்தைத் தொடு—?
9. நான் அன்றுமுதல் சுகம் அறு—.
10. இதை நீ யாரிடத்தில் பெறு—?
11. இதனால் அவன் சுகமுறு—.
12. நேற்று நீ யார் வீட்டில் சாப்பிடு—?
13. நான் உன்னைப் பலமுறை கூப்பிடு—.
14. இது உனக்கு எங்கே அகப்படு—?
15. நீ உன் கத்தியை எங்கே போடு—?
16. அவன் சோட்டை இங்கே விடு—.
17. துஷ்டரைச் சேர்ந்தவர் கெடு—.
18. நாங்கள் அந்த மானின் பின் வனம் புகு—.
19. நீர் அவ் வூரில் யார் வீட்டில் சாப்பிடு—?
20. அக்குழந்தை உன்னைக் கூப்பிடு—.
21. நீ எப்பொழுது அங்கிருந்து புறப்படு—?
22. நான் என் குதிரைக்குப் புல் போடு—.
23. அவன் அன்போடும் அன்னம் இடு—
24. நீ எத்தனை வடைகள் சுடு—?
25. அவர்கள் எந்த வனத்திற் புகு—?
26. இந்நூல் எவர்களுக்குத் தகு—?
27. இளமையில் படியாதவன் கெடு—?
28. உன் சொற்கள் என் மனத்தைச் சுடு—.

பத்தாங் கணத்து உடன்பாட்டு முக்காலப் பெயரெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த காலப் பெயரெச்சம். விகாரப்பட்ட பகுதி + அ.	நிகழ் காலப் பெயரெச்சம். பகுதி + கிறு + அ.	எதிர் காலப் பெயரெச்சம். பகுதி + உம்.
1	விடு	விட்ட	விடுகிற	விடும்
2	இடு	இட்ட	இடுகிற	இடும்
3	படு	பட்ட	படுகிற	படும்
4	அறு	அற்ற	அறுகிற	அறும்
5	உறு	உற்ற	உறுகிற	உறும்
6	பெறு	பெற்ற	பெறுகிற	பெறும்
7	தகு	தக்க	தகுகிற	தகும்
8	புகு	புக்க	புகுகிற	புகும்
9	மிகு	மிக்க	மிகுகிற	மிகும்
10	கூப்பிடு	கூப்பிட்ட	கூப்பிடுகிற	கூப்பிடும்

அப்பியாசம்—56.

குறைவாய் நிற்கிற சொற்களைப் பெயரெச்சமாக்கிப் படி:—

1. நீ சுடு—புலி எது?
2. கெடு—பிள்ளைகளைச் சேருகிறவனும் கெடுவான்.
3. ஜானகி! நீ சுடு—அப்பங்களைக் கொண்டுவா.
4. இதனால் நீ பெறு—லாபம் என்ன?
5. நாங்கள் தகு—பள்ளிக்கூடத்தில் சேர்ந்தோம்.
6. நீ நடு—செடி ஏன் நன்றாய் வளரவில்லை?
7. அறிவு அறு—மனிதனுக்கு சுகம் இல்லை.
8. நான் பெறு—பிள்ளைகள் எனக்கு இது செய்தார்கள்.
9. நீ நேற்று இராத்திரி சாப்பிடு—வீட்டுக்குப் போ.
10. எதுவும் போடு—இடத்தில் தேடினால் அகப்படும்.

பத்தாங் கணத்து உடன்பாட்டு முக்கால வினையெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த கால வினையெச்சம். — விகாரப்பட்ட பகுதி + உ.	நிகழ் கால வினையெச்சம். — பகுதி + அ.	எதிர் கால வினையெச்சம். — விகாரப்பட்ட பகுதி + ஆல்.
1	வீடு	விட்டு	விட	விட்டால்
2	இடு	இட்டு	இட	இட்டால்
3	படு	பட்டு	பட	பட்டால்
4	போடு	போட்டு	போட	போட்டால்
5	அறு	அற்று	அற	அற்ருல்
6	உறு	உற்று	உற	உற்ருல்
7	பெறு	பெற்று	பெற	பெற்ருல்
8	புகு	புக்கு	புக	புக்கால்
9	மிகு	மிக்கு	மிக	மிக்கால்
10	கூப்பிடு	கூப்பிட்டு	கூப்பிட	கூப்பிட்டால்

அப்பியாசம்—57.

குறைவாய் நிற்கிற சொற்களைப் பெயரெச்சமாக்கிப் படி:—

1. நல்லதை விடு—க்கெட்டதைத்தெரிந்துகொண்டீர்கள்.
2. பால் திரிந்து கெடு—, நல்ல தயிர் ஆகாது.
3. பத்து அடைகள் சுடு—எடுத்துக்கொண்டு வா
4. அவன் அதிகலாபம் பெறு—வர்த்தகத்தை நிறுத்தினன்.
5. நாங்கள் ஒரு காட்டில் புகு—அலைந்தோம்.
6. அவர் அதை இங்கே நடு—நன்ருய் வளர்த்தார்.
7. என் முழங்கை படு—அந்தக் கண்ணுடி உடைந்தது.
8. மழை அறு—ப் பஞ்சம் வந்துவிட்டது.
9. அதனல் அவன் துன்பமுறு—அழுகிருன்.
10. நாங்கள் கூப்பிடு—, அவன் வருவாளு?

* பத்தாங் கணத்தின் தகு. புகு, மிகு இறந்த காலத்திற்கு "ந்த்" பெருவதுமுண்.

பதினொன்றாங் கணப் பகுதியிலிருந்து உடன்பாட்டு முக்கால வினைமுற்றுக்கள்.

இத்தனை.	செய்கிறவர்கள்.	த்-த் இறந்த காலத்தைக் காட்டும்.	க் கின்று நிகழ் காலத்தைக் காட்டும்.	ப்-ப் எதிர் காலத்தைக் காட்டும்.
1	நான்	படித்தேன்	படிக்கின்றேன்	படிப்பேன்
2	நாங்கள்	படித்தோம்	படிக்கின்றோம்	படிப்போம்
	——	——	——	——
3	நீ	படித்தாய்	படிக்கின்றாய்	படிப்பாய்
4	நீங்கள்	படித்தீர்-கள்	படிக்கின்றீர்-கள்	படிப்பீர்-கள்
	——	——	——	——
5	அவன்	படித்தான்	படிக்கின்றான்	படிப்பான்
6	அவள்	படித்தாள்	படிக்கின்றாள்	படிப்பாள்
7	அவர்-கள்	படித்தார்-கள்	படிக்கின்றார்-கள்	படிப்பார்-கள்
	——	——	——	——
8	அது	படித்தது	படிக்கின்றது	படிக்கும்
9	அவைகள்	படித்தன	படிக்கின்றன	படிக்கும்

இப்படியே,

அடி	பூ
கடி	மூ
இடி	பார்
குடி	தீர்
பிடி	பேர்
எடு	குலை
கொடு	நிலை
அடை	குதி
படை	மதி
துடை	சிரி
சிறு	நகை
பொறு	பழி
கறு	தளிர்
வெறு	கை
உரை	தை
கா	வை
கோ	

முதலானவை.

பதினொன்றாங்கணத்துஉடன்பாட்டுமுக்காலப்பெயரெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த காலப் பெயரெச்சம். பகுதி+த்த்+அ.	நிகழ் காலப் பெயரெச்சம். பகுதி+க்-கிறு+அ.	எதிர் காலப் பெயரெச்சம். பகுதி+க்-கு+உம்
1	படி	படித்த	படிக்கிற	படிக்கும்
2	அடி	அடித்த	அடிக்கிற	அடிக்கும்
3	எடு	எடுத்த	எடுக்கிற	எடுக்கும்
4	கொடு	கொடுத்த	கொடுக்கிற	கொடுக்கும்
5	அடை	அடைத்த	அடைக்கிற	அடைக்கும்
6	உதை	உதைத்த	உதைக்கிற	உதைக்கும்
7	விதை	விதைதத்	விதைக்கிற	விதைக்கும்
8	கோ	கோத்த	கோக்கிற	கோக்கும்.
9	பூ	பூத்த	பூக்கிற	பூக்கும்
10	காய்	காய்த்த	காய்க்கிற	காய்க்கும்

பதினொன்றாங்கணத்துஉடன்பாட்டுமுக்காலவினையெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த கால வினையெச்சம். பகுதி+த்த்+உ.	நிகழ் கால வினையெச்சம். பகுதி+க்கு+அ.	எதிர் கால வினையெச்சம். பகுதி+து+ஆல்
1	படி	படித்து	படிக்க	படித்தால்
2	அடி	அடித்து	அடிக்க	அடித்தால்
3	எடு	எடுத்து	எடுக்க	எடுத்தால்
4	கொடு	கொடுத்து	கொடுக்க	கொடுத்தால்
5	அடை	அடைத்து	அடைக்க	அடைத்தால்
6	உதை	உதைத்து	உதைக்க	உதைத்தால்
7	விதை	விதைத்து	விதைக்க	விதைத்தால்
8	கோ	கோத்து	கோக்க	கோத்தால்
9	பூ	பூத்து	பூக்க	பூத்தால்
10	காய்	காய்த்து	காய்க்க	காய்த்தால்

அப்பியாசம்—58.

குறைவாய் நிற்கிற சொற்களை நிறைவாக்கிப் படி:—

1. நேற்று நீயேன் அவனை அடி—?
2. நீங்கள் இவ்வூற்று நீரைக் குடி—.
3. இந்த நாய் கடி—; அதன் கிட்டப் போகலாகாது.
4. அவன் ஏன் அப்போது சிரி—?
5. நாங்கள் அதைச் செய்ய ஒரு நாளைக் குறி—.
6. கெட்டவன் பிறரையுங் கெடு—.
7. இந்தப் புஸ்தகத்தை ஒரு வருஷத்தில் படி—.
8. நீ ஏன் எங்களைப் பழி—?
9. சுரங்கத்திலிருந்து பொன் எடு—.
10. இந்தக் கிளை அதைத் தடு—.
11. நேற்றுப்படி—பாடத்தைப் படியுங்கள்.
12. இதை எடு—போது என்னோடு சொல்லு.
13. நீ கொடு—புஸ்தகத்தை நான் படித்தேன்.
14. உன்னை உதை—குதிரைக்கு உடையவன் எவன்?
15. அங்கே நீ பார்—பிராணிகள் எவை?
16. நீங்கள் கோ—பூக்கள் வாடியிருக்கின்றன.
17. காய்—மரத்தின்மேலே கல் எறிவார்கள்.
18. இக்குளத்தில் பூ—பூக்கள் பெரியவை.
19. நான் பிழை—பிழைப்பை எவரும் பழிப்பர்.
20. நீ இங்கே வசி—உன் நோய் தீரும்.
21. நான் ஸமிஸ்கிருதம் படி—க் காசிக்குப் போனேன்.
22. நீ அவனை அடி—, நான் உன்னை அடிப்பேன்.
23. இங்கிருந்து இதை எடு—எட்டாட்கள் வேண்டும்.
24. அவனுக்குப் பணத்தைக் கொடு—அவனைக் கெடுத்தீர்.
25. அவனைச் சிறையில் அடை.—த் தண்டிப்போம்.
26. இந்தப் பூக்களைக் கோ—ஒரு மாலையாக்கு.
27. நாய் குலை—வீட்டார் எழுந்து வந்தார்கள்.
28. இதனோடு அதை வை—, இரண்டுங் கெட்டுப்போம்.
29. இளமையில் படி—ப் பண்டிதனானன்.

பன்னிரண்டாங் கணப் பகுதியிலிருந்து உடன்பாட்டு முக்கால வினைமுற்றுக்கள்.

இத்தனை.	செய்கிற வர்கள்.	ந்-த் இறந்த காலத்தைக் காட்டும்.	க்-கின்று நிகழ் காலத்தைக் காட்டும்.	ப்-ப் எதிர் காலத்தைக் காட்டும்.	இப்படியே,
1	நான்	இருந்தேன்	இருக்கின்றேன்	இருப்பேன்	நட கட கிட மற துற திற பற பிற இற சிற கற துற கல இழ அள முதலானவை.
2	நாங்கள்	இருந்தோம்	இருக்கின்றோம்	இருப்போம்	
	———	———	———	———	
3	நீ	இருந்தாய்	இருக்கின்றாய்	இருப்பாய்	
4	நீங்கள்	இருந்தீர்-கள்	இருக்கின்றீர்-கள்	இருப்பீர்-கள்	
	———	———	———	———	
5	அவன்	இருந்தான்	இருக்கின்றான்	இருப்பான்	
6	அவள்	இருந்தாள்	இருக்கின்றாள்	இருப்பாள்	
7	அவர்-கள்	இருந்தார்-கள்	இருக்கின்றார்-கள்	இருப்பார்-கள்	
	———	———	———	———	
8	அது	இருந்தது	இருக்கின்றது	இருக்கும்	
9	அவை-கள்	இருந்தது	இருக்கின்றன	இருக்கும்	

பன்னிரண்டாங் கணத்து உடன்பாட்டு முக்காலப் பெயரெச்சம்.

எண்.	பகுதிகள்.	இறந்த காலப் பெயரெச்சம். பகுதி + ந்த் + அ.	நிகழ் காலப் பெயரெச்சம். பகுதி + கிறு + அ.	எதிர் காலப் பெயரெச்சம். பகுதி + க் + கு உம்.
1	இரு	இருந்த	இருக்கிற	இருக்கும்
2	கிட	கிடந்த	கிடக்கிற	கிடக்கும்
3	நட	நடந்த	நடக்கிற	நடக்கும்
4	திற	திறந்த	திறக்கிற	திறக்கும்
5	துற	துறந்த	துறக்கிற	துறக்கும்
6	கற	கறந்த	கறக்கிற	கறக்கும்
7	மற	மறந்த	மறக்கிற	மறக்கும்
8	பற	பறந்த	பறக்கிற	பறக்கும்
9	பிற	பிறந்த	பிறக்கிற	பிறக்கும்
10	கல	கலந்த	கலக்கிற	கலக்கும்

பன்னிரண்டாங் கணத்து உடன்பாட்டு முக்கால வினையெச்சம்.

எண்	பகுதிகள்.	இறந்த கால வினையெச்சம் பகுதி + ந்த் + உ.	நிகழ் கால வினையெச்சம். பகுதி + கு + அ.	எதிர் கால வினையெச்சம் பகுதி + து + ஆல்.
1	இரு	இருந்து	இருக்க	இருந்தால்
2	கிட	கிடந்து	கிடக்க	கிடந்தால்
3	நட	நடந்து	நடக்க	நடந்தால்
4	திற	திறந்து	திறக்க	திறந்தால்
5	துற	துறந்து	துறக்க	துறந்தால்
6	கற	கறந்து	கறக்க	கறந்தால்
7	மற	மறந்து	மறக்க	மறந்தால்
8	பற	பறந்து	பறக்க	பறந்தால்
9	பிற	பிறந்து	பிறக்க	பிறந்தால்
10	கல	கலந்து	கலந்து	கலந்தால்

அப்பியாசம்—59.

குறைவாய் நிற்கிற சொற்களை நிறைவாக்கிப் படி:—

1. நீங்கள் இவ்வூரில் இன்னும் எத்தனை நாள் இரு—?
2. உனக்கு எவன் இக்கதவைத் திற—?
3. இக்குழந்தை எந்த வருஷத்தில் பிற—?
4. இப்பசு வேளைக்கு இரண்டு படி கற—.
5. அவள் காலையில் கற்றதை மாலையில் மற—.
6. இரண்டு சிறுநதிகள் இதில் வந்து கல—.
7. சென்ற வருடம் இந்த ஊற்றில் அதிக நீர் சுற—.
8. நீ அந்த மூடருக்கு இடையில் எப்படி இரு—?
9. இவரால் அவ்வூர் சாலவுஞ் சிற—.
10. இக்கொள்ளை நோயினால் நூறு பேர்கள் இற—.
11. மண்ணின்மேல் பிறந்த எவனும் இற—.
12. நீ நட—விதம் எனக்குப் பிரியமாயில்லை.
13. இக்கதவைதிற—போது என்னைக் கூப்பிடு.
14. இவன், எல்லாந் துற—சந்நியாசியா?
15. நீ கற—பால் எத்தனை படி இருக்கிறது?
16. பிறர் செய்த தீமையை மற—குணம் உத்தம குணம்.
17. இஃது எண்ணெய்கல—நெய்யாகையால் நாறுகின்றது.
18. இவன் பிற—போது நான் மதுரையிலில்லை.
19. அங்கு நட—செய்திகளை நீ போய் அறிந்துவா.
20. அவ்வூரில் இரு—ஒரு சிறு கோவிலுக்குப் போனோம்.
21. அவ்வூரில் இரு—எவருக்குமே பிரியம் இராது.
22. தினமும் இப்படி நட—, கால் நோகாதா?
23. அந்தக் கதவைத் திற—இராமசாமி போனான்.
24. நான் கற—, அது வேளைக்கு ஒருபடி தரும்.
25. விஷப்பாம்புகள் கர—உறையுமென் றறி.
26. இந்த நன்றியை மற—, நாம் பாவிகளாகுவோம்.
27. தீக்குருவிகளுக்குப் பற—ப் போதுமான பக்ஷமில்லை.
28. பாலில் நீரைக் கல—, அதுவும் பாலெனப்படும்.
29. பல பட்டினி யிரு—, உடல் வாடிப் போகும்.
30. கைப்பொருளை இழ—கஷ்டப்படுகிறிர்.

எதிர்மறை வினைமுற்றுக்கள். (பக்கம் 79 பார்க்க.)

44. எதிர்மறை முக்கால வினைமுற்றுக்கள் ஆக்கும் வகை:—

இலக்கம்.	செய்கிறவர்கள்.	எதிர்மறை இறந்தகால வினைமுற்று.	எதிர்மறை எதிர்கால வினைமுற்று.	எதிர்மறை எதிர்கால வினைமுற்று.	இப்படியே, செய் உண் உழு காண்
1	நான்	பாடவில்லை	பாடவில்லை	பாடேன்	ஆடு ஆள்
2	நாங்கள்	பாடவில்லை	பாடவில்லை	பாடோம்	அறி கேள்
	———	———	———	———	அடை விடு
3	நீ	பாடவில்லை	பாடவில்லை	பாடாய்	செல் படி
4	நீங்கள்	பாடவில்லை	பாடவில்லை	பாடீர்-கள்	கல் இரு
	———	———	———	———	தின்
5	அவன்	பாடவில்லை	பாடவில்லை	பாடான்	முதலானவை.
6	அவள்	பாடவில்லை	பாடவில்லை	பாடாள்	அது, அவைகள் பெறும் எதிர்மறை
7	அவர்-கள்	பாடவில்லை	பாடவில்லை	பாடார்-கள்	எதிர்கால வினை
	———	———	———	———	முற்று, முறையே,
8	அது	பாடவில்லை	பாடவில்லை	பாடாது	"ஆது." "ஆ" பெ
9	அவை-கள்	பாடவில்லை	பாடவில்லை	பாடா ☜	ற்று முடியும்.

45. பன்னிரு கணப் பகுதிகளிலிருந்தும் தன்மை ஒருமை எதிர்மறை முக்கால வினைமுற்றுக்கள் ஆக்கும் வகை:

எண்.	பகுதிகள்.	எதிர்மறை இறந்தகால வினைமுற்று.	எதிர்மறை நிகழ்கால வினைமுற்று.	எதிர்மறை எதிர்கால வினைமுற்று.
		(நான், முன்பு)	(நான், இப்போது)	(நான், இனி)
1	செய்	செய்யவில்லை	செய்யவில்லை	செய்யேன்
2	ஆடு	ஆடவில்லை	ஆடவில்லை	ஆடேன்
3	அறி	அறியவில்லை	அறியவில்லை	அறியேன்
4	கொல்	கொல்லவில்லை	கொல்லவில்லை	கொல்லேன்
5	கல்	கற்கவில்லை	கற்கவில்லை	{ கல்லேன் கற்கேன்
6	தின்	தின்னவில்லை	தின்னவில்லை	தின்னேன்
7	உண்	உண்ணவில்லை	உண்ணவில்லை	உண்ணேன்
8	ஆள்	ஆளவில்லை	ஆளவில்லை	ஆளேன்
9	கேள்	கேட்கவில்லை	கேட்கவில்லை	{ கேளேன் கேட்கேன்
10	விடு	விடவில்லை	விடவில்லை	விட்டேன்
11	படி	படிக்கவில்லை	படிக்கவில்லை	{ படியேன் படிக்கேன்
12	இரு	இருக்கவில்லை	இருக்கவில்லை	{ இரேன் இருக்கேன்

☞ நிகழ்கால வினையெச்சத்திற்கு "இல்லை" என்பதைக் கூட்டினால், செய்யவில்லை, ஆடவில்லை, அரியவில்லை என்பவைகளைப்போல் வரும் ரூபம், இருதிணை, ஈரெண், இருபால், மூவிடம் ஆகிய எவைசளுக்கும் பொதுவாய், இறந்தகாலத்திலும், நிகழ்காலத்திலும் வரும். **5. 9. 11. 12**-ஆம் கணங்களுக்கு எதிர்காலத்தில் இரண்டு ரூபங்கள் வரும்.

☞ மற்ற இடம் பால் எண்களின் ரூபங்களைக் கூறப் பழக்குக. ☜

46. எதிர்மறைப் பெயரெச்சங்களும், வினையெச்சங்களும் ஆக்கும் வகை:

எண்.	பகுதிகள்.	எதிர்மறைப் பெயரெச்சம். பகுதி + ஆத.	எதிர்மறை வினையெச்சம். பகுதி + ஆமல்.	எதிர்மறை வினையெச்சம். பகுதி + ஆது.
1	செய்	செய்யாத*	செய்யாமல்	செய்யாது
2	ஆடு	ஆடாத	ஆடாமல்	ஆடாது
3	அறி	அறியாத	அறியாமல்	அறியாது
4	கொல்	கொல்லாத	கொல்லாமல்	கொல்லாது
5	கல்	கல்லாத கற்காத	கல்லாமல் கற்காமல்	கல்லாது கற்காது
6	தின்	தின்னாத	தின்னாமல்	தின்னாது
7	உண்	உண்ணாத	உண்ணாமல்	உண்ணாது
8	ஆள்	ஆளாத	ஆளாமல்	ஆளாது
9	கேள்	கேளாத கேட்காத	கேளாமல் கேட்காமல்	கேளாது கேட்காது
10	விடு	விடாத	விடாமல்	விடாது
11	படி	படியாத படிக்காத	படியாமல் படிக்காமல்	படியாது படிக்காது
12	இரு	இராத இருக்காத	இராமல் இருக்காமல்	இராது இருக்காது
13	போ	போகாத	போகாமல்	போகாது
14	தா	தராத	தராமல்	தராது
15	இல்	இல்லாத	இல்லாமல்	இல்லாது
16	அல்	அல்லாத	அல்லாமல்	அல்லாது

*விசேஷக் குறிப்பு.—இங்குள்ள பெயரெச்ச வினையெச்சங்கள் முக்காலங்களிற்கும் பொதுவானவை. இவை "த" "மல்" இல்லாமல், செய்யா, ஆடா என்பவைபோல் ஈறு குறைந்தும் வழங்கும்.

(உ-ம்.) இளமையிற் படியாச் சிறுவன் கல்வியில் தேறான்
என் குதிரை அதற்கு அஞ்சி, நடவா நின்றுவிட்டது.

☞ கல், கேள், படி, இரு என்னும் கணங்கள், இரண்டு ரூபங்கள் பெறும்.

47. உடன்பாட்டெதிர்கால வினையெச்சத்திற்குச் சரியான எதிர்மறை வினையெச்சம் ஆக்கும் வகை:—

எண்.	பகுதிகள்.	ஆவிட்டால் பெற்றுவந்த எதிர்மறை வினையெச்சம்.	ஆவிடில் பெற்றுவந்த எதிர்மறை வினையெச்சம்.	ஆக்கால் பெற்றுவந்த எதிர்மறை வினையெச்சம்.	ஆமற்போனல் பெற்றுவந்த எதிர்மறை வினையெச்சம்.	ஆதிருந்தால் பெற்றுவந்த எதிர்மறை வினையெச்சம்.
1	செய்	செய்யாவிட்டால்	செய்யாவிடில்	செய்யாக்கால்	செய்யாமற்போனல்	செய்யாதிருந்தால்
2	ஆடு	ஆடாவிட்டால்	ஆடாவிடில்	ஆடாக்கால்	ஆடாமற்போனல்	ஆடாதிருந்தால்
3	அறி	அறியாவிட்டால்	அறியாவிடில்	அறியாக்கால்	அறியாமற்போனல்	அறியாதிருந்தால்
4	கொல்	கொல்லாவிட்டால்	கொல்லாவிடில்	கொல்லாக்கால்	கொல்லாமற்போனல்	கொல்லாதிருந்தால்
5	கல்	கல்லாவிட்டால் கற்காவிட்டால்	கல்லாவிடில் கற்காவிடில்	கல்லாக்கால் கற்காக்கால்	கல்லாமற்போனல் கற்காமற்போனல்	கல்லாதிருந்தால் கற்காதிருந்தால்
9	தின்	தின்னவிட்டால்	தின்னவிடில்	தின்னக்கால்	தின்னமற்போனல்	தின்னதிருந்தால்
7	உண்	உண்ணவிட்டால்	உண்ணவிடில்	உண்ணக்கால்	உண்ணமற்போனல்	உண்ணதிருந்தால்
8	ஆள்	ஆளாவிட்டால்	ஆளாவிடில்	ஆளாக்கால்	ஆளாமற்போனல்	ஆளாதிருந்தால்
9	கேள்	கேளாவிட்டால் கேட்காவிட்டால்	கேளாவிடில் கேட்காவிடில்	கேளாக்கால் கேட்காக்கால்	கேளாமற்போனல் கேட்காமற்போனல்	கேளாதிருந்தால் கேட்காதிருந்தால்
10	விடு	விடாவிட்டால்	விடாவிடில்	விடாக்கால்	விடாமற்போனல்	விடாதிருந்தால்
11	படி	படியாவிட்டால் படிக்காவிட்டால்	படியாவிடில் படிக்காவிடில்	படியாக்கால் படிக்காக்கால்	படியாமற்போனல் படிக்காமற்போனல்	படியாதிருந்தால் படிக்காதிருந்தால்
12	இரு	இராவிட்டால் இருக்காவிட்டால்	இராவிடில் இருக்காவிடில்	இராக்கால் இருக்காக்கால்	இராமற்போனல் இருக்காமற்போனல்	இராதிருந்தால் இருக்காதிருந்தால்
13	இல்	இல்லாவிட்டால்	இல்லாவிடில்	இல்லாக்கால்	இல்லாமற்போனல்	இல்லாதிருந்தால்

அப்பியாசம்—60.

குறைவாய் நிற்கிற சொற்களை நிறைவாக்கிப் படி:—

1. வண்டிகள் கடலில் ஒருநாளும் ஓடு—.
2. இம்மாடுகள் கிழங்கள்; இதற்குமேல் உழு—.
3. அறிவுள்ள மனிதன் எவனுமே இப்படிச்செய்—.
4. இதற்குமுன் இச்செய்தியை நான் அறியவே அறி.—
5. கொடிய காற்றிலே இந்த விளக்கு நில்—.
6. குருட்டுக் கண்கள் ஒன்றையுங் காண்—.
7. நல்ல குதிரை தன் எஜமானனைக் கீழே தள்—.
8. நீ சொன்னது எங்களுக்குக் கேள்—.
9. மூடன் தான் பிடித்த பிடியை விடு—.
10. நாம் நினைக்கிறபடி எல்லாமுமே ஆ—.
11. பல வருஷம் மழை பெய்—நாட்டில் பஞ்சம் வரும்.
12. வேலை செய்—திரிகிற பையன் சோம்பேறியாவான்.
13. இளமையில் கல்வியைத் தேடு—ஊர் திரியாதே.
14. ஜெபம் பண்—நாள் வீணான நாள் என்றறி.
15. இவர்கள் இருவரும் இணைபிரி—நண்பர்கள்.
16. இவன், வயிற்றுக்குந் தின்—பணஞ் சேர்க்கிறான்.
17. இரண்டு காதும் கேள்—மனிதன் செவிடன்.
18. அவர் இவைகளை மீள்—போய்விட்டார்.
19. உன் கண்ணால் காண்—சிலவற்றை நீ நம்பவேண்டும்.
20. நேற்றிரவு விடு—மழையு மிடியுமாயிருந்தது.
21. உனக்குத் தகு—காரியத்தை எப்போதும் செய்யாதே.
22. மருந்தைக் குடி—குப்பையில் கொட்டினாள்.
23. இந்த நாய் குலை—வந்து கடிக்கும்.
24. அவர் இரு—வேளையில் நீ இங்கே வராதே.
25. இதை மற—ஞாபகத்தில் வைத்துக்கொள்.
26. இது நீர் நிழல் இல்—பாலைவனம்.
27. உனது அல்—பொருளுக்கு ஆசைப்படாதே.
28. முன் ஒருபோதும் போ—வழியிற் போகாதே.
29. தன் குற்றம் உணர்—மனிதன் மூடன்.

48. உடன்பாட்டு ஏவல் வினைமுற்றுக்கள் வரும்வகை:—

எண்.	பகுதிகள்.	உடன்பாட்டு ஏவல் ஒருமை வினைமுற்று. —— பகுதி + ●	மரியாதையுள்ள உடன்பாட்டு ஏவல் ஒருமை வினைமுற்று. —— பகுதி + உம்.	உடன்பாட்டு ஏவற் பன்மை வினைமுற்று. —— பகுதி + உங்கள்.
1	பார்	பார்	பாரும்	பாருங்கள்
2	செய்	செய்	செய்யும்	செய்யுங்கள்
3	ஆடு	ஆடு	ஆடும்	ஆடுங்கள்
4	அறி	அறி	அறியும்	அறியுங்கள்
5	நட	நட	நடவும்	நடவுங்கள்

49. எதிர்மறை ஏவல் வினைமுற்றுக்கள் ஆக்கும் வகை:—

எண்.	பகுதிகள்.	எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று. —— பகுதி + ஆதே.	மரியாதையுள்ள எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று. —— பகுதி + ஆதேயும்.	எதிர்மறை ஏவற் பன்மை வினைமுற்று. —— பகுதி + ஆதேயுங்கள்.
1	பார்	பாராதே	பாராதேயும்	பாராதேயுங்கள்
2	செய்	செய்யாதே	செய்யாதேயும்	செய்யாதேயுங்கள்
3	ஆடு	ஆடாதே	ஆடாதேயும்	ஆடாதேயுங்கள்
4	அறி	அறியாதே	அறியாதேயும்	அறியாதேயுள்கள்
5	நட	நடவாதே நடக்காதே	நடவாதேயும் நடக்காதேயும்	நடவாதேயுங்கள் நடக்காதேயுங்கள்
6	கல்	கல்லாதே கற்காதே	கல்லாதேயும் கற்காதேயும்	கல்லாதேயுங்கள் கற்காதேயுங்கள்
7	கேள்	கேளாதே கேட்காதே	கேளாதேயும் கேட்காதேயும்	கேளாதேயுங்கள் கேட்காதேயுங்கள்
8	படி*	படியாதே படிக்காதே	படியாதேயும் படிக்காதேயும்	படியாதேயுங்கள் படிக்காதேயுங்கள்

* செய்யாமல் அல்லது செய்யாது+இரு இரும், இருங்கள் என்றும், "ஆதே" யினிடத்தில், "ஏல்" கூட்டி, "சொல்லேல்" என்றும், முன்னிலையல்லாப் பெயர்களை ஏவும்போது, செய்யட்டும், செய்யாதிருக்கட்டும் என்றும் வரும்.

எண்.	50. செய்ய வேண்டிக்கொள்ளும் வினைமுற்று. (உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று.)			செய்யாமலிருக்க வேண்டிக்கொள்ளும் வினைமுற்று (எதிர்மறை வியங்கோள் வினைமுற்று.)	
	செய்பவர்கள்.	பகுதி+க.	உடன்பாட்டு வி-அ-பெயர் } ஆக.	பகுதி+அற்க.	எதிர்மறை வி-அ-பெயர். } + ஆக.
1	நான்	செய்க	செய்வேனாக	செய்யற்க	செய்வேனாக
2	நாங்கள்	செய்க	செய்வோமாக	செய்யற்க	செய்யோமாக
3	நீ	செய்க	செய்வாயாக	செய்யற்க	செய்வாயாக
4	நீங்கள்	செய்க	செய்வீர்களாக	செய்யற்க	செய்வீர்களாக
5	அரசன்	செய்க	செய்வானாக	செய்யற்க	செய்யானாக
6	அரசர்கள்	செய்க	செய்வார்களாக	செய்யற்க	செய்யார்களாக
7	அரசி	செய்க	செய்வாளாக	செய்யற்க	செய்யாளாக
8	அரசிகள்	செய்க	செய்வார்களாக	செய்யற்க	செய்யார்களாக
9	இவர்	செய்க	செய்வாராக	செய்யற்க	செய்யாராக
10	இவர்கள்	செய்க	செய்வார்களாக	செய்யற்க	செய்யார்களாக
11	எருது	செய்க	செய்வதாக	செய்யற்க	செய்யாதாக
12	எருதுகள்	செய்க	செய்வனவாக	செய்யற்க	செய்யாவாக
13	பசு	செய்க	செய்வதாக	செய்யற்க	செய்யாதாக
14	பசுக்கள்	செய்க	செய்வனவாக	செய்யற்க	செய்யாவாக
15	மரம்	செய்க	செய்வதாக	செய்யற்க	செய்யாதாக
16	மரங்கள்	செய்க	செய்வனவாக	செய்யற்க	செய்யாவாக

☞ க, அற்க பெற்று வரும் வியங்கோள், ரூபங்கள், திணை, இடம், பால், எண்களுக்கு வேறுபடா.

51 இதுவரையிலும், மிகவுஞ் சாதாரணமாய் வழங்கும் வினைமுற்றுக்கள், பெயரெச்சங்கள், வினையெச்சங்கள் முதலான வைகளைப் பன்னிரு கணப் பகுதிகளினின்றும் பிறப்பிக்கும் வகைகள் காட்டப்பட்டன. இனி, நூல்களில் வழங்கும் விகுதிகளை, அவைகளைக் கையாளும் வகையையும் காட்டுவோம்.

தன்மை யொருமை முனைமுற்று விகுதிகள்........................	ஏன், அன்.
தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள்........................	ஓம், அம், ஆம்.
முன்னிலை யொருமை வினைமுற்று விகுதிகள்........................	ஆய், ஐ.
முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள்........................	ஈர், ஈர்கள், இர், இர்கள்.
உயர்திணை யாண்பா லொருமை வினைமுற்று விகுதிகள்..........	ஆன், அன், உம்.
உயர்திணைப் பெண்பா லொருமை வினைமுற்று விகுதிகள்..........	ஆள், அள், உம்.
உயர்திணை யிருபாற் பன்மை வினைமுற்று விகுதிகள்..........	ஆர், ஆர்கள், அர், அர்கள், ப.
அஃறிணை யொருமை வினை முற்று விகுதிகள்..............	து, று, உம்.
அஃறிணைப் பன்மை வினைமுற்று விகுதிகள்........................	அ, ஆ, உம்.

விசேஷக் குறிப்புகள்.—"இன்" ஒழிந்த இறந்தகாலக் குறிகளோடும், நிகழ்காலக் குறிகளோடும் அன், அம், ஐ, ஈர், இர்கள், அன், அள், அர், அர்கள் சேரும்பொழுது "அன்" வரும். இந்த "அன்" சாரியை எனப்படும். "உம்" "ப" காலக்குறியை வேண்டாமல் தாமே எதிர்காலத்தைக் காட்டும். "று" உடன்பாட்டு வினைகளில், இறந்தகால வினைமுற்றுக்களிற்கு மாத்திரம் வரும். அவைகளிலும், "இன்" என்னும் காலக்குறி ஒன்றிற்கே சேராய்க் கூட்டப்படும். "இன்" ஒழிந்த இடைநிலைகளோடு வரும்போது "அன்" சாரியை பெறும்; எதிர்மறை வினைமுற்றுக்களில் "இல்" "அல்" என்பவற்றோடு வரும்.

"அ," "இன்" என்னுங் காலக்குறியோடு "அன்" சாரியை பெருமலும் மற்றவற்றோடு பெற்றும் பெருமலும் வரும். "ஆ" எதிர்மறை அஃறிணைப் பன்மை எதிர்கால வினைமுற்றிற்கே வரும்.

செய்.] முதற் கணத்து உடன்பாட்டு முக்கால வினைமுற்றுக்கள்.

செய்பவர்.	இறந்தகாலம்.	நிகழ்காலம்.	எதிர்காலம்.
நான்	செய்தேன் செய்தனன்	செய்கின்றேன் செய்கின்றனன்	செய்வேன் செய்வன்
நாங்கள்	செய்தோம் செய்தனம் செய்தாம்	செய்கின்றேம் செய்கின்றனம் செய்கின்றாம்	செய்வோம் செய்வம் செய்வாம்
நீ	செய்தாய் செய்தை செய்தனை	செய்கின்றாய் செய்கின்றை செய்கின்றனை	செய்வாய் செய்வை
நீங்கள்	செய்தீர் செய்தீர்கள் செய்தனிர் செய்தனிர்கள்	செய்கின்றீர் செய்கின்றீர்கள் செய்கின்றிர் செய்கின்றிர்கள்	செய்வீர் செய்வீர்கள் செய்வீர் செய்வீ.கள்
அவன்	செய்தான் செய்தனன்	செய்கின்றான். செய்கின்றனன்	செய்வான் செய்வன் செய்யும்
அவள்	செய்தாள் செய்தனள்	செய்கின்றாள் செய்கின்றனள்	செய்வாள் செய்வள் செய்யும்
அவர்கள்	செய்தார் செய்தார்கள் செய்தனர் கெய்தனர்கள்	செய்கின்றார் செய்கின்றார்கள் செய்கின்றனர் செய்கின்றனர்கள்	செய்வார் செய்வார்கள் செய்வர் செய்ப
அது	செய்தது செய்தன்று	செய்கின்றது	செய்யும் செய்வது
அவைகள்	செய்தன செய்த	செய்கின்றன செய்கின்ற	செய்யும் செய்வ செய்வன

☞ பிற கணத்துப் பகுதிகளுக்கும் வினைமுற்று ரூபங்கள் கூறு.

அப்பியாசம்—61.

வினைகளில்நிற்கிறவிகுதியை நீக்கி வேறுவிகுதியைக் கூட்டிப்படி.

மாதிரி:—"நீ நேற்று என்ன செய்தாய்?" என்பதை,
"நீ நேற்று என்ன செய்தனை?" என்று மாற்றல்.

1. யாம் இவ்வயலை உழுதோம். 2. நீ அவனுக்கு என்ன சொல்வாய்? 3. அவள் அதனை அறிந்தாள். 4. அஃது இவ்வழியே போனது. 5. அவர்கள் வென்றார்கள். 6. நீ எவ்வூருக்குச் செல்கின்றாய்? 7. அவன் இதை ஒரே நாளில் கற்றனன். 8. அஃது அதனைத் தின்றது. 9. கிளியே! "நீ யார்?" என்கிறாயா? 10 அவன் இவற்றைக் கண்டான். 11. அவன் எங்களை நீதியோடு ஆண்டான். 12. நீ இதை எக்கடையிற் கொண்டாய்? 13. நீ தீயோருடன் நட்டாய். 14. உன் ஜோடுகளை எங்குவிட்டாய். 15. அஃது இதனைப் பெற்றது 16. நீ என்ன படிப்பாய்? 17. அதனை யாம் மறந்தோம். 18. அவர்கள் நேற்று வந்தார்கள். 19. இவர்கள் இதை எழுதுகிறார்கள். 20. யாம் இவை கூறினேம். 21. அவன் இவை எண்ணுவான். 22. அவர்கள் இவை கொள்வர். 23. அஃது இதனை உழும். 24. அவை இவற்றைத் தின்னும். 25. நீங்கள் என்ன பாடுவீர்கள்? 26. நான் என் செய்வன்? 27. புலவர் கூறுவர். 28. அஃது கூவினது. 29. அம்மரம் விழுந்தது.

52. மேலே, வினைமுற்றுக்களுக்குப் பல விகுதிகள் கூறப்பட்டன. அவ்வாறே, வினையெச்சங்களுக்கும் பல விகுதிகளிருக்கின்றன. அவற்றை யிங்கே கூறுவோம்.

இறந்தகால வினையெச்ச விகுதிகள்.	நிகழ்கால வினை யெச்ச விகுதி.	எதிர்கால வினை யெச்ச விகுதிகள்.
உ	அ	இல்
இ		இன்
ய்		ஆல்
ஆ		

☞ இவைகளில் "உ" ஒழிந்தவை காலக்குறியை வேண்டாதவை.

☞ இறந்தகாலப் பெயரெச்சங்களுக்கு, **கண்**, **கால்**, **கடை**, **உழி**, **இடத்து** என்பவைகளை, **செய்தக்கண்**, **செய்தக்கால்**, **செய்தக்கடை**, **செய்துழி**, **செய்தவிடத்து**, என்று கூட்டி, எதிர்கால வினையெச்சத்தின் பொருள் விளைப்பதும் உண்டு.

பலவகைப் பகுதிகளினின்றும் உடன்பாட்டு இறந்தகால வினையெச்சங்களும், நிகழ்கால வினையெச்சங்களும் பிறப்பிக்கும் வகை.

எண்.	பகுதிகள்.	இறந்த காலக் குறியை வேண்டும் "உ" விகுதி பெற்றனவை.	இறந்த காலக் குறியை வேண்டாத "இ" விகுதி பெற்றனவை.	இறந்த காலக் குறியை வேண்டாத "ய்" விகுதி பெற்றனவை.	இறந்த காலக் குறியை வேண்டாத "ஆ" விகுதி பெற்றனவை.	நிகழ்காலக் குறியை வேண்டாத "அ" விகுதி பெற்றனவை.	"க்" என்னும் சாரியையோடு காலக்குறியை வேண்டாத "அ" விகுதி பெற்றனவை.	"ப்" எழுத்துப் பேற்றோடு காலக்குறியை வேண்டாத "அ" விகுதி பெற்றனவை.
1	செய்	செய்து	—	—	செய்யா	செய்ய	—	—
2	ஆடு	—	ஆடி	—	ஆடா	ஆட	—	—
3	ஆ	—	ஆகி	ஆய்	ஆகா	—	—	—
4	அறி	அறிந்து	—	—	அறியா	அறிய	—	—
5	கொல்	கொன்று	—	—	சொல்லா	கொல்ல	—	—
6	கல்	கற்று	—	—	கல்லா	—	கற்க	கற்ப
7	தின்	தின்று	—	—	தின்னு	தின்ன	—	—
8	உண்	உண்டு	—	—	உண்ணு	உண்ண	—	—
9	ஆள்	ஆண்டு	—	—	ஆளா	ஆள	—	—
10	கோள்	கொண்டு	—	—	கொள்ளா	கொள்ள	—	—
11	கேள்	கேட்டு	—	—	கேளா	—	கேட்க	கேட்ப
12	விடு	விட்டு	—	—	விடா	விட	—	—
13	பெறு	பெற்று	—	—	பெறு	பெற	—	—
14	படி	படித்து	—	—	படியா	—	படிக்க	படிப்ப
15	இரு	இருந்து	—	—	இரா	—	இருக்க	இருப்ப

பன்னிரு கணப் பகுதிகளினின்றும் உடன்பாட்டு எதிர்கால வினையெச்சங்கள் வருமாறு.

கணங்கள்.	பகுதிகள்.	காலக்குறியை வேண்டாத "இல்" விகுதி பெற்றனது.	காலக்குறியை வேண்டாத "இன்" விகுதிபெற்றனது.	குச் சாரியை பெற்று "இல்" விகுதிபெற்றனது.	குச் சாரியை பெற்று "இன்" விகுதிபெற்றனது.	ப் எழுத்துப் பேற்றோடு "இல்" விகுதிபெற்றனது	ப் எழுத்துப் பேற்றோடு "இன்" விகுதிபெற்றனது.	"து"ச் சாரியை பெற்று "ஆல்" விகுதிபெற்றனது.	இன் சாரியை பெற்று "ஆல்" விகுதி பெற்றனது.	ஒரு சாரியையும்பெறாமல் "ஆல்" விகுதிபெற்றனது.
1	செய்	செய்யில்	செய்யின்	———	———	———	———	செய்தால்	———	———
2	ஆடு	ஆடில்	ஆடின்	———	———	———	———	———	ஆடினால்	———
3	அறி	அறியில்	அறியின்	———	———	———	———	அறிந்தால்	———	———
4	கொல்	கொல்லில்	கொல்லின்	———	———	———	———	கொன்றால்	———	———
5	கல்	———	———	கற்கில்	கற்கின்	கற்பில்	கற்பின்	கற்றால்	———	———
6	தின்	தின்னில்	தின்னின்	———	———	———	———	தின்றால்	———	———
7	உண்	உண்ணில்	உண்ணின்	———	———	———	———	உண்டால்	———	———
8	ஆள்	ஆளில்	ஆளின்	———	———	———	———	ஆண்டால்	———	———
9	கேள்	———	———	கேட்கில்	கேட்கின்	கேட்பில்	கேட்பின்	கேட்டால்	———	———
10	விடு	விடில்	விடின்	———	———	———	———	———	———	விட்டால்
11	படி	———	———	படிக்கில்	படிக்கின்	படிப்பில்	படிப்பின்	படித்தால்	———	———
12	இரு	———	———	இருக்கில்	இருக்கின்	இருப்பில்	இருப்பின்	இருந்தால்	———	———

☞ உடன்பாட்டிலும், எதிர்மறையிலும், எதிர்கால வினைமுற்றிற்கு, ஆசில், ஆயின், ஆனால், எனில், ஏல், என்னி முதலான எச்சங்களைக் கூட்டி ஒரு சொல்லாக்கின், எதிர் காலவினையெச்சப் பொருள் விளையும்.

அப்பியாசம்—62.

இரு சொற்களால் ஆகிநின்ற எச்சங்களை நீக்கி, ஒரு சொல்லாய் நிற்கும் வினையெச்சங்களைக் கூட்டு:—

1. இதைச் செய்வாயாகில் நலம்பெறுவாய். 2. நம்மைக் கேட்பானாயின் இதைச் சொல்லுவோம். 3. அவன் வருவானாகில் நாம் போவோம். 4. நாளைக்கும் மழை பெய்யுமானால் இவ்வீடு விழுந்துவிடும். 5. அவன் உன் சொல்லைக் கேளானாயின் நீ அவ்வூரில் தங்காதே. 6. நீ கல்வியை விரும்புவாயானால் இளமையில் தேடு. 7. ஒருவன் இப்படிச் செய்வானேல் கெட்டொழிவான். 8. நீ அறத்தைக் கைவிடுவாயாயின் உனக்கு வேறு துணை யேது? 9. நீ பெற்ற நன்றியை மறப்பாயேல் நன்றிகெட்டவனாகுவை. 10. நீ உன் புலன்களை அடக்காயெனின் கேடுறுவாய். 11. அவன் பிழையானாயின் நாம் கெட்டுப்போவோம். 12. இஃது வளராதாயின் வெட்டி எறிவோம். 13. எவனேனும் இதனைப்பகைப்பானாயின் இவனைப் பொறுமைக்கிருப்பிடம் எனல் வேண்டும். 14. ஆற்றில் பெருவெள்ளம் வருமேல் அதில் இறங்காதே.

☞ செய்ய, செய்-வான், செய்யும்பொருட்டு; செய்கிறதற்கு என்னும், காண, காணுவான், காண்-பான், காணும்பொருட்டு, காணுகிறதற்கு பல்வகை ரூபங்களால் **காரியப்பொருள்** உணர்த்தப்படும்.

இவைகளில்,

(1) **வான்,** (2) **பான்,** (3) **அ,** பெற்றுனவை வினையெச்சங்கள்.

☞ செய், ஆடு, அறி, கொல், ஆன், விடு என்னுங் கணங்கள்; "**வான்**" விகுதியைக் கொள்ளும். கல், கேள் என்னும் கணங்கள் "**பான்**" விகுதியைப் பெறும். தின், உண் என்னுங் கணங்கள் உகாரச்சாரியை பெற்று, "**வான்**", விகுதியையும், உகரத்தைப் பெறுமல், "**பான்**" விகுதியையும் பெறும்.

அப்பியாசம்—63.

காரியப்பொருளில் வந்துள்ள சொற்களை அப்பொருளுள்ள விகுதியைக்கொண்ட வினையெச்சங்களாக்கிப் படி:—

1. இலக்கணங் கற்பதற்கு இங்கு வந்தேன். 2. அவனுக் கிதனைச் சொல்லும்படி அங்குப் போனேம். 3. அவரைக் காணும்பொருட்டு அவ்வூரடைந்தோம். 4. அவனது இசையைக்கேட்கும்பொருட்டு இவ்வூர் அடைந்தோம். 5. அதன் உண்மையை உணரும்படி இவை செய்தோம். 6. ஆற்றைக் கடப்பதற்குப் படவைத் தேடினேம். 7. இப்பொருள்களை விற்கும்படி இவ்வூர் எய்தினேம். 8. அத்துன்பத்தைத் துறப்பதற்கு நாங்கள் மிகவும் முயன்றேம்.

53. நூற்று முப்பத்தேழாம் பக்கத்திற் காட்டியுள்ள செய்யவில்லை, ஆடவில்லை முதலானவைகள் சாதாரண வழக்கில் வருபவை. நூல்களில், இறந்தகாலத்திற்கு இறந்த காலக் குறியையும், நிகழ்காலத்திற்கு நிகழ்காலக் குறியை யும், எதிர்மறையைக் குறிக்க, எதிர்மறைக்குறியாகிய "இல்" என்பதையுங் கூட்டி, திணை, இடம், பால், எண்களிற்கேற்ற விகுதிகளை அமைத்து ஆக்கிய ரூபங்கள் வழங்கும்.

செய்.] எதிர்மறைத் தெரிநிலை முக்கால வினைமுற்றுக்கள்.

செய்பவர்.	இறந்தகாலம்	நிகழ்காலம்.	எதிர்காலம்.
நான்	செய்திலேன் செய்திலன்	செய்கின்றிலேன் செய்கின்றிலன்	செய்யேன் ☞
நாங்கள்	செய்திலோம் செய்திலம்	செய்கின்றிலோம் செய்கின்றிலம்	செய்யோம்
நீ	செய்திலாய் செய்திலை	செய்கின்றிலாய் செய்கின்றிலை	செய்யாய்
நீங்கள்	செய்திலீர் செய்திலிர்	செய்கின்றிலீர் செய்கின்றிலிர்	செய்யீர் செய்யீர்கள்
அவன்	செய்திலான் செய்திலன்	செய்கின்றிலான் செய்கின்றிலன்	செய்யான்
அவள்	செய்திலாள் செய்திலள்	செய்கின்றிலாள் செய்கின்றிலள்	செய்யாள்
அவர்கள்	செய்திலார் செப்திலர் செய்திலர்கள்	செய்கின்றிலார் செய்கின்றிலர் செய்கின்றிலர்கள்	செய்யார் செய்யார்—கள்
அது	செய்தின்றி செயதிலது	செய்கின்றிலது	செய்யாது
அவைகள்	செய்தில்	செய்கின்றில	செய்யா

☞ எதிர்காலத்திற்குக் காலக்குறி கூட்டுவதில்லை.

பன்னிரு கணப் பகுதிகளினின்றும் எதிர்மறைத் *தெரிநிலை முக்கால வினைமுற்றுக்கள் வருமாறு

கணங்கள்.	மாதிரிப் பகுதிகள்.	எதிர்மறைத் தெரிநிலைத் தன்மையொருமை இறந்தகால வினைமுற்றுக்கள்.	எதிர்மறைத் தெரிநிலைத் தன்மையொருமை நிகழ்கால வினைமுற்றுக்கள்.	எதிர்மறைத் தெரிநிலைத் தன்மையொருமை எதிர்கால வினைமுற்றுக்கள்.
1	செய்	செய்திலேன்	செய்கின்றிலேன்	செய்யேன்
2	ஆடு	ஆடிலேன்.	ஆடுகின்றிலேன்	ஆடேன்
3	அறி	அறிந்திலேன்	அறிகின்றிலேன்	அறியேன்
4	கொல்	கொன்றிலேன்	கொல்கின்றிலேன்	கொல்லேன்
5	கல்	கற்றிலேன்	கற்கின்றிலேன்	{ கல்லேன் கற்கேன்
6	தின்	தின்றிலேன்	தின்கின்றிலேன்	தின்னேன்
7	உண்	உண்டிலேன்	உண்கின்றிலேன்	உண்ணேன்
8	ஆள்	ஆண்டிலேன்	ஆள்கின்றிலேன்	ஆளேன்
9	கேள்	கேட்டிலேன்	கேட்கின்றிலேன்	{ கேளேன் கேட்கேன்
10	விடு	விட்டிலேன்	விடுகின்றிலேன்	விடேன்
11	படி	படித்திலேன்	படிக்கின்றிலேன்	{ படியேன் படிக்கேன்
12	இரு	இருந்திலேன்	இருக்கின்றிலேன்	{ இரேன் இருக்கேன்

விசேஷக்குறிப்புகள்:—(1) இரண்டாங் கணத்துப் பகுதிகளிலிருந்து எதிர்மறை இறந்தகால வினைமுற்றுக்கள் பிறப்பிக்கையில், இறந்தகாலக் குறியாகிய "இன்" கூட்டுவதில்லை. (உ-ம்.) ஆடிலன்.

(2) கல், கேள், படி, இரு என்னுங் கணத்தனவாகிய வல்லியற் பகுதிகட்கு எதிர்மறை விகுதியாகிய "ஆ" கூட்டுகையில் "கு"ச் சாரியை கூட்டலும் கூட்டாமையுமாம்.

(3) வேறு சில பகுதிகளிற்கும், ஆ—ஆவேன்—ஆகேன்; போ—போவேன்—போகேன்; வே—வேவேன்—வேகேன்; நோ—நோவேன்—நோகேன்; சா—சாவேன்—சாகேன்எனக்"கு"ச் சாரியை கூட்டலுங் கூட்டாமையுமாம்.

*இது காலக்குறி பெற்றுவருவது தெரிநிலைவினைஎனப்படும்.

அப்பியாசம்—64.

இரு சொற்களாய் நின்ற வினைமுற்றை ஒரு சொல்லாக்கிப் படி:—

மாதிரி:—"நான் இதை இதற்குமுன் காணவில்லை" என்பதை;
"நான் இதை இதற்குமுன் **கண்டிலேன்**" என்று மாற்றல்.

1. அதனை யான் செய்யவில்லை. 2. அவன் எங்களுக்கு உண்மையைக் கூறவில்லை. 3. ஏன் என் பசுக்கள் இன்னும் வரவில்லை? 4. அவன் என்னை என்றும் பிரியவில்லை. 5. அவை எங்களுக்கு விளங்கவில்லையே! 6. இத்துறவி உட்பகையை வெல்லவில்லை. 7. அவன் இப்போது பள்ளிக்குச் செல்லவில்லை. 8. நான் இளமையில் வருந்திக் கற்கவில்லை. 9. பசுக்கள் இப்புல்லை ஏனோ தின்னவில்லை. 10. புலிகள் புல்லை ஒருபோதும் தின்னுவதில்லை. 11. அவர்கள் என் மொழியைக் கேட்கவில்லை. 12. நல்லோர்கள் தீயோருடன் நட்பதில்லை. 13. அவன் அந்நகையை மீட்கவில்லை. 14. அவன் வறுமையிலும் கொடையை விடவில்லை. 15. எவருமே இதனால் நன்மை பெறவில்லை. 16. எவரும் அதுபோன்ற நூலை வெளியிடவில்லை. 17. நீர் எந்தப் பாடங்களைப் படிக்கவில்லை? 18. அவன் கடவுளை ஒருபோதும் மறக்கவில்லை. 19. எதுவும் அதன் காலத்தில் அல்லாமல் பழுப்பதில்லை. 20. நீ ஒரு நாளும் எங்களுக்கு இக்கதவைத் திறக்கவில்லை. 21. நீ வரவில்லை.

54. நூல்களில் வழங்கும் முன்னிலை ஏவல் வினைமுற்று:-

உடன்பாட்டு

ஏவலொருமை:—	ஏவற்பன்மை:—
செய்	செய்யும்
செய்யாய்	செய்யுங்கள்
	செய்யீர்
	செய்மின்
	செய்மின்கள்

எதிர்மறை

ஏவலொருமை:—	ஏவற்பன்மை:—
செய்யேல்	செய்யாதேயும்
செய்யாதே	செய்யாதையுங்கள்
செய்யாதை	செய்யன்மின்
	செய்யன்மின்கள்

☞ "ஒட்டும்" பெற்று வருவன முன்னிலையல்லாத இடங்களின் ஏவல் வினைகளாம்.

55. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக்கும் வகைகள் மூன்று.

1. முதல் வகை:—

செய்வினைப் பகுதிக்கு "அ-ப்-படு" என்பவற்றைக் கூட்டல்:—

கணம்	செய்வினைப் பகுதிகள்.	சாரியை அ.	இரட்டிய ப்	செயப்பாட்டு வினை விகுதி. படு	செயப்பாட்டு வினைப்பகுதிகள்.
1	செய்	அ	ப்	படு	செய்யப்படு
2	ஆடு	,,	,,	,,	ஆடப்படு
3	அறி	,,	,,	,,	அறியப்படு
4	கொல்	,,	,,	,,	கொல்லப்படு
6	தின்	,,	,,	,,	தின்னப்படு
7	உண்	,,	,,	,,	உண்ணப்படு
8	ஆள்	,,	,,	,,	ஆளப்படு
10	விடு	,,	,,	,,	விடப்படு

II. இரண்டாம் வகை.—

செய்வினைப் பகுதிக்கு "து-அ-ப்-படு" என்பவற்றைக் கூட்டல்:—

கணம்	செய்வினைப் பகுதிகள்.	சாரியை த	சாரியை அ	இரட்டிய ப்	செயப்பாட்டு வினைவிகுதி.	செயப்பாட்டு வினைப்பகுதிகள்.
	கல்	கு	அ	ப்	படு	கற்கப்படு
9	கேள்	,,	,,	,,	,,	கேட்கப்படு
11	படி	,,	,,	,,	,,	படிக்கப்படு
12	திற	,,	,,	,,	,,	திறக்கப்படு

III. மூன்றும் வகை:—

பெயர்ச்சொற்களின் உருவம் பெற்று நிற்கின்ற சில பகுதிகளுக்கு "உண்" என்னுஞ் செயப்பாட்டுவினை விகுதியைக் கூட்டல்:—

அடி —அடி + உண் = அடியுண்
கட்டு—கட்டு + உண் = கட்டுண்
எறி — எறி + உண் = எறியுண்

இடி — இடி + உண் = இடியுண்
வெட்டு-வெட்டு + உண் = வெட்டுண்
முறி — முறி + உண் = முறியுண்

☞ என்பார் என்பதிற்போற் சிறபான்மை "படு" தன் சாரியையோடுங் கெடும். செயப்படுபொருள் குன்றிய செய்விணைப் பகுதிகள், செயப்பாட்டு விணைப் பகுதிகளாவதில்லை.

செய்வினை கொண்ட வாக்கியத்தைச் செயப்பாட்டுவினை கொண்ட வாக்கியமாக மாற்றும் வகைகள்.

(1) முதல் வேற்றுமையில் நிற்கின்ற எழுவாய்க்கு மூன்றும் வேற்றுமையின் "ஆல்" கூட்டி, (2) இரண்டாம் வேற்றுமையில் நிற்கின்ற, செயப்படு பொருளை முதல் வேற்றுமையில் நிற்கச்செய்து (3) செயப்பாட்டு வினைப்பகுதியிற் பிறந்த வினைமுற்றைக் கூட்டல்.

மாதிரி:– I. "நாங்கள் இப்புலியைக் கொன்றேம்" என்பதை.
"இப்புலி எங்களால் கொல்லப்பட்டது" என்று மாற்றல்.

மாதிரி:– II. "அவர்எங்களுக்குஇலக்கணத்தைக்கற்பித்தார்" என்பதை
(*a*) "அவரால் நாங்கள் இலக்கணங் கற்பிக்கப்பட்டோம்" என்றுவது.
(*b*) "இலக்கணம் எங்களுக்கு அவரால்கற்பிக்கப்பட்டது" என்றுவது மாற்றல்,

மாதிரி:—III. "அவர் எங்களைப் பணம் கேட்டார்" என்பதை.
(*a*) "அவரால் நாங்கள் பணங் கேட்கப்பட்டோம்" என்றுவது.
(*b*) "அவரால் எங்களிடம் பணம் கேட்கப்பட்டது" என்றுவது மாற்றல்.

மாதிரி:—IV. "நான் இதைச் செய்வேனாக" என்பதை
"இது என்னாற் செய்யப்படுவதாக" என்று மாற்றல்.

மாதிரி:—V. "நீ இக்கதையைக் கேள்" என்பதை
"இக்கதை உன்னால் கேட்கப்படட்டும்*" என்று மாற்றல்.

மாதிரி:—VI. "நீ இந்நீதியை மறவாதே" என்பதை
"இந்நீதி உன்னால் மறக்கப்படா திருக்கட்டும்*" என்று மாற்றல்.

☞ *இதே ரூபம், ஒருமைக்கும் பன்மைக்கும் வரும். ☜

அப்பியாசம்—65.

செய்வினை கொண்ட வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை கொண்ட வாக்கியங்களாக மாற்றி யெழுது.

1. இக்குதிரையை எவன் விற்றான்? 2. எல்லாவற்றையுங் கடவுள் படைத்தார், 3. இச்சிறு பறவைகள் அக்கூட்டை அமைத்தன. 4. இதை என் தம்பி எழுதினான். 5. புலி ஒரு காலத்திலும் புல்லை மேயாது. 6. பாலாற்று வெள்ளம் வாணியம்பாடியை அழித்தது. 7. அவன் எங்களைப் பார்க்கவில்லை. 8. கொடுங்கோன் மன்னர் குடிகளை வருத்தினர். 9. வறுமை பெருமையை யொழிக்கின்றது. 10. அந்நாய் திருடரைத் தொடரும்.

11. அவர் பல அற்புதங்களைச் செய்தார், 12. யான் இந்நூல்களைத் திருத்தினேன். 13. காளிதாசன் இந்நாடகங்களை இயற்றினான். 14. திருடர் அவனை ஒரு மரத்திற் பிணித்தனர். 15. இராமாயணத்தைத் தமிழில் கம்பன் பாடினான். 16. காற்று இம்மரங்களைத் தள்ளியது. 17. அவர் நமக்கு இவற்றை அருளினார். 18. நீ இதை எளிதில் கற்பாய். 19. இராஜன் அப்பண்டிதர்களுக்குப் பரிசு அளித்தனன். 20. அவர் எங்களுக்குப் பலகதைகள் கூறினார். 21. தீயோர் நல்லோர்க்குங் கேடுசெய்வர். 22. இந்நீதியை நாரதர் தருமனுக்குக் கூறினர். 23. இவ்விரகஸியத்தை வீமனுக்குத் தருமன் தெரிவித்தான். 24. எனக்கு இதனைத்தந்தாய். 25. அவன் அரிசியைச் சோறு சமைத்தான். 26. கௌசிகன் அரிச்சந்திரனைப் பொன் யாசித்தான். 27. நீ இப்பசுவைப் பால் கறந்தாயா? 28. நீ என்னை இவை கேட்டாய். 29. நீ எங்களை ஒரு வினா வினவினாய். 30. உன் பலகையை எடுத்துக்கொள். 31. நீங்கள் எட்டாம் பாடத்தைப் படியுங்கள். 32. அக்கதையைச் சொல்லுங்கள். 33. இச்சுவரை நீங்கள் இடித்துத் தள்ளுங்கள். 34. இம்மாலைகளைக் கடைத்தெருவிற்குக் கொண்டுபோங்கள். 35. எப்பொழுதும் உண்மையையே பேசுங்கள். 36. புகழைப் பொன்னாய்ப் போற்றுங்கள். 37. பெரியோர் சொல்லைக் கேளும். 38. இம்மொழிகளை யுங்கள் உள்ளத்தில் வையுங்கள். 39. நீ இக்கதவைத் திற. 40. பிறர் செய்த தீமைகளை மறவுங்கள். 41. சிறுவர்களைத் தீயவழியிற் செலுத்தாதேயுங்கள். 42. ஒருவரையுந் திட்டாதே. 43. நீ உன் பெற்றோர் சொல்லை யசட்டைசெய்யாதே. 44. தீங்கற்ற பிராணிகளை யொருபோதுங் கொல்லாதே. 45. அவர் உதவியை ஒருபோதும் மறவாதே. 46. இதனை யெளிதா யெண்ணாதே. 47. இவைகளை இங்கே வைப்போமாக. 48. நீ யிது படி.

56. தன்வினைகளும், பிறவினைகளும்.

1. "ஜானகி **அழுகிறாள்**"

2. "சீதை தன் தங்கையை **அழப்பண்ணுகிறாள்.**"

என்கிற இரண்டு வாக்கியங்களிலுமுள்ள வினைமுற்றுக்களையும் உற்றுப் பார்த்தால், "அழுகிறாள்" என்பது, தான் செய்கிற காரியத்தையும், அழப்பண்ணுகிறாள்" என்பது, பிறரைச் செய்யச் செய்கிற காரியத்தையும், குறிக்கின்றன என்பீர்கள்.

இவ்வாறு.

தானே செய்கிற செயலைக் குறிக்கும் வினை **தன்வினை** என்றும்,	பிறரைச்செய்யச்செய்கிறசெயலைக் குறிக்கும் வினை **பிறவினை** என்றும்,

நாம் அறிந்துகொள்ளல் வேண்டும்.

தன்வினைகளைப் பிறவினைகளாக்கும் வகைகள் பல இருக்கின்றன.

அவைகளில்,

1. முதல் வகை:—தன்வினைப் பகுதியிற் பிறந்த நிகழ்கால வினையெச்சத்திற்கு, செய், அடி, பண், வை என்னும் பகுதிகளைக் கூட்டி, இரண்டையும் ஒரு சொல்லாக்கல்.

நீ வந்தாய்.	————	நீ என்னை வரச்செய்தாய்.
நீ ஓடினாய்.	————	நீ என்னை ஓடடித்தாய்.
நீ நின்றாய்.	————	நீ வண்டியை நிற்கப்பண்ணினாய்.
நீ அழுகிறாய்.	————	நீ அவனை அழவைக்கிறாய்.

☞ தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவான ரூபங்களை, வெளு, பிள, மலர், பொழி, பெய் முதலான சில பகுதிகள் பெறும்.

	தன்வினை.	பிறவினை.
வெளு	—இத்துணி நன்றாய் வெளுத்தது.	இவ்யந்திரம் இத்துணிகளை வெளுத்தது.
பிள	—அத்தூண் இரண்டாய் பிளந்தது.	இக்கோடரி அதைப் பிளந்தது,
மலர்	—அவன் முகம் மலர்ந்தது.	அவன் தன்வாய் மலர்ந்தான்.
பொழி	—மழை ஒழியாமல் பொழிந்தது.	அவன் கை சரமாரி பொழிந்தது.
பெய்	—நேற்றிரவும் மழை பெய்தது.	அப்பெண் எண்ணெயைப் பெய்தது.

II. இரண்டாம் வகை:—தன்வினைப் பகுதிகளுக்கு, வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் பிறவினை விகுதிகளில் ஏற்ற ஒன்றைக் கூட்டல்.

வி—	செய்	—செய்வி
	உழு	—உழுவி
	அறி	—அறிவி
	தா	—தருவி
	தெரி	—தெரிவி
பி—	காண்	—காண்பி
	கல்	—கற்பி
	தோல்	—தோற்பி
	படி	—படிப்பி
	நட	—நடப்பி
கு—	போ	—போக்கு
	ஆ	—ஆக்கு
சு—	காய்	—காய்ச்சு
	பாய்	—பாய்ச்சு
டு—	உண்	—ஊட்டு
	காண்	—காட்டு
	புரள்	—புரட்டு
	பூண்	—பூட்டு
	நீள்	—நீட்டு
து—	நட	—நடத்து
	கிட	—கிடத்து
	இரு	—இருத்து
	படு	—படுத்து
பு—	பர	—பரப்பு
	எழு	—எழுப்பு
று—	அகல்	—அகற்று
	துயில்	—துயிற்று
	சுழல்	—சுழற்று

III மூன்றாம் வகை:—தன்வினைப் பகுதியில் இருக்கின்ற மெல்லின மெய்யை, அதன் இனமான வல்லின மெய் யாக்கல்.

தன்வினைப் பகுதிகள்.	பிறவினைப் பகுதிகள்.	உதாரணங்கள்.
1 அடங்கு	——அடக்கு:	அவர் இக்கலகத்தைஎவ்வாறு அடக்குவார்?
இறங்கு	——இறக்கு:	அவர் தலைச்சுமையைக் கீழே இறக்கினார்.
ஒடுங்கு	——ஒடுக்கு:	காய்ச்சல் என் சரீரத்தை ஒடுக்குகின்றது.
நடுங்கு	——நடுக்கு:	குளிர் எங்களை மிகவும் நடுக்குகின்றது.
5 நீங்கு	——நீக்கு:	இவனை உங்கள் சபையிலிருந்து நீக்குங்கள்.
நெருங்கு	——நெருக்கு:	இந்தக்காப்பை இன்னுஞ்சிறிது நெருக்கும்.
மடங்கு	——மடக்கு:	இந்தக் கையை மடக்குகிறது கஷ்டம்.
விளங்கு	——விளக்கு:	அவர் எங்களுக்கு நன்னூலை விளக்குகிறார்.
முழங்கு	——முழக்கு:	பலவகை வாத்தியங்களை முழக்கினார்கள்.
10 கொளுந்து	---கொளுத்து:	விளக்குக் கொளுத்துகிறேனே ஐயா;
திருந்து	——திருத்து:	இப்பண்டிதர் அந்நூலைத் திருத்துகின்றார்.
வருந்து	——வருத்து:	உன் வேலைக்காரர்களை இப்படி வருத்தாதே.
எழும்பு	——எழுப்பு:	பள்ளத்திலிருந்து கல்லை எழுப்புகிறார்கள்.
குழம்பு	——குழப்பு:	உன் மொழிகள் என் மனதைக் குழப்பின.
15 நிரம்பு	——நிரப்பு:	இம்மழையே ஏரி குளங்களை நிரப்பும்.

IV. நான்காம் வகை:—தன்வினைப் பகுதிகளினீற்றில் உள்ள வல்லின மெய்யை யிரட்டல்.

தன்வினைப் பகுதிகள்.	பிறவினைப் பகுதிகள்.	உதாரணங்கள்:
1 உருகு	——உருக்கு:	இருந்த வெண்ணெயை உருக்கினோம்.
சிறுகு	——சிறுக்கு:	ஏன் அவரைச் சிறுக்குகின்றீர்கள்?
பழகு	——பழக்கு:	உன் பிள்ளைகளை நல்லவழியிற் பழக்கு.
விலகு	——விலக்கு:	இவைகளை இவ்வழியைவிட்டு விலக்கு.
5 ஆடு	——ஆட்டு:	பேராசை இவனை இப்படி ஆட்டுகின்றது.
ஒடு	——ஒட்டு:	இம்மாடுகளைக் கிழக்கே ஒட்டுங்கள்.
வாடு	——வாட்டு:	சிந்தை எவர் மனத்தையும் வாட்டும்.
ஆறு	——ஆற்று:	வெந்நீரை எடுத்து ஆற்றுகின்றோம்.
ஏறு	——ஏற்று:	இம்மூட்டைகளை எவ்வண்டியில் ஏற்றுவீர்?
10 மாறு	——மாற்று:	மழை யாத்திரைக்காலத்தை மாற்றினது.

V. ஐந்தாம் வகை:—மெல்லியற் பகுதிகளுக்கு *வல்லியற் பகுதிகளின் காலக்குறிகளைக் கூட்டல்.

	தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவான பகுதிகள்.	தன்வினை நுபங்கள்.	பிறவினை நுபங்கள்.
1	அசை	நீ மிகவும் மெல்ல அசைந்தாய்.	நீ என் கையை அசைத்தாய்.
	அவி	விளக்குக் காற்றில் அவிந்தது.	ஏன் விளக்கை அவித்தீர் ?
	அவிழ்	நீ போட்ட முடி அவிழ்ந்தது.	நீமூட்டையை அவிழ்த்தாய்.
	அழி	நீ அடக்கமின்றி அழிந்தாய்.	ராமர் ராக்ஷஸரை அழித்தார்.
5	இடி	அம்மரத்தாலிச்சுவர் இடிந்தது.	நான் அவ்வீட்டை இடித்தேன்.
	உடை	இது என்று உடைந்தது ?	நீ ஏன் இதை உடைத்தாய்?
	உதிர்	காற்றில் மாங்கனி உதிர்ந்தது.	காற்று இக்கனிகளை யுதிர்த்தது.
	எரி	விளக்கு நன்றாய் எரிகின்றது.	தீ காட்டைஎரிக்கின்றது.
	ஒழி	உன் நாட்கள் ஒழிந்தன.	நீ உன் பகைவரை ஒழித்தாய்.
10	ஒளி	நீ எங்கே ஒளிந்தாய்.	நீ உண்மையை ஒளித்தாய்.
	கரை	நீ காய்ச்சலால் கரைந்தாய்.	என் மனக்கல்லைக் கரைத்தாய்.
	கலை	இராஜன் கொலுக் கலைந்தது.	நீ எங்கள் நட்பைக் கலைத்தாய்.
	கழி	என் காலம் இப்படிக் கழிந்தது.	ஐவர் கடுங்காலம் கழித்தனர்.
	கிழி	என் வேட்டி கிழிகின்றது.	இவ்வாணி அதனைக்கிழிக்கிறது
15	குவி	வட்டி குன்றாய்க் குவிந்தது.	நீர் குப்பையைக் குவித்தீர்.
	கெடு	நீ படியாமல் கெட்டாய்.	நீ எங்கள்பேரைக் கெடுத்தாய்.
	சாய்	நீ ஏன் இதன்மேற் சாய்ந்தாய் ?	நீ அம்மரத்தைச் சாய்த்தாய்.
	சேர்	நான் நேற்று இவ்வூர்சேர்ந்தேன்.	நான் இவர்களைச் சேர்த்தேன்
	தேய்	நீ ஏனிப்படித் தேய்ந்தாய் ?	நீ இக்காப்பைத் தேய்த்தாய்.
20	நிறை	ஏரிகுளங்கள் நிறைந்தன.	தன் பெட்டியை நிறைத்தான்
	பிரி	நீ அவர்களை எங்குப் பிரிந்தாய்.	நீ அந்நண்பர்களைப் பிரித்தாய்.
	பெயர்	அம்மரம் வேரோடு பெயர்ந்தது.	நீ இச்செடிகளைப் பெயர்த்தாய்.
	புதை	கால்கள் சேற்றில் புதைந்தன.	பொன்னைத்தரையில்புதைத்தீர்
	முடி	அவன் காரியம் முடிந்தது.	என் காரியங்களை முடித்தாய்.
25	முறி	இதனால் என் மனம் முறிந்தது.	விதுரன் தன்வில்லைமுறித்தான்.
	மேய்	என் பசு எங்கே மேய்ந்தது?	என் பசுவைஎங்கேமேய்த்தாய்.
	வளர்	நீர் வளர்பிறையில் வளர்ந்தாய்.	நீ இந்த நாயை வளர்த்தாய்.
	வளை	இவ்வாறு இங்கு வளைகிறது.	அவன் தன் வில்லை வளைத்தான்.
	விரி	அந்நூல் மிகவும் விரிந்தது.	எவன் தன் கையை விரித்தான்?
30	விளை	இதனால் நன்மைகள் விளைந்தன.	அவன் நன்மையே விளைத்தான்.

☞ * கிறு, கின்று என்பவைகளுக்குமுன், ற், ட், க் என்னும் மெய்யெழுத்துக்கள் நிற்கப்பெறும். கல், கேள், படி, இரு என்னுங்கணத்துப் பகுதிகளும் வேறு சிலவும் "வல்லியற் பகுதிகள்" என்றும், மற்றவை மேல்லியற் பகுதிகள்" என்றும் யாம் கொண்டனம் என்றறிக.

அப்பியாசம்—66.

செய், அடி, பண், பை என்பவற்றல் உணர்த்தப்படும் பிறவினைப்பொருளை வேறு வகைகளால் உணர்த்து.

1. அவனை யேன் இங்கு இப்போதே வரச்செய்தாய்? 2. இச்சிறுவனைத் துயிலச் செய்யப்போ. 3. கைகேயி இராமனைக் காட்டுக்குப் போகச் செய்தாள். 4. மனநோய் ஆயுளைக் குறையச் செய்யும். 5. பேராசை பெருந்துன்பம் விளையச் செய்யும். 6. அவர்களை எந்த வண்டியில் ஏறச் செய்தாய்? 7. இம்மழை நம் முயற்சியை வீணுகச் செய்தது. 8. மனக் கவலை நித்திரையை யொழியச்செய்துவிட்டது. 9. அவன் அவரை ஒரு பொற்பீடத்தில் இருக்கச் செய்தான். 10. கலி நளனது குணங்களை மாறச் செய்தது. 11. இம்மொழி அவன் சினத்தீயை மூளச் செய்தது. 12. நான் வருமுன் பாலை ஆறவைக்காதே. 13. இச்செய்யுள் கல்லான நெஞ்சையும் கரையச் செய்யும். 14. இக்குருட்டுவழியில் உன் மக்களைச் செல்லச்செய்யாதே. 15. உட்பகைகளை ஒழியச்செய்துகொண்டவனே ஞானி. 16. அம்முனி அவ்வேந்தனைப் பலவாறு வருந்தச் செய்தனனும். 17. குழந்தையைச் சிறிது தேறப்பண்ணிப் பின்பு அனுப்பும். 18. சிறுவரை இளமையிலேயே நல்வழியில் பழக்கச் செய்யுங்கள். 19. புயற்காற்றுக் கப்பல்களைக் கவிழச்செய்யும். 20. இது நம்மை என்ன உணரச் செய்கின்றது. 21. அவன் எங்களை அதைக் காணச்செய்தான். 22. நீங்கள் உங்கள் காலத்தை வீணுய்க் கழியச் செய்கிறீர்கள். 23. அவன் எங்களைத் தன் நாட்டினின்றும்அகலச் செய்தான். 24. அதை அப்படிச்சுழலப்பண்ணுதே. 25. அவ்வுண்மையை எங்களுக்குப் புலப்படச் செய்யும். 26. அவர்களை அவ்வூரில் எட்டுமணிக்குச் சேரச்செய்தோம். 27. தாகம் என் நாவை வறளச் செய்கின்றது. 28. அவன் மொழி வீரர் மனத்தையுங் கலங்கப்பண்ணினது. 29. இக்கல்லை இன்னும் ஓர் அடி கிளம்பச் செய்யுங்கள். 30. இம்மரத்துக் காய்களைப் பறிக்கச்செய்தவனெங்கே? 31. அரசன் அக்குழந்தையை இரண்டாய்த் துணிக்கச் செய்தான். 32. நோய்கள் நம்முயிரை உடலினின்றும் பிரியச் செய்கின்றன. 33. புடவையைக் கொளுத்தச் செய்தாய்.

அப்பியாசம்—67.

கீழே காட்டியபடி பலகையை வகுத்துக்கொண்டு "வி" முதலான பிறவினை விகுதிகளைப்பெற்றுப் பிறவினையாகும் பகுதிகள் பல எழுது.

வி.	பி.	கு.	சு	டு.	து	பு.	று.

☞ மேலே காட்டிய வகைகளிற் பிறவினைப் பகுதிகளானவைகளில், வி-பி பெற்று நின்றவை, பதினேன்றுங் கணத்திலும், கு-சு-டு-து-பு-று பெற்று நின்றவைகளும், அடங்கு-அடக்கு, உருகு-உருக்கு என மாறிய வைகளும் இரண்டாங் கணத்திலும் அடங்கும்.

57. வினையாலணைந்த பெயர்கள்.

1. ஐயா! நேற்று உம்மைக் காண வந்தார், இதோ வந்தார்.
2. மண்ணிற் பிறந்தார் வினை தீர்க்க, கடவுள் மண்ணிற் பிறந்தார்.
3. அங்கு இருக்கின்றார் குணம் கண்டு, அவர் அங்கு இருக்கின்றார்.
4. காசியிலிருந்து வருவார் துணைகொண்டு, அவரிங்கு வருவார்.
5. அத்தியோனுக்குக் நேரிட்டது, அவன் நண்பருக்கும் நேரிட்டது.
6. பெற்றோர்க்குக் கீழ்ப்படியான், மற்றோர்க்குங் கீழ்ப்படியான்.

இந்த ஆறு வாக்கியங்களிலும், உருவத்திலும், ஒலியிலும், சிறிதும் வேறுபடாத சொற்கள் இவ்விரண்டு இருக்கின்றன.

அவை,	1. வந்தார்,	1. இருக்கின்றார்,	1. நேரிட்டது,
	2. வந்தார்,	2. இருக்கின்றார்,	2. நேரிட்டது,
	1. பிறந்தார்,	1. வருவார்,	1. கீழ்ப்படியான்,
	2. பிறந்தார்,	2. வருவார்,	2. கீழ்ப்படியான்.

இவைகளை உற்று நோக்கின்,

முதல் வந்தார்—பெயர்ச்சொல்லின் தன்மையைப் பெற்று நிற்கின்றது; இரண்டாம் வந்தார் — வினைமுற்றாகவே நிற்கின் றது என்று கூறுவீர்கள்.

இவ்வாறே, பெயர்ச்சொல்லாய் நிற்கின்ற பிறந்தார், இருக் கின்றார் முதலான சொற்கள், வினைமுற்றாய் நிற்கின்ற பிறந்தார், இருக்கின்றார் முதலான சொற்களைப்போல், பிற, இரு முதலான பகுதிகளில் பிறந்து, காலம் முதலானவற்றைக் காட்டுவதோடு, பெயர்ச்சொல்லிற்கே உரிய வேற்றுமையையும் பெற்றுவந்தன.

இப்படியே,

திணை, இடம். பால், எண்களோடு, காலமும், வேற்று மையும் பெற்று, வினைச்சொல், பெயர்ச்சொல் ஆகிய இரு வகைச் சொற்களின் தன்மையையுங் கொண்டசொல், தெரிநிலை வினையாலணைந்த பெயர் எனப்படும்.

மேலே காட்டிய தெரிநிலை வினையாலணைந்த பெயர்கள். (1) உடன்பாட்டுத் தெரிநிலை வினையாலணைந்த பெயர்கள், (2) எதிர்மறைத் தெரிநிலை வினையாலணைந்த பெயர்கள், என இரு பெரும் பிரிவுகளைப் பெற்றுவரும்.

அன்றியும், அவை, வினைமுற்றுக்களைப்போல் (1) திணை (2) இடம் (3) பால் (4) எண் (5) காலம் என்பவற்றின் வேறுபாட்டினால் பல உட்பிரிவுகளையுங் கொள்ளும்.

1. உடன்பாட்டுத்தெரிநிலைவினையாலணைந்தபெயர்கள்ஆக்குமாறு.

திணை, இடம், பால், எண்.	இறந்தகால வினையாலணைந்த பெயர்.	நிகழ்கால வினையாலணைந்த பெயர்.	எதிர்கால வினையாலணைந்த பெயர்.
தன்மை யொருமை ...	செய்தேன்	செய்கின்றேன்	செய்வேன்
தன்மைப் பன்மை ...	செய்தேம் செய்தோம்	செய்கின்றேம் செய்கின்றோம்	செய்வேம் செய்வோம்
முன்னிலை யொருமை ...	செய்தாய்	செய்கின்றாய்	செய்வாய்
முன்னிலைப் பன்மை ...	செய்தீர்கள்	செய்கின்றீர்கள்	செய்வீர்கள்
படர்க்கையாண்பாலொருமை ...	செய்தான் செய்தோன் செய்தவன்	செய்கின்றான் செய்கின்றோன் செய்கின்றவன்	செய்வான் செய்வோன் செய்பவன்
படர்க்கைப் பெண்பாலொருமை ...	செய்தாள் செய்தோள் செய்தவள்	செய்கிறாள் செய்கின்றோள் செய்கின்றவள்	செய்வாள் செய்வோள் செய்பவள்
படர்க்கையிருபாற்பன்மை ...	செய்தார் செய்தோர் செய்தவர் செய்தவர்கள்	செய்கின்றார் செய்கின்றோர் செய்கின்றவர் செய்கின்றவர்கள்	செய்வார் செய்வோர் செய்பவர் செய்பவர்கள்
அஃறிணை யொருமை	செய்தது	செய்கின்றது	செய்வது
அஃறிணைப் பன்மை	செய்த செய்தன செய்தவை செய்தவைகள்	செய்கின்ற செய்கின்றன செய்கின்றவை செய்கின்றவைகள்	செய்வ செய்ப செய்பவை செய்பவைகள்

அம்பலத்து ஆடி, சேர்ந்தார்க் கொல்லி, சுமை தாங்கி, வெண்ணெய் வெட்டி என்பவற்றில், ஆடி, கொல்லி, தாங்கி, வெட்டி என்பவை போல வரும் வினையாலணைந்த பெயர்களும் சிலவுள.

செய்+ப்+அ+வ்+அன் (செய்பவன்) என்னும் உறுப்புக்களில் "ப்" எதிர்காலக்குறி. "வ்" உடன்படுமெய். அன், அள், அர், அர்-கள், வை, வை கள் என்னும் பெயர் விகுதிகள், எக்கணத்திலும் பெறும் எதிர்காலக்குறி "ப்" என்றறிக. அஃறிணைப்பன்மை "அ" இருவகையுமாம்.

பிறகணத்துப் பகுதிகளுக்கும் மேலாக்கிய நுபங்கள் கூறப் பழகுக.

அப்பியாசம்—68.

கீழ்வரும் வினையாலணைந்த பெயருக்கு வேறு நுபங்கள் கூறு.

1. அவர் தஞ் செய்கை கண்டார் களிக்கக் கண்டார். 2. என்னைப் பெற்றாள் என்னால் துன்பமே பெற்றாள். 3. இளமையில் கற்பான் எளிதினில் கற்பான். 4. என்னை வளர்த்தார் என் மக்களையும் வளர்த்தார். 5. நீ அவனுக்குத் தந்தன அவனுக்குத் துன்பந் தந்தன. 6. தபோவனத்திருப்பார் தேவ த்யானத்தில் இருப்பார். 7. உன்னைத் தொடர்ந்தவை என்னையும் தொடர்ந்தன. 8. இராவணனை அழித்தது கீசகனையும் அழித்தது. 9. இளமையில் நன்னடை பெற்றார் என்றுமே நன்னடை பெற்றார் ஆகுவர். 10. அதோவருகின்றான் நமமைப் பார்க்க வருகின்றான். 11. இதோ வருகின்றேன் என்று போனான் வாராமலே போனான். 12. முன் கற்றாரை நாடினேன் இன்று கல்லாரை நாடுகின்றேன். 13. வருவ வருவவே யாம். 14. தீயோர் சொல்வன வேறு; அவர்கள் செய்வனவும் வேறு. 15. நீ கற்றவை எவை?

2. எதிர்மறைத் தெரிநிலை வினையாலணைந்த பெயர்கள்.

எதிர்மறைத் தெரிநிலை வினையாலணைந்த பெயர்களும், எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றுக்களைப்போல், முக்காலங்களிலும் வரும். இவைகளில், எதிர்மறைத் தெரிநிலை இறந்தகால வினையாலணைந்த பெயர்களும், நிகழ்கால வினையாலணைந்த பெயர்களும், காலக்குறிகளோடு, எதிர்மறைக்குறியாகிய "இல்" பெற்று, திணை, இடம், பால், எண்களிற்குரிய விகுதிகளைக்கொண்டு முடியும்.

விசேஷக் குறிப்புகள்.—1. எதிர்மறைத் தெரிநிலை எதிர்கால வினையாலணைந்த பெயர்கள், எதிர்காலக்குறியைப் பெறுவதில்லை. 2. எதிர்மறை எதிர்கால வினைமுற்றுக்களில் எதிர்மறைக் குறியாகிய "ஆ" "ஏன்" முதல் "ஆர்" வரையிலும் புணர்ந்து கெடும். எதிர்மறைத் தெரிநிலை எதிர்கால வினையாலணைந்த பெயர்களில், எதிர்மறைக் குறியாகிய "ஆ" கெடுவதும், "த்" பெற்றவிடத்து, கெடாது நிற்பதும் ஆகும். முதலிருகாலங்களிலுந் தகர மெய்யோடு வரும் "ஆ" எதிர்மறைக் குறியன்று; சாரியை. 3. உலக வழக்கில், எதிர்மறை எதிர்கால வினையாலணைந்த பெயர்களே மற்றிருகாலங்களிற்கும் வரும்.

எதிர்மறைத் தெரிநிலை முக்கால வினையாலணைந்த பெயர்கள் வருமாறு.

திணை, இடம், பால், எண்.	எதிர்மறை தெரிநிலை இறந்தகால வினையாலணைந்த பெயர்.	எதிர்மறைத் தெரிநிலை நிகழ்கால வினையாலணைந்த பெயர்.	எதிர்மறைத் தெரிநிலை எதிர்கால வினையாலணைந்த பெயர்.
தன்மை யொருமை.	செய்திலேன் செய்திலாதேன்	செய்கின்றிலேன் செய்கின்றிலாதேன்	செய்யேன் செய்யாதேன்
தன்மைப் பன்மை.	செய்திலேம் செய்திலாதேம் செய்திலோம் செய்திலாதோம்	செய்கின்றிலேம் செய்கின்றிலாதேம் செய்கின்றிலோம் செய்கின்றிலாதோம்	செய்யேம் செய்யாதேம் செய்யோம் செய்யாதோம்
முன்னிலை யொருமை.	செய்திலாய் செய்திலாதாய்	செய்கின்றிலாய் செய்கின்றிலாதாய்	செய்யாய் செய்தாய்
முன்னிலைப் பன்மை.	செய்திலீர் செய்திலாதீர் செய்திலீர்கள் செய்திலாதீர்கள்	செய்கின்றிலீர் செய்கின்றிலாதீர் செய்கின்றிலீர்கள் செய்கின்றிலாதீர்கள்	செய்யீர் செய்யாதீர் செய்யீர்கள் செய்யாதீர்கள்
உயர்திணை யாண்பால் ஒருமை.	செய்திலான் செய்திலாதான் செய்திலோன் செய்திலாதோன் செய்திலாதவன்	செய்கின்றிலான் செய்கின்றிலாதான் செய்கின்றிலோன் செய்கின்றிலாதோன் செய்கின்றிலாதவன்	செய்யான் செய்யாதான் செய்யாதோன் செய்யாதவன்
உயர்திணைப் பெண்பால் ஒருமை.	செய்திலாள் செய்திலாதாள் செய்திலாதவள்	செய்கின்றிலாதாள் செய்கின்றிலாதவள் செய்கின்றிலார்	செய்யாள் செய்யாதாள் செய்யாதவள்
உயர்திணை யிருபாற் பன்மை.	செய்திலார் செய்திலோர் செய்திலாதார் செய்திலாதோர் செய்திலாதவர்	செய்கின்றிலோர் செய்கின்றிலாதார் செய்கின்றிலாதோர் செய்கின்றிலாதவர் செய்கின்றிலது	செய்யார் செய்யாதார் செய்யாதோர் செய்யாதவர் செய்யாதவர்கள்
அஃறிணை யொருமை.	செய்திலாதது	செய்கின்றிலது செய்கின்றிலாதது	செய்யாதது
அஃறிணைப் பன்மை.	செய்திலாத செய்திலாதன செய்திலாதவை செய்திலாதவைகள்	செய்கின்றிலது செய்கின்றிலாதன செய்கின்றிலாதவை செய்கின்றிலாதவைகள்	செய்யாத செய்யாதன செய்யாதவை செய்யாதவைகள்

☞ "இல்" என்னும் எதிர்மறைக் குறியுடன் வரும் "ஆ" சாரியை என்றறிக. எதிர்மறை யெதிர்காலத்திற்குக் காலக்குறி கூட்டுவதில்லை. எதிர்மறைக் குறி "ஆ" கெடுமிடங்களை நோக்குக.

அப்பியாசம்—69.

வினையாலணைந்த பெயர்களை யெடுத்து இலக்கணங் கூறு.

1. செட்டியாரே! சீரகம் கேட்டேனுக்கு, நீர் பெருங்காயம் கொடுத்தீர். 2. விரைந்து வந்தாய்க்கு வழியில் இஃது நேர்ந்ததே! 3. தகாதன செய்வார் தகாதன அடைவர். 4. நல்லாரைப் பகைப்பார் துன்புறுவது திண்ணம். 5. தீயாரைக்கூடாதேன் இத்தீங்குற்றனனே! 6. கற்றதைக் காவாது பின்னுங் கற்க நாடுவார் பேதையரே. 7. கையிலிருந்ததை மதியாமல் கைக்குவராத நாடுகின்றீர்கள். 8. விதித்தவை விட்டு விலக்கின புரிகின்றோம் 9. உன்னை நம்பினேனுக்கு நீ இவை புரிதல் அழகோ? 10. மண்ணிற்பிறந்தாரில் மரணத்துக்குத் தப்பினார் சிலரே. 11. போனதை யெண்ணிப் புலம்பி ஆவதுண்டோ? 12. காட்டில் எரிந்தவற்றை வீட்டில் தேடி எடுப்பவர் யாவர்? 13. தேவ! எங்கும் நிறைந்தாயை ஏகவிடத்து இருப்பாய் எனல் பேதைமையன்றோ? 14. நடப்பன, பறப்பன, தவழ்வன, நீந்துவன, நிலைபெயராதன வெல்லாம் கடவுள் படைத்தவைகளே 15. வருந்தி யழைத்தாலும் வாராதவரா. 16. முடிவனவே தொடங்குமின் 17 கெட்டார்க்கு நட்டார் யாவர் 18. மண்மேல் தோன்றின மறைவன ஆகும். 19. ஐவராவி யுண்டவர் அமரர் நாடு கண்டவர். 20. இளமையில் கற்றது எளிதினில் மறவாது. 21. இப்பொழுது களிப்பார் இனிக் கவல்வார் ஆகுவர்.

அப்பியாசம்—70.

நீக்கவேண்டிய சொற்களை நீக்கி, ஏற்றபடி மாற்றி, வினையாலணைந்த பெயர்கள் அமைத்துப் படி.

மாதிரி :—"எவன் தன் புலன்களை வென்றானோ அவனே வீரன்" என்பதை "தன் புலன்களை வென்றனே அல்லது வென்றவனே வீரன்" என்று மாற்றல்.

1. எவன் இளமையில் கற்கின்றானோ அவன் கல்வியில் தேறுவான். 2. எவன் இதை எழுதினானோ அவனுக்கு வந்தனம். 3. எவர் இவைகளைப் படைத்தாரோ அவரைத் துதிப்போம். 4. நான் எதை எண்ணினேனோ அதையே நீ சொல்லினாய். 5. அவர்கள் எதை வளர்த்தார்களோ அதை இவர்கள் அழித்தார்கள். 6. எவற்றை அங்குக் கண்டீர்களோ அவற்றை இங்குக் கூறுங்கள். 7. எவர்கள் அம்மரத்தின் கனியைத் தின்பார்களோ அவர்கள் சாவார்கள். 8. இத்தருமத்திற்கு எவர்கள் கேடுசெய்கிறார்களோ அவர்கள் நரகம் புகுவார்கள். 9. இதை எவர்கள் சொன்னார்களோ அவர்கள் வீட்டுக்குப் போவோம். 10. எது ஆகாயத்தில் பறக்குமோ அது பறவை 11. கைப்பொருள் உள்ள மனிதன் கனம் பெறுவான். 12. அடக்கம் இல்லாத மனிதர் ஆபத்தை யடைவர். 13. எவன் பொறுமைக்கு இடங்கொண்டானோ அவன் பெருவாழ்வு வாழ்வான். 14. நாங்கள் எதைப் படிக்கவில்லையோ அதையே அவர் கேட்டார். 15. எது எல்லாப் பொருளிலும் மேலானதோ அது ஞானம். 16. "எதுவருமோ அஃது தவறாது வரும்" என்பார்கள்.

58. தொழிற்பெயர்கள். (தொழில்-பெயர்கள்.)

"ஒருபாத்தியாயர், தமது வகுப்பிற்கு இலக்கணம் கற்பிக்கையில் கரும்பலகையில்,

1. அம்பட்டன்.	3. வண்டிக்காரன்.	5. செம்படவன்.	7. தட்டான்.
2. வண்ணான்.	4. தையற்காரன்.	6. பாற்காரன்.	8. சுயம்பாகி.

என்னும் எட்டுப் பெயர்களை யெழுதி, வகுப்பின் மாணாக்கர்களில், முதல்வனை நோக்கி, "ஸதாசிவ! இவர்கள் என்ன செய்து ஜீவிக்கிறார்கள்?" என்று கேட்டார்.

ஸதாசிவன் (எழுந்து நின்று):—ஐயா!

1. அம்பட்டன், க்ஷௌரம் செய்து ஜீவிக்கிறான்.
2. வண்ணான், பிறர் உடைகளைவெளுத்து ஜீவிக்கிறான்.
3. வண்டிக்காரன், வண்டி யோட்டி ஜீவிக்கிறான்.
4. தையற்காரன், உடுப்புகள் தைத்து ஜீவிக்கிறான்.
5. செம்படவன், மீன் பிடித்து ஜீவிக்கிறான்.
6. பாற்காரன், பால் விற்று ஜீவிக்கிறான்.
7. தட்டான், நகைகள் செய்து ஜீவிக்கிறான்.
8. சுயம்பாகி, சமையல் செய்து ஜீவிக்கிறான் என்று தக்க விடை கூறினான்.

உபாத்தியாயர், இரண்டாவனை நோக்கி, சிவசங்கர! அம்பட்டன் முதலானவர்கள், இன்னது இன்னது செய்து ஜீவிக்கிறார்கள் என்று, தவறாமல் ஸதாசிவன் கூறினானே! நீ அம்பட்டன் முதலானவர்களுடைய தொழில்களைச் சொல்லு" என்றார்.

சிவசங்கரன் (எழுந்து நின்று):—

1. அம்பட்டனுடைய தொழில், க்ஷௌரஞ் செய்தல்.
2. வண்ணானுடையதொழில், உடைகளைவெளுத்தல்.
3. வண்டிக்காரனுடையதொழில், வண்டி யோட்டல்.
4. தையற்காரனுடைய தொழில், உடுப்புகள் தைத்தல்.
5. செம்படவனுடைய தொழில், மீன் பிடித்தல்.
6. பாற்காரனுடைய தொழில், பால் விற்றல்.
7. தட்டானுடைய தொழில், நகைகள் செய்தல்.
8. சுயம்பாகியினுடைய தொழில், சமைத்தல் என்று கூறினான்.

உபாத்தியாயர், மூன்றாவனை நோக்கி, "பத்மநாப! அம்பட்டன் முதலானவர்களுடைய தொழில்களைச் சிவசங்கரன் கூறினான். நீ, அவன் சொல்லியவைகளில் உள்ள தொழில்களின் பெயர்களை மாத்திரம் எடுத்துச் சொல்" என்றார்.

பத்மநாபன் (எழுந்து நின்று):—

1. க்ஷௌரம் செய்தல்.	3. வண்டி யோட்டல்.	5. மீன் பிடித்தல்.	7. நகைகள் செய்தல்.
2. உடைகளை வெளுத்தல்.	4. உடுப்புக்கள் தைத்தல்.	6. பால் விற்றல்.	8. சமைத்தல் என்று கூறினான்.

உபாத்தியாயர், நான்காவனை நோக்கி, "நாராயணசாமி! பத்மநாபன் சொல்லிய பெயர்கள் எவைகளின் பெயர்கள்?" என்று கேட்டார்.

உடனே, நாராயணசாமி (எழுந்து நின்று), "க்ஷௌரம் செய்தல், உடைகளை வெளுத்தல் முதலான பெயர்கள், அம்பட்டன் முதலானவர்கள் செய்யுந் தொழில்களின் பெயர்கள்" என்றான்.

அதன்மேல் உபாத்தியாயர், இப்படித் தொழிலின் பெயராய் வரும் பெயர்கள், தொழிற் பெயர்கள் என்று விளக்கினார்.

இவை கேட்டு, ஐந்தாவனாகிய அமரேசன் (எழுந்து நின்று), ஐயா! "இத்தோட்டத்தில் இருக்கிற பெரிய மாமரம், தினமும் வளர்தல் காலத்தில் இலையுதிர்த்தல், பின்பு அரும்பெடுத்தல், அதற்குப்பின் பிஞ்சு விடல், அதற்குப்பின் காய்த்தல், பின் பழுத்தல், கிளைகளை யாராவது உடைத்தால் தடுக்காதிருத்தல், நட்டவிடத்தைவிட்டுப் பேராதிருத்தல் ஆகிய பல்வகைத் தொழில்களைக்கொண்டு நிற்கின்றதே, இத்தொழில்களில், செய்யுந் தொழில்கள், செய்யாத் தொழில்கள் என்று இரு பிரிவுகள் உண்டாகவில்லையா?" என்றான்.

உபாத்தியாயர், "அமரேச! நீ கேட்டது சரியே! சொல்லுகிறேன்" கருத்தோடு கேளுங்கள்.

செய்யுந் தொழிலின் பெயர், **உடன் பாட்டுத் தொழிற் பெயர்;**	செய்யாத தொழிலின் பெயர், **எதிர்மறைத் தொழிற் பெயர்;**

என்று, தொழிற்பெயர்களில் இரு பெரும் பிரிவுகள் இருக்கின்றன என்று, பின்னும் விவரித்தார்."

தொழிற்பெயரின் உட்பிரிவுகள்:—

உடன்பாட்டுத் தொழிற்பெயர்கள்,

1. காலங்கருதா உடன்பாட்டுத் தொழிற்பெயர், 2. உடன்பாட்டு இறந்தகாலத் தொழிற்பெயர், 3. உடன்பாட்டு நிகழ்காலத் தொழிற்பெயர். 4. உடனபாட்டு எதிர்காலத் தொழிற்பெயர் என்னும் பிரிவுகளையும்,

எதிர்மறைத் தொழிற்பெயர்கள்,

1. காலங்கருதா எதிர்மறைத் தொழிற்பெயர், 2. எதிர்மறை இறந்த காலத் தொழிற்பெயர், 3. எதிர்மறை நிகழ்காலத் தொழிற்பெபா, 4. எதிர் மறை எதிர்காலத் தொழிற்பெயர் என்னும் பிரிவுகளையும் பெறும்.

இவைகளில், 1. காலங்கருதா உடன்பாட்டுத் தொழிற்பெயர்கள்.

ஆக்குமாறு:—தல், அல், கை என்னும விகுதிகளைப் பன்னிரு கணப் பகுதிகளுக்கும் ஏற்றவாறு கூட்டல்.

கணங்கள்.	மாதிரிப் பகுதிகள்.	"தல்" விகுதி பெற்றுன காலங் கருதா உடன்பாட்டுத் தொழிற் பெயர்.	"அல்" விகுதி பெற்றுன காலங் கருதா உடன்பாட்டுத் தொழிற் பெயர்.	"கை" விகுதி பெற்றுன காலங் கருதா உடன்பாட்டுத் தொழிற் பெயர்.	குறிப்புகள்.
1	செய்	செய்தல்	செய்யல்	செய்கை	தல் விகுதி. உ, கு என்னும் சாரியை கொண்டுங் கொள்ளாதும் வரும். அல் விகுதி வலியிற் பகுதிகளோடு "கு"ச் சாரியையின்றிக் கூடாது.
2	ஆடு	ஆடுதல்	ஆடல்	ஆளுகை	
3	அறி	அறிதல்	அறியல்	அறிகை	
4	கோல்	கொல்லுதல்	கொல்லல்	கொல்கை கொல்லுகை	
5	கல்	கற்றல் கற்குதல்	கற்கல்	கற்கை	
6	தின்	தின்றல் தின்னுதல்	தின்னல்	தின்கை தின்னுகை	
7	உண்	உண்ணல் உண்ணுதல்	உண்ணல்	உண்கை உண்ணுகை	
8	ஆள்	ஆளுதல்	ஆளல்	ஆளுகை ஆளுகை	
9	கேள்	கேட்டல் கேட்குதல்	கேட்கல்	கேட்கை	
10	விடு	விடுதல்	விடல்	விடுகை	
11	படி	படித்தல்	படிக்கல்	படிக்கை	
12	இரு	இருத்தல்	இருக்கல்	இருக்கை	

II. ஐ, மதி, அடம், கு, இ, து, வி, தி, உள், வை, காடு, பாடு, அரவு, வாய், வு, அம், சல், சி, மானம், பு, என்பவைகளைத் தக்கபகுதிகட்குக் கூட்டவும்,காலங்கருதா உடன்பாட்டுத் தொழிற் பெயர்கள் வரும்.

ஐ

கொல் — கொலை
எடு — எடை
நட — நடை

மதி

ஏற்று — ஏற்றுமதி
இறக்கு — இறக்குமதி

அடம்

கட்டு — கட்டடம்
இராவு — இராவடம்

கு

போ — போக்கு

இ

உதவு — உதவி
வெகுள் — வெகுளி

து

வா — வரத்து
வாழ் — வாழ்த்து

வி

கல் — கல்வி
கேள் — கேள்வி
தோல் — தோல்வி

தி

மற — மறதி
கெடு — கெடுதி
வெல் — வெற்றி

உள்

செய் — செய்யுள்
கட — கடவுள்
விக்கு — விக்குள்

வை

அள — அளவை
கோ — கோவை
கற — கறவை

காடு

சா — சாக்காடு
நோ — நோக்காடு
வே — வேக்காடு

பாடு

கொள் — கோட்பாடு
கூ — கூப்பாடு
தீர் — தீர்ப்பாடு

அரவு

தேற்று — தேற்றரவு
கூற்று — கூட்டரவு

வாய்

வா — வருவாய்

வு

அறி — அறிவு
ஈ — ஈவு

அம்

எண் — எண்ணம்
ஆடு — ஆட்டம்
ஏறு — ஏற்றம்
இறங்கு — இறக்கம்
பழகு — பழக்கம்

தல் என்பதின் திரிபாகிய சல்

காய் — காய்ச்சல்
குறை — குறைச்சல்
இறை — இறைச்சல்
அலை — அலைச்சல்

சி

காண் — காட்சி
ஆள் — ஆட்சி
தேர் — தேர்ச்சி
முயல் — முயற்சி

மானம்

வா — வருமானம்
படி — படிமானம்

பு

பிற — பிறப்பு
இற — இறப்பு
இரு — இருப்பு

III. காலங்காட்டும் உடன்பாட்டுத் தொழிற்பெயர்கள்:— பன்னிருகணப் பகுதிகளும் அதததற்குரிய முக்காலக் குறிகளையும், அகரச்சாரியையுங் கொண்டு, "மை" என்பதை முதல் இரண்டு காலங்களிற்றும், "து" என்பதை முக்காலங்களிற்றும் பெற்று ஆகும்.

☞ அவற்றை, 168, 169 ஆகிய பக்கங்களிற் காண்க.

காலக்குறிகளைப் பெற்றுவரும் உடன்பாட்டு முக்காலத் தொழிற்பெயர்கள் ஆக்குமாறு.

கணங்கள்	மாதிரிப் பகுதிகள்.	பகுதிகள்.	இறந்தகாலக் குறி.	சாரியை - அ.	தொழிற்பெயர் விகுதி. து, மை	இறந்த காலத் தொழிற் பெயர்.	மாதிரிப் பகுதிகள்.	பகுதிகள்.	நிகழ்காலக் குறி.	சாரியை - அ.	தொழிற்பெயர் விகுதி. து, மை.	நிகழ் காலத் தொழிற் பெயர்.	மாதிரிப் பகுதிகள்.	பகுதிகள்.	எதிர்காலக் குறி.	சாரியை - அ.	தொழிற்பெயர் விகுதி. து.	எதிர் காலத்தொழிற் பெயர்.
1	செய்	பகுதி பகுதி	த்- ,,	அ- ,,	து மை	செய்தது செய்தமை	செய்	பகுதி பகுதி	கின்று ,,	அ ,,	து மை	செய்கின்றது செய்கின்றமை	செய்	பகுதி	வ்	அ	து	செய்வது
2	ஆடு	பகுதி பகுதி	இன் ,,	அ ,,	து மை	ஆடினது ஆடினமை	ஆடு	பகுதி பகுதி	கின்று ,,	அ ,,	து மை	ஆடுகின்றது ஆடுகின்றமை	ஆடு	பகுதி	வ்	அ	து	ஆடுவது
3	அறி	பகுதி பகுதி	ந்த் ,,	அ ,,	து மை	அறிந்தது அறிந்தமை	அறி	பகுதி பகுதி	கின்று ,,	அ ,,	து மை	அறிகின்றது அறிகின்றமை	அறி	பகுதி	வ்	அ	து	அறிவது
4	கொல்	பகுதி பகுதி	ற் ,,	அ ,,	து மை	கொன்றது கொன்றமை	கொல்	பகுதி பகுதி	கின்று ,,	அ ,,	து மை	கொல்கின்றது கொல்கின்றமை	கொல்	பகுதி	வ்	அ	து	கொல்வது
5	கல்	பகுதி பகுதி	ற் ,,	அ ,,	து மை	கற்றது கற்றமை	கல்	பகுதி பகுதி	கின்று ,,	அ ,,	து மை	கற்கின்றது கற்கின்றமை	கல்	பகுதி	வ்	அ	து	கற்பது
6	தின்	பகுதி பகுதி	ற் ,,	அ ,,	து மை	தின்றது தின்றமை	தின்	பகுதி பகுதி	கின்று ,,	அ ,,	து மை	தின்கின்றது தின்கின்றமை	தின்	பகுதி	வ்	அ	து	தின்பது
7	உண்	பகுதி பகுதி	ட் ,,	அ ,,	து மை	உண்டது உண்டமை	உண்	பகுதி பகுதி	கின்று ,,	அ ,,	து மை	உண்கின்றது உண்கின்றமை	உண்	பகுதி	வ்	அ	து	உண்பது
8	ஆள்	பகுதி பகுதி	ட் ,,	அ ,,	து மை	ஆண்டது ஆண்டமை	ஆள்	பகுதி பகுதி	கின்று ,,	அ ,,	து மை	ஆள்கின்றது ஆள்கின்றமை	ஆள்	பகுதி	வ்	அ	து	ஆள்வது
9	கேள்	பகுதி பகுதி	ட் ,,	அ ,,	து மை	கேட்டது கேட்டமை	கேள்	பகுதி பகுதி	கின்று ,,	அ ,,	து மை	கேட்கின்றது கேட்கின்றமை	கேள்	பகுதி	வ்	அ	து	கேட்பது
10	விடு	பகுதி பகுதி	விகாரம்	அ ,,	து மை	விட்டது விட்டமை	விடு	பகுதி பகுதி	கின்று ,,	அ ,,	து மை	விடுகின்றது விடுகின்றமை	விடு	பகுதி	வ்	அ	து	விடுவது
11	படி	பகுதி பகுதி	த்த் ,,	அ ,,	து மை	படித்தது படித்தமை	படி	பகுதி பகுதி	கின்று ,,	அ ,,	து மை	படிக்கின்றது படிக்கின்றமை	படி	பகுதி	வ்	அ	து	படிப்பது
12	இரு	பகுதி பகுதி	ந்த் ,,	அ ,,	து மை	இருந்தது இருந்தமை	இரு	பகுதி பகுதி	கின்று ,,	அ ,,	து மை	இருக்கின்றது இருக்கின்றமை	இரு	பகுதி	வ்	அ	து	இருப்பது

"தின்" "உண்" என்னும் கணத்துப் பகுதிகள், எதிர்காலத்தில் உகரச்சாரியை பெற்று, வகரவொற்றைக் காலக்குறியாய்க் கொண்டு, தின்னுவது, உண்ணுவது, என்றும் வரும்.

எதிர்மறைத் தொழிற்பெயர்கள் ஆக்கும் வகைகள்:—3.

I. மெல்லியற் பகுதிகளிற்கு "ஆ—மை" என்பதையாவது "ஆ—தது" என்பதையாவது கூட்டல்.

கணங்கள்.	"ஆ-மை" கொண்டான எதிர்மறைத் தொழிற்பெயர்கள்.			"ஆ-தது" கொண்டான எதிர்மறைத் தொழிற்பெயர்கள்.		
1	செய்	ஆமை	செய்யாமை	செய்	ஆதது	செய்யாதது
2	ஆடு	,,	ஆடாமை	ஆடு	,,	ஆடாதது
3	அறி	,,	அறியாமை	அறி	,,	அறியாதது
4	கொல்	,,	கொல்லாமை	கொல்	,,	கொல்லாதது
6	தின்	,,	தின்னாமை	தின்	,,	தின்னாதது
7	உண்	,,	உண்ணாமை	உண்	,,	உண்ணாதது
8	ஆள	,,	ஆளாமை	ஆள்	,,	ஆளாதது
10	விடு	,,	விடாமை	விடு	,,	விடாதது

II. வல்லியற் பகுதிகளிற்கு 'ஆ—மை' என்பதையாவது 'ஆ—தது' என்பதையாவது, 'கு'ச் சாரியை கூட்டியும், கூட்டாதும், கூட்டல்.

கணங்கள்.	'கு'ச் சாரியை பெற்றும், பெறாதும, 'ஆ-மை' கொண்டான எதிர்மறைத் தொழிற்பெயர்கள்.			'கு'ச் சாரியை பெற்றும், பெறாதும், 'ஆ-தது' கொண்டான எதிர்மறைத் தொழிற்பெயர்கள்.		
5	கல்	ஆமை	கல்லாமை கற்காமை	கல்	ஆதது	கல்லாதது கற்காதது
9	கேள்	,,	கேளாமை கேட்காமை	கேள்	,,	கேளாதது கேட்காதது
11	படி	,,	படியாமை படிக்காமை	படி	,,	படியாதது படிக்காதது
12	இரு	,,	இராமை இருக்காமை	இரு	,,	இராதது இருக்காதது

III. பன்னிருகணப் பகுதிகளிற்கும், அததற்குரிய இறந்த கால நிகழ்காலக் குறிகளைக் கூட்டி, "இல்" என்னும் எதிர்மறைக் குறியைச் சேர்த்து, "ஆ—மை" அல்லது "ஆ—தது" என்பதைக் கூட்டினால், செய்திலாமை, செய்கின்றிலாமை, செய்திலாதது, செய்கின்றிலாதது என இறந்தகால எதிர்மறைத் தொழிற்பெயர்கள் பிறக்கும்.

☞ உடன்பாட்டில், "ஆடு எடுத்த திருத்தாளான்" என்பதிற்போல், முதனிலை (=பகுதி)யே தொழிற்பெயராய்வரின், முதனிலைத் தொழிற்பெயரென்றும், "வெறுப்பும் விருப்பும் அற்ற மனத்தினோர்" என்பதிற்போல், முதனிலை திரிந்து தொழிற்பெயராய்வரின், முதனிலை திரிந்த தொழிற்பெயரென்றும் வேறிரு பிரிவுகளும் வரும்.

அப்பியாசம்—71.

கீற்றுள்ள விடத்து ஏற்ற தொழிற்பெயர் விகுதியைக் கூட்டிப்படி.

1. மண்ணிற் பிறந்தாரில் சா—க்குத் தப்பினாரிலர். 2. தரித்திரம் அறிக்குக் குறைவை யுண்டாக்கும். 3. அகத்தின் வாடு—முகத்தில் தெரியும். 4. எனக்கு ஓய்—ஒழி—யில்லை. 5. பிற—உம் இற—உம் எந்நாட்டிலும் உள்ளவை. 6. அவர்களுக்கும எங்களுக்கும் கொடு—வாங்கு—இல்லை. 7. நினை—உம் மற—உம் எவர்க்கும் உள்ளவை. 8. மூத்தோர்க்கு மற—அதிகம். 2. அவனுக்கு உண்—உம் உறங்கு—உம் தெரியும். 10. தீயோரைக் காண்—உந் தீது, அவரோடு நில்—உந் தீது. 11. இவ்வாறு செய் யென்று சொல்—எளிது, செய்—அரிது. 12. கெலி—உம் தோல்—உம் ஒருவர் பங்கல்ல. 13. வா—க்குத்தக்க செல்—செய். 14. வீட்டுக்கு வா—யில் அவரைக்கண்டேன்.. 15. உன் நட—உன் காலைத்தேய்க்கும். 16. இஃது கல—இல்லாத நல்ல நெய். 17. நேற்று இழுந்தவன் இன்று இரு—யை நினை. 18. அங்கே ஏற்று—போல இறக்கு—அதிகமில்லை. 19. இன்மையில் படி—முதுமையில் துன்பமாம். 20. அவருடைய ஆள்—க்குக் குறை எவர் கூறுவர்? 21. ஈ—இறங்கு—அவனிடத்தில் இல்லை. 22. ஈரத் தரையில் படு—உம் அசுத்தமான நீரைக் குடி—உம் ஆகா. 23. மகனே! உன் கல்—க்கு நான் வருந்தினேன். 24. இச்செய் உணர்த்தும் கருத்து என்ன? 25. என் கை கால் நொ—தீர மருந்து கொடும். 26. நீர் எனக்கு ஒரு தேற்று—சொல்லும். 27. வெருள்—அறி—க்குச் சத்துரு. 28. பொருளைத் தேடு—போல் கா—உம் துன்பமே. 29. கிழவர்க்கு வீங்கு—உம் தூங்கு—உம் அதிகம். 30. இவ்வழியில் ஜனங்கள்போ—வா—இல்லையாம்.

அப்பியாசம்—72.

முதல் வினைமுற்றைத் தொழிற்பெயராக்கி, ஏற்றப்படி மாற்றிப் படி.

1. அவன் வந்தான்; அதனால் நாங்கள் போகவில்லை. 2. நீ இத்தனை நாள் வந்திலை, அதற்குக் காரணமென்ன? 3. நீ வருந்திப் படிக்கின்றாய்; அதனால் கல்வியில் தேறுவாய். 4. அவன் மதுரைக்குப் போனான்; நாங்கள் அதை அறிவோம். 5. இவ்வண்டி இவ்வாறு ஓடுகின்றது; இதை நம்முன்னோர் அறியார். 6. அவன் நாளைக்கு வருவான்; அது நிச்சயமில்லை. 7. அவள் தன் மகனை அங்குக் காணவில்லை; அதனால் வியசனமுற்றாள். 8. அவள் நாளைக்குப் போவாள்; அதில் நன்மையில்லை. 9. அவள் உப்புக்கையோடு பாலைக் கலக்கினாள்; அதனால் அது திரிந்தது. 10. அவன் பாடம் படியாமல் வந்தான்; அதற்காக நிற்கின்றான். 11. அவன் எங்களை அழைக்கவில்லை; அதனால் நாங்கள் போகவில்லை. 12. அவன் பெரியோர் சொல்லைக் கேட்டான்; அதனால் நன்மையுற்றான். 13. நீ அச்சமயத்தில் பேசாதிருந்தாய்; அது உன் பொறுமையைக் காட்டினது. 14. ஆற்றில் பெருவெள்ளம் வருகின்றது; அதனால் அதில் இறங்கலாகாது. 15. கூலியைக் குறைத்தாய்; அதனால் அவன் வேலையைக் கெடுத்தான். 16. நீ இடறி விழுந்தாய்; அதை நான் அறிவேன்.

59. பண்புப் பெயர்கள்.

மை, ஐ, பு, கு, றி, அம், பம், நர், சி, இல், அல், மன், று, தை, த்வம், தனம், து, உ வென்பன துலக்கிடும் பண்பை.

மை

தீ —தீமை
பசு —பசுமை
கடு —கடுமை
கொடு —கொடுமை
நெடு —நெடுமை
தண் —தண்மை
திண் —திண்மை
நுண் —நுண்மை
புது —புதுமை
மூது —முதுமை
செ —செம்மை
வெ —வெம்மை
சேய் —சேய்மை
தூய் —தூய்மை
உரி —உரிமை
அரு —அருமை
கரு —கருமை
பெரு —பெருமை
கூர —கூர்மை
நேர் —நேர்மை
அல் —அன்மை
இல் —இன்மை
தொல் —தொன்மை
கல் —நன்மை
பல் —பன்மை
புல் —வுன்மை
மெல் —மென்மை
வல் —வன்மை
பழ —பழமை
கீழ் —கீழ்மை
இள —இளமை
உள் —உண்மை
ஒள் —ஒண்மை

மை (தொடர்ச்சி)

வெள் —வெண்மை
குறு —குறுமை
சிறு —சிறுமை
வறு —வறுமை

ஐ

தொல் —தொல்லை
வெள் —வெள்ளை
பசு —பச்சை

பு

இன் —இன்பு
துன் —துன்பு
மாண் —மாண்பு
பொல்லா —பொல்லாப்பு

கு

தீ —தீங்கு
நல் —நன்கு
பொல்லா —பொல்லாங்கு

றி

நல் —நன்றி

அம்

நல் —நலம்
வள —வளம்
திண் —திண்ணம்

பம்

தண் —தட்பம்
திண் —திட்பம்
நுண் —நுட்பம்
இன் —இன்பம்
துன் —துன்பம
வெ —வெப்பம்

நர்

நல் —நன்னர்

சி

உருள் —உருட்சி
மாண் —மாட்சி
நேர் —நேர்ச்சி

இல்

குறு —குறில்
நெடு —நெடில்
வெ —வெயில்

அல்

குறு —குறல்
அல் —அல்லல்

மன்

சிறு —சிறுமன்
பழு —பருமன்
வெறு —வெறுமன்

று

நல் —நன்று
வெள் —வெளிறு

தை

மம —மமதை
அகம் —அகந்தை

த்வம்

ராஜ —ராஜத்வம்
பிரபு —பிரபுத்வம்

தனம்

பிரபு —பிரபுத்தனம்
சூர —சூரத்தனம்

து

தீ —தீது
வே —வேறு

உ

மழ —மழவு

☞ அன்பு, அழகு என்பனபோல், விகுதி பெறுமல் சில பண்புப் பெயர்கள் வரும்.

உடன்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சங்கள் ஆக்குமாறு.

* என்னும் பகுதியிற் பிறந்த		உடன்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சம்.	* என்னும் பகுதியிற் பிறந்த		உடன்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சம்.
தகைமை	—	தகைய	நேர்மை	—	நேரிய
தீமை	—	தீய	நன்மை	—	நல்ல
பசுமை	—	பசிய	புன்மை	—	புல்லிய
கடுமை	—	கடிய	மென்மை	—	மெல்லிய
கொடுமை	—	கொடிய	வன்மை	—	வல்ல
நெடுமை	—	நெடிய	வலிமை	—	வலிய
அண்மை	—	அண்ணிய	பழமை	—	பழைய
தண்மை	—	தண்ணிய	இளமை	—	இளைய
திண்மை	—	திண்ணிய	உண்மை	—	உள்ள
நுண்மை	—	நுண்ணிய	எண்மை	—	எளிய
உடைமை	—	உடைய	ஒண்மை	—	ஒள்ளிய
புதுமை	—	புதிய	தெண்மை	—	தெள்ளிய
முதுமை	—	முதிய	வெண்மை	—	வெள்ளிய
செம்மை	—	{ செய்ய	குறுமை	—	குறிய
	—	{ செவ்விய	சிறுமை	—	சிறிய
வெம்மை	—	{ வெய்ய	வறுமை	—	வறிய
	—	{ வெவ்விய	இனிமை	—	இனிய
தூய்மை	—	தூய	தன்மை	—	தன்மைய
நொய்மை	—	நொய்ய	அன்	—	அன்ன
உரிமை	—	உரிய	இன்	—	இன்ன
அருமை	—	அரிய	என்	—	என்ன
கருமை	—	கரிய	அனை	—	அனைய
பெருமை	—	பெரிய	இனை	—	இனைய
கூர்மை	—	கூரிய	ஏனை	—	ஏனைய
சீர்மை	—	சீரிய	அழகு	—	அழகிய

உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்சம்.

☞ உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்சங்கள், தீது, கடிது, கொடிது, நெடிது, புதிது, வெய்து, நொய்து, அரிது, பெரிது, மெல்ல, வலிய, சிறிது, வறிது, இனிது என்பவைகளைப்போல் சில பகுதிகளினின்றே பிறக்கும்; உகர விகுதியோடு வரும் "த்" காலக்குறியன்று. இக்குறிப்பு வினையெச்சங்கள், வினை யுரிச்சொல்லின் தன்மைபூண்டே வரும்.

(உ-ம்) அவர் எதனையும் இனிது நடத்தினர்.

எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சங்கள் ஆக்குமாறு.

* என்னும் பகுதியிற் பிறந்த	எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்.	* என்னும் பகுதியிற் பிறந்த	எதிர்மறைக் குறிப்புப் வினையெச்சம்.
அன்மை —	{ அல்லாத அல்லா(—)	இன்னுமை —	{ இன்னாத இன்னா(—)
இன்மை —	{ இல்லாத இல்லா(—)	பொல்லாமை—	{ பொல்லாத பொல்லா(—)

☞ "த்" இல்லாதது, ஈறுகெட்ட எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம் என்னப்படும்.

எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்கள்.

"அல்" "இல்" என்னும் எதிர்மறைப் பகுதிகளினின்றும் பிறக்கும் அன்றி, அல்லால், அல்லாது, அல்லாமே முதலானவைகளும், இன்றி, இல்லாது, இல்லாமே முதலானவைகளும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்கள் என்றறிக.

விசேஷக் குறிப்பு:—மை முதலிய விகுதி பெற்றுன பண்புப் பெயர்களில், நல்ல, இனிய, சிறிய, இல்லாத, அல்லாத முதலான குறிப்புப் பெயரெச்சங்கள் பிறப்பதுபோல், வட்டம் கோணம் ஒன்று, பத்து, மணங்கு, முழம், கலம் முதலான பண்புப்பெயர் களி னின்றும் குறிப்புப் பெயரெச்சங்கள் பிறப்பதில்லை. ஆதலால் வட்டம், கோணம், ஒன்று, பத்து, மணங்கு, முழம், கலம் ஆகிய பண்புப்பெயர்களி னின்றும் பெயரெச்சங்கள் பெறவேண்டின், அவற்றிற்கு "ஆ" என்னும் பகுதியைக் கூட்டி, இரண்டையும் ஒன்றாக்கி, வட்டமாகிய: வட்டமான, வட்டமாய என்றும், ஒன்றாகிய, ஒன்றான, ஒன்றாய என்றும், ஆக்கிக்கொளல் வேண்டும்.

☞ விகுதிபெற்றவை, பெறாதவை ஆகிய எவ்வகைப் பண்புப்பெயர் களிற்கும், "ஆ" கூட்டியாக்கிய, எச்சம், முற்று முதலியவை வழங்குதல் நோக்குக.

1 நன்மையாகிய நடை	இன்மையாகிய பொருள்
சிறுமையாகிய விரல்	அன்மையாகிய வழி
புதுமையாகிய நூல்	வட்டமாகிய பலகை
வெண்மையாகிய நீறு	கோணமாகிய அறை
5 நெடுமையாகிய மரம்	15 ஒன்றாகிய நாள்
இனிமையாகிய சொல்	எட்டாகிய திசை
வெம்மையாகிய நீர்	படியாகிய பால்
தொன்மையாகிய நூல்	கலமாகிய நெல்
பசுமையாகிய இலை	முழமாகிய சீலை
10 செம்மையாகிய கரம்.	20 கஜமாகிய சுவர் எனக் கொள்ளல் வேண்டும்.

☞ இவ்வாறன்றி, உரு மாறியும், மாறாமலும் நின்று, பிற பொருள்களின் பண்பைக் கூறும் பண்புப் பெயர்களுக்கும், பிற பெயர்களுக்கும் இடையில் ஆகிய, ஆன, ஆய வாராமலிருப்பது "பண்புத்தொகை" என்னப்படும்.

பண்புத்தொகைகள் வருமாறு.

நன்னடை	தொன்னூல்	ஒருநாள்
சிறுவிரல்	பச்சிலை	எண்டிசை
புதுநூல்	செங்கரம்	படிபால்
வெண்ணீறு	இல்பொருள்	கலநெல்
நெடுமரம்	அல்வழி	முழச்சீலை
இன்சொல்	வட்டப்பலகை	கஜச்சுவர்
வெந்நீர்	கோணவறை	தலைமைந்தன்

மேலே காட்டிய பண்புத்தொகைகள்:—

1. வண்ணப் பண்புத்தொகை —வெண்பட்டு,
2. வடிவுப் பண்புத்தொகை —சதுரக்கல்,
3. அளவுப் பண்புத்தொகை —முக்காலம்
4. சுவைப் பண்புத்தொகை —இன்சொல்
5. இயற் பண்புத்தொகை —மென்பட்டு எனும் பிரிவுளுள்ளன.

கல்விப்பொருள், செல்வப்பொருள், மக்கட்பேறு, சாரைப்பாம்பு முதலியவைகளைப்போல், ஒரே பொருளைக்குறித்து நிற்கின்ற இரண்டு பெயர்களுக்கிடையில், ஆகிய, ஆன, ஆய என்பவை வாராமலிருப்பது, இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்னப்படும்.

அப்பியாசம்—73.

கீழ்வரும் பகுதிகள் பெறக்கூடிய தொழிற்பெயர் விகுதிகள் பலவற்றையுங் கூட்டிக் காலக்கருதா உடன்பாட்டுத் தொழிற்பெயர் உருவங்கள் பலவும் ஆக்கு.

1. உழு	5. உண்	9. இரு	13. வெகுள்	17. சா
2. ஓடு	6. கொள்	10. வாழ்	14. சிரி	18. நீங்கு
3. அறி	7. மீள்	11. மகிழ்	15. பிற	19. தோன்று
4. கல்	8. உறு	12. தோல்	16. மற	20. காய்

அப்பியாசம்—74.

கீழ்வரும் விகுதிகள், தொழிற்பெயர்களிலும் பண்புப்பெயர்களிலும், விகுதிகளாய் வரும் என்பதை உதாரணங்களாற் காட்டு.

விகுதிகள்.	* விகுதிபெற்றன தொழிற்பெயர்கள்.	* விகுதிபெற்றன பண்புப்பெயர்கள்.
மை —		
ஐ —		
பு —		
கு —		
அம் —		
சி —		
து —		

அப்பியாசம்—75.

கீழ்வரும் பண்புப்பகுதிகள் பலவிகுதிகளைக்கொண்டு பண்புப்பெயர்களாகுமென்பதை உதாரணங்களாற் காட்டு.

1	2	3	4	5	6
நல்	தீ	இன்	திண்	பசு	வள்

உடன்பாட்டுக் குறிப்பு வினைமுற்றுக்களும், எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றுக்களும் வருமாறு.

குறிப்பு வினைகள், திணை, பால், இடம், எண்களினாலேயேயன்றிக் காலத்தினால் வேறுபடுவனவல்ல.

திணை, இடம், பால், எண்.	நன்மை.	உண்மை.	இனிமை	இன்மை.	அன்மை.
1. தன்மை யொருமை.........	நல்லேன்	உள்ளேன்	இனியேன்	இல்லேன்	அல்லேன்
2. தன்மைப் பன்மை.........	நல்லேம் நல்லோம்	உள்ளேம் உள்ளோம்	இனியேம் இனியோம்	இல்லேம் இல்லோம்	அல்லேம் அல்லோம்
3. முன்னிலை யொருமை.....	நல்லை நல்லாய்	உள்ளாய் ——	இனியை இனியாய்	இல்லாய் ——	அல்லாய் அல்லை
4. முன்னிலைப் பன்மை.....	நல்லீர்	உள்ளீர்	இனியீர்	இல்லீர்	அல்லீர்
5. உயர்திணை யாண்பாலொருமை.............	நல்லான் நல்லன்	உள்ளான் உளன்	இனியான் இனியன்	இல்லான் இலன்	அல்லான் அல்லன்
6. உயர்திணைப் பெண்பாலொருமை.............	நல்லாள் நல்லள்	உள்ளாள் உளள்	இனியாள் இனியள்	இல்லாள் இலள்	அல்லாள் அல்லள்
7. உயர் திணையிருபாற் பன்மை	நல்லார்	உள்ளார் உளர்	இனியார் இனியர்	இல்லார் இலர்	அல்லார் அல்லர்
8. அஃறிணை யொருமை.....	நன்று நல்லது	உளது உண்டு	இனியது இனிது	இன்று	அன்று
9. அஃறிணைப் பன்மை......	நல்ல நல்லன	உள	இனிய இனியன	இல	அல்ல

☞ தெரிநிலை வினைப்பகுதிகளினின்று, தெரிநிலை வினையாலணைந்த பெயர்கள் ஆனதுபோல, பண்புமுதலான பெயர்களினின்று குறிப்பு முற்றாலணைந்த பெயர்கள் ஆகும்.

அப்பியாசம்—76.

A. பெயரெச்சங்களை யெடுத்து இலக்கணங் கூறு.

1. யானையினும் வலிய சிங்கத்திற் கொடிய புலிகளுக்கு, மெல்லிய உடலுள்ள எளிய மான்கள்போல், பொல்லாத ராக்ஷஸர்களுக்கு அஞ்சிய முனிவர்கள், நுண்ணிய அறிவும், தண்ணிய மனமும், திண்ணிய தோட்களுமுடைய ஸ்ரீ ராமரைக்கண்டு "ரகுகுலரத்நமே! இங்கெய்திய உன்னால் எமக்கு இன்னாத செய்து வருகின்ற ராக்ஷஸர் ஒழிவர். யாம் அச்சமில்லாத மனத்தினராய் நெடிய தவம் புரிவோம். நீடூழி வாழ்க" என்று வாழ்த்தினர்.

2. பத்மாவதி என்னும் பெரிய ஓர் அழகிய பட்டணத்தினிடையே ஓடிய சிறிய ஆற்றில், இளையபிள்ளைகளும், முதிய புருடர்களும் நீராடி, இனிய புனல் நிறைந்த ஒள்ளிய வெள்ளிக்குடங்கள் ஏந்திய கையினராய்ச் செவ்விய வீதியில் அமைந்த தம் இல்லம் போய்ச் சேர்ந்தனர்.

B. இரு சொற்களால் ஆகி நின்ற பெயரெச்சம், வினைமுற்று, வினையாலணைந்த பெயர்களைத் தனிச்சொற்களாக்கிப் படி.

மாதிரி:—"காக்கை கருமையானது" என்பதை
"காக்கை கரியது" என்று மாற்றல்.

நீராவி மிகவும் நுட்பமானது. 2. பட்சிகளெல்லாவற்றிலும் அழகானது மயில். 3. புலி, சிங்கத்தினுங் கொடுமையானது. 4. ஞானத்தினும் அருமையானது வேறில்லை. 5. அது இதிலும் நன்மையானது. 6. பாலைவனத்தில் பசுமையான புல்லைக் காண்பதரிது. 7. மேலானவர்கள் இப்படிச் செய்யார்கள். 8. தீயினும் கொடுமையானவை கடுஞ்சொற்கள். 9. உனது வாள் எனது வாளினுங் கூர்மையானது. 10. அதிலும் இது புதுமையானதன்றோ? 11. இக்கனிகள் மிகவும் இனிமையானவை. 12. அவன் மனம் தூய்மையுடையது. அஃது இதினும் வெம்மையுடையது. 14. உண்மையானதை ஒளியாமற் சொல், 15. அறிவின் இன்மை உடையவர்கள். 16. இஃது எல்லாவற்றிலும் பழமையானது. 17. அவர்கள் எங்களிலும் வறுமையடைந்தவர்கள். 18. மரங்களிலெல்லாம திண்மையானது எது? 19. அந்தோ! வறுமை பொல்லாமை உடையது. 20. கற்களிலெல்லாம் திண்மையுடையது வைரக்கல் 21. அப்பூவின் இதழ்கள் மிகவும் மென்மையானவை. 22. நீ என்னிலும் நெடுமையாயிருக்கிறாய்.

C. இவைகளில் வினையாலணைந்த பெயர்கட்கு, இலக்கணம் கூறு.

(1) இன்னது செய்யென்று கூறுங்கள். (2) வரியேங்கட்கு வாழ்நாள் சுமையே. (3) நல்லாரெனும் பெயருடன் பொல்லார் பலர் இப்பூமியில் உளர். (4) அன்னாள் அருந்ததியை அன்னாள். (5) யாம், கல்வியில் கடலே அனையம். (6) இந்நாள் நீங்கள் பெரியீர் (7) இன்னவாழ்வினும் சாதல் அழகியது. (8) என்ன புத்தகம் இஃது? (9) இன்ன இதன் முன் கண்டிலோம். (10) கூரிய அம்புகளினும் கொடிய நின்மொழிகள். (11) செய்ய கமலத்து உறையும் திருவை அன்னாள் அத்தையல். (12) செவ்வியோன் எவனும் இவை செய்யான். (13) இவை என்ன; நின்ன அல்ல.

60. பெயரெச்சங்களை யொட்டிய சில குறிப்புக்கள்.

1. இரண்டாங்கணப் பகுதியிற் பிறக்கும்(பக்கம் 104பார்)இறந்த காலப்பெயரெச்சம், "இன்" என்னும் காலக்குறியின்ன கரமெய்யை யொழித்து, சந்தியால் வரும் யகரமெய்யைப் பெற்றும் வரும்.

ஆடின	ஆடிய	வாங்கின	வாங்கிய	எண்ணின	எண்ணிய
ஆறின	ஆறிய	கூவின	கூவிய	அருளின	அருளிய

2 "உம்" விகுதி பெற்று முடிந்த சில முற்றுக்களி னிடையிலும், பெயரெச்சங்களின் இடையிலும்நின்ற உயிர்மெய் மறைந்துபோம்.

ஆகும்	ஆ - ம்	சாகும்	சா - ம்	வேகும்	வே - ம்
போகும்	போ - ம்	நோகும்	நோ - ம்	வாவும்	வா - ம்

3. "உடைய" என்னும் உடன்பாட்டுக் குறிப்புப் பெயரெச்சம் ஈற்றெழுத்தாகிய ய, கெட்டு, "உடை" என்று பாட்டில் வரும்.

4. சில விடங்களில், உடன்பாட்டுத் தெரிநிலை வினைப்பகுதிகள், பெயரெச்சத்தின் தன்மையைப் பெற்று, பெயர்ச்சொல்லைத் தழுவி வரும்.

அழியுடல்	சுடுநீர்	அடுகளிறு	இயலுதவி
படர்கொடி	நிறையிருள்	உயர்மரம்	வருசிறுவர்
ஆகுபெயர்	சாய்சுவர்	மகிழ்மனம்	நீண்முடி
தகுபுகழ்	தருதரு	கெடுபுத்தி	தாழ்குழல்
அலைமனம்	ஓடுபுனல்	சுடுமொழி	விரிகதிர்
துணிநெஞ்சு	கொல்யானை	நகைமுகம்	பழிநடை

மேலே காட்டியவாறு, பெயரெச்சத்தின் தன்மையைப் பெற்று, பெயர்ச்சொல்லைத் தழுவி நிற்கின்ற உடன்பாட்டுத் தெரிநிலை வினைப்பகுதி, "வினைத்தொகை" என்னப்படும்.

☞ வினைத்தொகைகள் விரிய, அழியும் உடல், படர்கின்ற கொடி, ஆன பெயர் என, இடத்திற்கேற்ற பெயரெச்சங்களாகும்.

வா—வெள்ளம் = வருவெள்ளம், ஆ—ஊழ் = ஆகூழ், தா-மரம் = தருமரம், சா-உயிர் = சாகுயிர் எனப் பகுதிகள் சிறிது திரிவதுமாம்.

☞ வேட்டுக்கத்தி, ஏறுகுதிரை, தின்பண்டம் போன்றவை விரி வனவல்ல.

பன்னிருகணப் பகுதியினின்றும் பிறந்த பல்வகை வினைமுற்று. வினையெச்சம், பெயரெச்சம் முதலானவைகளுக்கு உறுப்பிலக்கணங் கூறப் பழகல்.

1. செய்தேன்.
செய்—பகுதி.
ஏன்—தன்மை யொருமை வினை முற்று விகுதி.
த்—இறந்தகால விடைநிலை.

2. கொய்தனள்.
கொய்—பகுதி.
அள்—உயர்திணைப் படர்க்கைப் பெண்பால் ஒருமை வினைமுற்று விகுதி.
த்—இறந்தகால விடைநிலை.
அன்—சாரியை.

3. பெய்கின்றது.
பெய்—பகுதி.
து-அஃறிணைப் படர்க்கை ஒருமை வினைமுற்று விகுதி.
கின்று—நிகழ்கால விடைநிலை.
அ—சாரியை.
உகரக்கேடு சந்தி.

4. செய்தன்று
செய்—பகுதி
று-அஃறிணைப்படர்க்கை யொருமை வினைமுற்று விகுதி.
த்—இறந்தகால விடைநிலை.
அன்—சாரியை.

5. தொழுவார்கள்.
தொழு—பகுதி
ஆர்-உயர்திணைப்படர்க்கை இருபாற் பன்மைவினைமுற்று விகுதி.
கள்—விகுதிமேல் விகுதி-
வ்—எதிர்கால விடைநிலை.

6. செய்த.
செய்—பகுதி.
அ—பெயரெச்ச விகுதி.
த்—இறந்தகால விடைநிலை.

7. உழுது-
உழு—பகுதி.
உ—வினையெச்ச விகுதி.
த்—இறந்தகால விடைநிலை.

8. தொழா.
தொழு—பகுதி.
ஆ இறந்தாலவினையெச்சவிகுதி.
உகரக்கேடு சந்தி

9. தொழுதால்
தொழு—பகுதி.
ஆல்-எதிர்காலவினையெச்சவிகுதி
து—சாரியை
உகரக்கேடு சந்தி.

10. செய்யின்.
செய்—பகுதி.
இன்-எதிர்காலவினையெச்சவிகுதி.
ய்—இரட்டியது சந்தி.

11. செய்திலன்.
செய்—பகுதி.
அன்—தன்மை ஒருமை வினை முற்று விகுதி.
ந்—இறந்தகால விடைநிலை.
இல்— எதிர்மறை விகுதி.

12. செய்கின்றில.
செய்—பகுதி.
அ — அஃறிணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று விகுதி.
கின்று—நிகழ்கால விடைநிலை.
இல்—எதிர்மறை விகுதி.
உகரக்கேடு சந்தி.

13. தொழாள்.
தொழு—பகுதி.
ஆள்—உயர்திணைப் படர்க்கைப் பெண்பா லொருமை வினை முற்று விகுதி.
ஆ-எதிர்மறைவிகுதி புணர்ந்து கெட்டது.
உகரக்கேடு சந்தி.

14. செய்யாத.
செய்—பகுதி.
அ—பெயரெச்ச விகுதி-
ஆ—எதிர்மறை விகுதி.
த்—எழுத்துப்பேறு.
ய்—இரட்டியது சந்தி.

15. உழாதது.
உழு—பகுதி.
து—அஃறிணைப் படர்க்கை யொருமைப்பெயர் விகுதி.
ஆ—எதிர்மறை விகுதி.
த—எழுத்துப் பேறு.
உகரக்கேடு சந்தி. அ-சாரியை
16. ஆடினோம்.
ஆடு—பகுதி.
ஓம்—தன்மைப் பன்மை வினை முற்று விகுதி:
இன—இறந்தகால விடைநிலை.
உகரக்கேடு சந்தி.
17. கூவிற்று.
கூவு—பகுதி.
று-அஃறிணைப் படர்க்கையொருமை வினைமுற்று விகுதி.
இன்-இறந்தகால விடைநிலை.
பகுதியீற்று உகரங்கெட்டதும் இடைநிலையீற்று னகரம் றகரமானதும் சந்தி.
18. எண்ணின.
எண்—பகுதி.
அ—பெயரெச்ச விகுதி.
இன்-இறந்தகால விடைநிலை.
ண்—இரட்டியது சந்தி.
19. அருளும்.
அருள்—பகுதி.
உம்-எதிர்காலப் பெயரெச்ச விகுதி.
20. ஆடி.
ஆடு—பகுதி.
இ—இறந்தகால வினையெச்ச விகுதி.
உகரக்கேடு சந்தி.
21. தேறினது.
தேறு—பகுதி.
து-அஃறிணைப்படர்க்கையொருமை வினைமுற்று விகுதி.
இன்-இறந்தகால விடைநிலை.
அ—சாரியை.
உகரக்கேடு சந்தி.

22. பாடினால்.
பாடு—பகுதி.
ஆல்—எதிர்கால வினையெச்ச விகுதி.
இன்—சாரியை.
உகரக்கேடு சந்தி.
23. கூறிய.
கூறு—பகுதி.
அ—பெயரெச்ச விகுதி.
இன்-இறந்தகால விடைநிலை.
இடைநிலையீற்று ன் தொக்கது.
ய்—உடன்படுமெய்.
24. ஆடிலள்.
ஆடு—பகுதி.
அள்—உயர்திணைப் படர்க்கைப் பெண்பால் ஒருமை வினைமுற்று விகுதி.
இல்-காலமுஞ் செயலும் மறுக்க வந்த எதிர்மறைவிகுதி. (P. 150).
உகரக்கேடு சந்தி.
25. ஓடா.
ஓடு—பகுதி.
ஆ—இறந்தகால வினையெச்ச விகுதி.
உகரக்கேடு சந்தி.
26. வணங்காத.
வணங்கு—பகுதி.
அ—பெயரெச்ச விகுதி.
ஆ—எதிர்மறை விகுதி.
த—எழுத்துப்பேறு.
உகரக்கேடு சந்தி.
27. தூங்காது.
தூங்கு—பகுதி.
உ—வினையெச்ச விகுதி.
ஆ—எதிர்மறை விகுதி.
த்—எழுத்துப்பேறு.
உகரக்கேடு சந்தி.
28. எண்ணற்க.
எண—பகுதி.
க—வியங்கோள் வினைமுற்று விகுதி.

28. அல்—எதிர்மறை விகுதி.
பகுதியீற்று ண் இரட்டியதும் அல்லீற்று "ல்" "ற்" ஆனதுஞ் சந்தி.

29. ஓடாதே.
ஓடு—பகுதி.
எ—முன்னிலை ஏவலொருமை வினைமுற்று விகுதி.
ஆ—எதிர்மறை விகுதி.
த்—எழுத்துப்பேறு.
உகரக்கேடு சந்தி.

30. ஓடமின்.
ஓடு—பகுதி.
மின்-முன்னிலை ஏவற் பன்மை வினைமுற்று விகுதி.
அல்—எதிர்மறை விகுதி.
உகரக்கேடு சந்தி. ல், ன் ஆனது.

31. பாடாய்.
பாடு—பகுதி.
ஆய்-முன்னிலை ஏவலொருமை விகுதி.
உகரக்கேடு சந்தி.

32. அறிந்தனை.
அறி—பகுதி.
ஐ-முன்னிலை யொருமை வினைமுற்று விகுதி.
த்—இறந்தகால விடைநிலை.
அன்—சாரியை.
த்—இரட்டியது சந்தி.
சந்தித் தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.

33. அடைந்தன்று.
அடை—பகுதி.
று—அஃறிணைப் படர்க்கை யொருமை வினைமுற்றுவிகுதி
த்—இறந்தகால விடைநிலை.
அன்—சாரியை.
த—இரட்டியது சந்தி.
சந்தித் தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.

34. அறிவோம்.
அறி—பகுதி.
ஓம்—தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.
வ்—எதிர்கால விடைநிலை.

35. கடைய.
கடை—பகுதி.
அ—நிகழ்கால வினையெச்ச விகுதி.
ய்—உடன்படுமெய்.

36. அறிப.
அறி—பகுதி.
ப-உயர்திணைப் படர்க்கை இருபாற் பன்மை வினைமுற்று விகுதி.

37. அணிந்த.
அணி—பகுதி.
அ—பெயரெச்ச விகுதி.
த்—இறந்தகால விடைநிலை.
த்—இரட்டியது சந்தி.
சந்தித் தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.

38. அறிந்தால்.
அறி—பகுதி.
ஆல்—எதிர்கால வினையெச்ச விகுதி.
து—சாரியை.
த—இரட்டியதும், உகரக்கேடும் சந்தி.
சந்தித் தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.

39. அடைந்திலேன்.
அடை—பகுதி.
ஏன்—தன்மை யொருமை வினைமுற்று விகுதி.
த—இறந்தகால விடைநிலை.
இல்—எதிர்மறை விகுதி.
த—இரட்டியது சந்து.
சந்தித் தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.

40. அறியாமை.
அறி—பகுதி.
மை—தொழிற்பெயர் விகுதி.
ஆ—எதிர்மறை விகுதி.
ய்—உடன்படுமெய்.

41. அரியற்க.
அரி—பகுதி.
க—வியங்கோள் வினைமுற்று விகுதி.
அல்—எதிர்மறை விகுதி.
ய்—உடன்படுமெய்.
அல்லீற்று "ல்" "ற்" ஆனது சந்தி.

42. வந்தான்.
வா-பகுதி. ("வ" எனக் குறுகியது.)
ஆன்-உயர்திணை ஆண்பாலொருமை வினைமுற்று விகுதி.
த்—இறந்தகால விடைநிலை.
த்—இரட்டியது சந்தி.
சந்தித் தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.

43. பிரிவன்.
பிரி—பகுதி.
அ—அஃறிணைப் படர்க்கைப் பன்மைப் பெயர் விகுதி.
வ்—எதிர்கால விடைநிலை.
அன்—சாரியை.

44. அறியன்மின்.
அறி—பகுதி.
மின்—முன்னிலை ஏவற்பன்மை வினைமுற்று விகுதி.
அல்—எதிர்மறை விகுதி.
ய்—உடன்படுமெய்.
அல்லீற்று "ய்" "ன்" ஆனது சந்தி.

45. கோன்றது.
கொல்—பகுதி.
து-அஃறிணைப்படர்க்கையொருமை வினைமுற்று விகுதி.
ற்—இறந்தகால விடைநிலை.
அ—சாரியை.
பகுதியீற்று லகரம் நகரமாகிப் பிறகு மெலிந்தது.

46. கோல்வீர்கள்.
கொல்—பகுதி.
ஈர்—முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி.
கள்—விகுதிமேல் விகுதி.
வ்—எதிர்கால விடைநிலை.

47. அகன்றனை.
அகல்—பகுதி
ஐ-முன்னிலை யொருமை வினைமுற்று விகுதி.
ற்—இறந்தகால விடைநிலை.
அன்—சாரியை.
பகுதியீற்று லகரம் நகரமாகிப் பிறகு மெலிந்தது.

48. சேன்ற.
செல்—பகுதி.
அ—பெயரெச்ச விகுதி.
ற்—இறந்தகால விடைநிலை.
பகுதியீற்று லகரம் நகரமாகிப் பிறகு மெலிந்தது.

49. வேன்று.
வெல்—பகுதி.
உ—வினையெச்ச விகுதி.
ற்—இறந்தகால விடைநிலை.
பகுதியீற்று லகரம் நகரமாகிப் பிறகு மெலிந்தது-

50. கோன்றமை.
கொல்—பகுதி.
மை—தொழிற்பெயர் விகுதி.
ற்—இறந்தகால விடைநிலை.
அ—சாரியை.
பகுதியீற்று லகரம் நகரமாகி, மெலிந்தது.

51. கற்றோம்.
கல்—பகுதி.
ஓம்—தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.
ற்—இறந்தகால விடைநிலை.
பகுதியீற்று லகரம் றகரமானது சந்தி.

52. தோற்றான்.
தோல்—பகுதி.
ஆன்—உயர்திணைப் படர்க்கை யாண்பாலொருமை வினை முற்று விகுதி.
ற்—இறந்தகால விடைநிலை.
பகுதியீற்று லகரம்றகரமானது சந்தி.

53. விற்கின்றாய்.
வில்—பகுதி.
ஆய்—முன்னிலை ஒருமை வினை முற்று விகுதி.
கின்று நிகழ்கால இடைநிலை.
பகுதியீற்றுலகரம்றகரமானது சந்தி.

54. கற்பாள்.
கல்—பகுதி.
ஆள்—உயர்திணைப் படர்க்கை பெண்பால் ஒருமை வினை முற்று விகுதி.
ப்—எதிர்கால விடைநிலை.

55. கற்க.
கல்—பகுதி.
அ—நிகழ்கால வினையெச்ச விகுதி.
கு—சாரியை.
பகுதியீற்று லகரம் றகரமானதும், உகரக்கேடுஞ் சந்தி.

56. நோற்ப.
நோல்—பகுதி.
ப-உயர்திணைப் படர்க்கை இருபாற் பன்மை எதிர்கால வினைமுற்று விகுதி.
பகுதியீற்று லகரம்றகரமானது சந்தி.

57. தோற்கும்.
தோல்—பகுதி.
உம்-எதிர்காலப் பெயரெச்ச விகுதி.
கு—சாரியை.
பகுதியீற்று லகரம் றகரமானதும், உகரக்கேடுஞ் சந்தி.

58. தோற்றல்.
தோல்—பகுதி.
ஆல்—எதிர்கால வினையெச்ச விகுதி.
து—சாரியை.
பகுதியீற்று லகரமுஞ்சாரியையின் தகரமும் றகரங்களானதும், உகரங்கெட்டதும் சந்தி.

59. விற்பின்.
வில்—பகுதி.
இன்—எதிர்கால வினையெச்ச விகுதி.
ப்—எழுத்துப்பேறு
பகுதியீற்று லகரம் றகரமானது சந்தி.

60. கற்றிலேன்.
கல்—பகுதி.
ஏன்-தன்மையொருமை வினை முற்று விகுதி.
ற்—இறந்தகால விடைநிலை.
இல்—எதிர்மறை விகுதி.
பகுதியீற்று லகரம் றகரமானது சந்தி.

61. விற்காத.
வில்—பகுதி.
அ—பெயரெச்ச விகுதி.
கு—சாரியை
ஆ—எதிர்மறை விகுதி.
த்—எழுத்துப்பேறு.
பகுதியீற்று லகரம் றகரமானதும், உகரக்கேடுஞ் சந்தி.

62. கற்பித்தமை.
கல்—பகுதி.
பி-பிறவினைப்படுத்தும் விகுதி.
பகுதியீற்று லகரம் றகரமானதும் சந்தி.
கற்பி-அனைத்துமொரு பகுதி.
மை—தொழிற்பெயர் விகுதி.
த்—இறந்தகால விடைநிலை.
அ—சாரியை.
த்—இரட்டியது சந்தி.

63. கற்கல்.
கல்—பகுதி.
அல்—தொழிற் பெயர் விகுதி.
கு—சாரியை.
பகுதியீற்று லகரம் றகரமான
து சந்தி.

64, விற்றல்.
வில்—பகுதி.
தல்—தொழிற் பெயர் விகுதி.
பகுதியீற்று லகரம் றகரமான
து சந்தி.

65. கற்காதே.
கல்—பகுதி.
ஏ—முன்னிலை ஏவலொருமை
வினைமுற்று விகுதி.
த்—எழுத்துப்பேறு.
கு—சாரியை.
ஆ—எதிர்மறை விகுதி.
பகுதியீற்று லகரம் றகரமான
தும், உகரக்கேடுஞ் சந்தி.

66. கற்கீர்.
கல்—பகுதி.
ஈர்-முன்னிலைப் பன்மை வினை
முற்று விகுதி.
கு—சாரியை.
ஆ—எதிர்மறை விகுதி புணர்
ந்து கெட்டது.
பகுதியீற்று லகரம் றகரமான
தும், உகரக்கேடுஞ் சந்தி.

67. கற்பான்.
கல்—பகுதி,
பான்—காரியப்பொருள் வினை
யெச்ச விகுதி.
பகுதியீற்று லகரம் றகரமான
து சந்தி.

68. ஆண்டீர்கள்.
ஆள்—பகுதி.
ஈர்-முன்னிலைப் பன்மை வினை
முற்று விகுதி.
கள்—விகுதிமேல் விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.
பகுதியீற்று ளகரம் டகரமா
கிப் பிறகு மெலிந்தது.

69. கொண்டவனை;
கொள்—பகுதி.
ஐ-முன்னிலை யொருமை வினை
முற்று விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.
அன்—சாரியை.
பகுதியீற்று ளகரம் டகரமா
கிப் பிறகு மெலிந்தது.

70. மாண்டன.
மாள்—பகுதி.
அ—அஃறிணைப் படர்க்கைப்
பன்மை வினைமுற்று விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.
அன்—சாரியை.
பகுதியீற்று ளகரம் டகரமா
கிப் பிறகு மெலிந்தது.

71. உருள்கின்றது.
உருள்—பகுதி
து—அஃறிணைப் படர்க்கை
ஒருமை வினைமுற்று விகுதி.
கின்று—நிகழ்கால விடைநிலை.
அ—சாரியை.
உகரக்கேடு சந்தி.

72. வெருளும்.
வெருள்—பகுதி
உம்—எதிர்காலப் பெயரெச்ச
விகுதி.

73. நீண்ட.
நீள்—பகுதி
அ—பெயரெச்ச விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை,
பகுதியீற்று ளகரம் டகரமாகி
மெலிந்தது.

74. புரண்டு.
புரள்—பகுதி.
உ—வினையெச்ச விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை
பகுதியீற்று ளகரம் டகரமா
கிப் பிறகு மெலிந்தது.

75. கொள்ளா.
கொள்—பகுதி.
ஆ—இறந்தகால வினையெச்ச விகுதி.
பகுதியீற்று ளகரம் இரட்டியது சந்தி.

76. கொள்ளின்.
கொள்—பகுதி.
இன்—எதிர்கால வினையெச்ச விகுதி.
பகுதியீற்று ளகரம் இரட்டியது சந்தி.

77. கொண்டால்.
கொள்—பகுதி.
ஆல்—எதிர்கால வினையெச்ச விகுதி.
து—சாரியை.
பகுதியீற்று ளகரமும், சாரியையின் தகரமும் டகரங்களாகி, ஒன்று மெலிந்தது.

78. கொண்டிலள்.
கொள்—பகுதி.
அள்-உயர்திணைப் பெண்பால் ஒருமை வினைமுற்று விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.
இல்—எதிர்மறை விகுதி.
பகுதியீற்று ளகரம் டகரமாகிப் பிறகு மெலிந்தது

79. ஆளன்மின்.
ஆள்—பகுதி.
மின்—முன்னிலை ஏவற் பன்மை வினைமுற்றுவிகுதி.
அல்—எதிர்மறை விகுதி.
அல்லீற்று லகரம் னகரமானது சந்தி.

80. ஆண்டமை.
ஆள்—பகுதி.
மை—தொழிற்பெய விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.
அ—சாரியை.
பகுதியீற்று ளகரம்டகரமாகிப் பிறகு மெலிந்தது.

81. கொள்ப
கொள்—பகுதி.
ப-உயர்திணைப் படர்க்கை இருபாற் பன்மை எதிர்கால வினைமுற்றுவிகுதி.

82. கொள்ளேன்.
கொள்—பகுதி.
என்—தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.
ஆ-எதிர்மறை விகுதிபுணர்ந்து கெட்டது.
பகுதியீற்று ளகரமெய் இரட்டியது சந்தி.

83. கொள்வோர்.
கொள்—பகுதி.
ஆர்—உயர்திணைப் படர்க்கை இருபாற் பன்மைப் பெயர் விகுதி.
வ்—எதிர்கால விடைநிலை.
விகுதி முதல் ஆ, ஒ ஆனது செய்யுள் வழக்கு

84. மூட்டுக.
மூள்—பகுதி.
டு-பிறவினைப் படுத்தும் விகுதி.
பகுதியீற்று "ள்" "ட்" ஆனது சந்தி.
க—வியங்கோள் வினைமுற்று விகுதி.

85. உண்டனை.
உண்—பகுதி.
ஐ—முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.
அன்—சாரியை.

86. உண்கின்றனள்.
உண்—பகுதி.
அள்-உயர்திணைப் படர்க்கைப் பெண்பாலொருமை வினைமுற்று விகுதி.
கின்று—நிகழ்கால விடைநிலை
அன்—சாரியை.
உகரக்கேடு சந்தி.

87. உண்பேன்.
உண்—பகுதி.
ஏன்—தன்மை ஒருமை வினை முற்று விகுதி.
ப்—எதிர்கால விடைநிலை.

88. உண்ணுவீர்கள்.
உண்—பகுதி.
ஈர்—முன்னிலைப்பன்மை வினை முற்றுவிகுதி.
கள்—விகுதிமேல் விகுதி.
வ்—எதிர்கால விடைநிலை.
உ—சாரியை, ண் இரட்டியது சந்தி

89. கண்ட.
காண்—பகுதி (கண் எனக் குறுகியது.)
அ—பெயரெச்ச விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.

90. பூண்டு.
பூண்—பகுதி.
உ—வினையெச்ச விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.

91. மாண்டார்.
மாண்—பகுதி.
ஆர்—உயர்திணைப் படர்க்கை இருபாற் பன்மை வினைமுற்று விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.

92. காட்சி.
காண்—பகுதி.
சி—தொழிற்பெயர் விகுதி.
பகுதியீற்று ணகரம் டகரமானது சந்தி.

93. காண்க.
காண்—பகுதி.
க—வியங்கோள் வினைமுற்று விகுதி.

94. காணா.
காண்—பகுதி.
ஆ—இறந்தகால வினையெச்ச விகுதி.

95. காணா.
காண்—பகுதி.
ஆ—அஃறிணைப் பன்மை எதிர்மறை வினைமுற்று விகுதி.

96. காண்டல்.
காண்—பகுதி.
தல்—தொழிற்பெயர் விகுதி.
விகுதி முதல் தகரம் டகரமானது சந்தி

97. பூண்டிலோம்.
பூண்—பகுதி.
ஓம்—தன்மைப் பன்மை வினை முற்று விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.
இல்—எதிர்மறை விகுதி.

98. மாண்கின்றில.
மாண்—பகுதி.
அ-அஃறிணைப் பன்மை வினை முற்று விகுதி.
கின்று—நிகழ்கால விடைநிலை.
இல்—எதிர்மறை விகுதி.
உகரக்கேடு சந்தி.

99. கண்டில்.
காண்—பகுதி (கண் எனக் குறுகியது).
அ—அஃறிணைப் பன்மை வினை முற்று விகுதி
ட்—இறந்தகால விடைநிலை.
இல்—எதிர்மறை விகுதி.

100. காணேன்.
காண்—பகுதி.
ஏன்—தன்மை ஒருமை வினை முற்று விகுதி.
ஆ—எதிர்மறை விகுதி புணர்ந்து கெட்டது.

101. பூணுவாய்.
பூண்—பகுதி.
ஆய்—முன்னிலை ஒருமை வினை முற்று விகுதி.
வ்—எதிர்கால விடைநிலை.
உ—சாரியை.

102. காணற்க.
காண்—பகுதி.
க—வியங்கோள் வினைமுற்று விகுதி.
அல்—எதிர்மறை விகுதி.
அல்லீற்று லகரம் றகரமானது சந்தி.

103. கேட்டான்.
கேள்—பகுதி.
ஆன்—உயர்திணைப் படர்க்கை யாண்பா லொருமை வினைமுற்று விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.
பகுதியீற்று ளகரம் டகரமானது சந்தி.

104. நட்டனம்.
நள்—பகுதி.
அம்—தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.
பகுதியீற்று ளகரம் டகரமானது சந்தி.

105. வேட்கின்றீர்.
வேள்—பகுதி.
ஈர்—முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி.
கின்று—நிகழ்கால விடைநிலை.
பகுதியீற்று ளகரம் டகரமானதும், இடைநிலையீற்று உகரங் கெட்டதுஞ் சந்தி.

106. கேட்போம்.
கேள்—பகுதி.
ஓம்—தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.
ப்—எதிர்கால விடைநிலை.
பகுதியீற்று ளகரம் டகரமானது சந்தி.

107. நட்டு.
நள்—பகுதி.
உ—வினையெச்ச விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.
பகுதியீற்று ளகரம் டகரமானது சந்தி.

108. நட்டால்.
நள்—பகுதி.
ஆல்—எதிர்கால வினையெச்ச விகுதி.
து—சாரியை.
பகுதியீற்றுளகரமும்சாரியையின் தகரமும் டகரங்களானதும் உகரங் கெட்டதுஞ் சந்தி.

109. கேட்க.
கேள்—பகுதி.
அ-நிகழ்கால வினையெச்ச விகுதி
கு—சாரியை.
உகரக்கேடு சந்தி.

110. கேட்ப.
கேள்—பகுதி.
அ-நிகழ்கால வினையெச்ச விகுதி.
ப்—விரித்தல் விகாரம்.
பகுதியீற்று ளகரம் டகரமானது சந்தி.

111. கேட்டிலேன்.
கேள்—பகுதி.
என்—தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.
இல்—எதிர்மறை விகுதி.
பகுதியீற்று ளகரம் டகரமானது சந்தி.

112. கேட்காமல்.
கேள்—பகுதி.
மல்—வினையெச்ச விகுதி.
ஆ—எதிர்மறை விகுதி.
கு—சாரியை.
பகுதியீற்று ளகரம் டகரமானதும், உகரங் கெட்டதுஞ் சந்தி.

113. கேட்டமை.
கேள்—பகுதி.
மை—தொழிற்பெயர் விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.
அ—சாரியை.
பகுதியீற்று ளகரம் டகரமானது சந்தி.

114. நள்ளாத.
நல்—பகுதி.
அ—பெயரெச்ச விகுதி.
த்—எழுத்துப்பேறு.
ஆ—எதிர்மறை விகுதி.
பகுதியீற்று ளகரம் இரட்டியது சந்தி.

115. கேட்பின்.
கேள்—பகுதி.
இன்—எதிர்கால வினையெச்ச விகுதி.
ப்—எழுத்துப்பேறு.
பகுதியீற்று ளகரம் டகரமானது சந்தி.

116. கேட்காத.
கேள்—பகுதி.
ஏ—முன்னிலை ஏவலொருமை வினைமுற்று விகுதி.
ஆ—எதிர்மறை விகுதி.
கு—சாரியை.
பகுதியீற்று ளகரம் டகரமானதும், உகரங் கெட்டதுஞ் சந்தி.

117. வேட்டு.
வேள்—பகுதி.
உ—வினையெச்ச விகுதி.
ட்—இறந்தகால விடைநிலை.
பகுதியீற்று ளகரம் டகரமானது சந்தி.

118. கேட்டல்.
கேள்—பகுதி.
தல்—தொழிற்பெயர் விகுதி.
பகுதியீற்று ளகரமும், விகுதி முதல் தகரமும் டகரங்களானது சந்தி.

119. விட்டோம்.
விடு—பகுதி (விட்டு என விகாரப்பட் டிறந்தகாலம் காட்டியது).
ஓம்—தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.
உகரக்கேடு சந்தி.

120. விட்டன்று.
விடு—பகுதி (விட்டு என விகாரப்பட் டிறந்தகாலங் காட்டியது).
று—அஃறிணைப்படர்க்கை ஒருமை வினைமுற்று விகுதி.
அன்—சாரியை.
உகரக்கேடு சந்தி.

121. பெற்றாள்.
பெறு—பகுதி (பெற்று என விகாரப்பட் டிறந்தகாலங் காட்டியது).
ஆள்—உயர்திணைப் படர்க்கைப் பெண்பால் ஒருமை வினைமுற்று விகுதி.
உகரக்கேடு சந்தி.

122. விட்ட.
விடு—பகுதி (விட்டு என விகாரப்பட்டிறந்தகாலங் காட்டியது).
அ—பெயரெச்ச விகுதி.
உகரக்கேடு சந்தி.

123. நட்டு.
நடு—பகுதி (நட்டு என விகாரப்பட் டிறந்தகாலங் காட்டியது).
உ—வினையெச்ச விகுதி.
உகரக்கேடு சந்தி.

124. சுட்டால்.
சுடு — பகுதி (புணர்ச்சியால், சுட்டு என விகாரப்பட்டது).
ஆல்—எதிர்கால வினையெச்ச விகுதி.
உகரக்கேடு சந்தி.

125. சுடின்.
சுடு—பகுதி.
இன்—எதிர்கால வினையெச்ச விகுதி.
உகரக்கேடு சந்தி.

126. பட்டமை.
படு—பகுதி (பட்டு என் விகாரப்பட் டிறந்தகாலங் காட்டியது).
மை—தொழிற்பெயர் விகுதி.
அ—சாரியை.
உகரக்கேடு சந்தி.

127. பெற்றிலாய்.
பெறு—பகுதி (பெற்று என விகாரப்பட் டிறந்தகாலங் காட்டியது).
ஆய்—முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.
இல்—எதிர்மறை விகுதி.
உகரக்கேடு சந்தி.

128. அற்றில்.
அறு-பகுதி (அற்று என விகாரப்பட் டிறந்தகாலங் காட்டியது).
அ—அஃறிணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று விகுதி.
இல்—எதிர்மறை விகுதி.
உகரக்கேடு சந்தி.

129. பெறாத.
பெறு—பகுதி.
அ—பெயரெச்ச விகுதி.
த்—எழுத்துப்பேறு.
எதிர்மறை விகுதி.
உகரக்கேடு சந்தி.

130. பெறுவான்.
பெறு—பகுதி.
வான்—காரியப்பொருள் வினையெச்ச விகுதி.

131. தொட்டில்.
தொடு—பகுதி (தொட்டு என விகாரப்பட் டிறந்தகாலங் காட்டியது).
அ—அஃறிணைப் பன்மை வினைமுற்று விகுதி.
இல்—எதிர்மறை விகுதி.
உகரங்கெட்டது சந்தி.

132. புக்கோம்.
புகு—பகுதி (புக்கு என விகாரப்பட் டிறந்தகாலங் காட்டியது).
ஓம்—தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.
உகரக்கேடு சந்தி.

133. மிக்க.
மிகு—பகுதி (மிக்கு என விகாரப்பட் டிறந்தகாலங் காட்டியது).
அ—பெயரெச்ச விகுதி.
உகரக்கேடு சந்தி.

134. தொக்கு
தொகு—பகுதி (தொக்கு என விகாரப்பட் டிறந்தகாலங் காட்டியது).
உ—வினையெச்ச விகுதி.
உகரக்கேடு சந்தி.

135. போட்டேன்.
போடு—பகுதி (போட்டு என விகாரப்பட் டிறந்தகாலங் காட்டியது).
ஏன்—தன்மையொருமை வினைமுற்று விகுதி.
உகரக்கேடு சந்தி.

136. கோத்தேன்.
கோ—பகுதி.
ஏன்—தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.
த்—இறந்தகால விடைநிலை.
த்—இரட்டியது சந்தி.

137. பார்த்தாய்.
பார்—பகுதி,
ஆய்—முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.
த்—இறந்தகால விடைநிலை.
த்—இரட்டியது சந்தி.

138. கடித்தன.
கடி—பகுதி.
அ—அஃறிணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று விகுதி.

138. த்—இறந்தகால விடைநிலை.
த்—இரட்டியது சந்தி.
அன்—சாரியை.

139. எடுக்கின்றோம்.
எடு—பகுதி.
ஓம்—தன்மைப் பன்மை வினை முற்று விகுதி.
கின்று—நிகழ்கால விடைநிலை.
ககரத்தோற்றமும், உகரக்கேடுஞ் சந்தி.

140. படிப்பேன்.
படி—பகுதி.
ஏன்—தன்மை ஒருமை வினை முற்று விகுதி.
ப்—எதிர்கால விடைநிலை.
ப்—இரட்டியது சந்தி.

141. காய்க்கும்.
காய்—பகுதி.
உம்—அஃறிணைப் படர்க்கை யொருமை வினைமுற்று விகுதி.
கு—சாரியை.
ககரத்தோற்றமும், உகரக்கேடுஞ் சந்தி.

142. கொடுப்ப.
கொடு—பகுதி.
ப — உயர்திணைப் படர்க்கை இருபாற் பன்மை வினைமுற்று விகுதி.
ப்—இரட்டியது சந்தி.

143. கொடுத்தால்.
கொடு—பகுதி.
ஆல்—எதிர்கால வினையெச்ச விகுதி.
து—சாரியை.
த்—இரட்டியதும், உகரக்கேடுஞ் சந்தி.

144. கொடுப்பின்.
கொடு—பகுதி.
இன்—எதிகால வினையெச்ச விகுதி.
ப்—எழுத்துப்பேறு.
ப்—இரட்டியது சந்தி.

145. பூத்தின்று.
பூ—பகுதி.
று-அஃறிணைப்படர்க்கை யொருமை வினைமுற்று விகுதி.
த்—இறந்தகால விடைநிலை.
இல்—எதிர்மறை விகுதி.
தகரமெய் இரட்டியது சந்தி.
இல்லீற்று லகரம் றகரமாகிப் பிறகு மெலிந்தது.

146. பொறான்.
பொறு—பகுதி.
ஆன்—உயர்திணைப் படர்க்கை ஆண்பால் வினைமுற்றுவிகுதி.
ஆ—எதிர்மறை விகுதி புணர்ந்து கெட்டது.
உகரக்கேடு சந்தி.

147. எடுக்கல்.
எடு—பகுதி.
அல்—தொழிற்பெயர் விகுதி.
கு—சாரியை.
ககரத் தோற்றமும், உகரக்கேடுஞ் சந்தி.

I48. எடுக்கில்.
எடு—பகுதி.
இல்—எதிர்கால வினையெச்ச விகுதி.
கு—சாரியை.
ககரத்தோற்றமும் உகரக்கேடுஞ் சந்தி.

149. படித்தோன்.
படி—பகுதி.
ஆன் — உயர்திணை யாண்பாலொருமைப்பெயர் விகுதி.
த்—இறந்ததால விடைநிலை.
த்—இரட்டியது சந்தி.
விகுதி முதல் "ஆ" "ஓ" ஆனது செய்யுள் வழக்கு.

150. பழுக்கா.
பழு—பகுதி.
ஆ—அஃறிணைப் பன்மை எதிர் மறை குறைமுற்று விகுதி.
கு—சாரியை.
ககரத் தோற்றமும், உகரக்கேடுஞ் சந்தி.

151. படியோம்.
படி—பகுதி.
ஓம்—தன்மைப் பன்மை வினை முற்று விகுதி.
ஆ—எதிர்மறை விகுதி புணர்ந்து கெட்டது.
ய்—உடம்படு மெய்.

152. படிக்காமல்.
படி—பகுதி.
மல்—வினையெச்ச விகுதி.
ஆ—எதிர்மறை விகுதி.
கு—சாரியை.
ககரத் தோற்றமும் உகரக்கேடுஞ் சந்தி.

153. சிரிப்ப.
சிரி—பகுதி.
அ—நிகழ்கால வினையெச்ச விகுதி.
ம்—எழுத்துப்பேறு.
ப்—இரட்டியது சந்தி.

154. இருந்தேன்.
இரு—பகுதி.
ஏன்—தன்மை ஒருமை வினை முற்று விகுதி.
த்—இறந்தகால விடைநிலை.
த்—இரட்டியது சந்தி.
சந்தித் தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.

155. மறந்தீர்கள்.
மற—பகுதி.
ஈர்—முன்னிலைப் பன்மை வினை முற்று விகுதி.
கள்—விகுதிமேல் விகுதி.
த்—இறந்தகால விடைநிலை.
த்—இரட்டியது சந்தி.
சந்தித் தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.

156. கறக்கின்றான்.
கற—பகுதி.
ஆன்—உயர்திணைப் படர்க்கை யாண்பா லொருமை வினை முற்றுவிகுதி.
கின்று—நிகழ்கால விடைநிலை.
ககரத் தோற்றமும், உகரக்கேடுஞ் சந்தி.

157. திறப்பேன்.
திற—பகுதி.
ஏன்-தன்மை யொருமை வினை முற்று விகுதி.
ப்—எதிர்கால விடைநிலை.
ப்—இரட்டியது சந்தி.

158. மறந்த.
மற—பகுதி.
அ—பெயரெச்ச விகுதி.
த்—இறந்தகால விடைநிலை;
த்—இரட்டியது சந்தி.
சந்தித் தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.

159. நடக்கின்ற.
நட—பகுதி.
அ—பெயரெச்ச விகுதி.
கின்று—நிகழ்கால விடைநிலை,
ககரத் தோற்றமும், உகரக்கேடுஞ் சந்தி-

160. கடந்து
கட—பகுதி.
உ—வினையெச்ச விகுதி.
த்—இறந்தகால விடைநிலை.
த்—இரட்டியது சந்தி.
சந்தித தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.

161. இருக்க.
இரு—பகுதி.
அ—நிகழ்கால வினையெச்சவிகு [தி
கு—சாரியை.
ககரத் தோற்றமும், உகரக்கேடுஞ் சந்தி.

162. இருக்கும்.
இரு—பகுதி.
உம்—எதிர்காலப் பெயரெச்ச விகுதி.
கு—சாரியை.
ககரத் தோற்றமும், உகரக் கேடுஞ் சந்தி.

163. நடவாத.
நட—பகுதி.
அ—பெயரெச்ச விகுதி.
த்—எழுத்துப்பேறு.
ஆ—எதிர்மறை விகுதி.
எ—உடன்படுமெய்.

164. மறக்காமல்.
மற—பகுதி.
மல்—வினையெச்ச விகுதி.
ஆ—எதிர்மறை விகுதி.
கு—சாரியை.
நகரத் தோற்றமும், உகரக் கேடுஞ் சந்தி.

165. நடவேன்.
நட—பகுதி.
என்—தன்மை யொருமை வினை முற்று விகுதி.
ஆ—எதிர்மறை விகுதி புணர்ந்து கெட்டது.
வ்—உடன்—படுமெய்.

166. நடந்தில.
நட—பகுதி.
அ—அஃறிணைப் பன்மை வினை முற்று விகுதி.
த—இறந்தகால விடைநிலை.
இல்—எதிர்மறை விகுதி.
த்—இரட்டியது சந்தி.
சந்தித் தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்.

167. பறவாது.
பற—பகுதி.
து—அஃறிணை யொருமை வினைமுற்று விகுதி.
ஆ—எதிர்மறை விகுதி.
வ்—உடன்படுமெய்.

168. நடவன்மின்.
நட—பகுதி.
மின்—ஏவற்பன்மை வினை முற்று விகுதி.
அல்—எதிர்மறை விகுதி.
வ்—உடன்படுமெய்.
அல்லீற்றுல், ன் ஆனது சந்தி.

169. பறவா.
பற—பகுதி.
ஆ—அஃறிணைப் பன்மை எதிர்மறை எதிர்கால வினை முற்று விகுதி.
வ்—உடன்படுமெய்.

170. சிறக்கும்.
சிற—பகுதி.
உம்—எதிர்காலப் பெயரெச்ச [விகுதி.
கு—சாரியை.
ககரத் தோற்றமும், உகரக் கேடுஞ் சந்தி.

171. மறப்பின்.
மற—பகுதி.
இன்—எதிர்கால வினையெச்ச விகுதி.
ப்—எழுத்துப்பேறு.
ப்—இரட்டியது சந்தி.

172. அரிய.
அருமை—பகுதி (மை கெட்டு ரு, ரி ஆனது).
அ—பெயரெச்ச விகுதி.
ய்—உடன்படுமெய்.

173. வெய்ய.
வெம்மை விகுதி (மை கெட்டது).
பகுதியீற்று மகரமெய் யகர மெய்யானது.
அ—பெயரெச்ச விகுதி.
ய்—இரட்டியது சந்தி.

174. நல்லார்.
நன்மையின் நல்—பகுதி.
ஆர்—உயர்திணையிருபாற் பன்மைப்பெயர் விகுதி.
ல்—இரட்டியது சந்தி.

அப்பியாசம்—77.

கீழ்வரும் வாக்யங்களில் உள்ள கற்பான் முதலியவற்றிற்கு உறுப்பிலக்கணம் கூறுக.

1. கற்பான்.—1. யாம் இலக்கணங் கற்பான் இங்கு வந்தோம்.
2. இளமையில் கற்பான் கல்வியில் தேறுவான்.
3. இதை அவன் ஒரு வாரத்தில் கற்பான்.

2. உடையான்.—1. இவள் பேரறிவு உடையாள்.
2. அவன் சிறந்த உடையான்.
3. அவன் எவ்வளவு முயன்றும் அதை உடையான்.

3. தங்காது.—1. அக்குதிரை எங்குந் தங்காது ஓடியது.
2. செல்வம் எவர் பாலும் நிலையாய்த் தங்காது.
3. தங்காது கேளாமையால் அவர் மயங்குகின்றார்.

4. கூறிய.—1. நீ கூறிய கதைகள் மிகவும் இனியவை.
2. பறவைகள் எல்லாம் இங்ஙனம் கூறிய.
3. நும்பொருட்டுக் கூறிய கூறுகின்றேன்.

5. நடவா.—1. இது நடவாக் காரிய மென்றே எண்ணினோம்.
2. இரவு பகல் நடவா மதுரையிற் சேர்ந்தோம்.
3. அவ்வொலியால், என்குதிரை நடவா நின்றுவிட்டது.
4. இனி நம்மெண்ணங்கள் நடவா.

6. போனது.—1. நீ அங்குப் போனது எனக்குத் தெரியாது.
2. ஒரு வெள்ளை யானை இவ்வழியே போனது.
3. நீ போனது எண்ணிப் புலம்பி ஆவதேன்?

7. அன்னாய்.—1. அன்னாய் என்னைவிட்டு அகன்றனையே!
2. எமக்குத் தாய் அன்னாய்! எந் தவறு பொறு.
3. நீ கல்வியில் கலைமகள் அன்னாய்.

8. வந்தன.—1. அம்மயில்கள் இங்கு வந்தன.
2. நேற்று வந்தன இவற்றினும் பெரியன.

9. வாரீர்.—1. மக்காள்! என் அருகில் வாரீர்.
2. நீர் ஏன் வீட்டிற்கு வாரீர்?
3. நல்வழிக்கு வாரீர் நலமெய்தீர்.

10. வருவது.—1. வருவது வந்தே தீரும்.
2. அவன் நாளை வருவது நிச்சயமன்று.
3. அஃது அங்கு நாளை வருவது.

11. நிற்ப.—1. அஃது அங்கு நிற்பக் கண்டோம்.
2. சான்றோர் தஞ் சொல்வழி நிற்ப.

12. இனியான்.— 1. இனியான் இதற்கென் செய்வேன்?
2. இவன் அவனிலும் இனியான்.

13. அரிய.—— 1. அவன் புல் அரியப் போனான்.
2. அரிய நூல்கள் பல அவரிடம் உள.
3. நற்குணங்கள் கல்வியினும் அரிய.
4. அரிய யாவற்றினும் அரியது ஞானம்.

14. அன்று—— 1. இஃது குதிரை அன்று; கோவேறு கழுதை.
2. அன்று நீர் எமக்குச் செய்த உதவியை மறவேன்.

15. உள்ள.—— 1. இவ்வூரில் உள்ள கோயிலுக்குப் போவோம்.
2. அறிவு உள்ள மனிதன் பலருக்கும் பயன்படுவான்.
3. அவன் சொன்னதை உள்ள என் மனம் உருகுகின்றது
4. நீர் சொல்லியவைகள் எல்லாம் உள்ள.

16. செய்ய.—— 1. இவள் செய்ய கமலத்திருவைப் போன்றவள்.
2. நீ வேலை செய்ய இங்கு வந்தனையோ?
3. இவை செய்ய; அவை கரிய.

17. உண்ணீர்.— 1. எனக்கு உண்ணீர் கொடுங்கள்.
2. ஐயா! ஸாவதானமாய் உண்ணீர்.
3. நீர் ஏன் இதை உண்ணீர்.
4. புலால் உண்ணீர் நீவிர் புண்ணியமுடையீர்.

18. எண்ணில். - 1. அப்போரில் எண்ணில் வீரர் மடிந்தனர்.
2. பெரிய எண்ணில் சிறிய எண்ணைக் கழி.
3. நாம ஒன்று எண்ணில் தெய்வம் ஒன்று செய்யும்.

19. தின்னும்.—— 1. காலம் கண்ட எதையும் தின்னும்.
2. இதைத் தின்னும் மனிதன் சாவான்.
3. ஐயா! நீர் இம்மருந்தையே தின்னும்

20. அற்று.—— 1. அக்கயிறு அற்றுப் போனது
2. அவன் குணம் அற்று.

அப்பியாசம்—78.

கீழ்வருபவை பல இலக்கணம்பெறச் சிறுவாக்கியங்களில் அமைக்க:—

காணு	நிற்கிறது	கேளா	கொடியான்
வாடாது	இனியார்	நில்லீர்	உடைத்து
தந்தது	நட்டீர்	ஏகும்	மொழியீர்
அறிவான்	உடையோம்	சாவான்	காட்டில்
படிக்க	கரிய	படியீர்	பெயராள்
கொள்ளும்	வாராய்	நட்டாய்	மெல்ல
பேசுவது	உண்ணீர்	நில்லாது	கடவேன்

சொல்—இடைச்சொல்.

குறிப்பு:—எழுத்துக்களுள், உயிரெழுத்துக்களின் உதவியையாவது; உயிர்மெய்யெழுத்துக்களின் உதவியையாவது பெற்றாலல்லாமல் பயன்படாத மெய்யெழுத்துக்களைப்போல், சொற்களிலும், பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் ஒட்டிக்கொண்டாவது, அவைகளிற் புகுந்து கொண்டாவது வந்தாலல்லாமல் பயன்படாத சொற்களும் எண்ணிறந்தவைகளிருக்கின்றன. அவைகள், இடைச்சொற்கள் என்னப்படும்.

1. "நீங்கள் இவனை வேலனோடு அப்பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதிலும் உங்களுடைய வீட்டில் வைத்துக்கொள்வது நல்லது செட்டியாரே!" என்னும் வாக்கியத்தில் ஐ, ஒடு, கு, இலும், உடைய, இல், ஏ, என்னும் வேற்றுமை யுருபுகளைப்போல, பெயர்ச்சொற்களை யொட்டிக் கொண்டு வருகின்ற எல்லா வேற்றுமை யுருபுகளும், இடைச்சொற்களே.

2. "நாங்கள் இவை கூறிக் கேட்பார் முகம்பார்த்து, அவர்கள் இன்புறுகின்றனர் என்று அறிந்தோம்" என்னும் வாக்கியத்தில், கள், வை, இ, ஆர், உ, அர்-கள், அர், உ, ஓம், என்பவைகளைப்போல், விகுதிகளாப் பலவகைப் பெயர்ச்சொற்களிலும், வினைச்சொற்களிலும் புகுந்து வரும் விகுதிகளெல்லாமும் இடைச்சொற்களே.

3. "ஒரு குழந்தை அழுதது; அதன் குரல் இங்குக்கேட்டது; அதன் தாய் ஓடினாள்; அவள் பின் இரண்டு இளைஞர் சென்றார்கள்" என்னும் வாக்கியங்களில் அழுதது, கேட்டது, ஓடினாள், சென்றார்கள் என்னும் வினைமுற்றுக்களின் இடையில், காலக்குறிகளாய் நிற்கின்ற த், ட், இன், ற் என்னும் இடைநிலைகளைப்போல் காலங்காட்ட வருகின்ற இடைநிலைகளும், இளைஞர் என்னும் பெயரின் இடையில் நிற்கின்ற "ஞ்" என்னும் இடைநிலையைப்போல் காலங்காட்டாது நிற்கின்ற இடைநிலைகளும் ஆகிய பல வகையான இடைநிலைகளும், இடைச்சொற்களே.

☞ காலங்காட்டா இடைநிலைகள், பெயர்ப் பகுபத இடைநிலைகள் என்னப்படும். இவை, பெயர்ச்சொற்களிலேயே வரும்.

ச்	ஞ்	த்	ந்	வ்	ம்
வலைச்சி	அறிஞன்	ஒருத்தன்	கொழுநன்	தலைவன்	பதின்மர்
செட்டிச்சி	முதிஞன்	குறத்தி	உழுநன்	இறைவன்	எண்மர்
புலைச்சி	புலைஞன்	மறத்தி	செறுநர்	நால்வர்	ஒன்பதின்மர்

4. "செம்மரத்தினால் செய்யப்பட்ட இப்பெட்டிகளுக்குக் கொடுக்கும் விலையிலும் அதிக விலையைச் சந்தனமரத்தினால் ஆக்கப்பட்ட அவற்றிற்குக் கொடுப்பது நியாயமே" என்னும் வாக்கியத்தில், ஆல், கு, ஆல், கு என்னும் வேற்றுமை யுருபுகளைப் பெயர்ச்சொற்களிற்குக் கூட்டுவதற்கு உதவியாய் வந்த அத்து, இன், உ, அற்று, இன் முதலானவைகளைப் போலவும், செய்யப்பட்ட, கொடுக்கும், ஆக்கப்பட்ட, கொடுப்பது என்னும் சொற்களில், விகுதி முதலானவைகளைக் கூட்டுவதற்கு உதவியாய் வந்த அ, கு முதலானவைகளைப் போலவும் வரும் சாரியைகள் எல்லாம் இடைச்சொற்களே.

5. சுட்டுப்பொருளில் வரும் அ, இ என்பவைகளும், வினாப் பொருளில் வரும் எ, ஏ, ஆ, யா, ஓ என்பவைகளும் இடைச்சொற்களே.

6. "நீயும் நானும் போனோம்" என்னும் வாக்கியத்தில், பெயர்களைக் கூட்டவும், "கடைக்குப்போகவும், வேண்டிய பண்டங்களை வாங்கவும் கட்டளையிடு" என்னும் வாக்கியத்தில் வினையெச்சங்களைக்கூட்டவும் வந்த உம் என்பதும், "நீயாவது நானாவது போதல்வேண்டும்" என்னும் வாக்கியத்தில் விகற்பப்பொருளில் வந்த "ஆவது" என்பதும் இடைச்சொற்களே.

7. சந்தோஷத்தைக் குறிக்கவருகின்ற—ஆ ஆ! ஓகோ! முதலானவைகளும், வியசனத்தைக் குறிக்க வருகின்ற—ஐயோ! அந்தோ! ஆ! எ! முதலானவைகளும், அவமதிப்பைக் குறிக்கவருகின்ற—து! சி! சிச்சி! தூ! முதலானவைகளும், ஐயத்தைக் குறிக்க வருகின்ற—ஓ, கொல் முதலானவைகளும், விரைவைக் குறிக்க வருகின்ற—பொட்டென, ஞெரேலென சரேலென முதலானவைகளும், அதிசயத்தைக் குறிக்க வருகின்ற-அம்மம்மா! ஓகோ! ஆகா! முதலானவைகளும், பாட்டினளவை நிறைக்க வருகின்ற-மற்று, கொல், எ முதலானவைகளும், பயனின்மையைக் குறிக்க வருகின்ற, வாளா, சும்மா, கொன்னே முதலானவைகளும் இடைச்சொற்களே.

☞ ஒரேபொருளை யுணர்த்தப் பல இடைச்சொற்கள் இருப்பதுபோல், ஒரே இடைச்சொல் பல பொருள்களை யுணர்த்திவருவதும் உண்டு.

61. பல பொருள்களை உணர்த்தும் இடைச்சொற்கள்:—

உம், ஏ, ஓ, கொல், மற்று முதலானவை.

I. "உம்" என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்களும், உதாரணங்களும்.

(1) உம் என்பது, உடனே என்னும் பொருளில் வரும்.

மழைவிட்டதும் புறப்படு.	அவன் வந்ததும் நீ போகலாம்.

(2) உம் என்பது, தோறும் என்னும் பொருளில் வரும்.

தினமும் பழைய பாடம் படி.	நாளுங் கடவுளைத் துதி.

(3) உம் என்பது, உயர்வு சிறப்பைக் காட்டும்.

பிரஹஸ்பதியும் இவனைப்போற் பேசான்.	அதன் ஓட்டத்திற்குக் காற்றும் பின்னிடும்.

(4) உம் என்பது, இழிவு சிறப்பைக் காட்டும்.

புலையனும் விரும்பாத யாக்கை.	இது நாயுந் தின்னாத சோறு.

(5) உம் என்பது, இறந்ததைத் தழுவ வரும்.

என் மூத்த மகனும் வந்தான்.	கைக்குழந்தையும் போயிற்று.

(6) உம் என்பது, எதிரதைத் தழுவ வரும்.

அங்கு யானும் வருவேன்.	கன்றையும் அனுப்புவேன்.

(7) உம் என்பது, முற்றுப் பொருளைக் குறிக்க வரும்.

மும்மூர்த்திகளும் வந்தார்கள்.	அனைவருந்தொழுது நின்றார்கள்

(8) உம் என்பது, எண்ணுப் பொருளில் வரும்.

இரவும் பகலும் எண்ணமிட்டீர்.	பிறப்பும் இறப்பும் எங்கும் உள.

குறிப்பு:—எண்ணுப்பொருளில் வரும் உம் என்னும் இடைச் சொல்லைச் சில விடங்களில்,சுருக்கத்திற்காகவும், சுவைக்காகவும் நீக்கிவிடுவது முண்டு.

1. மேடும் பள்ளமும் உள்ள நாடு —மேடு பள்ளங்கள் உள்ளநாடு
2. நாயும் நரியும் ஓடுஞ் சிற்றூர் —நாய் நரிகள் ஓடுஞ் சிற்றூர்.
3. தாயுந் தந்தையும் வருந்தினர் —தாய் தந்தையர் வருந்தினர்.
4. காயுங் கனியும் புசித்தோம் —காய் கனிகள் புசித்தோம்.
5. ஆறும் அரையும் இருந்தது —ஆறரை இருந்தது.
6. எட்டும் வீசமும் கொடு —எட்டேவீசம் கொடு.
7. கலனும் தூணியும் வாங்கு —கலனே தூணி வாங்கு.
8. படியும் ஆழாக்கும் குறைந்தது —படியாழாக்கு குறைந்தது.
9. அறமும்பொருளும்இன்பமும் —அறம் பொரு ளின்பம்.

☞ மேடு பள்ளங்கள், நாய் நரிகள், தாய் தந்தையர், காய் கனிகள் முதலானவைகளில் தொக்கதுபோல், இரண்டு, அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சொற்களிற்கு இடையிலும், கடையிலும் இருக்கவேண்டிய "உம்" என்னுமிடைச்சொல் தொக்குவருவது, "உம்மைத்தொகை" என்னப்படும். [உம்மை யென்பதில், ஐ, சாரியை.]

குறிப்பு:—பெரிய எண்ணுடன் "அரை" ஒழிந்த சிறிய எண்கள் உம்மைத்தொகை பெறுகையில், "ஏ" என்னுஞ் சாரியை வரும். "கலன்" முதலிய முகத்தல் அளவையினும் "ஏ" வரல் காண்க. உயர்திணை யொருமைப்பெயர்கள் உம்மைத்தொகை பெற்றவிடத்துப் பன்மை விகுதியைப் பெறும். அஃறிணை யொருமைப்பெயர்கள் பன்மை விகுதி பெறுதலும் பெருமையுமாம்.

II. "ஏ" என்னும் இடைச்சொல்

உணர்த்தும் பொருள்களும், உதாரணங்களும்.

(1) ஏ என்பது, தேற்றப் பொருளில் வரும்.
எல்லோரும் இறக்கவேவேண்டும் | நீ இங்கு வரவே வேண்டும்.

(2) ஏ என்பது, இரக்கத்தை யுணர்த்தும்.
கல்லாது காலங் கழித்தேனே. | உன்னைத் தனிப்போக்கினனே.

(3) ஏ என்பது, எதிர்மறைப் பொருளில் வரும்.
மாண்டார் பேசிய துண்டே. | உண்டே மகவிலார்க்குளமகிழ்ச்சி.

(4) ஏ என்பது, பிரிநிலைப் பொருளில் வரும்.
கற்றோரே கற்றோர் கனமறிவர். | நல்லாரே நல்லாரை நாடுவர்.

(5) ஏ என்பது, பாட்டின் ஈற்றில் அசையாய் வரும்.
எத்தியேத்தித்தொழுவோம்யாமே | உன்சோகமேது சொல்லிடே

III. "ஓ" என்னும் இடைச்சொல்

உணர்த்தும் பொருள்களும், உதாரணங்களும்.

(1) ஓ என்பது, எதிர்மறைப் பொருளில் வரும்.
வேம்பன்றோ காக்கை விரும்புமி. | செத்தவர்க்குச் சித்த முருகுமோ.

(2) ஓ என்பது, கோரிக்கையை யுணர்த்தும்.
இவளேனும் ஆண் பெறுவளோ. | நீராவது பரீக்ஷையில் தேருவீரோ.

(3) ஓ என்பது, ஐயப் பொருளில் வரும்.
இனிமேல் மழை பெய்யுமோ. | இது பாம்போ கழுதையோ.

(4) ஓ என்பது, வினாப் பொருளில் வரும்.
நீ அவனைப் பார்த்தனையோ? | அவன், வீட்டிலிருப்பானோ?

(5) ஓ என்பது, விகற்பப் பொருளில் வரும்,
நீயோ அவனோ போகவேண்டும். | நாயோ நரியோ ஒன்று ஓடினது.

IV. "கோல்" என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்களும் உதாரணங்களும்.

ஐயம்——இவ்வளவிற் செல்லுங்கோல், இவ்வளவிற் காணுங்கோல்.
அசைநிலை——கற்றதனாலாய பயன் என்கோல்.

V. "மற்று" என்னும் இடைச்சொல்.

உணர்த்தும் பொருள்களும் உதாரணங்களும்.

(1) மற்று என்பது, வேறு என்னும் பொருளில் வரும்.
இடர் பெரிதும் உடையேன் மற்று என் செய்கேன்?
கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்று ஓர் அணிகலம் வேண்டாவாம்.

(2) மற்று என்பது, உள்ள வினைக்கு மாறான வினைப்பொருள் தரும்.
கல்வி கற்க மடன் அறும்; மற்று அறாது.
அவன் உனைக் காண உய்வான், மற்று உய்வான்.

(3) மற்று என்பது, பாட்டை நிறைக்க வரும்.
மாலை கிடந்தா னெழுதல் அரிதால் மற்று என்கொல்
அறங்காலை செய்யாத வாறு?

அப்பியாசம்—79.

கீழ்வரும் இடைச்சொற்களின் பொருள்களைக் கூறு:—

1. உற்றவிடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர் பற்றலரைக் கண்டாற் பணிவரோ 2. நல்லார் ஒருவ ருளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யு மழை 3. கடல், மண்ணீருமாகாது; அதன ருகே சிற்றூறல் உண்ணீருமாகிவிடும். 4. அக்குளத்திற் கொட்டி யும், ஆம்பலும், நெய்தலும்போலவே ஒட்டியுறுவார் உறவு. 5. கூற்றமே இல்விற்கிசைந்தொழுகாப் பெண். 6. மானிலத்தீர்! மாண்டார் வருவரோ. 7. நமக்கும் அது வழியே. 8. பூவாதே காய்க்கும் மரமும் உள. 9. கண்ணிரண்டே யாவர்க்கும். 10. கற்றோர் கனமறிவர் கற்றோரே. 11. கர்ப்பூரமாமோ கடலுப்பு. 12. என் றும் முகமனியம்பாதவர் கண்ணும் சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர். 13, வேம்பன்றே காக்கை விரும்புங் கனி. 14. குருட் டுக் கண்ணஞ்சுமோ இருளைக் கண்டு. 15. சிற்றுளியாற்கல்லும் தகரும். 16. அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும். 17. நாளும் கொடுக்கப்படுவது அருளே. 18. ஊர்ந்துருளிற் குன் றும் வழிதடுப்பதில். 19. கொள்ளிக்கும் விள்ளாவிருள். 20. மன் னர்க்கும் உண்டு மனக்குறை. 21. சமன் வாவா வெனில் வரே மென வல்லீரே.

62. உவமைத்தொகை.

அன்னம்போன்ற நடை	பிறையை அன்ன நுதல்	மின்னலை யன்ன இடை
தேனைப்போன்ற மொழி	வேலைப்போன்ற விழி	கல்லைப்போன்ற மனம்
கற்பகத்தை ஒத்த கை	கரும்புப்போன்ற மொழி	கிளிபோலக் கூப்பிடு
தளிரைப்போன்ற மேனி	வில்லைப்போன்ற புருவம்	பேய்போல ஆடினன்

என்னுந் தொடர்களில் வந்ததுபோல், சிறப்புள்ள ஒரு பொருளிற்கும், மற்றொரு பொருளிற்கும் உள்ள ஒற்றுமையைக் காட்ட, **போல், புரை, ஒ, உறழ், மான், கடு, நேர், நிகர், அன், இன்.** அனை முதலான சொற்களிற் பிறந்த பெயரெச்ச வினையெச்சங்கள் வரும்.

இவ்வாறு வராது, இரண்டு பெயர்களுக்கிடையில் நின்று ஒப்புடைமையை விளக்கும் போன்ற அல்லது அதன் பொருளுள்ள வேறு பெயரெச்சம் மறைந்து போவதும், ஒரு பெயர்ச்சொல்லிற்கும் அதுகொள்ளும் வினைச்சொல்லிற்கும் இடையில், போல அல்லது அதன் பொருளுள்ள வேறு வினையெச்சம் மறைந்து போவதும், "உவமைத்தொகை" என்னப்படும்.

உவமைத்தொகை பலவகைப்படும்.

(1) வண்ணம் — பவள விதழ்.
(2) வடிவு — ஒட்டைக் கழுத்து.
(3) சுவை — தேன்மொழி.
(4) செயல் — கற்பகக் கை.
(5) குணம் — நாய்ச் சேவகன்.

குறிப்பு:—(1) போல, புரைய, ஒப்ப, உறழ, மாண, கடுப்ப, நேர, நிகர, என்பவைகள் உவமை யிடைச்சொல்லினடியாய்ப் பிறந்த வினையெச்சங்கள் என்றும், (2) அன்ன இன்ன, அணய என்பவைகள் உவமை யிடைச்சொல்லினடியாய்ப் பிறந்த குறிப்புப் பெயரெச்சங்கள் என்றும் அறிக.

அப்பியாசம்—80.

இஃது இன்னவகை யுவமைத்தொகை என்றும், விரித்தவிடத்து இன்னபடி நிற்கும் என்றுங் கூறு:—

(1) மான்விழி
(2) மழைக்கை
(3) தேன்மொழி
(4) பவளவிதழ்
(5) அற்றகூந்தல்
(7) குயிற்குரல்
(7) மதிமுகம்
(8) விற்புருவம்
(9) காற்றோட்டம்
(10) தாயன்பு
(11) கனவுவாழ்க்கை
(12) புற்புதவுடல்
(13) கன்மனம்
(14) குரங்குமனம்
(15) ஆனையாடு.

சொல்—உரிச்சொல்.

63. உரிச்சொல்:–பொருள்களுககுரிய குணத்தை அல்லது அவைகளுடைய செயலுக்குரிய குணத்தைச் சொல்லுஞ் சொல்.

கழி சுவை. நனி விளைவு சால உழைத்தான்.

☞ இவைகளில், கழி, நனி,—பெயர்-உரிச்சொல். சால—வினையுரிச்சொல். [கழி=அதிகம், நனி=மிகுந்த சால=அதிகமாய்.]

தமிழில், பெயரெச்சம், பெயருரிச் சொல்லாகவும், வினையெச்சம், வினையுரிச்சொல்லாகவும் வரும். உ-ம். படித்த மனிதர் நயந்து பேசுவார்; படியாத மூடரோ கடிந்து பேசுவர்.

☞ கடி, கழி, சால. உறு, நனி, அம், வியன் முதலானவை உரிச்சொற்கள்.

பொருள்களின் பண்பைக் கூறவரும் பெயருரிச் சொற்களும், அவற்றின் தொழில்களின் பண்பைக் கூறவரும் வினையுரிச்சொற்களும், தன்-நிலை, (2) தர-நிலை. (3) தம-நிலை. என்னும் மூன்று நிலைகளில் ஒன்றை யுணர்த்திவரும்.

இம் மூந் நிலைகளில்,

1. தன்-நிலை:—ஒரு பொருளோடும் ஒப்பிடப்படாத நிலை.
2. தர-நிலை:—இதிலும் இது உயர்ந்தது, தாழ்ந்தது என ஒப்பிட்டுக் காட்டும் நிலை.
3. தம-நிலை:—இது எனையவற்றிலெல்லாம் உயர்ந்தது தாழ்ந்தது என உத்தம,அதம நிலைகளைக்காட்டும் நிலை.

1. இராமன் நல்ல பையன், 2. கோபாலன் இராமனிலும் நல்ல பையன். 3. கோவிந்தன் இவர்கள் எல்லாரிலும் நல்ல பையன். 1. உன் வீடு அழகானது. 2. இந்த வீடு, உன் வீட்டிலும் அழகானது. 3. எனது, இந்தவீடுகள் எல்லாவற்றிலும் அழகானது. 1. இந்த அறை அகலமான அறை. 2. இந்த அறை அந்த அறையிலும் அகலமானது. 3. இஃது, இந்த வீட்டினறைகள் எல்லாவறைகளிலும் அகலமானது. 1. இவள் பொல்லாதவள். 2. இவன் என் தம்பியிலும் பொல்லாதவன். 3. இவ்வூரார் எல்லாரிலும் பொல்லாதவன் கந்தன். 1. பொருள் ஸ்திரமில்லாதது. 2. பொருளிலும் ஸ்திரமில்லாதது இளமை. 3. ஸ்திரமில்லாத எல்லாவற்றிலும் ஸ்திரமில்லாதது உயிர். 1. நாம் இனிது வாழ்ந்தோம். 2. நம்முடைய பிதா நம்மிலும் இனிது வாழ்ந்தார். 3. நமது பாட்டனார் நம்மனைவரினும் இனிது வாழ்ந்தார்.

☞ ஆங்கிலத்திலும், ஆரியத்திலும் பெயருரிச்சொற்களும், வினையுரிச்சொற்களும், தாரதம்மிய முணர்த்துவதற்கு விகுதிகளையுஞ் சொற்களையும் பெறும்; தமிழில் அவ்வாறாகாமல், வேற்றுமை யுருபுகளால் உணர்த்தும்.

64 சொற்களை யொட்டிய சில விசேஷக் குறிப்புக்கள்:—

அநேக நூற்றாண்டுகளிற்கு முன், தமிழ்ப்பாஷைக்கு உரியோராகிய திரவிடர், திரவிடதேசத்தில் வாழ்ந்துகொண்டிருக்கையில், ஸம்ஸ்கிருத பாஷைக்கு உரியோரும், காஸ்பியன் கடலருகில் ஓரிடத்தில் வாழ்ந்துகொண்டிருந்தோருமாகிய ஆரியர், பல்கிப் பெருகிப் பலதிசைகளிலுஞ் செல்லுகையில், பலர், திரவிடதேசத்தில் வந்து சேர்ந்தனர். உடல், உரு, பாஷை முதலியவற்றின் சிறப்புற்ற ஆரியருடைய மொழிகளும், கற்பனைகளும், நூல்களும் கொள்கைகளும், உடைநடை பாவனைகளும், தமிழிலும், தமிழர்பாலும் புகுந்து பரவின. ஆகவே, எண்ணிறந்த ஸம்ஸ்கிருத மொழிகள் உச்சரிப்பார் வாயிற்பட்டுக் கெட்டும், கெடாமலும், தமிழிற் கலந்துவிட்டன.

"ஜனங்களிற் பலர், க்ஷுக்ஷியின் பொருட்டு ஹீனருக்கு ஸேவகராகி, கஷ்டப்படுகின்றனர்" என்ற வாக்கியத்திலுள்ளபடி ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்பவற்றின் வரிவடிவமும் தமிழ் எழுத்துக்களுடன் கலப்புற்றது.

வடக்கிலிருந்து வந்தமையால், ஸம்ஸ்கிருதம், வடமொழி என்றும், தெற்கிலிருந்து வளர்ந்தமையால், தமிழ், தென்மொழி என்றுஞ் சொல்லலாயின. வடமொழிக்குத் தங்கையாகிய தமிழினைத் தாயாய்க்கொண்ட (1) தெலுங்கு, (3) கன்னடம், (3) மலையாளம், (4) துளுவம் முதலிய பாஷைகளினின்றும் வந்து தமிழிற் கலந்துள்ள சொற்கள், திசைச் சொற்கள் என்னப்படுகின்றன.

இந்தியாவின் நிலையை புணர்ந்து அதன்மீது தங்கருத்தைச் செலுத்திப் படையெடுத்து வந்துவந்து சிலவடுக்களை வைத்துச்சென்ற யவனர், துருஷ்கர் முதலானோருடைய சொற்களும், நம் ஆங்கிலேயருடைய சொற்களும், தமிழிற்குத் திசைச்சொற்களே பின்னும், கற்காதவர்களுக்கும் பொருள் விளங்குஞ் சொல்லை, இயர்-சொல் என்றும் நன்கு கற்றோர்க்கே யல்லாமல், மற்றோர்க்கு விளங்காச்சொல்லை, திரி-சொல் என்றுங் கூறினர் பெரியோர்.

☞ இடைநிலை விகாரம், விகுதி என்பவைகளால் காலங்காட்டி நிற்கும் இயல்புள்ள செய், ஆடு, அறி, கொல், கல், தின், உண், ஆள், கேள், விடு, படி, இரு என்னும் பன்னிரு கணத்துப் பகுதிகளும் தெரி-நிலை வினைப்பகுதிகள். இவற்றினின்றுஉடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும ரூபங்கள் தெரி-நிலை வினைமுற்று, தெரி-நிலை வினையெச்சம் முதலானவை.

செய், ஆடு, அறி முதலானவைகளைப்போல் ஏவும் ஆற்றலும், செய்க, ஆடுக முதலானவைகளைப்போல் வேண்டிக்கொள்ளும் ஆற்றலுமற்று, காலங்காட்டுந் தன்மை இன்மையினால், காலங்காட்டும் உறுப்புகளும் இல்லாமல், பண்புப்பெயர் முதலான பல்வகைப் பெயர்களினின்றும பிறந்து, பிறசொற்களினுதவியால் ஒருவாறு காலங்காட்டும் வினைமுற்றும், வினையெச்சமும், பெயரெச்சமும் வினையாலணைந்த பெயரும், குறிப்பு விணமுற்று குறிப்பு விணயெச்சம் முதலியன.

☞ அ-து, செய்-த-து என்பவைகளைப்போல் சில அல்லது பல உறுப்புக்களைக்கொண்டு ஆகிய சொற்கள் **பகு-பதங்கள்** என்னப்படும். உறுப்புக்களைக்கொண்டு ஆகியிராமையினால், ஒருறுப்பும் இல்லாத சொற்கள் **பகாப்-பதங்கள்** என்னப்படும். [இவற்றிற்கு உதாரணங் கேட்க.]

சொற்றொடர்.

வந்த புருடர்களுக்கு, வெட்கமற்ற, சிறியகுளத்தில், பொருளுள்ள, படித்த மனிதன், அழுகிற பிள்ளை, அறிவு இல்லாத, மானமில்லாத, படியாத சிறுவர், நடவாத எருதுகள், மாறுப்பகை, போய்ப் பார்த்து, எழுந்து நின்று.

☞ பயனிலையைப் பெறுமையால், வாக்கியமாகாத சொற்களின் தொடர், சொற்றொடர்.

65. இவ்வாறு பலவிதப்படும் சொற்றொடர்கள், எழுவாய், பயனிலை என்னும் உறுப்புக்களைப்பெற்று நிற்பது, வாக்கியம் என்னப்படும்.

வண்டி வருகின்றது.	மழை பெய்கின்றது.
காற்று வீசுகின்றது.	சிறுவன் அழுகின்றான்.

வாக்கியங்கள், (1) தனி-நிலை வாக்கியம், (2) தொடர்-நிலை வாக்கியம், (3) சங்கீர்ண வாக்கியம் என மூன்று வகைப்படும்.

இவற்றுள், (1) தனிநிலை வாக்கியமாவது:—ஒரே எழுவாயும், ஒரே பயனிலையுங் கூடிப்பொருள் முற்றிநிற்குஞ் சொற்றொடராம்.

அவன் வீடு கட்டினான்.	நாங்கள் தூங்கினோம்.
கிளி பேசுகின்றது.	காற்று வீசுகின்றது.

(2) தொடர்நிலை வாக்கியமாவது:—(*a*) வாக்கியங்கள் ஒன்றோடொன்று சேர்ந்தாகிலும். (*a*) இரண்டு மூன்று எழுவாய்கள் ஒரே பயனிலையைக் கொண்டாகிலும், (*b*) ஒரே எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டாகிலும் வருஞ் சொற்றொடராம்.

(*a*) நான் பாடினேன், ஆனால் நீர் கேட்கவில்லை.
(*b*) நானும் அவர்களும் ஓடினோம்.
(*c*) இவன் காசிக்குச் சென்று, வடகலை கற்றான்.

(3) சங்கீர்ண வாய்க்கியமாவது:—ஒருமுதனிலை வாக்கியத்தையும், அம் முதனிலை வாக்கியத்தோடு, என்று ஆக, என்பது என்னுந் தளைமொழிகளால் இணைக்கப்பட்டுள்ள ஒன்று அல்லது பல துணைநிலை வாக்கியங்களையும் உடைய வாக்கியமாம்.

☞ தளைமொழி—இணைக்கிற தன்மையுள்ள சொல்.

சிரஞ்சீவி, மேகவர்ணனை நோக்கி, நம் நம்பகைவனைப் போரில் வெல்வது அசாத்தியமாகையால், அவனை வஞ்சனையா லொழிக்கவேண்டும் என்று கூறினான்.

☞ சங்கீர்ண வாக்கியத்திலுள்ள பிரதான வாக்கியம் முதனிலை வாக்கியம்; அம் முதனிலை வாக்கியத்தைத் தழுவிவரும் மற்றொரு வாக்கியம் துணைநிலை வாக்கியம்.

சிரஞ்சீவி கூறினன்—இஃது, முதனிலை வாக்கியம்.
மேகவர்ணனை......வேண்டும்—இஃது, துணைநிலை வாக்கியம்.
என்று—இஃது, தலைமொழி.

துணைநிலை வாக்கியம் (1) பெயர் வாக்கியம், (2) பெயருரி வாக்கியம், (3) வினையுரி வாக்கியம் என மூன்று வகைப்படும்.

இவற்றுள், (1) பெயர் வாக்கியம்:—பெயர்ச்சொல்லின் தன்மையைப் பெற்று, வாக்கியத்தின் எழுவாயாகவும், செயப்படு பொருளாகவும் வரும்.

அவன் தருக்கங் கற்கவில்லை என்பது நன்கு விளங்குகின்றது.
கற்றவர்களே, இவ்வுடல் அழிவுள்ளதென்பதை நினைக்கின்றனர்.
நமது இரு வினைகளே நம்மைத் தொடருமென்று மூடர் நினையார்.
இவன பிழையான் என்று வைத்தியனும் சொல்லவில்லை.
நஞ்சக்கிரவர்த்தியார்குமாரர் என்றுவருவதாகச்சொல்லுகின்றாகள்?

(2) பெயருரி வாக்கியம்:-பெயர்ச்சொல்லைப் பின்றொடர்ந்து, அதன் பண்பைக் கூறிப் பண்புச்சொல்லின் தன்மையைப்பெற்று வருஞ் சொற்றொடராம்.

இவன் எல்லோருக்கும் நன்மை செய்கிற மனிதனுகையால், இவனை எல்லோரும் புகழ்கின்றார்கள்.

☞ அறிவுள்ள மனிதர் பழிபாவங்களுக்கு அஞ்சுவர், பொருளில்லாத மாந்தருக்குங் சுகமில்லை; தருக்கம் கற்ற புருடருக்குச் சன்மானம் தருகின்றோம்; என்பவைபோன்ற வாக்கியங்களிலுள்ள தொடர்கள் உரிச்சொல்லின் தன்மையைப் பெறுகின்றன.

(3) வினையுரி வாக்கியம்:-வினைச்சொல்லைப் பின்றொடர்ந்து, அதன் பண்பைக் கூறி வினையுரிச்சொல்லின் தன்மையைப்பெற்று வருஞ் சொற்றொடராம்.

இவ்வினையுரி வாக்கியங்கள், காரணம், காரியம், நியமம், வண்ணம், மிகுதி, காலம், பிழைபாடு முதலியவற்றை யுணர்த்திவரும்.

காரணம்:—அவன், மரத்திலிருந்து விழுந்து முடவனுனன் நாங்கள் உம்மைக் காண விருப்புற்று இங்கு வந்தோம்.

காரியம்:—தேவனைத் தொழ: ஆலயத்திற்குப் போனேம்; யான் தருக்கம கற்பான் இவ்வூரடைந்தேன்.

நியமம்:—நீ வந்தால் அதைத்தருவேன்; மழைபெய்யின் பஞ்சந்தீரும்.

வண்ணம்:—கேட்டவர் மனமுருகப் பாடினன்; கண்டவர் நகைக்கத் திரிந்தாள்; அழழச் சொல்வர் தம் மனிதர்.

மிகுதி:—வலை கிழிய மீன் பிடித்தார்கள்; கால் கடுக்க நடந்தேன்.

காலம்:-சூரியன் உதிக்கப் புறப்பட்டாய்; ஆறடிக்க அங்கு வந்தாய்.
பிழைபாடு:—தோளின்மேலேயே ஆடு இருக்கக் காடெல்லாந் தேடினீர்.

66. வினைப்பயனிலையானது, தன்னெழுவாயுடன், திணை, பால், இடம், எண் ஆகிய இவற்றில் வேறுபடாமல் நிற்கவேண்டும்

திணை:—இவர்கள் ஓடினார்கள்.
பால்:—இவள் ஓடினாள்.
இடம்:—நான் ஓடினேன்.
எண்:—இது ஓடினது.

☞ நான் உன் மகன்; நீ என் தம்பி; நாங்கள் உமது அடிமைகள்; நீங்கள் எங்கள் பகைவர்; நீ யார்? என்பவைபோலும் வாக்கியங்களிலுள்ள பெயர்ப்பயனிலைகள் படர்க்கை யிடத்தனவாயும், அவற்றின் எழுவாய்கள் தன்மை முன்னிலை யிடத்தனவாயும் நிற்றலைக் காண்க.

குறிப்பு:—பயனிலையானது தன்னெழுவாயுடன் திணை,பால், இடம், எண் ஆகிய இவற்றிற் வேறுபட்டு வரின், வழு ஆகும்.

திணை:—புலி, காப்பைக் காட்டினான். பால்:—தேவனே மூவுலகிற்கும் தாய். இடம்:—துஷ்டபுத்தியின் மகன் சுகமடைவேனோ? எண்:—மகனே! அழாதே, இரண்டு கண்ணும் சிவந்தது.

☞ ஆயினும், வழுவாகியதை வழுவென்று தள்ளாமல், வழுவாகாதது போல் ஏற்றுக்கொண்டு, அவனை. "வழுமமைதி" என்பர்.

1. மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, கோபம், இழிவு என்பவற்றுள் எதையேனும் ஒன்றை உணர்த்த ஒரு திணை மற்றொரு திணையாக வரின், அஃது, திணை வழுவமைதி.

1. மகிழ்ச்சி:—(ஒரு பசுவை) என் அம்மை வந்தாள் எனல்.
(இங்கு, அஃறிணை உயர்திணை யாகியது.)

2. உயர்வு:—புலியாரே! காப்பைக் காட்டும்.
(இங்கு, அஃறிணை உயர்திணை யாகியது.)

3. சிறப்பு:—தம் பொருள் என்ப தம்மக்கள்.
(இங்கு, உயர்திணை அஃறிணை யாகியது.)

4. கோபம்:—(அறிவின்றிப்பேசுவோனை) அது என்குரைக்கின்றது?
(எனல். இங்கு, உயர்திணை அஃறிணை யாகியது.)

5. இழிவு:—நாம் அழிந்துபோதும் பாண்டங்கள்,
(இங்கு, உயர்திணை அஃறிணை யாகியது.)

1. மகிழ்ச்சி, சிறப்பு, கோபம், இழிவு என்பவற்றுள் எதையேனும் ஒன்றை யுணர்த்த ஒரு பொருளின் பால், மற்றொருபாலாகமாறி வரின், அஃது, பால் வழுவமைதி.

1. மகிழ்ச்சி:—(ஒருத்தி, தன் மகனை) என் அம்ம! இங்கு வா! எனல்.
(இங்கு, ஆண்பால் பெண்பா லாகியது.)

2. சிறப்பு:—தேவன் மூவுலகிற்குந் தாய்.
(இங்கு, ஆண்பால் பெண்பா லாகியது.)

3. கோபம்:-(கடுமொழியாளை நோக்கி)ஐயா! உத்தரவு கொடும் எனல்.
(இங்கு, பெண்பா லாண்பா லாகியது.)

4. இழிவு:—(பெண்வழிச் செல்வானை) இவள், அவள் எனல்.
(இங்கு, ஆண்பால் பெண்பா லாகியது.)

ஓரிடத்துச் சொல்லுடன் பிறவிடங்களின் சொல்லைக் கூட்டிக் கூறின், அதனை வழுவென்று நீக்காமல் வைத்துக்கொள்வது, இட வழுவமைதி.

விடமுண்டவன் யான் பிழைப்பேனோ?
பெற்றோரைக் கைவிட்டவன் நீ எப்பழிக்கும் அஞ்சாய்.

4. ஒருமை யெண்ணிற்குப் பன்மை யெண்ணும், பன்மை எண்ணிற்கு ஒருமை யெண்ணும் வரின், அதனை வழுவென்று நீக்காமல் வைத்துக்கொள்வது, எண் வழுவமைதி.

கண்மணி! அழாதே, இரண்டு கண்ணுஞ் சிவந்தது.
திருநாளைப்போவார் இதோ வருகின்றார்.

5. வழக்கம், விரைவு, மிகுதி, தெளிவு முதலியவற்றை யுணர்த்த, ஒரு காலம் மற்றொரு காலமாய் மாறிவரின், அதை வழுவென்று நீக்காமல் வைத்துக்கொள்வது, கால வழுவமைதி.

1. வழக்கம்:—மழைக்குமுன் இவ்வூரார் குடிப்பது இக்குளத்து நீர்.
(இங்கு, இறந்தகாலம் எதிர்கால மாகியது.)

2. விரைவு:-வந்துகொண்டிருக்கும்பொழுதே,வண்டிவந்துவிட்டது.
(இங்கு, நிகழ்காலம் இறந்தகால மாகியது.)

3. மிகுதி:—இவனோடு கூடினாற் சிறை யடைந்தாய்.
(இங்கு, எதிர்காலம் இறந்தகால மாகியது.)

4. தெளிவு:—ஜியாமாத்திரிக்குத் தப்பினால், பரீக்ஷையில் தேறினேன்.
(இங்கு, எதிர்காலம் இறந்தகால மாகியது.)

☞ எப்பொழுதும் இடையறாமல் நிகழும் தொழிலையுடைய பொருள்களின் செயலை, நிகழ்காலத்தில் கூறல் வேண்டும்.

இந்தியாவிற்கு வடக்கில் இமயமலை யிருக்கின்றது.
மாமியாருக்கு ஒரு மாமியா யிருக்கின்றாள்.

☞ பொருள்களுக்கு, உலக நடையிலும், நூல்களிலுந் தொன்றுதொட்டு வழங்கிய பெயரை மாற்றிக் கூறின், அது வழு வாதுமேயன்றி, வழுவமைதி யாகாது.

ஆனை மேய்ப்போனைப் பாகன் என்னாது சாரதி யெனல் வழுவாம்.
குதிரையின் பிடரி மயிரை உளை யென்னாது கேசரம் எனல் வழுவாம்.
பெண்ணின் தலைமயிரைக் கூந்தல் என்னாது குடிமி எனல் வழுவாம்.

6. மிகுதி. விரைவு, வெகுளி, உவகை, அச்சம், துன்பம், தெளிவு முதலியவற்றை யுணர்த்தவும், செய்யுளின் அடியை நிறைக்கவும் ஒரே சொல் இருமுறை மும்முறை அடுக்கிக் கூறப்படின், அஃது வழுவாகாது; "அடுக்குத்தொடர்" எனப்படும்.

1. விகுதி: —வந்து வந்து நின்றான்.
2. விரைவு:—நேரமாகியது, ஓடு, ஓடு.
3. வெகுளி:—என் முன் நில்லாதே, போ, போ.
4. உவகை:—ஐயா! வாரும் வாரும்.
5. அச்சம்: —ஐயோ! தேள் தேள்!
6. துன்பம்:—யான், பிழையேன் பிழையேன்.
7. தெளிவு:—தருகிறேன், தருகிறேன்.
8. செய்யுளின் அடியைநிறைக்க:—சொல்லவா? சொல்லவா? சொல்லவா?

☞ கலகல, சலசல, தபதப, படபட, மடமட முதலியன போல் வருவன இரட்டைக்கிளவிகள்; அடுக்குத் தொடரல்ல.

7. இத்தனையென்று அறிந்த பொருள்களைக் குறித்துப் பேசுகையிலும், எவ்விடத்தும், எக்காலத்தும் இல்லாத பொருள்களைக் குறித்துப்பேசுகையிலும், முற்றும்மை சேர்த்தே முடிக்கவேண்டும்

மும்மூர்த்திகளுஞ் சந்தோஷ மடைந்தனர்.
குதிரைக்கொம்பு எங்குமில்லை, என்றுமில்லை.

8. ஒரே யெழுவாய்பல பயனிலைகளைக்கொண்டு நிற்கையில், கடையில் நின்றதை விட்டு, மற்றவைகளை இறந்தகால வினையெச்சமாய் மாற்றிக்கொள்வது வழக்கு.

(1) அவன் காசிக்குச் சென்று, வடகலை கற்று, சிறந்த பண்டிதனாய்ச் சென்னைக்கு வந்தான். (2) யான் அவன் வீட்டிற்குப்போய், அவன் தம்பியைக்கண்டு, நீர் சொன்னதைச் சொல்லிவிட்டு வருகிறேன்.

அப்பியாசம்—81.

கீழ்வரும் வாக்கியங்களை ஏற்றவண்ணம் மாற்றி, ஒரே முற்றுவினை பெற்றதாக்கிக் காட்டு:—

A. 1. கங்கைக்கரையில் பல்வகை மரங்கள் இருந்தன. 2. இவைகளுக்கு இடையில் சில நாவல் மரங்கள் இருந்தன. 3. ஒரு நாவல் மரத்தின்மேல் குரங்கு ஒன்று வாழ்ந்தது. 4. அதன் பெயர் சுமுகன். 5. இச்சுமுகனிடம் ஒருநாள் முதலை ஒன்று வந்தது. 6. அம்முதலை மிகவும் இளைத்திருந்தது. 7. இம்முதலைக்குச் சுமுகன் உபசாரஞ் சொல்லினது. 8. சுமுகன் பழங்களால் அம்முதலைக்கு விருந்து செய்தது. 9. சுமுகன் முதலையை நண்பனாய்க் கொண்டது. 10. முதலையோ சுமுகனுக்கு தீமை தேடினது.

B. 1. இளமையே கல்வி கற்பதற்கு ஏற்ற பருவம். 2. சிலர், இப்பருவத்தை ஆடிப்பாடிக் கழிக்கின்றனர். 3. இப்படிப்பட்டவர் முதுமையில் துன்பமடைவர். 4. இவர் முதுமையில் துன்பம் அடைவது தவறாது. 5. இவர்கள் அக்காலத்தில் பச்சாதாபப்படுவர். 6. அப்பொழுது பச்சாத்தாபப்படுவதில் பயனில்லை. 7. அஃது கொட்டிய பாலின்முன் குந்தியழுவதுபோலாகும்.

C. 1. இக்காட்டில் இச்சிங்கம் தனியே இருந்தது. 2. அவ்வெருதும் தனியே இருந்தது. 3. நாம் இவ்விரண்டிற்கும் நட்பு உண்டாக்கிவைத்தோம். 4. அதனால் அவை சிறந்த நண்பர் ஆகிவிட்டன. 5. சிங்கம் நம்மை இப்பொழுது தேடுகிறதில்லை. 6. நாம் நம்முடைய பெருமையையும் ஜீவனத்தையும் இழந்தோம். 7. இப்படியானது நம்மாலேயே.

D. 1. நாகன் இவ்வேடர்களுக்குத் தலைவன். 2. நாகன் நேற்று வேட்டைக்குப் போக விரும்பினான். 3. ஆகையால், நாகன் முப்பது வேடர்களைத் தன்முன் வருவித்தான். 4. அவர்கள் நாகனுக்கு அடங்கினவர்கள், 5. அவர்களில் சிலர் வேட்டைநாய்களோடு வந்தனர். 6. வேறு சிலர் ஈட்டிகளையேந்தி வந்தனர். 7. பின்னும் சிலர் பறவைகளைக் கொணடுவந்தனர். 8. நால்வர் வலை கொண்டுவந்தனர். 9. இவர்களை நாகன் நடத்தினான். 10. எல்லோரும் ஒரு காட்டை யடைந்தனர். 11. அதன் பெயர் புலிக்காடு.

E. 1. தொண்டை மண்டலத்தில் மஹீசுரபரம் என்று ஒரு மூதூர் உளது. 2. அதில் அநேக அந்தணர் வாழ்ந்தனர். 3. இவர்கள் எல்லோரும் வேதம் ஓதியுணர்ந்தவர். 4. அல்லாமலும் இவர்கள் நல்லொழுக்கம் உடையவர்கள். 5. இவர்களில் வல்லிசகாயன் என்பான் ஒருவன். 6. இவன் "சீரைத் தேடின் ஏரைத்தேடு" என்பதை நன்கு மதித்தான். 7. ஆகையால் வல்லிசகாயன் பயிர்த்தொழிலினால் ஜீவிப்பனானான்.

F. 1. ஒரூரில், ஒரு பெருங்குட்டைக் கரையில் பல புளியமரங்கள் இருந்தன. 2, இப்புளியமரங்களின்மேல் குரங்குகள் வசித்தன. 3. இக்குரங்குகள் எண்ணிறந்தவைகள். 4. அப்புளியமரங்களும் காலங்கண்டவை. 5. குரங்குகள் தலைமுறை தலைமுறையாய் அப்புளியமரங்களில் வசித்தன. 6. அவை அப்படி வாழுநாளில் ஒருநாள் பெருமழை பெய்தது. 7. அம்மழையோடு பெருங்காற்றும் வீசினது. 8. ஆகவே, குரங்குகள் மிகவும் வருந்தின.

67. வாக்கியங்களையோட்டிய சில குறிப்புக்கள்:—

பொருளில்லாரும் உள்ளாரும் தம் வாழ்க்கையில் வேறுபடுதல்போல், கல்லாதவர்கள் வழங்கும் பாஷையும், கற்றவர்கள் வழங்கும் பாஷையும் பெரிதும் வேறுபடும். பாஷை வழங்கும் விதம் "வழக்கு" என்னப்படும்.

அஃது, இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என இருவகைப்படும்.

இவற்றுள், (a) இயல்பு வழக்கு:—ஒரு பொருளுக்கு இயல்பாயுள்ள சொல்லால் அப்பொருளைக் கூறுவதாம்.

(b) தகுதி வழக்கு:—ஒரு பொருளுக்கு இயல்பாயுள்ள சொல்லை யொழித்துக் காலத்திற்கும், இடத்திற்கும் தகுதியாகிய வேறொரு சொல்லால் அப்பொருளைக் கூறுவதாம்.

[இவை மும்மூன்று வகைப்படும்.]

A. இயல்புவழக்கின் பிரிவுகள்:—	B. தகுதிவழக்கின பிரிவுகள்:—
1. இலக்கணமுடையது,	1. இடக்கர் அடக்கல்,
2. இலக்கணப்போலி,	2. மங்கலம்,
3. மரூஉ.	3. குழூஉக் குறி.

இவற்றுள், 1. இலக்கணமுடையது :— இலக்கணத்திற்கு இசைந்து நிற்பது உடல், யாக்கை, பிறர், நீ, அது.

2. இலக்கணப்போலி:—இலக்கணத்திற்கு இசையாது நின்றதை இலக்கணத்திற்கு இசைந்து நிற்பதுபோற் கொள்வது. இல்முன், தானைமுன், கால்வாய் என்பன, முன்றில், முன்றானை வாய்க்கால் என்று வரல்.

3. மரூஉ:—திரிந்து வந்தது.

உ–ம். அரு மருந்து அன்ன பிள்ளை, சோழ நாடு என்பன, அருமந்த பிள்ளை, சோணாடு என்று வரல்.

4. இடக்கரடக்கல்:—சொல்லத் தகாததை மறைத்துச் சொல்லல்.

உ–ம். பவ்வீ(=பீ), கால் கழுவப் போனான், கால்வாய்க்குப் போய்வா.

5. மங்கலம்:—அமங்கலத்தை மங்கலமாய் உபசரித்துக்கூறல்.
உ–ம். பரலோகமடைந்தார், குளிக்கையில் தாலி பெறுகிற்று.

6. குழூஉக் குறி:—ஒரு கூட்டத்தார் தாம் பேசுவதைப் பிறர் அறியாவண்ணம் ஏற்படுத்திக்கொண்ட குறி [குழூஉ=கூட்டம்.]

உ–ம். மதி வெள்ளை (=ஒரு ரூ.), சொல் விளம்பி (=கள்.), ஓலைக்கடை, ஜலபுஷ்பம்.

68. ஸ்வ-கதன, பர-கதன வாக்கியங்கள்:—

மதுரையில் வாழுங் கோபாலசாமி ஐயங்கார், சென்னையில் வாழும் இராமசந்திர ஐயருக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அக்கடிதத்தில்,

"என் கண்கெடுதி தீரவில்லை. இங்கு இருக்கிற வைத்தியர் பலரையும் பார்த்தாயிற்று. அங்குக் கண்ணாசுபத்திரியில் பார்த்துக்கொள்ள விரும்புகிறேன். இம்மாதம் இருபதாந்தேதிக்குமேல் புறப்படச் சரிப்படும். என் மனைவியும் மக்களும் என்னைப் பிரிந்து இங்கு இருக்கச் சம்மதிக்கவில்லை. அவர்களையும் என்னோடு கூட்டிக்கொண்டு வருகிறேன். எழும்பூரில் கண்ணாசுபத்திரிக்கு அருகில் மூன்றுமாதங்களிற்கு ஒரு தனிவீடு எங்களுக்கு ஏற்பாடு செய்துவைக்கவேண்டியது. உன்னுடைய கடிதங் கண்டதும் நான் புறப்படுகிறேன்" என்று எழுதியிருந்தது.

இதை இராம சந்திர ஐயர் படித்து முடிக்குமுன்னே, அவர் தகப்பனார் ஸீதாராமையர், "இராமசந்திர! இக்கடிதம் யாரிடத்திலிருந்து வந்தது? என்ன எழுதியிருக்கிறது?" என்று கேட்டார்.

இராமசந்திர ஐயர்:—"அப்பா! இக்கடிதம் மதுரை கோபாலசாமி ஐயங்காரிடத்திலிருந்து வந்தது. இதில்,

"தன் கண்கெடுதி தீரவில்லையென்றும், அங்கு இருக்கிற வைத்தியர் பலரையும் பார்த்தாயிற்று என்றும், இங்குக் கண்ணாசுபத்திரியில் பார்த்துக்கொள்ள விரும்புகிறதாகவும், இம்மாதம் இருபதாந்தேதிக்குமேல் புறப்படச் சரிப்படும் என்றும், தன் மனைவியும் மக்களும் தன்னைப் பிரிந்து அங்கு இருக்கச் சம்மதிக்கவில்லையென்றும், அவர்களையும் தன்னோடு கூட்டிக்கொண்டு வருகிறதாகவும், எழும்பூரில், கண்ணாசுபத்திரிக்கு அருகில், மூன்றுமாதங்களுக்குத் தங்களுக்கு ஒரு தனிவீடு ஏற்பாடு செய்துவைக்க வேண்டுமென்றும், என்னுடைய கடிதங் கண்டதும் தான் புறப்படுவதாகவும் எழுதியிருக்கிறார்" என்று, கோபாலசாமி ஐயங்கார் சொன்னதை, இராமசந்திர ஐயர், ஸீதாராமையருக்குச் சொன்னார்.

மேலேகண்ட கடிதத்தில், கோபாலசாமி ஐயங்கார், தான் சொல்ல விரும்பியதைச்சொன்ன "என்" முதல், "புறப்படுகிறேன்" வரையில் உள்ள வாக்கியங்கள் ஸ்வ-கதனமாகவும், கோபாலசாமி ஐயங்கார் சொன்னதை, இராமசந்திர ஐயர், தமது தகப்பனாருக்குச் சொன்ன "தன்" முதல், எழுதியிருக்கிறார்" வரையில் உள்ளது, பர-கதனமாகவும் நின்றன.

☞ என்று, என்றும், ஆக, ஆகவும், ஆய், ஆயும் என்பவற்றையேனும் ஆம் என்பதையேனும் பரகதனத்தில் கூட்டிச் சில சொற்களை மாற்றல்வேண்டும்.

நாம் பேசும்பொழுதும், எழுதும்பொழும் ஆக்கும் வாக்கியங்களும், எழுதியுள்ளவைகளில் வரும் வாக்கியங்களும், ஸ்வ-கதனமாய் அல்லது, பர-கதனமாய் வரல் காண்க.

பொருட்—புணர்ச்சி.

69. மதுரையில் இருக்கும் ஒருவனுடைய (1) மகன், சென்னையிலும், (2) மகள், சேலத்திலும் வாழ்ந்துகொண்டிருந்தாலும், அம்மூவரும் சம்பந்தமுள்ளவர்களே யாவர்.

அவ்வாறே, "நீ காஞ்சியிலிருந்து கொண்டுவந்த வேட்டியை வேலூரிலுள்ள என் தம்பிக்கு அனுப்பு" என்னும் வாக்கியத்தில் அமைந்த நீ வேட்டியை அனுப்பு முதலான சொற்கள், அண்மையில் நின்ற சொற்களோடும், சேய்மையில் நின்ற சொற்களோடும் மிக்க ஸம்பந்தம்பெற்று நின்றன. இவ்வாறே வாக்கியத்தில் ஒரு சொல் மற்றொரு சொல்லோடு பெற்றுள்ள சம்பந்தம், "பொருட் புணர்ச்சி" என்னப்படும்.

இப்பொருட்புணர்ச்சி (1) வேற்றுமைப்புணர்ச்சி (2) அல்வழிப்புணர்ச்சி என இருவகைப்படும்.

இவ்விருவகைப் பொருட்புணர்ச்சிகளில், முதல் வேற்றுமையும், விளி வேற்றுமையும் அல்லாத ஆறு வேற்றுமைகளில் எதிலேனும் ஒன்றில் நின்றபெயருடன், பிறசொற்கள் புணர்வது, வேற்றுமைப்-புணர்ச்சி.

பெயர்ச்சொற்கள் இவ்வேற்றுமைகளின் உருபுகளைப் பெற்று நிற்கும் நிலை—(1) வேற்றுமைத்தொகாநிலை என்றும், வேற்றுமையுருபுகளைப் பெறுமல் நிற்கும் நிலை—(2) வேற்றுமைத்தொகைநிலை என்றும், வேற்றுமையுருபும், அது கொள்ளும் பெயரெச்சமும் மறைந்து நிற்கும் நிலை—(3) உருபும் பயனும் உடன் தொக்கதொகை நிலை என்றும் சொல்லப்படும்.

☞ வேற்றுமைப் புணர்ச்சிகள் அல்லாதவெல்லாம், அல்-வழிப் புணர்ச்சிகள்.

இந்த அல்-வழிப்-புணர்ச்சியும் (1) தொகா நிலை (2) தொகை-நிலை என இருவகையாம். இவற்றை 213, 215-ஆம் பக்கங்களிற்காண்க.

இங்ஙனமன்றி, ஒருபெரும் பட்டணத்தின் வீதியில், (1) பிராமணன்வீடு, (2) முதலியின்வீடு, (3) கிறைஸ்தவன்வீடு, (4) துலுக்கன்வீடு, (5) ஜைனன்வீடு முதலான பலர் வீடுகள் வரிசையாய் இருந்தால், அவ்வீடுகள் ஒன்றோடொன்று இணைந்தும், இணையாமலும் நிற்பதுபோல், "ஐயா! நீரின்றெமக்குக் கூறிய கதை சிறந்த நீதியுள்ளது" என்னும் வாக்கியத்தின் சொற்கள் இணையாமலும் இணைந்தும் நிற்பதுபோல், இருக்கவேண்டிய நிலையில் எழுதுவது "எழுத்துப் புணர்ச்சி யென்னப்படும்.

வேற்றுமைப் புணர்ச்சிகள்—17 வகைப்படும்.

இரண்டாம் வேற்றுமைத்

தொகாநிலை. தொகைநிலை

இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனும் உடன் தொக்க தொகைநிலை

மூன்றாம் வேற்றுமைத்

தொகாநிலை. தொகைநிலை.

மூன்றாம் வேற்றுமை யுருபும் பயனும் உடன் தொக்க தொகைநிலை.

நான்காம் வேற்றுமைத்

தொகாநிலை. தொகைநிலை.

நான்காம் வேற்றுமை யுருபும் பயனும் உடன் தொக்க தொகைநிலை.

ஐந்தாம் வேற்றுமைத்

தொகாநிலை. தொகைநிலை.

ஐந்தாம் வேற்றுமை யுருபும் பயனும் உடன் தொக்க தொகைநிலை.

ஆறாம் வேற்றுமைத்

தொகாநிலை. தொகைநிலை.

☞ ஆறாம் வேற்றுமைக்கு யுருபும் பயனும் உடன் தொக்க தொகைநிலை கிடையாது, ☜

ஏழாம் வேற்றுமைத்

தொகாநிலை. தொகைநிலை.

ஏழாம் வேற்றுமை யுருபும் பயனும் உடன் தொக்க தொகைநிலை.

☞ முதல் வேற்றுமையும், விளி வேற்றுமையும், அல்வழிப்புணர்ச்சியில் அடங்கும். ☜

[வேற்றுமைத் தொடர்கள் பதினேழனுக்கும் உதாரணங்கள்.]

1. இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்:—
வீட்டை விற்றேன். | பெண்ணைப் பெற்றாள். | ஊரை விட்டோம்.

2. இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்:—
வீடு விற்றேன். | பெண்பெற்றாள். | ஊர் விட்டோம்.

3. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனுமுடன்றொக்க தொகை:—
எண்ணெய்க்குடம். | பணப்பை. | மலர்க்கூந்தல்.

4. மூன்றாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்:—
தலையால் வணங்கினான். | கல்லா லெறிந்தார். | வாயால் மடுத்தாய்.

5. மூன்றாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்:—
தலை வணங்கினான். | கல்லெறிந்தார். | வாய் மடுத்தாய்.

6. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனுடன்றொக்க தொகை.
பொற்காப்பு. | ஆராய்ச்சி யறிவு. | கன்மதில்.

7. நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்:—
மதுரைக்குச் சென்றீர். | வீட்டிற்குப் போனீர். | கூலிக்கு வேலை.

8. நான்காம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்:—
மதுரை சென்றீர். | வீடு போனீர். | கூலி வேலை.

9. நான்காம் வேற்றுமை உருபும் பயனுமுடன்றொக்க தொகை:—
அவ்வூர் வழி. | அவை யடக்கம். | கண்மருந்து.

10. ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.
மலையின் இறங்கினீர். | அன்னத்தின் இறங்கினான். | இனத்தின் நீங்கினான்.

11. ஐந்தாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்.—
மலை யிறங்கினீர். | அன்ன மிறங்கினார். | இன நீங்கினாள்.

12. ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனுமுடன்றொக்க தொகை:—
மலையாள மிளகு. | மதுரைக் கடிதம். | கான் யாறு.

13. ஆறாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்:—
என்னுடைய வீடு. | சிறுவருடைய புத்தகம். | புலியினது தோல்.

14. ஆறாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்:—
என் வீடு. | சிறுவர் புத்தகம். | புலித்தோல்.

15. ஏழாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்:—
காட்டில் அலைந்தீர். | ஆற்றில் இறங்கினீர். | செல்வத்தில் பிறந்து.

16. ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்:—
காடலைந்தீர். | ஆறிறங்கினீர். | செல்வத்துப் பிறந்து.

17. ஏழாம் வேற்றுமை உருபும் பயனுமுடன்றொக்க தொகை:—
இக்கிணற்று நீர். | இவ்வூர் மனிதர். | பானைச் சோறு.

☞ வேற்றுமை யுருபும், அதனோடு அவ்வேற்றுமை யுருபு கொள்ளும் பெயரெச்சமும் மறைந்து வருவது, உருபும் பயனும் உடன்றொக்க தொகை. இவற்றிற்கு இங்கில்லா உதாரணங்கள் பல கூறு.

அல்வழிப் புணர்ச்சியும் (1) தொகாநிலைத்தொடர் (2) தொகைநிலைத் தொடர் என இருவிதப்படும்.

அல்வழிப் புணர்ச்சியில், தொகாநிலைத் தொடர்கள்:—**8**.

1. எழுவாய்த் தொகாநிலைத் தொடர்:—

காலம் கழிகின்றது.	நீங்கள் வாழ்வீர்கள்.

2. விளித் தொகாநிலைத் தொடர்:—

அன்னாய்! அழேல்.	மனமே! வருந்தாதே.

3. வினைமுற்றுத் தொகாநிலைத் தொடர்:—

வாழ்க வேந்தன்.	கண்டேன் சீதையை.

4. வினையெச்சத் தொகாநிலைத் தொடர்:—

போய்க் கொடுத்தேன்.	இல்லாமற் போயிற்று.
பாராமற் போகின்றேன்.	மெல்லப் பேசினீர்.

5. பெயரெச்சத் தொகாநிலைத் தொடர்:—

சொன்ன சொல்,	முயலாத மூடர்.
கரிய புயல்-	இல்லாத சமயம்.

6. இடைச்சொற் றொகாநிலைத் தொடர்:—

அந்தோ! கெட்டேன்.	சீ! போ.
அம்மா! பாம்பு.	ஐயோ! மடமே!

7. உரிச்சொற் றொகாநிலைத் தொடர்:—

நனி விளைவு.	கழி பொருள்.
சால நாள்.	உறு நோய்.

8. அடுக்குத் தொகாநிலைத் தொடர்:—

சொல் சொல்!	பொறு பொறு!
தேள் தேள்!	சீ சீ! ஓடு.

அல்வழிப் புணர்ச்சியில், தொகைநிலைத் தொடர்கள்:—**5**.

(1) வினைத்தொகை நிலைத்தொடர்—வளர்மரம். பக்கம் 179 பார்.

(2) பண்புத்தொகை நிலைத்தொடர்—சிறுதூண். பக்கம். 175 பார்.

(3) உவமைத்தொகைநிலைத்தொடர்-பிறைநுதல். பக்கம் 199 பார்.

(4) உம்மைத்தொகை நிலைத்தொடர்-இராப்பகல் பக்கம் 196 பார்.

(5) அன்மொழித்தொகைநிலைத்தொடர்-பூக்குழல்!வா. பக்கம் 224.

☞ மாணாக்கர்களை இத்தொடர்கள் **13**-க்கும் இங்கில்லாத உதாரணங்கள் மும்மூன்று கூறச்செய்க.

அப்பியாசம்—82.

இன்னது இன்ன தொடர் என்றும், விரிந்த விடத்து இன்னபடி நிற்கும் என்றுங் கூறு:—

பாடம்படி
சினைப்பட்டு
ஏரிநீர்
அவையடக்கம்
படம் பார்
லந்தன் தபால்
மனக்களிப்பு
விலைப்பால்
வீடு கட்டு
கண்ணீர்
சுனைநீர்
கூலிவேலை
வாய்மூடு
அண்ணன் கடிதம்
காட்டுப் பூடு
காப்புப் பொன்
சோறுண்
வானத்துளி
தலைமயிர்
செய்யுளுரை
ஜெபஞ் செய்
மதுரைச் சிப்பம்
பானைத் தயிர்
வீட்டு வரி
வாழைநார்க் கயிறு
அரிசிக் கோணி
கிழக்கு வாசல் [டை
வெண்கலப் பாத்திரக்க
ஆற்று வெள்ளம்
நாட்டுக்குடிகள்
மட்பானை
தங்கக்கிண்ணம்
பொற் காப்பு
என் வீடு
உன் மகன்
பட்டுச் சேலை
கல்லெறி
கடவுள் செயல்
மனிதர் எண்ணம்
இருப்புலக்கை
நடைக் களைப்பு
நன்செய்
வாழ்பதி
பொய்யுரை

இராமன் புத்தகம்
பொன் னெடை
செப்புத் தகடு
கற்றூண்
ஆட்டுக்கால்
பொற் கிண்ணம்
கிளிச்சிறகு
கற்சுவர்
மயிற்றோகை
கடற் கரை
ஊனுடல்
மரப் பாவை
மான் கண்
அன்னநடை
மட்கலம்
புன்கங்கொட்டை
உப்புப் பொதி [டை
கண்ணாடிச் சாமான்க
என்னண்ணன் மக்கள்
சர்வேசுவரன்
லோகோபகாரம்
சந்திரோதயம்
கங்காதீரம்
ஜனக்கூட்டம்
வண்டி யெருது
விளக்கெண்ணெய்
வாக்கு வல்லமை
கடவுள் வணக்கம்
குளத்து நீர்
மலையாள மிளகு
பால் வாங்கு
அவ்வூர் வழி
ஊர்க்குடிகள்
மலையருவி
கதை சொல்
வாடகை வண்டி
மலைக்குகை
பெங்களூர் வண்டி
இது கேள்
கண் மருந்து
மண் மாந்தர்
இடிகரை
நாற்கவி
கத்திபுறை

காட்டாறு
பாட்டுப் பாடு
பூனைப் பால்
நாட்டுக் குடிகள்
மதுரைப் புடவை
கவலை மொழி
கவி யிலக்கணம்
மரத்துக் கனி
மலைப்பழம்
பொருள் கொடு
இந்நாட்டு வேந்தர்
கருப்பஞ்சாறு
பெரியோர்குணச்சிறப்பு
அவன் மைந்தன் பெயர்
பலாப்பழம்
மலையுச்சி
வினைப் பயன்
அரசர் பெருமை
வீணைத்தந்தி
பட்டுப் பூச்சி
குற்றேவல்
இடிகிணறு
நன்மொழி
நாய்நரி
தளிர்க்கை
விற்புருவம்
குளிர் புனல்
நன்செய்
வாய்மொழி
அழியுடல்
ஆடரவு
பெருவழி
தீநடை
ஆழ்கடல்
கைகால்
ஆறேகால்
எண்டிசை
கைப்புண்
ஆருயிர்
வன்மனம்
பிட்டரிசி
அன்னப்புள்
புத்தரிசி
வயிற்றெரிச்சல்

பொருட் புணர்ச்சி அல்லது தொடர் கூறப் பழகல்.

A-நான் B-உன் C-தம்பியை D-மூன்று E-வாரங்கட்கு F-முன் G-வேலூர்க் H-கோட்டை I-வாயிலில் J-கண்டேன்.

A+B; B+C; C+D; D+E; E+F; F+G; G+H; H+I; I+J; J.

என்று கொள்க.

1. நான் + உன்—அல்வழிப் புணர்ச்சி; எழுவாய்த் தொகாநிலைத் தொடர்; கண்டேன் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

2. உன் + தம்பியை—வேற்றுமைப் புணர்ச்சி; ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்; தம்பி என்னும் பெயரைச்கொண்டு முடிந்தது.

3. தம்பியை + மூன்று—வேற்றுமைப் புணர்ச்சி; இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்; கண்டேன என்னும் வினைமுற்றிற்குச் செயப்படு பொருளாய் வந்தது.

4. மூன்று + வாரங்கட்கு—அல்வழிப் புணர்ச்சி; பண்புத் தொகைநிலைத் தொடர்; விரிந்தவிடத்து மூன்றாகிய வாரங்கள் என்று நிற்கும்.

5. வாரங்கட்கு + முன்—வேற்றுமைப் புணர்ச்சி; நான்காம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்; முன் என்னும் பெயர்ச்சொல்லைக்கொன்டு முடிந்தது.

6. முன் + வேலூர்—வேற்றுமைப் புணர்ச்சி; ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்; கண்டேன் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது.

7. வேலூர் + கோட்டை—வேற்றுமைப் புணர்ச்சி; ஏழாம் வேற்றுமை உருபும்'பயனும உடன்றொக்க தொகை; விரிந்தவிடத்து வேலூரில் உள்ள கோட்டை என்று நிற்கும்.

8. கோட்டை + வாயிலில்—வேற்றுமைப் புணாச்சி; ஆறும் வேற்ற'மைத் கொகைநிலைத தொடர்; வாயில் எனனும் பெயரைக்கொண்டு முடிந்தது.

9. வாயிலில் + கண்டேன்—வேற்றுமைப் புணர்ச்சி; ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்; கண்டேன் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது.

10. கண்டேன் + ———————அல்வழிப் புணர்ச்சி, வினைமுற்றுத் தொகாநிலைத் தொடர்; நான் என்னும் எழுவாயைக்கொண்டு முடிந்தது.

☞ 27, 28–ஆம் அப்பியாசங்கட்குத் தொடர் கூறியபின் மேலே போக.

70. வேற்றுமைகள் உணர்த்தும் பொருள்கள்:—

I. [இரண்டாம் வேற்றுமையின் பொருள்கள்]

ஆக்கல், அழித்தல், அடைதல், துறத்தல், ஒத்தல், உடைமை.

a. ஆக்கற் பொருள்:—

வீட்டைக் கட்டினன். | குளத்தை வெட்டினார்.

b. அழித்தற் பொருள்:—

வீட்டை இடித்தான். | குளத்தைத் தூர்த்தான்.

c. அடைதற் பொருள்:—

ஆசிரியரை அடைந்தேன். | புத்திரனைப் பெற்றாய்.

d. துறத்தற் பொருள்:—

உலக வாழ்க்கையைத் துறந்தேன். | பந்துக்கள் என்வனைத் துறந்தார்.

e. ஒத்தற் பொருள்:—

கற்பகத்தை ஒத்தான். | சாதகத்தை ஒத்தேன்.

f. உடைமைப் பொருள்:—

மானத்தை உடையவர். | கல்வியை உடையார்.

II. [மூன்றும் வேற்றுமையின் பொருள்கள்.]

முதற்கருவி, துணைக்கருவி, ஏவுதற் கர்த்தா, இயற்றுதற் கர்த்தா, உடனிகழ்ச்சி, கிரியா விசேஷணம், காரணம்.

a. முதற்கருவிப் பொருள்:—

ஊனல் அமைந்த உடல். | சுண்ணும்பினல் கட்டிய சுவர்.

b. துணைக்கருவிப் பொருள்:—

வாளால் வெட்டினன். | கத்தியால் அறுத்தான்.

c. ஏவுதற் கர்த்தாப் பொருள்:—

அவ்வூர் அரசனலாகிய மண்டபம். | இந்நாட்டுவேந்தனல் ஆகிய குளம்.

d. இயற்றுதற் கர்த்தாப் பொருள்:—

ஒருவனல் விளைந்த தீமை. | ஊரவரால் உண்டான கலகம்.

e. உடனிகழ்ச்சிப் பொருள்:—

அண்ணனுடன் சாப்பிட்டேன். | தந்தையுடன் போனர்.

f. கிரியா விசேஷணப் பொருள்:—

துக்கத்தோடு சொன்னன். | இரக்கத்துடன் கேட்டேன்.

g. காரணப் பொருள்:—

நீ வந்தமையால் நான் வந்தேன். | காய்ச்சலால் மடிந்தான்.

III. [நான்காம் வேற்றுமையின் பொருள்கள்.]

கொடை, பகை, நட்பு, தகுதி.
அதுவாதல். பொருட்டு, முறை, உற்பாதம்.

a. கொடைப் பொருள்:—
இரப்போர்க்குப் பொருள் வழங்கினான். | பசித்தோர்க்கு அன்னமிட்டார்.

b. பகைப் பொருள்:—
நோயிற்கு மருந்து | பாம்புக்கு கருடன்.

c. நட்புப் பொருள்:—
பாண்டவர்க்குக் கிருஷ்ணன். | நோய்க்கு அபத்தியம்.

d. தகுதிப் பொருள்:—
அரசர்க்குரியது அருங்கலம். | கற்றோர்க்குரியது கவிபாடல்.

e. அதுவாதற் பொருள்:—
காப்பிற்குப் பொன். | தயிரிற்குப் பால்.

f. பொருட்டுப் பொருள்:—
கூலிக்கு வேலை செய்கின்றேன். | கஞ்சிக்கு நெற் குற்றுவேன்.

g. முறைப் பொருள்:—
அவனுக்கு மகள் இவள். | எனக்குத் தம்பி இவன்.

h. உற்பாதப் பொருள்:—
மழைக்கு மின்னல். | கேட்டிற்கு மதி கெடல்.

IV. [ஐந்தாம் வேற்றுமையின் பொருள்கள்.]

நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது.

a. நீக்கற் பொருள்:—
மலையின் வீழ் அருவி. | புயலின் வரு துளிகள்.

b. ஒப்புப் பொருள்:—
மின்னின் மாய் உடல். | கள்வரின் அஞ்சப்பட்டான்.

c. எல்லைப் பொருள்:—
இந்தியாவின் வடக்கு இமயம். | சிங்கத்திற் புலி கொடியது.

d. ஏதுப் பொருள்:—
பொய் புகலலின் தண்டிக்கப்பட்டான். | விடமுண்டலின் மரித்தார்.

V. [ஆறாம் வேற்றுமையின் பொருள்கள்.]

பண்புத் தற்கிழமை | திரிபினுக்கத் தற்கிழமை
உறுப்புத் தற்கிழமை | பொருட் பிறிதின்கிழமை
ஒன்றன்கூட்டத் தற்கிழமை | இடப் பிறிதின்கிழமை
பலவின்கூட்டத் தற்கிழமை | காலப் பிறிதின்கிழமை

a. பண்புத் தற்கிழமைப் பொருள்:—

நீரினது குளிர்ச்சி | உன்னுடைய பொறுமை.

b. உறுப்புத் தற்கிழமைப் பொருள்:—

என்னுடைய கை. | உன்னுடைய தலை.

c. ஒன்றன்கூட்டத் தற்கிழமைப் பொருள்:—

பசுக்களின் மந்தை. | மனிதர்களின் கூட்டம்.

d. பலவின்கூட்டத் தற்கிழமைப் பொருள்:—

படைகளது தொகுதி. | பறவைகளின் கூட்டம்.

e. திரிபினுக்கத் தற்கிழமைப் பொருள்:—

மிளகினது பொடி. | நெல்லினது பொரி.

f. பொருட் பிறிதின்கிழமைப் பொருள்:—

உன்னுடைய குதிரை. | என்னுடைய புத்தகம்.

g. இடப் பிறிதின்கிழமைப் பொருள்:—

என்னுடைய நாடு. | உன்னுடைய ஊர்.

h. காலப் பிறிதின்கிழமைப் பொருள்:—

உன்னுடைய நாள். | என்னுடைய காலம்.

VI. [ஏழாம் வேற்றுமையின் பொருள்கள்.]

செயலுக்கு இடமாதல்.

இஃது பொருளிடமானது, சினை இடமான,
இடம் இடமானது, குணம் இடமானது,
காலம் இடமானது, தொழில் இடமானது,
என ஆறாய்ப் பிரிக்கப்படும்.

a. பொருள் இடமாக:—

கப்பலின்கண் இருக்கிற மனிதர் | என்னிடத்து நம்பிக்கை.

b. இடம் இடமாக:—

ஊரில் உள்ள குடிகள். | காட்டில்திரியும் விலங்குகள்.

c. காலம் இடமாக;—

சித்திரை மாதத்தில் பிறந்தார். | கோடையில் தாமரை செழிக்கும்.

d. சினை இடமாக:—

கையில் புத்தகம் இல்லை. | காலில் கல் இடறியது.

e. குணம் இடமாக:—

இளமையிற் கற்றது கல்வி. | முதுமையில் நோய் தீர வருமை.

f. தொழில் இடமாக:—

ஆட்டத்தில் அபிநயம். | பிரசங்கத்தில் ஆட்சேபம்.

VII. [எட்டாம்வேற்றுமையின் பொருள்.]

விளித்தல்.

இவ்விளி, (1) அண்மைவிளி, (2) சேய்மைவிளி, (3) புலம்புவிளி என மூவ்வகைப்படும்.

இவற்றுள், அருகிலுள்ள பொருளை அழைப்பது அண்மைவிளி என்றும், தூரத்திலுள்ள பொருளை அழைப்பது சேய்மைவிளி என்றும், புலம்புவோர் அழைப்பது புலம்புவிளி என்றும் கூறப்படும்.

a. அண்மை விளிக்கு:—

மகனே! இங்கு வா.	அண்ண! அதைப் பாரும்.

b. சேர்மைவிளிக்கு:—

அண்ணா! இங்கு வா.	கண்மணீ! ஓடி வா.

c. புலமபுவிளிக்கு:—

அண்ணாவோ!	நாதாவோ!

☞ அழுவோரால் விளிக்கப்படும் பெயர் ஒகாரம் பெற்றுவரும்.

71. [விளிவேற்றுமைக்கான சில முக்கிய விதிகள்.]

I. ளகர வீற்று உயர்திணைப் பெயர்கட்கு:—

1. அளபெடுத்தல், 2. ஈறழிதல், 3. அயல் நீளுதல், 4. ஈற்று ளகர மெய் (ய்) யகரமாதல், 5. ஈற்றயல் அகரம் ஏகாரமாதல் முதலிய விளியுருபுகளாம்.

a. அளபெடுத்தல் விளியுருபாக:—..............வேள்—வே என்!

b. ஈறுகெட்டது விளியுருபாக:—..............அக்காள்—அக்கா!

c. ஈற்றயல்நீண்டது விளியுருபாக:—..........மக்கள்—மக்காள்!

d. ஈற்று ளகரம் யகரமெய்தால் விளியுருபாக:-நல்லாள்-நல்லாய்!

e. ஈற்றயல் அகரம் ஏகாரமாதல்விளியுருபாக:-அடிகள்-அடிகேள்!

II. ஐகார வீற்றுப் பெயர்கட்கு:—

1. இயல்பாதலும், 2. ஐ-ஆய் எனத் திரிதலும், 3. ஐ-ஆ எனத் திரிதலும் விளியுருபுகளாம்.

a. இயல்பாய் விளிப்பொருள்தர:—..............தங்கை—தங்கை!

b. ஐ—ஆய் எனத் திரிதல் விளியுருபாக:—......பிள்ளை—பிள்ளாய்!

c. ஐ—ஆ எனத் திரிதல் விளியுருபாக:—.........அன்னை—அன்னா

III. னகர வீற்று உயர்திணை, அஃறிணைப் பெயர்கட்கு:—

1. ஈறழிவும், 2. ஈறழிவுடன் அயல் நீட்சியும் விளியுருபுகளாம்.

(1) ஈறழிவு விளியுருபாக:—

மைந்தன்—மைந்த! | அலவன்—அலவ!

(2) ஈறழிவுட னயல் நீட்சி விளியுருபாக:—

மைந்தன்—மைந்தா! | அலவன்—அலவா!

IV. ரகரவீற்றுப் பெயர்கட்கு:—

ஈற்றயல் ஆ, ஈ ஆதல், ஈர் சேரல் முதலிய விளியுருபுகளாம்.

சான்றோர்—சான்றீர்! | மடவார்—மடவீர்!

ஈற்றில் ஈர் வரல்விளியுருபாக:—

எமர்—எமரீர்! | நமர்—நமரீர்!

V. லகரவீற்றுப் பெயர்கட்கு:—

இயல்பாதலும், ஏகாரம் வரலும், ஈற்றயல் நீளலும் விளியுருபுகளாம்.

ஈற்றயல் நீளல் விளியுருபாக:—

மடவரல்—மடவரால்! | தோன்றல்—தோன்றால்.

72. [எட்டுவேற்றுமைகளுங் கொண்டு முடியுஞ் சொற்கள்.]

ஐந்தாம் வேற்றுமை எல்லைப்பொருளில் வருகையிலும், ஆறும் வேற்றுமை எப்பொழுதும், பெயரைக்கொண்டுமுடியும். நான்கும் ஏழும் பெயரையும் வினையையுங் கொள்ளும்; மற்றவை வினையைக் கொள்ளும்.

☞ பெயர்கள் விளிவேற்றுமையில் நிற்கையில் முன்னிலையிடத்தன வென்றறிக. முதல் வேற்றுமை யெழுவாயும், ஏவுதற் கர்த்தா, இயற்றுதற் கர்த்தா என்னும் பிரிவுகளைப் பெறும்.

☞ ஒரு வேற்றுமையின் உருபு நிற்கவேண்டிய இடத்தில் மற்றொரு வேற்றுமையின் உருபு நிற்பது "வேற்றுமை மயக்கம்" என்னப்படும்.

☞ ஒரு வேற்றுமைக்குரிய பல உருபுகளில், ஒன்று நிற்கவேண்டிய இடத்தில் வேறொன்று நிற்பது "உருபு மயக்கம்" என்னப்படும்.

"கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி."

அப்பியாசம்—83.

A. இஃது இன்ன வீற்றுப்பெயர், இன்ன விளியுருபேற்று நின்றது என்று கூறு:—

(1) நல்லாய்! கேள். (2) மக்காள்! வாரீர். (3) பொற்றொடீ! போகாதே. (4) அன்னாய்! வருந்தேல். (5) மைந்த! என் சொற் கேள். (6) அலவ! புகல். (7) அண்ணா! வா. (8) தம்பீ! தமிழோது. (9) நெஞ்சே! துணி. (10) அக்கா! இதைப் பார். (11) மாநிலத்தீர்! கேண்மின். (12) ஐயே! என்னை வருத்தாதிரும். (13) நம்பீ.

B. இவற்றிற்கு விளி வேற்றுமையில் வரும் ருபங்கள் பலவும் எழுது:—

1. பின்னை. 2. அக்காள். 3. எந்தை. 4. புலவன். 5. நங்கை. 6. தம்பிமார். 7. மக்கள். 8. வேடன். 9. குயில். 10. அண்ணன். 11. நாரை. 12. நல்லாள். 13. அம்மை.

அப்பியாசம்—84.

கீழ்வரும் வேற்றுமைகட்குப் பொருள் கூறுக.

1. அவ்வாற்றின் கரையிலோர் கோயில் கட்டினோம். 2. மலையாளத்திலிருந்து வந்த பாயை இவனுக்குக் கொடு. 3. கண்ணாடிப் பெட்டியினுள் அதை வைத்தான். 4. மொட்டைத்தலையோடு, இங்கே வரக்கூடாது. 5. காப்பிற்குக் கொடுத்த தங்கத்திலுந் திருடினான். 6. தன் மகனுடைய வரவு கண்டு மகிழ்ந்தான். 7. அவன் மரத்திலிருந்து விழுந்து முடவனானான். 8. நாங்கள் உம்மைக் காண விருப்புற்று இவ்வூர் வந்தோம். 9. அவனுங் குதிரையுங் கரை சேர்ந்தார்கள். 10. அந்நாட்டில் கொள்ளைநோயோடு பஞ்சமும் மேலிட்டது. 11. சண்டமாருதத்தால், நாங்கள் வந்த கப்பல் வழியில் வருந்தியது. 12. அவன் பெரியோருடன் பழகி, நன்னடை பெற்றான். 13. கூலிக்காரன் தன் வேலையை முடியாமல், கூலியை யிழந்தான். 14. உண்டு குணமிங் கொருவர்க் கெனினும், கீழ் கொண்டு புகல்வது அவர் குற்றமே. 15. யானவனை யறிந்தே யிவை கூறினேன். 16. வயிரூரத் தாயமுதுண்ணுங் குழவி இது. 17. ஈயார் தேட்டைத் தீயோர் கொள்வர்.

73. அன்மொழித் தொகை. (அல்-மொழித் தொகை)

*என்னும் வாக்கியத்தில் உள்ள.	*என்னும் தொகை நிலைத்தொடர்.	விரிந்த விடத்து, இன்னமொழிகளைக் கொண்டு, இன்னபடி நிற்கும்.
I. A. பாஞ்சாலி, கண்ணனுக்குத் தன் சோர்கூந்தல் காட்டினாள்.	சோர்கூந்தல்	சோர், கூந்தல் என்னும் இரண்டு சொற்களிற் கிடையில், சோர் என்பதற்குரிய காலக்குறிப்பும் பெயரெச்ச விகுதியுங்கொண்டு "சோர்கின்ற கூந்தல்" என்று நிற்கும்.
B. அப்பாஞ்சாலியைச் "சோர்கூந்தல்! நின் துயர்தீர்ப்பேன்" என்று கண்ணன் தேற்றினான்.	சோர்கூந்தல்	சோர், கூந்தல் என்னும் சொற்களிற்கிடையில், சோர் என்பதற்குரிய காலக்குறிப்பும், பெயரெச்ச விகுதியுங்கொண்டு, "சோர்கின்ற கூந்தல்" என விரியாமல், உடையவளே! என்னும் பிறசொல்லேடும் புறத்திற்கொண்டு சோர்கின்ற கூந்தலை உடையவளே!" என்று நிற்கும்.
II. A. இஃது நன்னெறி; இந்நெறியே சென்மின்.	நன்னெறி	நன்மை, நெறி என்னும் சொற்களிற் கிடையில், ஆகிய என்னும் பெயரெச்சத்தைக்கொண்டு, "நன்மையாகிய நெறி" என்று நிற்கும்.
B. அவன், நன்னெறி படிக்கின்றான்.	நன்னெறி	நன்மை, நெறி என்னும் சொற்களிற் கிடையில், ஆகிய என்னும் பெயரெச்சத்தைக்கொண்டு, "நன்மை ஆகிய நெறி" என்று விரியாமல், கூறுவது என்னும் பிறசொல்லையும் புறத்திற்கொண்டு, "நன்மை ஆகிய நெறியைக் கூறுவது" என்று நிற்கும்.
III. A. அன்னநடைச் சீதை அடவிதனை யடைந்தாள்.	அன்னநடை	அன்னம், நடை என்னும் சொற்களிற் கிடையில் போன்ற என்னும் உவமையுருபைக்கொண்டு, "அன்னம் போன்ற நடை" என்று நிற்கும்.

B. அன்னநடை போன்மாறல் அரசன் வசமானான்.	அன்னநடை	அன்னம், நடை என்னுஞ் சொற்களிற் கிடையில், போன்ற என்னும் உவமையுருபைக்கொண்டு, "அன்னம் போன்ற நடை" என்று விரியாமல்; உடையவள் என்னும் பிறசொல்லையும் புறத்திற்கொண்டு, "அன்னம்போன்ற நடையுடையவள்" என்று நிற்கும்.
IV. A. உயிர்மெய் ஆகிய முப்பதும் முதலெழுத்து.	உயிர்மெய்	உயிர், மெய் என்னுஞ் சொற்களிற் கிடையிலும், கடையிலும் உம் என்னும் எண்ணும்மை கொண்டு "உயிரும் மெய்யும்" என்று நிற்கும்.
B. உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு.	உயிர்மெய்	உயிர், மெய் என்னுஞ் சொற்களிற் கிடையிலும், கடையிலும் எண்ணும்மை கொண்டு, உயிரும் மெய்யும் என்று விரியாமல், "சேர்ந்து உள்ளவை" என்னும் பிறசொல்லையும் புறத்திற் கொண்டு, "உயிரும் மெய்யுஞ் சேர்ந்து உள்ளவை" என்று நிற்கும்.
V. A. பொற்றொடி பூண்டகையார் போயினர் பூப்பறிக்க.	பொற்றொடி	பொன், தொடி என்னுஞ் சொற்களிற் கிடையில் பொன் என்பதற்குரிய 'ஆல்' என்னும் வேற்றுமை யுருபும், செய்த என்னும் பெயரெச்சமுங்கொண்டு, "பொன்னாற் செய்த தொடி" என்று நிற்கும்.
B. பொற்றொடி இதனைக் கேட்டுப் புந்தியில் தெளிவு பூண்டாள்.	பொற்றொடி	பொன், தொடி என்னுஞ் சொற்களிற் கிடையில், பொன் என்பதற்குரிய "ஆல்" என்னும் வேற்றுமை யுருபும், செய்த என்னும் பெயரெச்சமுங்கொண்டு, "பொன்னாற் செய்த தொடி" என்று விரியாமல், அணிந்தவள் என்னும் பிறசொல்லையும் புறத்திற் கொண்டு, "பொன்னாற் செய்த தொடியை யணிந்தவள்" என்று நிற்கும்.

☞ குறிப்பு:—மேலே காட்டியவாறு (1) வினைத்தொகை, (2) பண்புத்தொகை, (3) உவமைத்தொகை, (4) உம்மைத்தொகை, (5) வேற்றுமைத்தொகை என்னும் பல்வகைத்தொகைகளும், தம்பில் மறைந்து நின்றவை அல்லாத பிறமொழிகளும், புறத்தில் மறைந்து நிற்க வருவது, "அன்மொழித்தொகை" என்னப்படும்.

குறிப்பு:—விரிந்த விடத்துப் புறத்தில்வரும் வேறு சொற்களால் வேறு பொருள் தரும் இவைபோலாது, சில பொருள்களின் பெயர்கள், நின்றபடியே அப்பொருள்களோடு சம்பந்தப்பட்ட வேறு பொருள்களுக்குப் பெயராகி வரும். அவற்றையடுத்த பக்கத்திற் காட்டுவோம். [அப்பியாசம்—83. செய்.]

74. ஆகு—பெயர்.

கீழ்வரும் வாக்கியங்களில், தடித்த எழுத்தில் உள்ள சொற்களில், முதல் இனத்திற்கும் இரண்டாமினத்திற்கும் பொருளில் உள்ள பேதத்தை மாணாக்கர் வாயினின்றும் உபாத்தியாயர் வருவிக்க.

A. 1. இத்தோட்டத்தில் **மல்லிகை** நடுங்கள்.	2. **மல்லிகை** மாலை வாடிப்போனது
B. 1. உன் **தலைக்கு** இப்பாகை சரிப்படுமோ பார்.	2. **தலைக்கு** ஒருபேச்சுப்பேசன்மின்
C. 1. **மதுரை** நான் பிறந்த தானம்	2. என்னை **மதுரை** நகைக்கின்றது.
D. 1. **பாலைக்** குடிக்கப் பூனை யலைகின்றது.	2. குழந்தை தவழ்ந்துபோய்ப் **பாலை** யுருட்டினது.
E. 1. குழந்தையின் கையழுக்கைக் கழுவு.	2. **அழுக்கை** எண்ணி வண்ணானுக்குப் போடு.
F. 1. நீர் என்ன மருந்துண்ணினும் இந்நீர் **வற்றல்** அரிது.	2. **வற்றல்** நன்றாய் வறுபட வில்லையே கோமளம்.
G. 1. **அறஞ்**செய விரும்பு என்றனள் ஔவை.	2. **அறங்**கற்றும் **மறம்** புரிகின்றோம்
H. 1. "ப்" "வ்" **எதிர்காலம்** உணர்த்துவன.	2. முனிவர் **எதிர்காலமும்** அறிவர்
I. 1. அவருக்குத் **தாயுமானவர்** எனும் பெயரிட்டனர்.	2. **தாயுமானவரில்** ஒரு பாட்டுப் பாடுங்கள்.
J. 1. இஃது மைசூரில் விளைந்த **பொன்.**	2. இவள் **பொன்** பூண்டறியாள்.
K. 1. **ஒன்று** முதல் நூறு மட்டுஞ் சொல்லு.	2. நன்று ஆராயாமல் **ஒன்று**ந்தொடங்காதே.
L. 1. எட்டு **மணங்கு** சர்க்கரை வாங்கினோம்.	2. இன்றுதான் ஒரு **மணங்கு** விற்றோம்.
M. 1. ஒருபடியுப்பின் விலையென்ன?	2. இப்பசு வேளைக்குப்**படி** கறக்கும்.
N. 1. இப்புடவையின் நீளம் பதினெட்டு **முழம்.**	2. அப்பட்டில் ஓம் **முழம்** எனக்கு அனுப்பு.
O. 1. **அன்னம்** வாத்தின் இனத்திற் சேர்ந்தது.	2. **அன்னம்!** உனைக் கொல்வேனோ என்றழுதான் அரிச்சந்திரன்

☞ மேலே வந்தபடி, ஒரு பொருளின் பெயர், அப்பொருளோடு எவ்வகையிலேனுஞ் சம்பந்தப்பட்டுள்ள வேறொரு பொருளுக்குப் பெயராகி வரின், "**அகு—பெயர்**" என்னப்படும்.

ஆகு-பெயரின் வகைகள்.

1. மல்லிகை மாலை.—இங்கு, "மல்லிகை" என்னும் முதற்பொருளின் பெயர், அப்பொருளின் சினைப்பொருளாய் உண்டாகிய "பூவிற்கு" ஆகி வந்தமையால், இஃது, முதலாகு பெயர்.

2. தலைக்கு ஒரு பேச்சுப் பேசன்மின்.—இங்கு "தலை" என்னும் சினைப் பொருளின் பெயர், அது சம்பந்தப்பட்டுள்ள முதற்பொருளாகிய "மனிதனுக்கு" ஆகி வந்தமையால், இஃது. சினையாகு பெயர்.

3. என்னை மதுரை நகைக்கிறது.—இங்கு, "மதுரை" என்னுந் தானத்தின் பெயர், அத்தானத்திலுள்ள "மாந்தர்களுக்கு" ஆகி வந்தமையால், இஃது, தானவாகு பெயர்.

4. குழந்தை பாலை யுருட்டினது.—இங்கு பாத்திரத்தைத் தானமாகக் கொண்டு, அதில் நின்ற தானியாகியபால், தான் இருந்த பாத்திரமாகிய "தானத்திற்கு" ஆகி வந்தமையால், இஃது தானியாகு பெயர்.

5. அழுக்கை எண்ணி வண்ணானுக்குப் போடு.—இங்கு, "அழுக்கு" என்னும் பணபுப்பெயர், அதனைப்பெற்றுள்ள "ஆடைகளுக்கு" ஆகி வந்தமையால், இஃது, பண்பாகு பெயர்.

6. வற்றல் வறுபடவில்லை—இங்கு, "வற்றல்" என்னுந் தொழிற்பெயர், அத்தொழிலைப்பெற்ற "உணவுப்பொருளிற்கு" ஆகி வந்தமையால், இஃது, தொழிலாகு பெயர்.

7. அறங் கற்றும் மறம் புரிகின்றோம்.—இங்கு, "அறம்" என்னுங் காரியத்தின் பெயர், அக்காரியத்தை உணர்த்தும் "நூலுக்கு" ஆகி வந்தமையால், இஃது, காரியவாகு பெயர்.

8. முனிவர் எதிர்காலமும் அறிவர்.—இங்கு "எதிர்காலம்" என்னுங் காலப்பெயர், அக்காலத்தில் "நேரிடுகின்றவைகளுக்கு" ஆகி வந்தமையால், இஃது காலவாகு பெயர்.

9. அவள் பொன் பூண்டறியாள்.—இங்கு, அணி செய்வதற்கு முதற் கருவியாகிய "பொன்," அதனாலாகிய "அணிக்கு" ஆகி வந்தமையால், இஃது கருவியாகு பெயர்.

10. "தாயுமானவரில்" ஒரு பாட்டுப் பாடு.—இங்கு, "தாயுமானவர்" என்னும் கர்த்தாவின் பெயர், அவரால் ஆக்கப்பட்ட "நூலுக்கு" ஆகி வந்தமையால், இஃது, கர்த்தாவாகு பெயர்.

11. நன்கு ஆராயாமல் ஒன்றும் தொடங்காதே இங்கு, "ஒன்று" என்னும் எண்ணலளவைப் பெயர். "ஒரு காரியத்திற்கு" ஆகி வந்தமையால், இஃது, எண்ணலளவையாகு பெயர்.

12. இன்றுதான் ஒரு **மணங்கு** விற்றேம்—இங்கு, "மணங்கு" என்னும் எடுத்தலளவைப் பெயர், அவ்வளவுள் "சர்க்கரைக்கு" ஆகி வந்தமையால், இஃது, எடுத்தலளவையாகு பெயர்.

13. இப்பசு வேளைக்குப் **படி** கறக்கின்றது—இங்கு, "படி" என்னும் முகத்தளவைப் பெயர், அவ்வளவுள்ள "பாலுக்கு" ஆகி வந்தமையால், இஃது, முகத்தலளவையாகு பெயர்.

14. அப்பட்டில் ஒரு **முழம்** அனுப்பு.—இங்கு, "முழம்" என்னும் நீட்டலளவைப் பெயர், அவ்வளவுள்ள "பட்டிற்கு" ஆகி வந்தமையால், இஃது, நீட்டலளவையாகு பெயர்.

15. **அன்னம்!** உன்னைக் கொல்வேனே?—இங்கு, "அன்னம்" என்னும் பறவையின் பெயர், நடையில் "அன்னம் போன்றவளுக்கு" ஆகி வந்தமையால், இஃது, உவமையாகு பெயர்.

அப்பியாசம்—85.

கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள ஆகுபெயர்களை எடுத்து, இன்னகாரணத்தினுல் இன்ன ஆகுபெயர் என்று சொல்:—

1. தலைவாரி முடித்துக்கொள்ள வா. 2. அவன் மனத்தை அவன் முகத்தா லறிந்தோம். 3. சங்கும் பறையும் எங்கும் முழங்கின. 4. வண்ணான் வந்தான் அழுக்கை எண்ணிப்போடு. 5. நன்மை புரிந்தார்க்குத் தீமை நினைப்பவன் நலம் பெருன். 6. நூற்றுக்கு ஒருவனும் நல்லவன் அல்லன். 7. மயிலே உன்னைக் கொல்லத்துணிவேனே? 8. தேனே! அவ்வழிச் செல்லேல்! 9. உமது தாமரைத் தாட்களே எமக்குத்துணை. 10. பகைவென்றும் பாராண்டிலர் பாண்டவர். 11. அவ்வேந்தன் அவளை உடற்பிறப்பாய் எண்ணினுன். 12. நம்முடல் நீர்மேற் குமிழி போன்றது. 13. நீ அரசும் யான் அமைச்சும் ஆவோம். 14. மகனே! நின் கல்விக்கு ஈது அடுக்காது. 15. குழலினும், யாழினும் மழலையே இனியது. 16. இவ்வீட்டுக்கு வெள்ளையடிக்கவேண்டும் 17. பொன்மானைப்பெற நாடிப் புலர்ந்தனள் அம்மான். 18. அப்பாவை அருந்ததியினுஞ் சிறந்த கற்பினள் 19. குழந்தை தவழ்ந்துபோய் எண்ணெயை யுருட்டியது. 20. அவள் கைக்கும் வாய்க்கும் நாங்கள் நடுங்குகின்றேம். 21. இன்று முல்லையைச் சூட்டிக் கொள்ளுங்கள். 22. தலைக்கொரு பேச்சுப் பேசாது, இப்பெரியவர்க்குக் காது கொடுங்கள். 23. அதோ பேரிகை கேட்கின்றது. 24. மூன்று கஜம் எனக்கு ஒரு அங்கி ஆகுமா? 25. கீழ்மகளிடத்தில் நீதியிராது. 26. நாழி கொடுத்தவர்க்

கும் நன்மையே நாடு. 27. உரலி லகப்பட்டது உலக்கைக்குத் தப்புமோ? 28. பறை ஈன்று பண்ணமையா யாழின். 29. எண்ணும லொன்றையு மெடுக்காதேயும். 30. மதிக்குல விளக்கே போற்றி. 31. அவள் பொன் பூண்டறியாள் புதுநூலுடுத்தறியாள். 32. விளக்கு முறிந்துபோயிற்று. 33. நற் கனியும் எனக்கு வேம்பு ஆயிற்று. 34. வற்றலைக் கறியாக்கினுய் மசியலுக் குப்பிட மறந்தாய். 35. இவன் பகாசுரன். 36 தற்பகமே! உன்னைக் காண என் கலி நீங்கியது 37. இப்பசு வேளைக்கு இரண்டுபடி கறக்கின்றது. 38. ஊர் நிந்தைக் கஞ்சுகிறேன். 39. தையல்! உனக்கிது தகுவதன்று. 40. நளன் தமயந்தியைக் காரிருளிற் கைவிட்டான். 41. இவளொரு தாடகை.

அப்பியாசம்—86.

"____" என்னும் வாக்கியத்தில் உள்ள, "____" என்னுந் தொடர், "____" என்று விரிதலால், அஃது, இன்ன தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை என்று கூறு.

1. சிங்கநடை வந்தான். 2. பண்மொழி பதுங்கினள். 3. நேரிழை இவை இவை நினைந்தனள். 4. நீர்மோர் இதோ வந்து கொண்டிருக்கிறான். 5. ஒண்டொடி வந்தாள். 6. நால்வாய் ஒன்றை நாங்கள் கண்டோம். 7. நன்னெறியும் நல்வழியும் உய்வகையும் அச்சிட்டோம். 8. கொடியிடையே! கூசாது பாடு. 9. நெடுந்தகாய்! நீ ஏன் எங்களோடு பேசுகின்றிலை? 10. மதிச்சடை வந்தனன். 11. கண்ணுதலைப் பணிந்தோம். 12. கற்பகக்கை வந்தான். 13. சோர்குழல் என் சொல்லினள்? 14. மெல்லியல்! இத்துன்பம் விடு. 15. மின்னிடை! இன்னல் உறுதே. 16. பிறைநுதல் பெரிதும் வருந்தினள். 17. மலர்க்குழால்! நின் மனமறுக்கம் ஒழி. 18. வேல்விழீ! நீ விளம்பியதென்? 19. தாழ்குழால்! தயங்கேல். 20. சேல்விழீ! தனிவழிச் செல்லாதே. 21. துடியிடை துயின்றிலள். 22. நீள்குழால்! நீ நினைப்பதென். 23. கொற்றக்கொடி வந்தனன். 24. பொற்றேடி போயினள்? 25. வெங்கதிர் உதித்தனன். 26. பணப்பை வந்தான். 27. அக்ஷரப்பகை வருகிறான். 28. பாய்ச்சிகைக்கை வருகிறான். 29. தண்கதிர் மறைந்தது. 30. புதுப்பிணம் வருகிறான். 31. வாணுதல் வாட்டந் தீர்ந்தனள். 32. மின்னிடை ஓடினள் மேனி வருந்தவே. 33. மயிலியல் இலக்குமணன் மாற்றங் கேட்டிலள். 34. வார்குழல் இவ்வனம் வந்ததென்னையோ? 35. இச்சொல்லின் இடைநிலை என்ன? 36. தயிர்ப்பானை வந்தானே? 37. புலித்தோல் இதோ போகின்றான். 38. வெந்திறல் விரைந்தனன். 39. மழைக்கை வந்தான். 40. நரைத்தலை! வா.

எழுத்துப் புணர்ச்சி.

75. "நீ ஏன் என்னை பார்க்கின்றாய்?"

என்பதைப் புணர்ச்சி விதிகளின்படி யெழுதியவிடத்து,
"நீ யேனென்னைப் பார்க்கின்றாய்?" என்று நிற்கும்.

ஆதலால், எழுத்துப்புணர்ச்சியாவது:—சொற்றொடர்களில் நிற்கின்ற, நிலைமொழியின் ஈற்றெழுத்தும், அதன்முன் வருமொழியின் முதலெழுத்தும் புணரும் புணர்ச்சியாம்.

இவ்வாறாகும் எழுத்துப்புணர்ச்சியும் (1) இயல்புப் புணர்ச்சி, (2) விகாரப் புணர்ச்சி என இருவகைப்படும்.

இவற்றுள், (1) இயல்புப்புணர்ச்சியாவது:—நிலைமொழியின் ஈற்றெழுத்தும், வருமொழியின் முதலெழுத்தும் எவ்வித விகாரமும் அடையாமற் புணரும் புணர்ச்சியாம்.

பொருள் + உண்டு = பொருளுண்டு.	அம்மா + கொடு = அம்மாகொடு.
குணம் + இல்லை = குணமில்லை.	வேந்தே + கேள் = வேந்தேகேள்.

(2) விகாரப்புணர்ச்சியாவது:—சொற்கள்புணரும்போது நிலைமொழியாகிலும், வருமொழியாகிலும், அல்லது இவ்விருமொழிகளாகிலும் தோன்றல், திரிதல், கெடுதல் முதலிய விகாரங்களில், ஒன்றை அல்லது பலவற்றைப் பெற்றுப் புணரும் புணர்ச்சியாம்.

1. தோன்றல் விகாரம் மாத்திரம் வர:—
கண் + இல்லை = கண் + ண் + இல்லை = கண்ணில்லை.

2. திரிதல் விகாரம் மாத்திரம் வர:—
கல் + மனம் = கன்மனம். பொன் + கொடி = பொற்கொடி.

3. கெடுதல் விகாரம் மாத்திரம் வர:—
மரம் + வேர் = மர(—)வேர். முகம் + மதி முக(—)மதி.

4. கெடுதல், தோன்றல் என்னும் இரு விகாரங்கள் வர:—
வட்டம் + ஆழி = வட்ட(—) + ஆழி = வட்ட + வ் + ஆழி = வட்டவாழி.

5. கெடுதல், தோன்றல், திரிதல் எனுமு வ்விகாரங்களும்வர-:
பனை + காய் = பனங் காய் இங்கு, நிலைமொழியீற்று ஐகாரங்கெட்டு அம் எனுஞ்சாரியை தோன்றி, அதனீற்று மகரமேய் வருமொழி முதல் வல்லெழுத்திற்கு இனமாய்த் திரிந்தது.

☞ இவ்விகாரங்களை எலுமிச்சங்காய், மாதுளங்காய், ஆற்றங்கரை, கருப்பஞ்சாறு முதலியவற்றிலுங் காணலாம்.

76. மெய்யெழுத்தை யீற்றிலுடைய மொழிகளோடு,

உயிரெழுத்தை முதலில் உடைய மொழிகள் புணருமாறு:—

(1) தனிக்குற்றெழுத்தை அடுத்து நில்லாத மெய்யின் முன் வந்த உயிர், அந்த மெய்யெழுத்தோடு சேரும்.

நூல்+ஓதினேம்=நூலோதினேம் | பார்+ஆண்டீர்=பாராண்டீர்.

(2) தனிக்குற்றெழுத்தை அடுத்து நின்ற மெய், தன்முன் உயிர் வந்தால் இரட்டும்.

மண் + அளந்த=மண் + ண் + அளந்த = மண்ணளந்த.

என் + இருப்பு =என் + ன் + இருப்பு = என்னிருப்பு.

☞ இரட்டித்த மெய்யின்மேல் உயிரேறியது 76.—1. இனுல்.

77. உயிரெழுத்தை யீற்றிலுடைய மொழிகளோடு,

உயிரெழுத்தை முதலில் உடைய மொழிகள் புணருமாறு:—

(1) இ, ஈ, ஐ எனும் எழுத்துக்களின் முன் எந்த வுயிரெழுத்து வந்தாலும், இடையில் (ய்) யகரம் உடன்படு மெய்யாகி வரும்.

இ—மணி + அடி = மணி + ய் + அடி =மணியடி.

ஈ—நீ + எழுதினுய்= நீ + ய் + எழுதினுய=நீயெழுதினுய்.

ஐ—யானை + எங்கே? = யானை + ய் + எங்கே? =யானையெங்கே.

☞ உடன்பட்ட மெய்யின்மேல் உயிரேறுவது 76.—1. இனுல்.

(2) அ, ஆ, உ, ஊ, ஓ, ஓ, ஔ எனும் எழுத்துக்களின் முன் உயிர்வந்தால், இடையில் (வ்) வகரம் உடன்படு மெய்யாகி வரும்.

அந்த+ ஆடு = அந்த+ வ் + ஆடு = அந்தவாடு.
நிலா + இருக்கும் = நிலா + வ் + இருக்கும் = நிலாவிருக்கும்.
திரு + உடையார் = திரு + வ் + உடையார் = திருவுடையார்.
பூ + எடுத்தோம்= பூ + வ் + எடுத்தோம் = பூவெடுத்தோம்.
நொ + அழகா = நொ + வ் + அழகா = நொவ்-வ்-அழகா.
போ + என்பீர் = போ + வ் + என்பீர் = போவென்பீர்.
கௌ + அழகு = கௌ+ வ் + அழகு = கௌவழகு-

(3) இடைச்சொல்லாகிய ஏகாரத்தின் முன் உயிர்வந்தால், இடையில் (ய்) யகரம் உடன்படு மெய்யாகி வரும்.

தானே + ஓடும் = தானே + ய் + ஓடும் =தானேயோடும்.

(4) ஓரெழுத் தொருமொழியாகிய ஏகாரத்தின் முன் உயிர்வந்தால் இடையில் (வ்) வகரமே உடன்படு மெய்யாக வரும்.

சே + உழுதது = சே + வ் + உழுதது=சேவுழுதது.

(5) செம்மை என்னும் பண்புப்பெயர் விகாரப்பட்டுச் "சே" என்று நிற்கையில், அதன்முன் உயிர்வந்தால், (ய) யகரம் அல்லது (வ்) வகரம் உடன்படு மெய்யாகி வரும்.

சே + இதழ் = சே + ய் + இதழ் = சேயிதழ்.
சே + அடி = சே + வ் + அடி = சேவடி.

(6) "எ" என்னும் வினாவெழுத்தின் முன்னும், அ, இ என்னும் சுட்டெழுத்துக்களின் முன்னும் உயிர் வந்தால், இடையில் (வ்) வகரந் தோன்றும்.

எ + ஊர் = எ + வ் + ஊர் = எவ் + வ் + ஊர் = எவ்வூர்.
அ + ஆடு = அ + வ் + ஆடு = அவ் + வ் + ஆடு = அவ்வாடு.
இ + இலை = இ + வ் + இலை = இவ் + வ் + இலை = இவ்விலை.

☞ தோன்றிய வகர மெய் இரட்டியது 75.—2. இனல்.

(7) குற்றியலுகரம், தனக்குமுன் உயிர்வந்தால், தன்னிடத்தை விட்டு தான் ஒடும்.

எட்டு + அணு = எட்ட் + அணு = எட்டணு.
வந்து + அழைத்தீர் = வந்த் + அழைத்தீர் = வந்தழைத்தீர்.
மார்பு + அகலம் = மார்ப் + அகலம் = மார்பகலம்.
அரசு + இழந்து = அரச் + இழந்து = அரசிழந்து.
காடு + அடைந்த = காட் + அடைந்த = காடடைந்த.
அஃது + இல்லை = அஃத் + இல்லை = அஃதில்லை.

☞ குற்றுகரங்கெட நின்ற மெய்யின்மேல் உயிரேறியது 75.—1. இனல்.

(8) முற்றியலுகரம், தனக்குமுன் உயிர் வந்தால், கெடாமல், (வ்) வகர வுடன்படு மெய்யைக் கொள்ளும்.

பசு + இது = பசு + வ் + இது = பசுவிது.
அணு + ஒன்று = அணு + வ் + ஒன்று = அணுவொன்று.

(9) குற்றியலுகரவீறய் நின்ற எவ்வகை வடமொழியின் முன்னும் உயிர் வந்தால், (வ்) வகரம் உடன்படு மெய்யாகி வரும்.

ஏது + என்ன? = ஏது + வ் + என்ன = ஏதுவென்ன?
தம்பு + என்னும் = தம்பு + வ் + என்னும் = தம்புவென்னும்.

(10) சில விடங்களில், தனக்குமுன் உயிர் வந்த விடத்துக் குற்றியலுகரங் கெடாமையும், முற்றியலுகரங் கெடுதலும் உண்டு.

காண்பதும் + உம் = காண்பதுவும். | கதவு + இல்லை = கதவில்லை.
வந்தது + உம் = வந்ததுவும். | உணவு + இல்லை = உணவில்லை.

☞ குற்றியலுகரம், ஈற்றெழுத்தின் அயலெழுத்தினால் ஆறு வகைப்படும்.

1	2	3	4	5	6
வன்றொடர்க் குற்றிய லுகரம்.	மென்றொடர்க் குற்றிய லுகரம்.	இடைத்தொடர்க் குற்றிய லுகரம்.	உயிர்த்தொடர்க் குற்றிய லுகரம்.	நெடிற்றொடர்க் குற்றிய லுகரம்.	ஆய்தத்தொடர்க் குற்றிய லுகரம்.
சுக்கு	சங்கு	நல்கு	வரகு	பாகு	அஃது
அச்சு	பஞ்சு	ஆய்சு	அரசு	மாசு	இஃது
விட்டு	வண்டு	வெய்து	உதடு	ஆடு	எஃகு
முத்து	பந்து	மார்பு	எருது	வாது	வெஃகு
உப்பு	அம்பு	போழ்து	உருபு	பாபு	கஃசு
புற்று	கன்று	வெள்கு	வயிறு	ஆறு	இருபஃது

(11) டுகரத்தை அல்லது றுகரத்தை ஈற்றில் உடைய உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களின் முன்னும், நெடிற்றொடர்க் குற்லுகரங்களின் முன்னும், உயிர் வந்தால், வேற்றுமை வழியிறியலும், பண்புத்தொகையிலும், டுகா றுகரங்களிலுள்ள மெய் இரட்டும்.

1. டுகரவீற்று உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் உயிர் வர:—
முகடு + உயரம் = முகட்டு + உயரம் = முகட்டுயரம்.
2. டுகரவீற்று நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் உயிர் வர:—
வீடு + அகலம் = வீட்டு + அகலம் = வீட்டகலம்.
3. றுகரவீற்று உயிர்தொடர்க் குற்றிமலுகரத்தின் முன் உதிர் வர:—
வயிறு + இரைச்சல் = வயிற்று + இரைச்சல் = வயிற்றிரைச்சல்.
4. றுகரவீற்று நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் உயிர் வர:—
ஆறு + அண்டை = ஆற்று + அண்டை = ஆற்றண்டை.
5. டுகரறுகரவீற்று இக்குற்றியலுகரங்கள் பண்புத்தொகையிலிரட்ட:-
மலடு + ஆ = மலட்டு + ஆ = மலட்டா
வெளிறு + ஓலை = வெளிற்று + ஓலை = வெளிற்றோலை.

குறிப்பு:—இரண்டாம் வேற்றுமைத்தொகை அல்லது ஏழாம் வேற்றுமைத்தொகையில் நின்ற டுகர றுகர வீற்று உயிர்த்தொடர், நெடிற்றொடர்க்குற்றிய லுகர வீற்று மொழிகளுக்குமுன் வருமொழி வினைச் சொல்லாயின், டுகர றுகரங்கள் இரட்டாமல் உகரங்கெடும்.

காடு + அடைந்த = காட் + அடைந்த = காடடைந்த.
காடு + உறைந்தார் = காட் + உறைந்தார் = காடுறைந்தார்.
பேறு + உடையான் = பேற் + உடையான் = பேறுடையான்.
ஆறு + உறைமுதலே = ஆற் + உறைமுதலே = ஆறுறைமுதலே.

(12) அரு, கரு, பெரு, முது என்னும பண்படிகளின் முன் உயிர்வரின், ஈற்றிலுள்ள உகரங் கெட்டு, முதலுயிர் நீளும்.

அரு + உயிர் = ஆர் + உயிர் = ஆருயிர்.
கரு + ஆடு = கார் + ஆடு = காராடு.
பெரு + ஆசை = பேர் + ஆசை = பேராசை.
முது + ஊர் = மூத் + ஊர் = மூதூர்.

(13) கூறு, சிறு, வேறு, நடு, நெடு, புது, பசு என்னும் முற்றியலுகர வீற்றுப் பண்படிகள், தமக்குமுன் உயிர் வந்தால், உகரமேறிய வீற்றுமெய் இரட்டிக் குற்றியலுகர வீற்று மொழிகளாகும்

குறு	+	ஏவல்	=குற்று	+	ஏவல்	=குற்ற்	+	ஏவல்	=குற்றேவல்.
சிறு	+	உயிர்	=சிற்று	+	உயிர்	=சிற்ற்	+	உயிர்	=சிற்றுயிர்.
வேறு	+	ஓலை	=வெற்று	+	ஓலை	=வெற்ற்	+	ஓலை	=வெற்றோலை.
நடு	+	ஆறு	=நட்டு	+	ஆறு	=நட்ட்	+	ஆறு	=நட்டாறு.
நெடு	+	இலை	=நெட்டு	+	இலை	=நெட்ட்	+	இலை	=நெட்டிலை.
புது	+	அரிசி	=புத்து	+	அரிசி	=புத்த்	+	அரிசி	=புத்தரிசி.
பசு	+	இலை	=பச்சு	+	இலை	=பச்ச்	+	இலை	=பச்சிலை.

☞ இங்குக் குற்றியலுகரங் கெட்டது 76.—இனால். அது கெட நின்ற மெய்யின்மேல் வருமொழி முதலுயிரேறியது. 75—1. இனால்.

சொற்களைச் சந்தியுடனெழுதிப் புணர்ச்சிவிதி கூறும் வருக:—

நீ என் இருப்பை அவனுக்கு அறிவி.

நீ+என்—இவை, "இ, ஈ, ஐ என்னும் எழுத்துக்களின் முன், எந்த வுயிரெழுத்து வந்தாலும், இடையில் (ய்) யகரம் உடன்படு மெய்யாகி வரும்" என்னும் விதியினால், நீ+ய்+என் என்றாகி, "தனிக்குற்றெழுத்தை அடுத்துநில்லாத மெய்யின்முன் வந்த உயிர், அந்த மெய்யெழுத்தோடுசேரும்" என்னும் விதியினால், நீ யேன், எனப் புணரும்.

என்+இருப்பை—இவை, "தனிக்குற்றெழுத்தை அடுத்துநின்ற மெய் தனக்குமுன் உயிர் வந்தால் இரட்டும்" என்னும் விகுதியினால், என்+ன்+இருப்பை என்றாகி, "தனிக்குற்றெழுத்தை யடுத்து நில்லாத மெய்யின்முன் வந்த உயிர் அந்த மெய்யெழுத்தோடு சேரும்" என்னும் விதியினால், என் னிருப்பை, எனப் புணரும்.

இருப்பை+அவனுக்கு—இவை, "இ, ஈ, ஐ என்னும் எழுத்துக்களின் முன் எந்த உயிரெழுத்து வந்தாலும், இடையில் (ய்) யகரம் உடன்படு மெய்யாக வரும்" என்றதினால், இருப்பை+ய்+அவனுக்கு என்றாகி, "தனிக்குற்றெழுத்தை யடுத்துநில்லாத மெய்யின்முன் வந்த உயிர் அந்த மெய்யெழுத்தோடு சேரும்" என்றதினால், இருப்பை யவனுக்கு, எனப் புணரும்.

அவனுக்கு+அறிவி—இவை, "குற்றியலுகரம் தனக்குமுன் உயிர்வந்தால் தன்னிடத்தை வந்த வுயிரிற்கு விட்டுத் தான் ஓடும்" என்றதினால், அவனுக்க்+அறிவி என்றாகி, "தனிக்குற்றெழுத்தை யடுத்து நில்லாத மெய்யின்முன் வந்த வுயிர் அந்த மெய்யெழுத்தோடு சேரும்" என்றதினால், அவனுக் கறிவி, எனப் புணரும்.

ஆதலால், "ஈ என் இருப்பை அவனுக்கு அறிவி" என்னும் வாக்கியம், சந்தியுடன் எழுதின் நீ யென்னிருப்பை யவனுக் கறிவி" என நிற்கும்.

அப்பியாசம்—87.

மேலே காட்டியவாறு விதிகூறிச் சந்தியுடன் வீட்டிலெழுதி வித்தியாசாலைக்குக் கொண்டுபோக வேண்டியது:—

1. அவன் இனிய உணவு இல்லாமல் எ இ ஆறு இளைத்தான் என்று எண்ணுகின்றேன். 2. தமயந்தி, என் அரு உயிரே! என்னை இங்கு அலையவிட்டு எங்கு ஒ ஒளிந்தனை எ இஃது உனக்குஅழகு ஒ? என்றாள். 3. அவன், நான் இதை உங்களுக்கு அறிவிக்க எ எனது அண்ணனர் என்னை இங்கு அனுப்பினர் என்றான். 4. அதனை உங்களுக்கு உணர்ந்த இவரை அனுப்புகிறோம் ஐயா! 5. நீ என்னை அறியாது ஓடி ஒளிய உன்னல் ஆன எல்லாம் இயற்றினய்.

78. வருமொழிமுதல்வல்லெழுத்துத்தவாமல்மிகும்புணர்ச்சிகள்:—

(1) ஈறுகெட்டு வரும் எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன்னும், வினையெச்சத்தின் முன்னும் வருகின்ற வல்லெழுத்து மிகும்.
நடவா+காரியம்=நடவாக்காரியம். அறியா+சிறுவன்=அறியாச்சிறுவன். இல்லா+தம்பி=இல்லாத் தம்பி. பொல்லா+புதல்வி=பொல்லாப்புதல்வி. ஒன்றுமே பேசா ப் போயினன். அவனையங்குங் காண க் கலங்கினேம்.

(2) இரண்டாம் வேற்றுமையின் உருபின் முன்னும், நான்காம் வேற்றுமையின் உருபுகளில், கு, ஆக, பொருட்டு என்பவற்றின் முன்னும், வரும் வல்லெழுத்து மிகும்.

ஐ ——— அவனை	+	கண்டீர்	=	அவனைக் கண்டீர்.
கு ——— அதற்கு	+	சொல்	=	அதற்குச் சொல்.
ஆக ——— எதற்காக	+	தந்தாய்	=	எதற்காகத் தந்தாய்.
பொருட்டு—என்பொருட்டு	+	போம்	=	என்பொருட்டுப்போம்.

(3) அ, இ, எ என்னும் இடைச் சொற்களிற்கு முன்வரும் வல்லெழுத்து மிகும்.

அ	+	காடு	=	அக் காடு.	அ	+	தனை	=	அத் தனை.
அ	+	சேனை	=	அச் சேனை.	அ	+	பால்	=	அப் பால்.
இ	+	கிளை	=	இக் கிளை.	இ	+	தடை	=	இத் தடை.
இ	+	செடி	=	இச் செடி.	இ	+	பழி	=	இப் பழி.
எ	+	கால்	=	எக் கால்.	எ	+	தெரு	=	எத் தெரு.
எ	+	சந்து	=	எச் சந்து.	எ	+	பாய்	=	எப் பாய்.

(4) அ, இ, எ என்னும் இடைச்சொற்களின் திரிபாகிய அந்த, இந்த, எந்த என்பவற்றின் முன் வரும் வல்லெழுத்து மிகும்.

அந்த + கால் = அந்தக் கால்	அந்த + தலை = அந்தத் தலை.
அந்த + சனி = அந்தச் சனி	அந்த + பசு = அந்தப் பசு.
இந்த + கிளி = இந்தக் கிளி	இந்த + தறி = இந்தத் தறி.
இந்த + சட்டி = இந்தச் சட்டி	இந்த + பிழை = இந்தப் பிழை.
எந்த + கடை = எந்தக் கடை	எந்த + தாய் = எந்தத் தாய்.
எந்த + சரம் = எந்தச் சரம்	எந்த + பால் = எந்தப் பால்.

(5) இ, ய, ஆ, அ என்னும் விகுதிகளைப் பெற்ற வினையெச்சங்களின் முன்னும், அளபெடையாலான இகரவீற்று வினையெச்சத்தின் முன்னும், வரும் வல்லெழுத்து மிகும்.

இ ——— புதல்வரைக் காட்டிற்குப் போக்கிப் புலம்பினன்.

ய் ——— அதைப் போய்ப் பாருங்கள்.

ஆ ——— புயல் பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு

அ ——— என் அண்ணன் குளிக்கப் போனன்.

ஈஇ ——— இஃது, முந்துகான் முட்பறீஇப் பருமுளை யடித்ததே.

விசேஷக் குறிப்பு.—உறீஇ, பெறீஇ, உடீஇ, இடீஇ. கடைஇ, அடைஇ, புகீஇ, செலீஇ, கொளீஇ போன்றவை அளபெடையினுலான உடன்பாட்டு இறந்தகால வினையெச்சங்கள்-

(6) அ, றி, வழி, கடை, இடத்து என்பவைகளைப் பெற்று நின்ற குறிப்பு வினையெச்சங்களின் முன் வரும் வல்லெழுத்து மிகும்,

அ ——— சிறுவர்காள்! மெல்லப் பேசுங்கள்.

றி ——— அவன் அடக்குவார் இன்றிக் கெட்டான்,

வழி ——— பொருள் இல்லாவழிச் சுகமேது?

கடை ——— யான் இங்கில்லாக்கடைக் வுள்வர் நடமாடுவர்.

இடத்து ——— இவன், நீர் இல்லாவிடத்துச் சிறிதும் படியான்.

(7) அ, ஆ, ஈ, ஊ, ஏ, ஒ என்னும் உயிரெழுத்துக்களை ஈற்றிலுடைய அஃறிணைப் பெயர்களின் முன் வரும் வல்லெழுத்து, இரு வழியிலும மிகும்.

1. வேற்றுமைவழி:—

அ-விள + கோடு = விளக் கோடு.	ஊ-பூ + பறித்தான் = பூப்பறித்தான்.
ஆ-கனு + காண் = கனுக் காண்.	ஏ-சே + பிடித்தீர் = சேப்படித்தீர்.
ஈ-தீ + சுடர் = தீச் சுடர்.	ஒ-கோ + குணம் = கோக்குணம்.

2. அல்வழி:—

அ—இவ் விளச் சிறிது.	ஊ—இதன் பூச் சிறந்தது.
ஆ—இக்கனுத் தீது.	ஏ—உன் சேப் பெரிது-
ஈ—தீப்பற்றியெறிந்தது.	ஒ—கோக் களித்தனன்.

(8) முற்றிய லுகரவீற்றுப் பெயர்ச்சொல்லின் முன்வரும் வல்லெழுத்து இருவழியிலும் மிகும்.

வேற்றுமை:—சான்றோர் சினம் நீர் கிழிய எய்த வடுப் போல மாறும்.
அல்வழி:—வடு + தெரிகின்றது = வடுத் தெரிகின்றது.

(9) வன்றொடர்க் குற்றிய லுகரவீற்று மொழிகளின் முன் வரும் வல்லெழுத்து இருவழியிலும் மிகும்.

வேற்றுமைவழி	அல்வழி
முத்து + சரம் முத்துச் சரம்.	கொக்கு + பறக்கும் = கொக்குப் பறக்கும்.
காட்டு + பசு காட்டுப் பசு.	சுக்கு + திப்பிலி = சுக்குத் திப்பிலி.

(10) இ, ஐ என்னும் உயிரெழுத்துக்களையும், ய, ர, ழ என்னும் மெய்யெழுத்துக்களையும் ஈற்றிலுடைய அஃறிணைப்பெயர், வேற்றுமை, உவமை, பண்பு என்னுந் தொகைகளில் நிற்கையில், அவற்றின் முன்வரும் வல்லெழுத்து மிகும்.

வேற்றுமைத் தொகை:—	உவமைத் தொகை:—
இ—கிளி + சிறகு = கிளிச் சிறகு.	காவி + கண் = காவிக் கண்.
ஐ—ஆனை + தலை = ஆனைத் தலை.	குவளை + கண் = குவளைக் கண்.
ய்—வாய் + தவிடு = வாய்த் தவிடு.	வேய் + தோள் = வேய்த் தோள்.
ர்—தேர் + கால் = தேர்க் கால்.	கார் + கூந்தல் = கார்க் கூந்தல்.
ழ்—கூழ் + சுவை = கூழ்ச் சுவை.	காழ் + படிவம் = காழ்ப் படிவம்.

பண்புத் தொகை.

இ—உந்தி + கமலம் = உந்திக்கமலம்.	ய்—மெய் + புகழ் = மெய்ப்புகழ்.
ஐ—சாரை + பாம்பு = சாரைப்பாம்பு.	ர்—கார் + பருவம் = கார்ப்பருவம்.

(11) வேற்றுமை, பண்பு, உவமை என்னுந் தொகைகளில் நின்ற மகரவீற்றுப் பெயரின் முன்வரும் வல்லெழுத்து, நிலைமொழியீற்று மகரங் கெட்டவிடத்து மிகும்.

1. வேற்றுமைத் தொகை:—

மனம் + கவலை = மனக்கவலை.	செல்வம் + செருக்கு = செல்வச் செருக்கு.
ஈயம் + செம்பு = ஈயச்செம்பு.	நகரம் + படலம் = நகரப் படலம்.

2. பண்புத் தொகை.

நீளம் + கழி = நீளக்கழி.	நீலம் + சாயம் = நீலச்சாயம்.
அகலம் + துணி = அகலத்துணி	சதுரம் + கல் = சதுரக்கல்.

3. இருபெயரொட்டுப் பண்புத் தொகை.

மனம் + காவல் = மனக்காவல்.	துயரம் + கடல் = துயரக்கடல்.

4. உவமைத் தொகை.

கமலம் + கண் = கமலக்கண்.	கமலம் + தாள் = கமலத்தாள்.

(12) இனி என்னு மிடைச்சொல்லின் முன்னும், சுட்டு அல்லது வினு விடைச்சொல்லை யொட்டிவரும் படி என்னும் பெயர்ச் சொல்லின் முன்னும், வரும் வல்லெழுத்து மிகும்.

இனி + காயும் = இனிக் காயும்.
இனி + செய் = இனிச் செய்.
அவன், அப்படிக் கருதினுன்.
அதை இப்படிச் செய்தாய்.
இனி + பேசான் = இனிப் பேசான்.
இனி + தாரான் = இனித் தாரான்.
இதை எப்படித் தாண்டினுன்?
நீர் எப்படிப் போனீர்?

(13) குற்றியலுகரங்களின் ஈற்றில் சாரியையாகி வரும் ஐகாரத்தின் முன்வரும் வல்லெழுத்து மிகும்.

அற்று + ஐ = அற்றை + கூலி = அற்றைக் கூலி.
மற்று + ஐ = மற்றை + சிறுவர் = மற்றைச் சிறுவர்.
ஒன்று + ஐ = ஒற்றை + தந்தம் = ஒற்றைத் தந்தம.
நேற்று + ஐ = நேற்றை + பொழுது = நேற்றைப்பொழுது.

(14) உயிரையும், மெய்யையும் ஈருகவுடைய உயர்திணைப் பெயர்களும், பொதுப்பெயர்களும் இருபெயரொட்டுப் பண்புத் தொகையிலும், இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும் நிற்கையில் அவற்றின் முன்வரும் வல்லெழுத்து மிகும்.

இருபெயரொட்டுப் புண்புத்தொகை இரண்டாம் வேற்றுமைத்தொகை.

நம்பிக் கொற்றன்.
தாய்ப் பசு.
தாய்க் கொலை.
பகைஞர்க் கண்டேன்.

(15) வேற்றுமைத் தொகையில் நிற்கும் மென்றொடர்க் குற்றிய லுகரவீற்று மொழிகளின் முன்வரும் வல்லெழுத்து மிகும்.

குரங்கு + கால் = குரங்குக் கால்.
விருந்து + செலவு = விருந்துச்செலவு.
அம்பு + தலை = அம்புத் தலை.
இரும்பு + படி = இரும்புப் படி.

(16) ஏழாம் வேற்றுமையின் பொருளுணர்த்தி நிற்கும் அங்கு, ஆங்கு, இங்கு, ஈங்கு, எங்கு, யாங்கு, ஆண்டு, ஈண்டு, யாண்டு என்னுஞ் சொற்களின் முன்வரும் வல்லெழுத்து மிகும்.

அங்கு —— எங்களுக்கு அங்குக் குடிக்க நீருங் கிடைக்கவில்லை.
ஆங்கு —— யான் ஆங்குப் படுத்துறங்கி விட்டேன்.
இங்கு —— இரவில் இங்குத் தங்குவது தகுதியன்று.
ஈங்கு —— இனி ஈங்குக் கண்ட காட்சிகளைப்பற்றி யெழுதுவோம்.
எங்கு —— நேற்றிரவு, எங்குத் தங்கினீர்?
யாங்கு —— பவணந்தி இவ்வாறு, யாங்குக் கூறுவோம்;
ஆண்டு —— ஆண்டுக் கண்ட வண்ணங் கூறுவோம்.
ஈண்டு —— ஈண்டுக் கூறத் தொடங்குவோம்.
யாண்டு —— என் மக்களை யாண்டுக் கண்டீர்.

அப்பியாசம்—88.

கீழ்வரும் வாக்கியங்களைச் சந்தியுடனெழுதி விதி கூறு:—

1. நீ அ ஆற்றுக்கு போய் குளித்து இந்த துணிகளை அழுக்கு போக அறைந்து அலசி உலர்த்தி எடுத்துக்கொண்டுவா.

2. நாங்கள் இ புத்தகத்தை உன் அண்ணனுக்கு கொடுக்க பெரு ஆவல் உற்று அவன் இருந்த இடத்தை தேடி ஓடினோம். அவன் ஓ எங்களை கண்டு ஒன்று உம் உரையாது இருந்தான்.

79. வருமொழிமுதல் மெல்லெழுத்து

அல்லது இடையெழுத்து மிகும் புணர்ச்சிகள்:—

(1) தனிக்குற்றெழுத்தை அடுத்துநின்ற யகர மெய்யின் முன்னும், தனிஐகாரத்தின் முன்னும்வரும் மெல்லெழுத்துமிகும்.

மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்.	கை + மாறு = கைம் மாறு.
பொய் + நெறி = பொய்ந் நெறி.	பை + நாகம் = பைந் நாகம்.

(2) அ, இ, எ என்னும் இடைச்சொற்களின் முன்வரும் ஞ, ந, ம, வ க்கள் மிகும்.

அ + ஞமலி = அஞ் ஞமலி	எ + மான் = எம் மான்.
இ + நாடு = இந் நாடு	அ + வீடு = அவ் வீடு.
எ + நாடு = எந் நாடு	இ + விடம் = இவ் விடம்.

80. தவறாது திரிதல் விகாரமுண்டாகும் புணர்ச்சிகள்:—

(1) இரண்டாம், ஏழாம் வேற்றுமைத் தொகையில் நின்ற சொற்களின் ஈற்று மகரமெய், தனக்கு முன்வரும் வல்லெழுத்திற்கு இனமாகத் திரியும்.

இரண்டாம் வேற்றுமைத் தொகை:-	ஏழாம் வேற்றுமைத் தொகை:-
பணம் + கேட்டான் = பணங்கேட்டான்	நிலம் + கிடந்தீர் = நிலங்கிடந்தீர்.
தவம் + செய்தீர் = தவஞ் செய்தீர்.	நகரம் + தங்கினோம் = நகரந்தங்கினோம்
பணம் + தண்டினீர் = பணந் தண்டினீர்.	வனம் + திரிந்தீர் = வனந்திரிந்தீர்

(2) எழுவாயாகவும், பெயரெச்சமாகவும், வினைமுற்றாகவும் நிற்குஞ் சொற்களின் ஈற்று மகரமெய், தனக்கு முன் வரும் வல்லெழுத்திற்கு இனமாகத் திரியும்.

எழுவாய்த் தொடர்:—	பெயரெச்சத் தொடர்:—
கர்வம் + குறைந்தது = கர்வங்குறைந்தது	ஆகும் + காலம் = ஆகுங்காலம்.
மரம் + செழித்தது = மரஞ்செழித்தது.	வரும் + சிறுவன் = வருஞ்சிறுவன்.
மனம் + தடுமாறி = மனந்தடுமாறி.	தரும் + தாய் = தருந்தாய்.

வினைமுற்றுத் தொடர்.

கொடும் + செட்டியாரே! = கொடுஞ்செட்டியாரே! வரும் + தப்பு = வருந்தப்பு.

(3) குற்றியலுகரம், தனக்குமுன் யகரம் வரின், இகரமாகத் திரியும்,

ஆடு + யாருக்கு? = ஆடியாருக்கு! | நாகு + யாது? = நாகியாது?

(4) வேற்றுமை, பண்பு, உவமை என்னுந் தொகைகளில் நின்ற மென்றொடர்க் குற்றியலுகர வீற்று மொழிகளுட் சில, தமக்கு முன் எவ்வெழுத்து வரினும், வன்றொடர்க் குற்றுயலுகர மொழிகளாகத் திரியும்.

வேற்றுமைத் தொகை:—

கன்று + ஆ = கற்று.	செம்பு + பிடி = செப்புப்பிடி.
குரங்கு + அரசு = குரக்கரசு.	இரும்பு + பாதை = இருப்புப் பாதை.
இரும்பு + ஆணி = இருப்பாணி.	நஞ்சு + அரவு = நச்சரவு.

பண்புத் தொகை:—	உவமைத் தொகை:—
அன்பு + தளை = அற்புத்தளை.	நஞ்சு + பகை = நச்சுப்பகை.
கரும்பு + வில் = கருப்புவில்.	கரும்பு + மொழி = கருப்பு மொழி.

(5) மொழிகளினீற்றில், தனிக்குறிலை யடுத்து நின்ற மகர மெய், தனக்குமுன் ஞகர நகரங்கள் வரின் அவைகளாகத் திரியும்.

அம் + ஞாலம் = அஞ் ஞாலம்.	தம் + நாடு = தந் நாடு.
எம் + ஞாயம் = எஞ் ஞாயம்.	எம் + நாள் = எந் நாள்.

(6) வினையெச்சங்களின் ஈற்றில் நின்ற லகர, னகர மெய்கள், தனக்கு முன் வல்லெழுத்து வரின், றகர மெய்யாகத்திரியும்.

ஆல்.—அவன் வந்தால் களிப்போம் =அவன் வந்தாற் களிப்போம்.
இல்.—மழை பெய்யில் கார் விளையும் =மழை பெய்யிற் கார் விளையும்.
இன்.—மழை வரின் காரியங் கெடும் =மழை வரிற் காரியங் கெடும்.

அப்பியாசம்—89.

சந்தியுடனெழுதி ஒவ்வொரு சந்திக்கும் விதி கூறு:—

1. நீர் அங்கு கண்டவற்றை சிறிது உம் ஒளியாது, எமக்கு கூறும் ஐயா! 2. நீ அவனுக்கு புரிந்த இ பெரு உதவியை அவன் என்று உம் ஏ மறவான். 3. மனம் கவலையை ஒழிக்க எற்ற ஔடதம் இ மண் உலகில் எவர்பால் உம் இல்லை ஏ. 4. உடனே இராமனை பாலூருக்கு அனுப்பி எ குடியானவன் இடத்திலிருந்து ஆவது எட்டுபடி ஆறுமாதக் கீரைத்தண்டு விரை வாங்கி கொண்டுவர சொல்லும். 5. நீ என்னிடத்தில் அன்பு உள்ளவன் என்பதை செய்கையால் உணர்ந்து பேச்சினல் ஆவது ஒன்று உம் ஏ இன்று.

81. தவறாது கெடுதல் விகாரமுண்டாகும் புணர்ச்சிகள்:—

(1) மொழியீற்று மகரம், தனக்கு முன் மெல்லெழுத்து வரில், இருவழியிலுங் கெடும்.

வேற்றுமை:—	அல்வழி:—
மரம் + ஞமலி = மர(—)ஞமலி.	மரம் + ஞான்றது = மர(—) ஞான்றது.
மரம் + நீளம் = மர(—)நீளம்.	மரம் + நிமிர்ந்தது = மர(—)நிமிர்ந்தது.
மரம் + மான் = மர(—)மான்.	மரம் + முறிந்தது = மர(—) முறிந்தது.

(2) தனிக் குற்றெழுத்தை யடுத்து நில்லாத யகரமெய், தனக்கு முன் யகரம் வரில், கெடும்.

தாய் + யார்? = தாயார்? | நாய் + யாருக்கு? = நாயாருக்கு?

(3) உம்மைத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை, ஆறும் வேற்றுமைத்தொகை எனுந் தொகைகளில் நின்ற வுயர் திணைப்பெயர்களி னீற்று னகர, ரகர மெய்கள், தமக்கு முன் எவ் வெழுத்துவரினும், கெடும்.

உம்மைத் தொகை:—

கபிலன் + பரணன் = கபிலபரணர்.
இராமன் + இலக்குமணன் = இராமவிலக்குமணர்.

இருபெயரொட்டுப் பண்புத் தொகை:—

சிவன் + பெருமான் = சிவபெருமான்.
முருகன் + கடவுள் = முருகக்கடவுள்.

ஆறும் வேற்றுமைத் தொகை:—

நளன் + வெண்பா = நளவெண்பா | வேளாளர் + வீதி = வேளாளவீதி.

(4) வேற்றுமை, பண்பு, உவமை என்னுந் தொகைகளில் நின்ற மொழியீற்று மகரமெய், தனக்கு முன் உயிரெழுத்து அல் லது இடை யெழுத்து வரில், கெடும்.

வேற்றுமைத் தோகை:—

மரம் + உலக்கை = மர வுலக்கை. | மரம் + வேர் = மர வேர்.

பண்புத் தோகை:—	உவமைத்தோகை:—
வட்டம் + ஆழி = வட்ட வாழி.	பவளம் + இதழ் = பவள விதழ்.
வட்டம் + வடிவம் = வட்ட வடிவம்.	பவளம் + வாய் = பவள வாய்.

(5) வேற்றுமை, பண்பு, உவமை என்னும் தொகைகளில் நின்ற மொழியீற்று மகரம், தனக்குமுன் வல்லெழுத்து வரில், கோடும்.

வேற்றுமை வழி:—

மரம் + கிளை = மர (—)க்கிளை. | நிலம் + பரப்பு = நில(—)ப்பரப்பு.

பண்புத் தொகை:—

வட்டம் + கல் = வட்ட (—)க்கல். | சதுரம் + கல் = சதுர(—)க்கல்.

உவமைத் தொகை:—

கமலம் + கண் = கமல(—)க்கண். | பங்கயம் + கை = பங்கய(-)க்கை.

82. நிலைமொழியும் வருமொழியும் எவ்வித விகாரமுமின்றி இயல்பாயப் புணரும் புணர்ச்சிகள்:—

(1) அ அல்லது வை என்னும் விகுதியைப் பெற்று நின்ற அஃறிணைப் பன்மைப் பெயர்களின் முன்வரும் வல்லெழுத்து, எங்கும் இயல்பாம்.

வேற்றுமை வழி:—	அல்வழி:—
சில + கண்டீர் = சில கண்டீர்	சில + கழிந்த = சில கழிந்த.
பல + சிதைத்தீர் = பலசிதைத்தீர்.	பல + சென்ற = பல சென்ற.
அவை + தின் = அவை தின்	அவை + தீய = அவை தீய.
இவை + பாடு = இவை பாடு.	இவை + பெரிய = இவை பெரிய.

(2) இருவழியிலும் முற்றியலுகர வீற்றுச் சுட்டுப்பெயர், வினைப்பெயர் ஆகிய இவற்றின் முன்னும், பண்புத்தொகையில் நின்ற எண்ணுப்பெயரின் முன்னும், வரும் வல்லெழுத்து, இயல்பாம்.

வேற்றுமை:—	அல்வழி:—
அது + கண்டீர் = அது கண்டீர்.	அது + கரிது = அது கரிது
இது + செய்தீர் = இது செய்தீர்.	இது + சிறிது = இது சிறிது
எது + பெறுவீர் = எதுபெறுவீர்.	எது + பெரிது? = எது பெரிது?

பண்புத் தொகை:—

ஒரு + கண் = ஒரு கண்	அறு + பகை = அறு பகை.
இரு + செவி = இரு செவி	எழு + கடல் = எழு கடல்.

(3) இ, ஐ என்னும் உயிரெழுத்துக்களையும், ய, ர, ழ என்னும் மெய்யெழுத்துக்களையும் ஈற்றிலுடைய அஃறிணைப்பெயர், எழுவாய்த்தொடரில் அல்லது உம்மைத் தொகையில் நிற்கையில், அதன் முன் வரும் வல்லெழுத்து, இயல்பாம்.

எழுவாய்த் தொடர்:—	உம்மைத் தொகை:—
கத்தி + கூறியது = கத்தி கூரியது.	கனி + கிழங்கு = கனி கிழங்கு
பானை + சிறியது = பானை சிறியது.	ஆனை + சேனை = ஆனை சேனை.
காய் + கசக்கும் = காய் கசக்கும்.	காய் + கனி = காய் கனி.
யாழ் + பழையது = யாழ்பழையது.	நீர் + சருகு = நீர் சருகு.
நீர் + கலங்கும் = நீர் கலங்கும்.	இகழ் + புகழ் = இகழ் புகழ்.

(4) ஒடு, ஓடு, அது என்னும் வேற்றுமையுருபுகளின் முன் வரும் வல்லெழுத்தும், இயல்பாம்.

ஆற்றொடு + செல் = ஆற்றொடு செல்.	எனது + கத்தி = எனது கத்தி.
அதனோடு + போ = அதனோடு போ.	நினது + தாய் = நினது தாய்.

(5) ஏழாம் வேற்றுமையின் பொருள் தந்து நிற்கும் அன்று, இன்று, என்று, பண்டு, முந்து என்னுஞ் சொற்களின் முன்வரும் வல்லெழுத்து, இயல்பாம்,

அன்று + கண்ட = அன்று கண்ட.	என்று + போன = என்று போன.
இன்று + செய்த = இன்று செய்த.	பண்டு + புரிந்த = பண்டு புரிந்த.

(6) ஏ, ஆ, ஓ, யா என்னும் வினாவெழுத்துக்களின் முன் வரும் வல்லெழுத்து, இயல்பாம்.

அவனே + கண்டான் = அவனேகண்டான்?	நீயோ + தந்தாய் = நீயேதந்தாய்
ஆணா + பிறந்தது = ஆணா பிறந்தது?	யா + சிறிய = யா சிறிய?
அவனா + போனான் = அவனா போனான்?	

(7) முற்றியலுகா வீற்று வினைத்தொகைகளின் முன் வரும் வல்லெழுத்து, இயல்பாம்.

படு + கணை = படு கணை.	சுடு + சொல் = சுடு சொல்.

(8) மே, மை, து என்னும் விகுதிகளையுடைய எதிர்மறை வினையெச்சங்களின் முன் வரும் வல்லெழுத்து, இயல்பாம்.

மே ——— அவனைக் காணாமே சென்றோம்.

மை ——— அவனைக் காணாமை சென்றோம்.

து ——— அவனைக் காணாது சென்றோம்.

(9) மென்றொடர், இடைத்தொடர், உயிர்த்தொடர் ஆகிய குற்றிய லுகரவீற்று வினையெச்சங்களின் முன் வரும் வல்லெழுத்து, இயல்பாம்.

மென்றொடர்———அவன் குணம் அறிந்து சொன்னாய்.

இடைத்தொடர்———அதிக மழை பெய்து,கருப்புண்டாகியது.

உயிர்த்தொடர்———மூன்று நாள் பொருது பகைவரைக் கொன்றோம்.

(10) இ, ஐ என்னும் உயிரெழுத்துக்களை அல்லது ய, ர, ழ எனும் மெய்யெழுத்துக்களை யீற்றிலுடைய சொற்கள், இரண்டாம், ஏழாம் வேற்றுமைத தொகைகளில் நிற்க, அவற்றின் முன் வருவது வினைச்சொல்லாயின், அதன் வல்லெழுத்து, இயல்பாம்.

இரண்டாம் வேற்றுமைத் தொகை:—	ஏழாம் வேற்றுமைத் தொகை:-
கனி தின்கின்றார்.	அடவி புகுந்தார்.
பலகை கொண்டுவா	மலை திரிந்தான்.
காய் பறித்தோம்.	வாய் புகுந்தது.
தேர் செலுத்தினன்.	ஊர் தங்கினேம்.
தமிழ் கற்கின்றேம்.	அகழ் குதித்தான்.

குறிப்பு:—காவித்தடம், மணைத்தூண், காய்க்குலை, தயிர்க்குடம், வேர்ப்புழு, அகழ்ப்பாறை என்பவற்றின் வல்லெழுத்து மிகுந்ததுபோல். உருபும் பயனு முடன்றொக்க இரண்டாம், ஏழாம் வேற்றுமைத் தொகைகளின் முன்வல்லெழுத்து, மிகும்.

(11) அகாத்தை யீற்றிலுடை பலவகைப் பெயரெச்சங்களின் முன்னும் வரும் வல்லெழுத்து, இயல்பாம்.

சென்ற கடிதம்.	பெரிய பாம்பு.
வந்த சிறுவன்	சிறிய கப்பல்.
ஓடாத தானை.	இல்லாத தருணம்.

(12) வினைமுற்றாயல்லது வினைத்தொகையாய் நின்ற சொற்களினீற்று உயிரெழுத்துக்களின் முன்னும், ய, ர, ழ, ல, ள, ண, ன என்னும் மெய்யெழுத்துக்களின் முன்னும் வரும் வல்லெழுத்து, இயல்பாம்.

வினைமுற்றுக்கள்:—		வினைத் தொகைகள்:—	
வந்தன கடிதங்கள்.	போனாய் சிறுவ!	எரிதழல்.	குறை கடல்.
நடவா குன்றுகள்.	கண்டீர் செல்வம்.	கதறு தாய்.	ஈட்டு பொருள்.
உண்ணுதி தாயே!	செல் கந்தா!	ஓடு சிறுவர்.	தின் பொருள்.
ஓடினது பசு.	வாழ் சுகமே.	வரு புனல்.	புரள் கழுதை.
நொந்தனை தாயே!	வந்தேன் காவல!	ஈ பொருள்.	சேர் பகைவன்.

(13) உயிரெழுத்தை அல்லது ய, ர, ழ என்னும் மெய்யெழுத்துக்களை யீற்றிலுடைய சொற்கள் விளிவேற்றுமையில் நிற்க, அவற்றின் முன் வரும் வல்லெழுத்து, இயல்பாம்.

புலவ! கேள்.	நம்பி! செல்.	விடலை! செல்.	வணிகீர்! காண்மீன்.
அண்ணா! கோடு	தம்பீ! கலங்காதே.	நல்லாய்! கேள்.	குறுமபூழ்! செல்செல்

(14) வன்றொடர், மென்றொடரொழிந்த மற்ற நால்வகைக் குற்றியலுகரங்களின் முன்னும் வரும் வல்லெழுத்து, இருவழியிலும் இயல்பாம்.

வேற்றுமை:—		அல்வழி:—	
நாகு தலை.	வரகு சோறு.	நாகு சிறந்தது.	வரகு காய்ந்தது.
எஃகு கூர்மை.	தெள்கு பெருமை.	எஃகு குளிர்ந்தது.	தெள்கு சிறிது.

83. மொழியீற்று லகர, ளகர மெய்களோடு உயிர் மெய்கள் புணருமாறு:—

(1) வேற்றுமை, பண்பு, உவமை என்னுந் தொகைகளில் நின்ற மொழியீற்று லகர, ளகர மெய்கள் தமக்கு முன் வல்லெழுத்துவரின், றகர, டகர மெய்களாகத் திரியும்.

வேற்றுமைத் தொகை:—

ல்—பால் + குடம் = பாற் குடம்.	நூல் + திரி = நூற் திரி.
நூல் + சேலை = நூற் சேலை.	நூல் + புரி = நூற் புரி.
ள்—நாள் + கூலி = நாட் கூலி.	நாள் + தீமை = நாட்டீமை.
பொருள் + செருக்கு = பொருட்செருக்கு.	கள் + குடம் = கட் குடம்.

பண்புத் தொகை:—

ல்—வேல் + படை = வேற்படை. | ள்—அருள் + செல்வம் = அருட்செல்வம்

உவமைத் தொகை:—

ல்—வேல் + கண் = வேற் கண் | ள்—வாள் + கண் = வாட் கண்.

(2) தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த லகர, ளகரங்களுக்கு முன் வரும் தகரம், இருவழியிலும் றகர, டகரங்களாகத் திரியும்.

வேற்றுமை:—	அல்வழி:—
ல்—கல் + தூண் = கற்றூண்.	கல் + தேயும் = கற்றேயும்.
ள்—உள் + துளை = உட்டுளை.	முள் + தைக்கும் = முட்டைக்கும்.

(3) தனிக்குற்றெழுத்தைச் சாராத மொழியீற்று லகர, ளகரங்கள், இருவழியிலும் தமக்கு முன் வந்த நகரம், னகர ணகரங்களாய்த் திரிந்தவிடத்துக் கெடும்.

வேற்றுமை:—	அல்வழி:—
ல்—கால் + நகம் = கானகம்.	பால் + நாறும் = பானாறும்.
ள்—பொருள் + நாடி = பொருணாடி.	இருள் + நீங்கி = இருணீங்கி.

(4) மொழியீற்று லகர, ளகரங்களின் முன் இடையெழுத்து வரின் இருவழியிலும், இயல்பாம்,

வேற்றுமை:—

ல்—வில்+வீரன்=வில் வீரன். | ள்—தோள்+வலி=தோள்வலி.

அல்வழி:—

ல்—கல்+விழுகிறது=கல்விழுகிறது. | ள்—முள்+வரவில்லை=முள்வர [வில்லை.

(5) விளிவேற்றுமையில் நின்ற சொற்களினீற்று லகர, ளகரங்கள், தமக்கு முன் தகர மொழிந்த எந்த வல்லெழுத்து வரினும், இயல்பாம்.

வள்ளல்! கூறுய். | மக்காள்! பேசுமின்.

(6) மொழியீற்று லகர, ளகர மெய்கள், தமக்கு முன் மகரம் வரின், இருவழியிலும் னகர ணகரங்களாகத் திரியும்.

வேற்றுமை:—

ல்—சொல்	+	மாலை	=	சொன் மாலை.
புல்	+	மேயும்	=	புன் மேயும்.
ள்—முள்	+	முடி	=	முண் முடி.
நாள்	+	மலர்	=	நாண் மலர்.

அல்வழி:—

ல்—வில்	+	முறியும்	=	வின் முறியும்.
புல்	+	முளைத்தது	=	புன் முளைத்தது.
ள்—ஆள்	+	மாண்டான்	=	ஆண் மாண்டான்.
நாள்	+	மாறும்	=	நாண் மாறும்.

அப்பியாசம்—90.

1. வேல் கண் உம் சில் நாட்களில் கோல் கண் ஆகிவிடும்.

2. இளமையில் கல் இளமையில் கல் என்று என் தந்தை எனக்கு இதமாய் கூறியதை பேதையேன் உணராது ஆட்டத்தில் பல் நாட்களை கழித்து இப்பொழுது அல்லல் படுகின்றேன்.

3. அரசன் ஒருவனுக்கு ஆக இருந்த அபிஷேகத்திற்கு பலர் அனுப்பிய பால்குடங்களுக்கு இடையே நீர்குடம் ஒன்று இருந்தது.

4. நளன் நள் இருளில் தன் அரு உயிர் தமயந்தியை பிரிந்து கால் நகம் சிதைய அ பெரு கான் அகத்து ஓடினன்.

84. மொழியீற்று ணகர, னகர மெய்களோடு உயிர்மெய்கள் புணருமாறு:—

(1) மொழியீற்று ணகர, னகர மெய்கள், தமக்கு முன் வல்லெழுத்துவரின், வேற்றுமையில் டகர, றகரங்களாகத் திரியும்; அல்வழியில் இயல்பாம்.

வேற்றுமை:—

ண்—	மண்	+	கலம்	=	மட் கலம்.
	மண்	+	சுவர்	=	மட் சுவர்.
	மண்	+	திரள்	=	மட் டிரள்.
	மண்	+	பாவை	=	மட் பாவை.
ன்—	பொன்	+	காப்பு	=	பொற் காப்பு.
	பொன்	+	சதங்கை	=	பொற் சதங்கை.
	பொன்	+	தகடு	=	பொற் றகடு.
	பொன்	+	பாவை	=	பொற் பாவை.

அல்வழி:—

ண்—	கண்	+	கலங்கினது	=	கண் கலங்கினது.
	கண்	+	சிவந்தது	=	கண் சிவந்தது.
	மண்	+	திரண்டது	=	மண் டிரண்டது.
	மண்	+	படிந்தது.	=	மண் படிந்தது.
ன்—	பொன்	+	குறையும்	=	பொன் குறையும்.
	பொன்	+	சிறந்தது	=	பொன் சிறந்தது.
	பொன்	+	தேறும்	=	பொன் றேறும்.
	பொன்	+	போதும்	=	பொன் போதும்.

☞ "மண் சுமக்கிறான்," "கண் புகுந்தது," "பொன் கொடுப்பேன்," "கான் புகுந்தார்" என இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும், ஏழாம் வேற்றுமைத் தொகையிலும் நிற்கும் ணகர, னகர மெய்யீற்று மொழிகளின்முன் வருவது வினைச்சொல்லாயின், ணனக்கள் இயல்பேயாம்.

(2) மொழியீற்று ணகரத்திற்கு முன்வரும் நகரம் ணகரமாகவும், னகரத்திற்கு முன்வரும் நகரம், னகரமாகவும் இருவழியிலும் திரியும்.

வேற்றுமை:—

ண்—	மண்	+	நாடினர்	= மண்ணாடினர்.	கண்	+	நீர்	=	கண்ணீர்.
ன்—	தன்	+	நிறம்	= தன்னிறம்.	பொன்	+	நிறம்	=	பொன்னிறம்.

அல்வழி:—

ண்—	மண்	=	நிறைந்தது	=	மண் ணிறைந்தது.
	மண்	=	நிலைக்கும்	=	மண் ணிலைக்கும்.
ன்—	பொன்	=	நீளும்	=	பொன் னீளும்.
	மன்	=	நாடினன்	=	மன் னாடினன்.

(3) மொழியீற்று ணகர, னகர மெய்களின்முன், நகரமொழிந்த மெல்லெழுத்தும், இடையெழுத்தும் வரின் இருவழியிலும் இயல்பாம்.

வேற்றுமை:—

ண்	மண்	+	ஞமலி	=	மண் ஞமலி.
	மண்	+	மேடு	=	மண் மேடு.
	கண்	+	விருந்து	=	கண் விருந்து.
ன்	பொன்	+	ஞமலி	=	பொன் ஞமலி.
	பொன்	+	மான்	=	பொன் மான்.
	பொன்	+	வீடு	=	பொன் வீடு.

அல்வழி:—

ண்	மண்	+	ஞான்றது	=	மண் ஞான்றது.
	மண்	+	மாறும்	=	மண் மாறும்.
	மண்	+	விழும்	=	மண் விழும்.
ன்	பொன்	+	ஞான்றது	=	பொன் ஞான்றது.
	பொன்	+	மாறும்	=	பொன் மாறும்.
	பொன்	+	வெளுத்தது	=	பொன் வெளுத்தது.

(4) தனிக் குற்றெழுத்தைச் சாராத மொழியீற்று ணகர, னகரங்கள், தமக்கு முன்வரும் நகரம், முறையே ணகர னகரங்களாகத் திரிந்தால், இருவழியிலும் கெடும்.

வேற்றுமை:—

ண்	தூண்	+	நிறுத்து	=	தூணிறுத்தி.
ன்	குணன்	+	நாடி	=	குணனாடி.

அல்வழி:—

ண்	தூண்	+	நன்று	=	தூணன்று.
ன்	மகன்	+	நாடினன்	=	மகனாடினன்.

(5) விளி வேற்றுமையில் நின்ற சொற்களினீற்று ணகர, னகரங்கள், தமக்கு முன் தகரமொழிந்த வல்லெழுத்து வரின், இயல்பாம்.

பெண்! கேளாய் | கோன்! கூறாய்.

(6) உயர்திணைப்பெயர்களினீற்றில் நின்ற லகர, ளகர, னகர, மெய்களும், பொதுப்பெயர்களினீற்றில் நின்ற லகர, ளகர, ணகர, னகர மெய்களும், தமக்கு முன், தகரமொழிந்த வல்லெழுத்து வரின், திரியாமல் இயல்பாம்.

உயர்திணைப்பெயர்:—		பொதுப்பெயர்,—	
வேற்றுமை:—	அல்வழி:—	வேற்றுமை:—	அல்வழி:—
தோன்றல்கொடை	தோன்றல்கருதினன்	தூங்கல் கால்	தூங்கல் சென்றது
அவள் கழுத்து	அவள் கதறினள்	மக்கள்பொருள்	மக்கள் பிறந்தனர்
இவன் பொருள்	இவன் பேசான்	ஆண் குணம்	ஆண் பெரியது

85. பல, சில எனுஞ் சொற்களை யோட்டிய விதிகள்:—

(1) பல, சில எனுஞ் சொற்கள், தமக்கு முன் தாமே வரும்போது வருமொழி முதலெழுத்து (1) இயல்பாகியும், (2) இரட்டியும் புணர்வதுடன், (3) அகரங் கெடலும். (4) லகரம் றகரமாகத் திரிதலும் திரியாமையுமாகும்.

[இயல்பு.	இரட்டல்.	அகரங்கெட்டியல்பு.	லகரம் றகரமாதல்.]
பல பல	பலப் பல	பல் பல	பற் பல.
சில சில	சிலச் சில	சில் சில	சிற் சில.

(2) பண்புத்தொகையில் நின்ற பல, சில வெனுஞ் சொற்கள், தமக்கு முன் வேறு சொற்கள் வரின், இயல்பாகியும், அகரத்தை யிழந்தும் வரும். தகரம் வரின் லகரமெய் ஆய்த மாதலுமாம்.

பல கடைகள்	பல் கடைகள்.	சில கடைகள்	சில் கடைகள்.
பல சங்கதிகள்	பல் சங்கதிகள்.	சில சங்கதிகள்	சில் சங்கதிகள்.
பல தலைகள்	பஃ றலைகள்.	சில தலைகள்	சிஃ றலைகள்.
பல பசுக்கள்	பல் பசுக்கள்.	சில பசுக்கள்	சில் பசுக்கள்.
பல மணிகள்	பன் மணிகள்.	சில மணிகள்	சின் மணிகள்.
பல நாட்கள்	பன் னாட்கள்.	சில நாட்கள்	சின் னாட்கள்.
பல வாண்டுகள்	பல் லாண்டுகள்.	சில வாண்டுகள்	சில் லாண்டுகள்.

அப்பியாசம்—91.

1 உன் நிமித்தம் இங்கு எய்திய எனக்கு கடு சொல் கூறுவது உனக்கு அழகு அன்று என்று அறி. 2. தன் அரு உயிர் ஆகிய இராமனை கானில் போக்கிய மன்னன் இராம இராம என வாய் ஓயாது சில நாள் புலம்பி இ மண் நாட்டின் நீங்கி விண் நாடு அடைந்தனன். 3. இளமையில் கற்றது எது உம் எ எளிதில் மறப்பது ஆகாது என்று உம் இளமை எ கல்விக்கு ஏற்ற பருவம் என்று உம் எமது ஆசான் எமக்கு பல முறை கூறினர். அகால் அ மொழிகளின் நன்மை உணராத நாங்கள் நகைத்தோம் அவரை. 4. என் நாள் முழுவதும் இ சிறு ஊரில் எ எ கழிந்து ஒழிந்தது.

86. திசைப்பெயர்களோடு திசைப்பெயர்களும் வேறு பெயர்களும் புணருமாறு:—

(1) வடக்கு, குடக்கு, குணக்கு என்னுந் திசைப்பெயர்களின் முன் திசைப்பெயர்களும், வேறு பெயர்களும் வந்தவிடத்து, அவை ஈற்றுயிர் மெய்யும், ககர வொற்றுங் கெட்டு வட, குட, குண என்று நிற்கும்.

வடக்கு + கிழக்கு = வட கிழக்கு.	வடக்கு + திசை = வட திசை.
வடக்கு + மேற்கு = வட மேற்கு.	வடக்கு + கடல் = வட கடல்.
குடக்கு + திசை = குட திசை.	குடக்கு + நாடு = குட நாடு.
குணக்கு + திசை = குண திசை.	குணக்கு + கடல் = குண கடல்.

(2) தெற்கு என்னுந் திசைப்பெயரின் முன் திசைப்பெயர்களும், வேறு பெயர்களும் வந்தவிடத்து, ஈற்றுயிர்மெய் கெட்டு, றகரம் னகரமாகத் திரியும்.

தெற்கு + கிழக்கு = தென் கிழக்கு.	தெற்கு + மலை = தென் மலை.
தெற்கு + மேற்கு = தென் மேற்கு.	தெற்கு + நாடு = தென் னாடு.

(3) மேற்கு என்னுந் திசைப்பெயரின் முன் வேறு பெயர்கள் வந்தவிடத்து, ஈற்றுயிர்மெய் கெட்டு, றகரம், லகரமாகத் திரிவதுடன், ஐகாரச் சாரியை பெற்றும், பெறாதும் வரும்; தகரம் வரின் திரியாது.

மேற்கு + கடல் = மேல் கடல்.	மேற்கு + வீதி = மேலை வீதி.
மேற்கு + திசை = மேற் றிசை.	மேற்கு + சேரி = மேலைச் சேரி.

(4) கிழக்கு என்னுந் திசைப்பெயரின் முன், வேறு பெயர்கள் வந்தவிடத்து, ஈறும், ஈற்றயலுங் கெடுவதுடன், முதல் நீண்டு, ழகரத்தின் அகரங் கெடுதலும், ஐகாரச்சாரியை வருதலு முண்டு.

கிழக்கு + நகரம் = கீழ் நகரம்.	கிழக்கு + வீதி = கீழை வீடு.
கிழக்கு + திசை = கீழ்த் திசை.	கிழக்கு + சேரி = கீழைச் சேரி.

☞ கிழக்குத்திசை, மேற்குதேசம், தெற்குமூலை, வடக்குவாயில் என்பனபோல் திசைப்பெயர்கள் தமக்கு முன் வேறு பெயர்கள் வந்த விடத்து விகாரப்படாமல் நிற்பது முண்டு.

அப்பியாசம்—92.

சந்தியோடெழுதிப் புணர்ச்சி விதி கூறு:—

I, கல்வியின் நிமித்தம் தெற்குநாடு ஆகிய எம் நாட்டின் நீங்கி இ நாடு எய்தினேமுக்கு தேவரீர் அன்புகூர்ந்து தருக்கம் கற்பித்தருளும்,

2. கிழக்கு நாட்டோர் உம் மேற்கு நாட்டோர் உம் ஆதியில் காஸ்பியன் கடல் தரை அருகில் நெடுநாள் கழித்தனர் என்ப.

87. சில மரப்பெயர்களின் முன் வல்லெழுத்தை முதலிலுடைய மொழிகள் வந்து புணருமாறு:—

(1) உயிரை யீற்றிலுடைய மரப்பெயர்களில் சிலவற்றின் முன்வரும் வல்லெழுத்திற்கு இனவெழுத்துத் தோன்றும்.

மா + காய் = மாங்காய். | விள + கனி = விளங்கனி.

(2) ஐகாரவீற்று மரப்பெயர்களில் சிலவற்றின் முன் வல்லெழுத்து வரின், ஐ கெட்டு, "அம்" என்னுஞ் சாரியை தோன்றும்.

பனை + காய் = பனங்காய்.	மாதுளை + பூ = மாதுளம்பூ.
துவரை + பருப்பு = துவரம்பருப்பு.	நாரத்தை + காய் = நாரத்தங்காய்.

(3) இ, உ என்னும் உயிரெழுத்துக்களை யல்லது லகர மெய்யை யீற்றிலுடைய மரப்பெயரின் முன் வல்லெழுத்து வரின், அம் எனும் சாரியை தோன்றும்.

புளி + காய் = புளி + அம் + காய் = புளியங்காய்
புன்கு + காய் = புன்கு + அம் + காய் = புன்கங்காய்
வேல் + காய் = வேல் + அம் + காய் = வேலங்காய்
ஆல் + காய் = ஆல் + அம் + காய் = ஆலங்காய்

அப்பியாசம்—93.

புணர்ச்சி விதி கூறிச் சந்தியோடெழுது:—

1. பிரபு ஒருவரை காணவந்த பெரு அறிஞர் ஆகிய கவிவாணர் இருவர் எலுமிச்சை பழம் கொணர்ந்து கொடுத்தனர். இதை கண்டிருந்த பேதை ஒருவன் அலைந்து தேடி அடைந்த பெரு புளிபழங்கள் நான்கு கொணர்ந்தனன் 2. இ உலகில் நிலை உளது எது உம் எ இன்று என்று அறியா பேதையர் எ தம் கன்றுகளை உம் காலிகளை உம் மற்று உம் உள்ள பலவற்றையும் கண்டு கர்வம் கொண்டு ஆநந்தம் கடலில் மூழ்குவர். 3. தனக்கு கண் எ போன்று இருந்த இராமனை கானில் போக்கி உயிர் பெற்று இருத்தல் தசரதனுக்கு எ நனம் கூடும்? 4. மந்தரை என்னும் பெயர் கூனி ஆகிய குறு எவல் புரியும் தாசி புரிந்த தந்திரத்தினால் எவர்க்கு உம் எ இனிய இராமன் அடவி எய்தினன்.

88. மேற்கூறிய புணர்ச்சிகளில் அடங்காத சில சிறப்புவிதிகள்:—

(1) அ, இ, உ என்னுஞ் சுட்டெழுத்துக்களின் முன்னும், எ என்னும் வினவெழுத்தின் முன்னும் யகரம் வந்தவிடத்து, வகரந் தோன்றும்.

அ + யானை = அவ் யானை.	எ + யானை எவ் யானை?
இ + யாழ் = இவ் யாழ்.	எ + யுகம் எவ் யுகம்?

(2) யகரமொழிந்த மெய்யை யீற்றிலுடைய சொற்களின் முன் யகரம் வரின், இடையில் இகரந் தோன்றுதலுந் தோன்றாமையுமாம்.

இதனால் + யாவருக்கும் = இதனாலியாவருக்கும்.
இதனால் + யாவருக்கும் = இதனால் யாவருக்கும்.
மாள் + யாக்கை = மாளியாக்கை.
மாள் + யாக்கை = மாள் யாக்கை.

(3) டுகர, றுகரவீற்று நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகர வீற்று மொழிகளின் முன் எவ்வெழுத்து வரினும், உகரமேறி நின்ற டகர றகரமெய்கள் வேற்றுமையில் பெரும்பாலும் இரட்டும்

நெடிற்றொடர்:—		உயிர்த்தொடர்:—	
ஆட்டுக்கால்	ஆற்றுக்கால்.	பகட்டுக்கால்	வயிற்றுக்குடல்.
ஆட்டுமயிர்	ஆற்றுமணல்.	பகட்டுமார்பு	வயிற்றுமயிர்.
ஆட்டுவால்	ஆற்றுவழி	பகட்டுவால்	வயிற்றுவலி.
ஆட்டடதர்	ஆற்றூறல்	பகட்டடி	வயிற்றணி.

அப்பியாசம்—94.

புணர்ச்சி விதி கூறிச் சந்தியோடெழுதிக் கொண்டுவா:—

1. இதனால் யாம் யாவருக்கும் உணர்த்துவது யாது எனில் யாம் திங்கள் கிழமை யானை காட்டில் சென்று வேட்டம் ஆடுவோம் அன்று எவர் உம் எ அ காட்டின் அருகில் நெருங்கல் ஆகாது.

2. சொல் நயம் உம் பொருள் நயம் உம் மிக்க இ வகை செய்யுள் நீவிர் இதன்முன் என்று ஏனும் கேட்டது உண்டு ஒ?

3. நல் நீர் எய்தல் அரிதாகிய இடத்தில் போய் எனக்கு குளிக்க உம் இ நீர் உதவாது இன் நீர் கொண்டுவா எனல் அடுக்கும் ஒ?

4. எவன் உம் தான் தான் செய்யவேண்டியதை செய்யாமல் எனக்கு அதிருஷ்டம் இல்லை ஆதலால் எது உம் இனிது முடிய இல்லை என்று குறை கூறுவது பேதமை எ.

5. நீ என் அண்ணனை காட்டில் போக்கி இ நாட்டை எனக்கு ஆக்கினை

89. எண்ணுப் பெயர்களுடன் எண்ணுப் பெயர்களும் பிறபெயர்களும் புணருமாறு:—

(1) ஒன்று என்பது, தனக்கு முன் உயிர் வரின், ஓர் என்றும், உயிர்மெய் வரின், ஒரு என்றுந் திரியும்.

ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்.	ஒன்று + நாள் = ஒரு நாள்.
ஒன்று + இடம் = ஓரிடம்.	ஒன்று + வீடு = ஒரு வீடு
ஒன்று + கண் = ஒரு கண்.	ஒன்று + மணி = ஒரு மணி.

(2) இரண்டு என்பது, தனக்கு முன் உயிர் வரின், ஈர் என்றும், உயிர்மெய் வரின், இரு என்றுந் திரியும்.

இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்.	இரண்டு + கண் = இரு கண்.
இரண்டு + எண் = ஈரெண்.	இரண்டு + மலைகள் = இருமலைகள்.

(3) மூன்று என்பது, தனக்கு முன் உயிர் வரின், மூ என்றும், உயிர்மெய் வரின், மு என்றுந் திரியும்.

மூன்று + ஆயிரம் = மூவாயிரம்.	மூன்று + நாழிகை = முந் நாழிகை.
மூன்று + காலம் = முக்காலம்.	மூன்று + மாரி = மும் மாரி.

(4) நான்கு என்பது, தனக்கு முன் எவ்வெழுத்து வரினும், நால் என்று திரிந்து, நாலினீற்று லகர மெய், வருமொழி முதலெழுத்தை யொட்டி றகரமா யல்லது னகரமாய்த் திரியும்.

நான்கு + ஆயிரம் = நாலாயிரம்.	நான்கு + வகை = நால் வகை.
நான்கு + திசை = நாற்றிசை.	நான்கு + மறை = நான் மறை.

(5) ஐந்து என்பது, தனக்கு முன் எவ்வெழுத்து வரினும், ஐ எனத்திரியும்; வருவது வல்லெழுத்தாயின், அதன் இனமுங் கொள்ளும்.

ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்.	ஐந்து + புலன் = ஐம் புலன்.
ஐந்து + இரண்டு = ஐயிரண்டு.	ஐந்து + முகன் = ஐம் முகன்.
ஐந்து + கணை = ஐங்கணை.	ஐந்து + விரல் = ஐ விரல்.

(6) ஆறு என்பது, தனக்கு முன் உயிர் வரின், திரியாமலும், உயிர்மெய் வரின், அறு எனத் திரிந்தும் நிற்கும்

ஆறு + ஆறு = ஆறாறு.	ஆறு + மணி = அறு மணி.
ஆறு + பகை = அறு பகை.	ஆறு + வகை = அறு வகை.

(7) ஏழு என்பது, தனக்கு முன் உயிர் வரின், திரியாமலும், உயிர்மெய் வரின் எழு என்றுந் திரியும்.

ஏழு + ஆயிரம் = ஏழாயிரம்.	ஏழு + நா = எழு நா.
ஏழு + கடல் = எழு கடல்.	ஏழு + வகை = எழு வகை.

(8) எட்டு என்பது, தனக்கு முன் எவ்வெழுத்து வரினும் எண் எனத் திரியும்.

எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்	எட்டு + மடங்கு = எண் மடங்கு.
எட்டு + திசை = எண்டிசை.	எட்டு + வகை = எண் வகை.

(9) ஒன்பது, தனக்கு முன்வரும் பத்து நூறு என்றும், நூறு ஆயிரமென்றுந் திரிய, தொள் எனத் திரிந்தும், மற்றப் பெயர்களின் முன் இயல்பாகியும் வரும்.

ஒன்பது + பத்து = தொண்ணூறு.	ஒன்பது + காணி = ஒன்பதுகாணி.
ஒன்பது + பத்து = தொள்ளாயிரம்.	ஒன்பது + மடங்கு = ஒன்பதுமடங்கு

(10) ஒன்று முதல் எட்டு வரையிலுள்ள எண்களின் முன் வரும் பத்து, பது என இடை குறைந்து போகும்.

ஒன்று + பத்து = ஒருபது.	ஐந்து + பத்து = ஐம்பது.
இரண்டு + பத்து = இருபது.	ஆறு + பத்து = அறுபது.
மூன்று + பத்து = முப்பது.	எழு + பத்து = எழுபது.
நான்கு + பத்து = நாற்பது.	எட்டு + பத்து = எண்பது.

☞ சிறுபான்மை இருபஃது ஐம்பஃது என வருதலும் உண்டு.

(11) பத்து என்பது, தன் முன் இரண்டொழிந்து எட்டுவரையிலுள்ள எண்கள் உம்மைத் தொகையில் வர, பது எனத் திரிந்து இன் சாரியை பெறும்.

பத்து + ஒன்று = பதினொன்று.	பத்து + ஆறு = பதினாறு.
பத்து + மூன்று = பதின்மூன்று.	பத்து + எழு = பதினேழு;
பத்து + நான்கு = பதினான்கு.	
பத்து + ஐந்து = பதினைந்து.	பத்து + எட்டு = பதினெட்டு.

(12) பத்து என்பதுடன், இரண்டு உம்மைத் தொகையாய்ப் புணர வரின், பத்து-பன் எனத் திரியும்.

பத்து + இரண்டு = பன் + இரண்டு = பன்னிரண்டு.

(13) ஒன்று முதற் பத்து வரையிலுள்ள எண்ணுப்பெயர்களில் ஒன்பதொழிந்தவற்றை இரட்டித்துக் கூறுகையில், முதலில் நிற்பவை, தந்தம் முதலெழுத்து மாத்திரமாகி நிற்கும்.

ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று	ஆறு + ஆறு = அவ்வாறு.
இரண்டு + இரண்டு = இவ்விரண்டு	எழு + எழு = எவ்வேழு.
மூன்று + மூன்று = மும்மூன்று	
நான்கு + நான்கு = நந்நான்கு	எட்டு + எட்டு = எவ்வெட்டு.
ஐந்து + ஐந்து = ஐயைந்து	பத்து + பத்து = பப்பத்து.

☞ விகற்பப் பொருளதாகிய இடைச்சொல்லின்றி ஒன்றிரண்டு இரண்டுமூன்று, நாலைந்து, ஐந்தாறு, ஏழெட்டு எனப் புணரும்.

90. தமிழில் வரும் சில வடமொழிச் சந்திகள்.

இஃது:—(1) தீர்க்க சந்தி, (2) குண சந்தி, (3) விருத்தி சந்தி யென மூன்று வகைப்படும்.

I. தீர்க்கசந்தி.

(1) அ ஆவின் முன் அ ஆ வரின், ஈறும் முதலுங் கெட, ஆ யொன்று தோன்றும்.

குண + அதிசயம் = குணாதிசயம்.	சேநா + அதிபதி = சேநாதிபதி.
குண + ஆகரம் = குணாகரம்.	தயா + ஆலயன் = தயாலயன்.

(2) இ ஈயின் முன் இ ஈ வரின், ஈறும் முதலுங் கெட, ஈ யொன்று தோன்றும்.

கிரி + இந்திரன் = கிரீந்திரன்.	மதி + இந்திரன் = மதீந்திரன்.
கிரி + ஈசன் = கிரீசன்.	மதி + ஈசன் = மதீசன்.

(3) உ ஊவின் முன் உ ஊ வரின், ஈறும் முதலுங் கெட, ஊ வொன்று தோன்றும்.

குரு + உபதேசம் = குரூபதேசம்.	வதூ + உத்வாகம் = வதூத்வாகம்.
மேரு + ஊர்த்வம் = மேரூர்த்வம்.	வதூ + ஊரு = வதூரு.

II. குணசந்தி.

(4) அ ஆவின் முன் இ ஈ வரின், ஈறும் முதலுங் கெட, ஏ யொன்று தோன்றும்.

நர + இந்திரன் = நரேந்திரன்.	யதா + இஷ்டம் = யதேஷ்டம்.
சுர + ஈசன் = சுரேசன்.	மகா + ஈசன் = மகேசன்.

(5) அ ஆவின் முன் உ ஊ வரின், ஈறும் முதலுங் கெட, ஓ வொன்று தோன்றும்.

ஞான + உதயம் = ஞானோதயம்.	யதா + உசிதம் = யதோசிதம்.
ஞான + ஊர்ச்சிதன் = ஞானோர்ச்சிதன்.	தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்

III. விருத்திசந்தி.

(6) அ ஆவின் முன் ஏ ஐ வரின், ஈறும் முதலுங் கெட, ஐ யொன்று தோன்றும்.

லோக + ஏகநாதன் = லோகைகநாதன்.	தரா + ஏகவீரன் = தரைகவீரன்.
சிவ + ஐக்கியம் = சிவைக்கியம்.	மகா + ஐசுவரியம் = மகைசுவரியம்

(7) அ ஆவின் முன் ஓ ஔ வரின், ஈறும் முதலுங் கெட, ஔ வொன்று தோன்றும்.

கலச + ஓதனம் = கலசௌதனம்.	கங்கா + ஓகம் = கங்கௌகம்.
திவ்ய + ஔஷதம் = திவ்யௌஷதம்.	மகா + ஔஷதம் = மகௌஷதம்.

91. சம்பந்தத்தை யுணர்த்துந் தத்திதாந்த மொழிகளாமாறு:—

பர்வதத்தின் மகள்=பார்வதி.
ஜனகன்மகள்=ஜானகி.
தசரதன்மகன்=தாசரதி.
பயஸ் ஸம்பந்தமானது=பாயஸம்.
யதுவின் மரபினர்=யாதவர்.
கங்கையின் மகன்=காங்கேயன்
ஸகரர் சம்பந்தமானது=ஸாகரம்.
சிவன் சம்பந்தமானவர்=சைவர்.
வினதையின் மகன்=வைனதேயன்.
மிதிலையிற் றோன்றியவள்=மைதிலி.
சிலா சம்பந்தமானது=சைலம்
விஷ்ணு சம்பந்தம்=வைஷ்ணவம்.
பீமன மகள்=பைமி.
குருவின் சந்ததியார்=கௌரவர்.
துருபதன் மகள்=த்ரௌபதி.
புத்திரன் மகன்=பௌத்ரன்.
குசிகன் மகன்=கௌசிகன்.
பூத சம்பந்தமானது=பௌதிகம்.
வேதத்தைச் சார்ந்தது=வைதீகம்.
லோகத்தைச்சார்ந்தது=லௌகீகம்.

☞ மேற் கூட்டிய வுதாரணங்களாற் காட்டியவாறு, தத்திதாந்த மொழிகளாக ஆதிவிருத்தியை சொற்க ளடைகையில், அ ஆ,-ஆ என்றும், இ, ஈ—ஏ, ஐ என்றும், இ, ஊ-ஒ, ஔ என்றந் திரியுமென்றறிக.

அப்பியாசம்—95.

புணர்ச்சிவிதி கூறிச் சந்தியோடெழுது:—

1. சூர்ய உதயம் முதல் சந்திர அஸ்தமயனம் மட்டும் கண்மூடாது அப்பிணியாளி வருந்தினன். 2. சிறுவ! நீ பல் கலைகளை உம் நன்கு உணர்ந்த பண்டிதன் ஆகி, எவர் உம் புகழும் இனிய ஒழுக்கம் எய்தி அன்பு அடக்கம் முதலிய அதி குணங்கட்கு உறைவிடமாகி இகத்திற்கு உம் பரத்திற்கு உம் இனியவை புரிந்து இனிது வாழ்வாய் ஆக.

3. சர அசரங்கள் யாவை உம் படைத்து காத்துவருகின்ற சர்வ ஈச்வரனுக்கு உன் புதல்வரை காப்பது ஒன்று பெரு அரு செயல் ஓ பேதாய்!

4. லோக ஏக நாதன் ஆகிய பகவானை இ மண் உலகினர் அகம் தூய்மையோடு தொழாது புறம் தூய்மை கொண்டு போற்றுகின்றனர்.

அப்பியாசம்—96.

207-ஆவது பக்கத்தில் உள்ள, A. B. இரண்டிற்குந் தொடர்கூறு.

அப்பியாசம்—97.

207-ஆவது பக்கத்தில் உள்ள, C. D. இரண்டிற்கும் சொல்லிலக்கணங் கூறு.

அப்பியாசம்—98.

இப்பாக்களிற்றுத் தொடர் கூறு.

1. குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினுநண்ணுவர்.

2. பொருளிலான் புவியிற் றுச்கி: புகன்றிடி னவனிற் றுக்கி
தெருளிலாக் கடனிற் பட்டோன்: செப்பிடு னிவனிற் றுக்கி
வெருளுறு தீரா நோயான்: விளம்பிடி னிவனிற் றுக்கி
இருளுறு மனத்துத் தீய வில்லவள் வாய்க்கப் பெற்றோன்.

அப்பியாசம்—99.

கீழ்வருஞ் செய்யுளின் எழுத்துப் புணர்ச்சிகளிற்கு விதிகள் கூறு.

வளமிலாச் சிற்றூர் வாழ்க்கை வன்மனக் கயவர் சேவை
உளமதிற் கிசையா வுண்டி யொற்றுமை யில்லாப் பெண்டிர்
இளமைசேர் விதவைப் பெண்க ளிகழ்நடை மூர்க்க மைந்தர்
வளர்பெருந் தீயை யின்றி வாட்டியே யெரிப்ப வந்தோ!

அப்பியாசம்—100.

பல் வகைத் தொகைகளையும் விரித்தெழுது:—

ஓங்கி உயர் **மரம்** ஒன்றின்மேல் **படர்**கொடியிற் பூத்த வேண்மென் மலரை **மதி**முகமாதொருத்தி தன் தளிர்க்கரத்தாற் பற்றிப் **பறி**க்கையில், பொற்றொடி! யாம், இரவு பகல் அன்போடு வளர்த்த இக்கொடியை வருத்தாதே என் ஒரு பெருந்தகை உரைத்தனன்.

ஆண், பேண் என்னும் பிரிவுள்ள பெயர்கட் கிலக்கணம் கூறும் வகை:—

அவனைப் பார்.

அவனை:—அவன் என்னும் (*a*) திணை, (*b*) பால், (*c*) எண், (*d*) பெயரின் வகை, (*e*) இன்ன பொருளில் வந்த, (*f*) இன்ன வேற்றுமை, (1)—(2)—(3)—இல் நின்று, "———" என்னும்———இதற்குச் செயப்படுபொருளாய் வந்தது.

இவனுக்குச் சொல்லு.

இவனுக்கு:—இவன் என்னும் (*a*) திணை, (*b*) பால், (*c*) எண், பெயரின் வகை, (*e*) இன்ன பொருளில் வந்த, (*f*) இன்ன வேற்றுமை —(2)—(3)—இல் நின்று, "சொல்லு" என்னும் வினைமுற்றைக்கொ முடிந்தது.

171027

ஆண், பெண் என்னும் பிரிவில்லாப் பெயர்கட் கிலக்கண கூறும் வகை:—

ஊசி கோண்டுவா.

ஊசி:—ஊசி என்னும் பாலிலா அஃறிணை, (a) எண், (b) பெயர் வகை, (c) இன்ன பொருளில் வந்த, (d) இன்ன வேற்றுமை, (1)—(2) (3)—இல் நின்று, "கோண்டுவா" என்னும் வினைமுற்றிற்குச் செயப் பொருளாய் நின்றது.

தன்மை முன்னிலைப் பெயர்கட் கிலக்கணங் கூறும் வகை

எனக்குக் கோடு.

எனக்கு:—"யான்" என்னும் (a) இடம், (b) எண், (c) பெயர் வகை, (d) இன்ன பொருளில் வந்த, (e) இன்ன வேற்றுமை, (1)—(2) (3)—இல் நின்று, "கோடு" என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்த.

தொழிற்பெயர்கட் கிலக்கணங் கூறும் வகை:—

உன் பிறப்பை நீ மறந்தாய்.

பிறப்பை:—"பிற" என்னும் பகுதி, "பு" விகுதி பெற்றன, க கருதா உடன்பாட்டுத் தொழிற்பெயர், வேற்றுமை, (1)—(2)—(3)— நின்று; மறந்தாய் என்னும் வினைமுற்றிற்குச்செயப்படுபொருளாய் நின் (வேறு வேற்றுமைகளில் நின்றால்) ஐக்கொண்டு முடிந்தது.

காலங்காட்டும் தொழிற்பெயர்கட்கு இலக்கணங் கூறும் வகை:—

நீ போவது நல்லது.

போவது:—"போ" என்னும் பகுதி, "து" விகுதி பெற்றுன், உ பாட்டெதிர்காலத் தொழிற்பெயர், எழுவாய் வேற்றுமையில் நின் "நல்லது" என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது.

வினைமுற்றுக்களிற்கு இலக்கணங் கூறும் வகை:—

எவன் இதை உரைத்தான்?

உரைத்தான்:—"உரை" என்னும் பகுதியினடியாய்ப் பிற உடன்பாட்டுத் தெரிநிலை உயர்திணை ஆண்பாலொருமை இறந்தகால வி முற்று, "எவன்" என்னும் எழுவாயையும் "இதை" என்னும் செயப் பொருளையுங்கொண்டு முடிந்தது.

அதிலும் இஃது பெரிது

பெரிது:—"பெருமை" என்னும் பகுதியினடியாய்ப் பிறந்த, .. இடம், பால், எண், உடன்பாட்டு or எதிர்மறைக்குறிப்பு வினைமுற்று என்னும்——ஐக்கொண்டு முடிந்தது.

...ardian Press, 158-B, Broadway, Madra...

மாக்மில்லன் கம்பேனியாரால் பதிப்பிக்கப்பட்ட மிடில் ஸ்
வகுப்புக்களுக்குரிய தமிழ்ப் புஸ்தகங்கள்.

பல படங்களடங்கிய இந்துதேசத்துப் பழைய கதைகளின் தொகுதி

கிரேட் நம்பர்.			விலை, அ
3.	1.	சீதாராமர்களின் பிறப்பும், வனவாசமும், சஞ்சாரமும்	,,
,,	2.	உத்தர ராமாயணக் கதைகள்	,,
,,	3.	ஸாதியின் விவேக விளக்கம்	,,
4.	1	மகாபாரத கதைகள் முதற்பாகம்	,,
,,	2.	,, இரண்டாம் பாகம் ...	,,
,,	3.	ஸுஹ்ராபும், ரூஸ்தாமனும்	,,
5.	1.	மன்னவனும் மாணிக்கங்களும்	,,
,,	2.	வேதாளக் கதைகள்	,,
,,	3.	ஹதிம்தாயின் வீரச்செயல்கள்	,,

திவான் பஹதூர்—ச. பவானந்தம் பிள்ளை அவர்கள் தொகுத்த தமிழ் இலக்கியத்திரட்டு பகுதி I ... ... ,, 1
,, ,, பகுதி II ... ... ,, 3
ஈசாப்பு கதைப் பாட்டுகள் படங்களுடன் ... ... ,, 4
செல்வக்கேசவராய முதலியாரவர்கள் இயற்றிய அராபிக் கதைகள் ... ... ,, 5
ஸி. ப. வேங்கடராம ஐயரவர்கள் இயற்றிய இளமையும் ஒழுக்கமும் அல்லது இரண்டு பிள்ளைகள் ... ... ,, 3
மோசூர் வேங்கடசாமி ஐயரவர்கள் இயற்றிய தமிழ் இலக்கணம் ... ... ,, 12
ஜே. ஸி. நெஸ்பீல்ட் துரையவர்களியற்றிய தமிழ்—இங்கிலீஷ் இலக்கணம்-முதற்பாகம் சொல்லியல் ... ,, 5
,, இரண்டாம் பாகம்-அன்வயம்பண்ணுதல். ... ,, 10
வேங்கடசுப்பையா அவர்கள் இயற்றிய ஆரம்ப கணிதம் முதற்பாகம் .. .. ,, 6
,, இரண்டாம் பாகம் ... ... ,, 9
,, மூன்றாம் பாகம் ... ... ,, ரூ. 1 3
ரென் துரை என்பவரியற்றிய சுகாதார விளக்கம் ... ,, 6
சுகாதார விளக்கக் கதைகள் முதற்பாகம் ... ... ,, 4
,, இரண்டாம் பாகம். ... ... ,, 6
கே. எ. வீரராகவாசாரியரவர்கள் இயற்றிய பிரிட்டிஷ் ஸாம்பிராஜ்யத்தின் பூகோளம் ... ... ,, ரூ. 1
பூகோள விளக்கம் முதற்பாகம் ... ...
,, இரண்டாம் பாகம் ...
மார்ஸ்டன் துரையவர்கள் இயற்றிய இந்துதேசசரித்திர...